# கம்பர் தமிழ் வாசகம்

## முதற் புத்தகம்

முதற் படிவம்—பொது

ஆறும் வகுப்பு

வித்துவான் தி. சி. குழந்தைவேல் முதலியார்
அர்ச். சூசையப்பர் கல்லூரி உயர்நிலைப்பள்ளி
திருச்சிராப்பள்ளி

முருகன் பதிப்பகம்

• குளித்தலை P.O. திருச்சிராப்பள்ளி

முதற் பதிப்பு: அக்டோபர், 1953

பதிப்புரிமை

விலை அணா பன்னிரண்டு

PRINTED AT
ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL PRESS, TRICHINOPOLY.—H.1

# முன்னுரை

சென்னை அரசியலார் தமிழ்மொழியை முதன் மொழி யாக்கியதிலிருந்து கல்வி பயிலும் மாணவரிடையே ஆர்வம் பெருகி, அவர்கள் தமிழ் மொழியைக் கற்பதில் உள்ளக் கிளர்ச்சி பெற்று வருகின்றனரெனலாம். இங்கிலேயில் தமிழ் மொழியைச் சிறப்பாகப் பயிலும் மாணவர் நலங்கருதி, 1951-ல் **பொதுப் படிப்பு, சிறப்புப் படிப்பு** என இரு பிரிவுகளாகத் தமிழ்ப் பாடத்திட்டங்களை வகுத்து புதிய பாடத்திட்டத்தை வெளியிட்டனர். இப்பாடத்திட்டத்திற் கிணங்கவே, 'கம்பர் தமிழ் வாசகம்' என்னும் இப்பாட நூல் அமைக்கப்பெற்றுள்ளது. இது; முதல் படிவம் பொதுப் படிப்புக்குரியதாகும்.

இப்பாட நூலில், தேசியம், இலக்கியம், வரலாறு, கைத்தொழில், பயிர்த்தொழில், விஞ்ஞானம், கற்பனைக் கதை, நகைச்சுவை நிகழ்ச்சி, புதுமை காணல் முதலிய பல்வகைப் பொருள்களில் ஏற்றவை வகுப்பின் அளவறிந்து கொடுக்கப் பட்டுள்ளன. இவை கட்டுரை, உரையாடல், கடிதம், சொற் பொழிவு, நாடகம், சுயசரிதம், கேளிக்கைப் பயணம் முதலிய வகைகளில் விளக்கப்பட்டுள்ளன

செய்யுட் பகுதியில், பழமையும் புதுமையும் தழுவிய பலவகைப் பாக்கள் அமைந்துள்ளன. அவை கடவுள் நெறி, அறநெறி, கதை, இயற்கை, நாட்டுப் பாடல், பலவகைச் சுவை முதலிய பலதிறம் பற்றியவையாகும், புதுமைப் பாக்களின் ஆசிரியர்களுக்கு எனது நன்றி உரியதாகும்.

நன்முறையில் அமைக்கப்பட்டுள்ள இப்பாடநூலைக் கல்வியதிகாரிகளும், கல்விநிலையத் தலைவர்களும் தமிழாசிரி யர்களும் ஆதரித்து மாணவர்களுக்குப் பயன்படச்செய்யுமாறு வேண்டுகிறேன்.

தி. சி. கு.

# பொருளடக்கம்


| பொருள் | உரைநடைப் பகுதி | பக்கம் |
|---|---|---|
| 1. | உதய குமரன் | 1 |
| 2. | மாணவர் இல்லம் | 5 |
| 3. | கவிமணி | 11 |
| 4. | இலக்கிய பஞ்சகம் | 16 |
| 5. | தந்தி வந்தது! | 17 |
| 6. | அறிவானந்தன் | 23 |
| 7. | கால்நடைப்பண்ணை | 30 |
| 8. | இந்தியக் குடியரசு | 37 |
| 9. | காந்தியடிகளின் பெருமை | 43 |
| 10. | சித்தார்த்தனின் கருணை | 44 |
| 11. | எனது இன்பச்செலவு | 49 |
| 12. | எவரெஸ்டு வீரர் | 56 |
| 13. | ஆறு | 61 |
| 14. | தந்தையின் கடிதம் | 62 |
| 15. | வெற்றிலை | 65 |


## செய்யுட்பகுதி


| | | |
|---|---|---|
| I. | கடவுள் வணக்கம் | 1 |
| II. | அறவுரை | |
| | 1. திருக்குறள் | 5 |
| | 2. நல்வழி | 1 |
| | 3. நீதி வெண்பா | 14 |
| III. | கதை | |
| | 1. குருவியும் குரங்கும் | 1 |
| | 2. காந்தியடிகள் | 1 |
| | 3. புத்தரும் ஏழைச் சிறுவனும் | 2 |
| IV. | இயற்கையழகு | 2 |
| V. | தனிப்பாடல் | 2 |
| VI. | நாட்டுப்பாடல்கள் | 2 |
| VII. | பல்வகைப் பாடல்கள் | 2 |

# கம்பர் தமிழ் வாசகம்

## உரைநடைப்பகுதி—பொது

### 1. உதயகுமரன்

சோழ நாட்டின் தலைநகரம் காவிரிப்பூம்பட்டினம். இது புகார் என்றும் புகலப்படும். இந்நகரத்திலிருந்து செங்கோல் செலுத்திய சோழ மன்னன் கிள்ளிவளவன் என்பவன். இவன் மனைவி இராசமாதேவி என்பவள். இவ்விருவரின் அருமை மகன் உதயகுமரன் என்ற இளவரசன்.

உதயகுமரன் அழகும் வீரமும் அமைந்தவன்; அஞ்சா நெஞ்சம் படைத்தவன். இவன் இளமையிலிருந்தே வீரவிளையாட்டுக்களை மிகவும் விரும்பினான்; வீரச்செயல் புரிவதில் ஆர்வங் கொண்டான். ஆகையால், வாட்போர், விற்போர், மற்போர் முதலிய பயிற்சிகளில் சிறந்து விளங்கினான். இவனது வீரவுள்ளத்தைப் புகார் நகர மக்கள் நன்கறியும்படி ஒரு நிகழ்ச்சி நடந்தது.

கிள்ளி வளவனின் ஆட்சிக்காலத்தில் காலவேகம் என்னும் ஒரு பட்டத்து யானை இருந்தது. அவ்யானை திடீரென்று ஒருநாள் மதங்கொண்டு கட்டுத்தறியை முறித்துக்கொண்டு ஓடத்தலைப்பட்டது. பாகர்களும் குத்துக்கோற்காரர்களும் எவ்வளவு முயன்றும் அதனை அடக்கமுடியவில்லை. காலவேகம் பாகர்களுக்கு அடங்காமல் பிளிறிக்கொண்டு நகரின் பலவிடங்களிலும் ஓடித் திரிந்தது. வழியிற் சென்ற மக்கள் யாவரும் அஞ்சியோடிப் பதுங்கினர். யானையிடம் அகப்பட்ட சிலர் காலொடிந்தும் காயம்பட்டும் பலவாறு துன்பமடைந்தனர்.

இச்செய்தியை, ஏவலர்கள் சிலர் ஓடோடியும் வந்து சோழ மன்னனிடம் தெரிவித்தனர். இதைக்கேட்ட கிள்ளிவளவன், "பாகர்கள் எங்கே போயினர்? கால வேகத்தின் கடுஞ்செயல்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனரா?" என்று சிற்றத்துடன் கேட்டான். ஏவலர்கள் "மன்னர்பெரும, மன்னிக்கவேண்டும். காலவேகம் கட்டுக்கடங்காமல் திரிகிறது. பாகர்களால் அதனை அடக்கமுடியவில்லை" என்று பணிவுடன் கூறினர். உடனே சோழன், "அவ்வாறானால் யானையை அடக்குவோர் ஒருவருமில்லையா? நானே போய் அடக்கி விட்டுத் திரும்புகிறேன். ஏவலர்காள்! நீங்கள் விரைவில் போய் நமது வீரர்கள் சிலரை இங்கு வருமாறு தெரிவியுங்கள்" என்று கட்டளையிட்டான்.

அப்போது அருகிலிருந்த உதயகுமரன், "அப்பா! இச்சிறு செயலின் பொருட்டுத் தாங்கள் செல்லவேண்டுவதில்லை; நானே போய் யானையை அடக்கிவிட்டு வருகிறேன். விடை கொடுங்கள்" என்று பணிவுடன் வேண்டினன். மைந்தனின் மொழிகேட்டு மகிழ்வடைந்த சோழன், 'மகனே, மக்கள் நலமே மன்னவன் நலமாகும். விரைவிற் சென்று வெற்றியுடன் திரும்புக" என்று அன்புடன் விடைகொடுத்து அனுப்பினன்.

உடனே உதயகுமரன் தேரிலேறி வீரர்கள் சிலருடன் புறப்பட்டுப்போய்க் காலவேகம் இருந்த இடத்தையடைந்தான். அங்குத் தேரைவிட்டிறங்கி, ஈட்டியுடன் யானையின் அருகிற் சென்றான். இவனைக் கண்டதும் யானை துதிக்கையைத் தூக்கிக்கொண்டு சுழற்றிப் பிடிக்க நெருங்கி வந்தது. வீரர்களும் சூழ வந்தனர்.

உதயகுமரன் சிறிதும் அஞ்சாமல் எதிர்நோக்கிச் சென்று ஈட்டியை நீட்டி உருத்து நோக்கினன். யானை இவனது வீரப்பார்வையால் உள்ளங்கலங்கிப் பிளிறிக் கொண்டு மறுபுறம் திரும்பி ஓடத் தொடங்கியது.

ஆனல் பாகர்களும் குத்துக் கோற்காரர்களும் மறு. புறத்தில் ஆயுதங்களுடன் நின்றுகொண்டு யானையை ஓடவிடாமல் மறித்தனர். அதனுல் யானை மீண்டும் உதய குமரன் பக்கம் திரும்பியது. அதற்குள் உதயகுமரன் ஈட்டியை நீட்டியவண்ணம் யானையை நெருங்கினுன். அதனுல் யானை அஞ்சிப் பெருமுழக்கம் செய்து உடலைக் குறுக்கிக்கொண்டு பணிந்து நின்றது. உடனே உதய குமரன் காலவேகத்தின் அருகிற்சென்று துதிக்கையின் மேல் தட்டிக்கொடுத்தான். யானை அடங்கிவிட்ட தற்கு அறிகுறியாகப் பேசாமல் நின்றது. அதனையறிந்த இளவரசன் யானையின் தந்தத்தைப் பிடித்து அச்சம் நீங்கத் தடவினுன். பிறகு உதயகுமரன் யானையை அதன் தந்தத்தைப் பிடித்துக்கொண்டு சிறிது தூரம் நடத்திச் சென்ருன்; இனி, யானை கட்டுக்கடங்கிவிடும் என்று அறிந்ததும் பாகர்களிடம் ஒப்படைத்துவிட்டுத் தேரிலேறிப் புறப்பட்டான்.

நகர மக்கள் அனைவரும் உதயகுமரனின் அஞ்சா நெஞ்சத்தையும் வீரத்தன்மையையும் பார்த்து வியந்து போற்றினர். "இளவரசர் வாழ்க! வீரச்செயல் வாழ்க!" என்று பேராரவாரம் செய்தனர். மகனின் வீரச் செயலை யறிந்த கிள்ளிவளவன் களிப்படைந்தான்.

## குறிப்பு

இது, வீரச்செயலை விளக்கும் ஒரு நிகழ்ச்சியாகும். இந் நிகழ்ச்சி மணிமேகலை என்னும் நூலில் உள்ளது. இந்நூல் ஐம் பெருங்காப்பியங்களில் ஒன்று; சித்தலைச்சாத்தனுர் என்பவரால் இயற்றப்பட்டது.

## கேள்விகள்

1. உதயகுமரன் என்பவன் யார்? அவனுடைய தன்மைகள் யாவை?
2. காலவேகம் என்னும் யானை மதங்கொண்டு என்ன செய்தது?
3. உதயகுமரன் யானையை எவ்வாறு அடக்கினுன்?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—ஆர்வம், சிற்றம், கட்டளை, மைந்தன், சூழ, வியர்த்து, ஆரவாரம். (மாதிரி:—ஆர்வம்—விருப்பம்)
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—செலுத்திய, கட்டுத்தறி, பிளிறிக்கொண்டு, ஏவலர், முழக்கம். (மாதிரி:—தமிழ் நாட்டில் செங்கோல் செலுத்திய மன்னர்கள் சேர, சோழ, பாண்டியர்கள்.)

### II. வாக்கியப் பயிற்சி

1. வாக்கியம் என்பது சொற்கள் தொடர்ந்து நின்று ஒரு முடிந்த கருத்தைத் தெரிவிப்பதாகும். உதாரணம்:—உதயகுமரன் யானையை அடக்கினான்—இவ்வாக்கியத்தில், உதயகுமரன்—எழுவாய்; அடக்கினான்—பயனிலை; யானையை—செயப்படுபொருள். இதுபோல், இப்பாடத்திலுள்ள வாக்கியங்களுக்கு எழுவாய், பயனிலை, செய்யப்படுபொருள்கள் கூறுக.

### III. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—வாட்போர், விற்போர், மற்போர், வீரவுள்ளம், பலவிடம், அஞ்சியோடி, கட்டளையிட்டான், கட்டுக்கடங்காமல், வேண்டுவதில்லை. (மாதிரி: வாள் + போர் = வாட்போர்)
2. சொற்கள் நான்கு வகைப்படும். அவை: 1. பெயர்ச்சொல்; 2. வினைச்சொல்; 3. இடைச்சொல்; 4. உரிச்சொல்—என்பனவாம். இவற்றுள் யானை, ஈட்டி—பெயர்ச்சொற்கள்; கடந்தது, வருகிறேன்—வினைச்சொற்கள். இவ்வாறே, இப்பாடத்திலுள்ள பெயர்ச்சொல், வினைச்சொற்களைத் தெரிவிக்க.

### IV. கட்டுரைப் பயிற்சி

1. இப்பாட நிகழ்ச்சியை உன் நண்பனுக்குச் சொல்வதுபோல் எழுதுக.
2. யானையை அடக்கிய செயலை உதயகுமரனே சொல்வதுபோல் எழுதுக.

# 2. மாணவர் இல்லம்

என் பெயர் இளங்கோவன். நான் வள்ளலார் மாணவர் இல்லத்தில் உறைந்து இந்துமத பாட்சாலையில் கல்வி பயில்கிறேன். எங்கள் மாணவர் இல்லம் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த வாலாஜாபாத் என்னும் ஊரில், பாலாற்றங்கரையருகில் இருக்கிறது. இவ்வில்லத்தில் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட பல ஊர் மாணவர்கள் தங்கியிருந்து கல்விப் பயிற்சியுடன் பலவகைத் தொழிற் பயிற்சிகளும் நல்லொழுக்கப் பயிற்சியும் பெறுகிறார்கள்.

மாணவர் இல்லத்தில் விடியற்காலை ஐந்து மணிக்கு மணியடிக்கும். உடனே மாணவர் எல்லோரும் எழுந்திருந்து படுக்கைகளைச் சுற்றி வைத்துப் பக்கத்தில் நிற்பர். யாவரும் கைகளைக் கூப்பிக் கடவுளைத் தொழுவர். அப்பொழுது ஒரு மாணவன் பின்வரும் விண்ணப்பத்தைக் கூறுவான் : 'எங்கும் நிறைந்து யாவற்றையும் இயக்கும் இறைவனே! எல்லாரும் நன்று வாழ அருள் செய்வாயாக! தங்கள் அருளின்றி ஒன்றும் நடவாது. இன்று முழுவதும் எங்களோடு இருந்து இந்நாளைப் பயனுள்ளதாகக் கழிக்க அருள்புரிய வேண்டுகிறேன்.' பின்னர் மாணவர்கள், 'அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும். ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்' என்று இறைவனை நோக்கிப் பாடுவர். பாடியபின் பொது விண்ணப்பம் சொல்வர்.

விண்ணப்பம் சொன்னபிறகு, பற்பொடி எடுத்துக் கொண்டு மாணவர்கள் யாவரும் வெளிச்சென்று, காலைக் கடன்களை முடித்துக்கொண்டு இல்லத்திற்கு மீள்வர். ஆறுமணியளவில் யாவரும் வகுப்பு வகுப்பாக அமர்ந்து முன்னாள் கற்ற பாடத்தையும், அன்று கற்க வேண்டிய பாடத்தையும் ஏழு மணி வரையில் படிப்பர். ஆசிரியர்கள் இவர்களுக்குத் துணை புரிவர். படிப்பு முடிந்ததும்

மாணவர் இல்லத்தின் பல்வேறு பணிகளையும் செய்யத் தொடங்குவர்.

மாணவர் இல்லத்தின் எல்லா இடங்களையும் மாணவர்களே துப்புரவு செய்வர். தங்குமிடம், உண்ணுமிடம், வழிபடும் இடம் முதலிய எல்லா இடங்களையும் மாணவர்கள் தம் கைகளில் துடைப்பங்கொண்டு துப்புரவு செய்கிறார்கள். பாலாற்றில் உள்ள நீர் ஊற்றுக்களிலிருந்து குடிப்பதற்காக நீர் கொண்டுவருவர். இல்லத்தைச் சேர்ந்த பயிர்ப்பண்ணை ஒன்று இருக்கிறது. அதிலிருந்து மாணவர்கள் காய்கறிகளைப் பறித்துக்கொண்டு வருவர். அவற்றைச் சமையலுக்குத் தக்கவாறு நறுக்கிக் கொடுப்பர். விறகுத் தொட்டியிலிருந்து அன்றாடம் தேவையான விறகுகளை மாணவர்களே எடுத்துக்கொண்டு போய்க் கொடுப்பர். இல்லத்திற்குத் தேவையான மோர், வெண்ணெய்களை மாணவர்கள் தயிரைக் கடைந்து கொடுப்பர்.

காலையில் பாலாற்றில் நீராடித் தூய ஆடை அணிந்துகொண்டு உண்பதற்குரிய தட்டுகளுடன் உண்ணுமிடத்திற்கு வரிசையாகச் செல்வர். அங்கு அணியணியாக அமர்ந்து இறைவனை வணங்கி உணவு



பாத்திரம் கழுவல்

உண்பர். உணவு பரிமாறும் பணியை மாணவர்களே முறைவைத்துக்கொண்டு செய்வர். உண்டபிறகு உணவு சமைத்த ஏனங்களையும் உணவு பரிமாறிய பாத்திரங்களையும் மாணவர்களே கழுவித் துலக்கித் துப்பரவு செய்வர். பின்னர் மாணவர் யாவரும் குறிப்பிட்ட நேரத்தில் பாடசாலைக்கு அணிவகுத்துச் சென்று கல்வி பயில்வர்.

இல்லத்து மாணவர்களுக்குக் கல்விப்பயிற்சியேயன்றி அறிவு வளர்ச்சி, தொழிற் பயிற்சி முதலியவற்றிற்குரிய பலவகைப் பயிற்சிகள் உண்டு. இல்லத்தில் ஞானசம்பந்தர் நூற்குழுமம், வாகீச இதழ் நிலையம் ஆகியவை உள்ளன. மாணவர்கள் இவற்றிலுள்ள நூல்களையும், நாள், கிழமை, திங்கள் இதழ்களையும் முறையாகப் படித்து அறிவு வளர்ச்சி பெறுவர். இசை பயிலும் விருப்பமும் தகுதியுமுள்ள மாணவர்கள் சுந்தரானந்த இசையரங்கில் சேர்ந்து இசைப்பயிற்சி பெறுவர்.



அகன்ற கோபுரம்

மாலைப் பொழுதில் மாணவர்கள் உடல் நலத்திற்குரிய பயிற்சிகளிலும் விளையாட்டுக்களிலும் ஈடுபட்டு மனங்களிப்பர். சிலம்பப் போர், வாட் போர், மற்போர் ஆகிய வீர விளையாட்டுக்களிலும் மாணவர்கள் பயிற்சி

பெறுகிறார்கள். 'விரதசாரி விளையாட்டு' என்ற புதுமையான உடற்பயிற்சி வகைகளைச் செய்கிறார்கள். ஆசனப் பயிற்சிகள், பலர் கூடிக் கோபுரம்போல் ஒருவர் மேல் ஒருவர் ஏறி நிற்றல் முதலிய பயிற்சிகளை மிக எளிதாய்ச் செய்கிறார்கள்.



உயர்ந்த கோபுரம்



பொத்தான் செய்தல்

இல்லத்தில் அச்சகம் ஒன்று இருக்கிறது. இதில் மாணவர்கள் அச்சுத்தொழில் பயில்கிறார்கள். காகிதம் செய்தல், மாட்டுக்கொம்பிலிருந்து பொம்மைகள் செய்தல், பொத்தான் செய்தல் முதலிய தொழில்களிலும் பயிற்சி பெறுகிறார்கள். இன்னும் நெசவுத் தொழில், தச்சுத் தொழில், தையல் தொழில், பயிர்த் தொழில் முதலிய பலவகைத் தொழில்களையும் பயில்கிறார்கள்.

செந்தமிழில் திறமையாகப் பேசுதல், நாடகங்களில் கலந்துகொண்டு உணர்ச்சி தோன்ற நடித்தல், அறிவுத்

திறமையுடன் சொற்போர் நிகழ்த்துதல், கேட்போர் மனங்களிக்கப் பல பொருள்பற்றி உரையாடுதல், இன்னிசையுடன் பாடுதல் முதலியவற்றில் இல்லத்து மாணவர்கள் சிறந்து விளங்குகிறார்கள்.

இங்ஙனம் மாணவர்கள் அறிவு, தொழில், உடல் நலம் முதலிய துறைகளில் முன்னேற்றத்துடன் வளர்ச்சி பெற்று நலம்பெறும்படி இல்லத்தை மிகத் திறமையுடன் நடத்தி வருபவர் திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்கள். இவரை மாணவர்கள் யாவரும் 'அப்பா' என்று அன்புடன் குறிப்பிடுவர். இவரது இடையறா முயற்சியால் இல்லம் நாளுக்குநாள் வளர்ந் தோங்கி வருகிறது. இவ்வில்லத்தைப் பல பெரியார்கள் வந்து பார்வையிட்டுப் பாராட்டுரை பகர்ந்துள்ளனர்.

நான் இவ்வில்லத்தில் சேர்ந்து இரண்டாண்டுகளாய்க் கல்வி பயின்று வருகிறேன். மாணவர்கள் செய்யும் எல்லாப் பயிற்சிகளிலும் நானும் கலந்துகொண்டு ஊக்கத்துடன் செய்து வருகிறேன். இவற்றால் அறிவு வளர்ச்சியுடன் தொழிற் பயிற்சியும் பெற்று வருகிறேன். இத்தகைய பயிற்சி பெறும் மாணவர்கள் எதிர்கால இந்தியாவில் நற்குடி மக்களாய் விளங்குவார்கள் என்பது எனது உறுதியான எண்ணம்.

## குறிப்பு

இது, ஒரு மாணவன் தான் தங்கியிருக்கும் இல்லத்தின் நிகழ்ச்சிகளை நேரில் அறிந்து தெரிவிப்பதாகும்.

## கேள்விகள்

1. வள்ளலார் மாணவர் இல்லம் எங்கு இருக்கிறது? அவ்வில்லத்து மாணவர்கள் கடவுளிடம் வேண்டும் விண்ணப்பம் யாது?
2. இல்லத்து மாணவர்களின் கடமைகள் யாவை? அவர்கள் அறிவு, தொழில், உடல்நலம் ஆகிய துறைகளில் எவ்வெவ்வாறு பயிற்சி பெறுகிறார்கள்?
3. வள்ளலார் மாணவர் இல்லத்தின் சிறப்பைத் தெரிவிக்க.

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—இல்லம், உறைந்து, மாவட்டம், இயக்கும், பணி, துப்புரவு, பாராட்டுரை.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—அமர்ந்து, பயிர்ப்பண்ணை, தூய ஆடை, அணியணியாக, ஈடுபட்டு, அச்சகம், சொற்போர்.

### II. வாக்கியப் பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் ஏற்ற எழுவாய்களை வைத்து எழுதுக:-
   அ. —— காலையில் எழுந்து கடவுளைத் தொழுவோம்.
   ஆ. —— கல்விப் பயிற்சியுடன் தொழிற் பயிற்சியும் பெறுவர்.
2. கோடிட்ட இடங்களில் ஏற்ற பயனிலைகளை வைத்து எழுதுக:-
   அ. மாணவர்கள் துடைப்பத்தால் துப்புரவு ———.
   ஆ. நான் அச்சகத்தில் தொழிற் பயிற்சி ———.

### III. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:— ஒழுக்கப் பயிற்சி, ஆருயிர் பற்பொடி, தொழிற் பயிற்சி, சிலம்பப் போர், மாட்டுக் கொட்டு செந்தமிழ், இன்னிசை.
2. பெயர்ச் சொல் ஆறு வகைப்படும். அவை: 1. பொருட்பெயர் 2. இடப் பெயர்; 3. காலப் பெயர்; 4. சினைப் பெயர் 5. குணப் பெயர்; 6. தொழிற் பெயர் என்பனவாம் இவற்றிற்கு முறையே உதாரணங்கள்: மாணவர், செங்கு பட்டு, காலை, கைகள், கருமை, படித்தல்.

### IV. கட்டுரைப் பயிற்சி

1. நீ கல்வி பயிலும் பள்ளியின் நிகழ்ச்சிகளைப் பற்றி எழுதுக.
2. நீ நேரில் பார்த்த புதிய பள்ளியைப் பற்றி எழுதுக.

கவிமணி கல்வி பயின்று வருங்காலத்தில் தமிழ் மொழியில் மிகுந்த ஆர்வமுடையவராய் இருந்தார். ஆகையால், இவர் இடையிடையே நேரங்கிடைத்த பொழுதெல்லாம் தமிழ் நூல்களை ஊக்கத்தோடு பயின்று வந்தார்; தேரூருக்கு அருகிலுள்ள வாணன் திட்டு என்னுமிடத்தில் சாந்தலிங்கத் தம்பிரான் என்ற தமிழறிஞர் உள்ளார் என்பதையறிந்து அடிக்கடி அங்குப்போய் அவரிடம் பணிவுடன் பழகி இலக்கண இலக்கியங்களைப் பாடங்கேட்டு வந்தார். இடையரூத இம்முயற்சியினால் கவிமணி தமிழ்ப் புலமையில் வளர்ச்சிபெற்று வந்தார்.

கவிமணி இளமையிலேயே கவிபாடும் திறம் பெற்றிருந்தார். இவர் விளையாட்டாக அவ்வப்பொழுது சில பாடல்களை இயற்றித் தம் நண்பர்களிடம் படித்துக் காட்டி மகிழ்வதுண்டு. இவ்வாறு இவரியற்றிய ஒரு பாடலை இவருடைய ஆசிரியர் அறிய நேர்ந்தது. அப்பாடலைப் படித்துப்பார்த்த அவர், 'பாடல் நன்றாயிருக்கிறது' என்று பாராட்டினார். அப்புகழ் மொழியைக் கேட்ட இளங் கவிமணி மிகவும் களிப்படைந்தார். இவருக்குக் கவிபாடும் ஆர்வம் பெருகும்படி அடிக்கடி ஊக்கமூட்டி வந்தவர், சங்கரலிங்கத் தம்பிரான் என்ற மற்றொரு பெரியாராவார்.

கவிமணியவர்கள் தமது இருபத்தைந்தாம் வயதில் திருமணம் செய்துகொண்டு, கோட்டாறு என்னும் ஊரில்போய், அங்குள்ள தொடக்கநிலைப் பள்ளியில் ஆசிரியராக அலுவல் செய்துவந்தார். பின்னர், சிறிது காலம் நாகர்கோயில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலும், திருவனந்தபுரம் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலும் ஆசிரியராக அமர்ந்து அலுவல் செய்தார். அதன் பின், இவரது சிறந்த தமிழ்ப் புலமையினால், திருவனந்தபுரம் பேரரசர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராயும் சிறிது காலத்தில் பேரரசர் பெண்கள் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராயும் அமர்ந்து யாவரும் கொண்டாடத் தமிழ் கற்பித்துப் புகழ்பெற்றார். நீண்ட

காலம் கல்லூரிப் பேராசிரியராக விளங்கியிருந்த இவர் 1931-ஆம் ஆண்டில் ஓய்வுபெற்றுக் கவிகள் இயற்றிச் செந்தமிழ்த் தொண்டு செய்துவருகிறார்.

கவிமணியவர்கள், ஆசிரியராய்ப் பணியாற்றிவரும் காலத்திலேயே, ஓய்வு நேரங்களிலெல்லாம் சிறுவர்களும் படித்துணர்ந்து மகிழும்படியான எளிய இனிய பாக்களை இயற்றிவந்தார். அவையெல்லாம் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளில் அவ்வப்பொழுது வெளிவந்தன. அப்பாக்களைப் படித்தறிந்த பலர் அவற்றின் சிறப்பியல்புகளைப் போற்றிக் கொண்டாடினர்.

சிறுவர்களுக்குரிய அரிய கருத்துக்கள் நிறைந்த இனிய பாக்களைப் புனைவதில் கவிமணியவர்கள் மிக வல்லவர். பறவைகள், விலங்குகள், ஊர்திகள் முதலிய பொருள்கள்பற்றி இவர் இயற்றியுள்ள பாடல்கள் எளிய நடையும் அருங்கருத்தும் இனிய ஓசையும் உடையனவாய்ச் சிறுவர்கள் மனத்தைக் கவர்ந்து களிப்படையச் செய்தன. அதனால், சிறுவர்களுக்குரிய பாடப்புத்தகங்களில் இப்பாடல்கள் மிகுதியாகச் சேர்க்கப்பெற்றுள்ளன.

கவிமணியவர்கள் இயற்றியுள்ள பெரும்பாலான பாடல்கள் யாவும் தொகுக்கப்பெற்ற 'மலரும் மாலையும்' என்னும் நூல் வெளிவந்துள்ளது. இன்னும் ஆசிய சோதி, நாஞ்சில் நாட்டு மருமக்கள்வழி மான்மியம், இசைப் பாடல்கள் முதலிய பல நூல்களும் வெளிவந்துள்ளன. இவற்றில் கவிமணியவர்களின் கற்பனைப் பாடல்களும், பிறமொழிப் பாடல்களைத் தழுவி மொழி பெயர்த்த பாடல்களும் பலவாம். கவிமணியவர்களின் கவிகளில் கருணைக் கடல், பாரசீகக் கவியமுதம், மலர்கள், குழந்தை, ஆறு, தீண்டாதார் விண்ணப்பம் முதலியவை சிறந்த கருத்துக்களையுடையனவாகும்.

கவிமணியவர்களின் கவிப் பெருமையைக் கண்ட அறிஞர்கள் இவரைப் போற்றிக் கொண்டாடினர். அத

ஞல் இவரை நன்கு மதித்துச் சிறப்புச் செய்ய வேண்டு மென்று கருதிய சென்னைமாகாணத் தமிழ்ச் சங்கத்தார், 1940-ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆண்டு விழாவில் அறிஞர் பலர் முன்னிலையில் இவருக்குக் 'கவிமணி' என்னும் பட்டத்தைச் சூட்டிக் களிப்படைந்தனர். பின்னர், 1943-ஆம் ஆண்டில் செட்டிநாட்டுத் தமிழன்பர்கள், நகரத்தார் சார்பில் கூட்டிய பேரவையில் கவிமணியை அன்புடன் அழைத்துவந்து பொன்னுடை போர்த்துப் போற்றிப் பெருமை செய்தனர். இச்சிறப்புக்களால் இவர் மகிழ்வடைந்தார்.

கவிமணியவர்கள் குழந்தைபோன்று களங்கமில்லாத உள்ளமுடையவர்; தமிழ் மொழியினிடத்துப் பெரும் பற்றுள்ளவர்; மலர்ந்த முகமும் இனிய மொழியும்கொண்டு எவருடனும் அன்புடன் பேசும் அரும் பண்புள்ளவர்; பிறர்க்குதவும் பெருங்குணமும் இறைவனிடத்தில் பேரன்பும் நிறைந்தவர். இவர் இப்பொழுது நாகர்கோயிலுக்கு அண்மையிலுள்ள புத்தேரி என்னும் ஊரிலுள்ள சிறிய மாளிகையில் தங்கி வாழ்ந்துவருகிறார். இவரைக் காணத் தமிழகத்திலிருந்து பலர் வந்துபோகின்றனர். தள்ளாத வயதிலும் தமிழ் மொழியின் பெருமையைப்பற்றிப் பேசும் இவரது தமிழார்வத்தைக் கண்டு அவர்கள் வியந்து போற்றுகின்றனர். கவிமணி வாழ்க.

## குறிப்பு

இது, வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரையாகும். இதில் கவிமணியவர்களின் வாழ்க்கை வரலாறு சுருக்கமாக உள்ளது.

## கேள்விகள்

1. கவிமணியவர்களின் வரலாற்றைத் தெரிவிக்க.
2. இவரது கல்விப் பயிற்சியைத் தெரிவிக்க. இவர் எவ்வாறு தமிழ்ப் புலமை பெற்ருர்?
3. இவர் செய்த அலுவல் யாது? உயர்வு பெற்றது எங்ஙனம்?
4. இவர் இயற்றியுள்ள நூல்கள் யாவை? இவருடைய பாடல்களின் சிறப்பென்ன?

5. இவர் எவ்வாறு நன்கு மதிக்கப்பெற்றார்?
6. இவரது குணநலன்களைத் தெரிவிக்க.

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—திகழ்கிறார்கள், மிளிர்கிறார், ஆண்டு, தேர்வு, ஆர்வம், திருமணம், தொண்டு, பணி, கவி, பா, பாடல், ஊர்திகள், அலுவல்.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—தேர்ச்சி, தொடக்க நிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரி, பணிவுடன், தமிழ்ப்புலமை, இயற்றி, பெரும்பாலான.

### II. வாக்கியப் பயிற்சி

1. கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய்களைத் தெரிவிக்க:—
   அ. கவிமணி இயற்றிய பாடலை ஆசிரியர் 'நன்றாய் இருக்கிறது' என்று பாராட்டினார்.
   ஆ. கவிமணியின் பாடல்கள் எளிமையும் இனிமையுமாய் இருக்கின்றன.
2. கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள பயனிலைகளைத் தெரிவிக்க:—
   அ. இளமையிலேயே கவிபாடும் திறமையைப் பெற்றிருந்தார், நமது கவிமணி.
   ஆ. அரிய கருத்துக்கள் உடையனவாய் இருக்கின்றன, கவிமணியின் பாடல்கள்.

### III. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—முன்னணி, பெருங்கவிஞர், தமிழறிஞர், செந்தமிழ், படித்துணர்ந்து, சிறப்பியல்பு.
2. பிறந்தார்—இது முற்றுவினை; அறிந்த, சேர்ந்து—இவை எச்சவினைகள். இவ்வாறு முற்றுவினை, எச்சவினைகளை இப்பாடத்திலிருந்து எடுத்து எழுதுக.

### IV. கட்டுரைப் பயிற்சி

1. இவ்வரலாற்றைக் கவிமணியே கூறுவதுபோல் எழுதுக.
2. நீ கல்வி பயின்று வரும் வரலாற்றை உன் நண்பனுக்குத் தெரிவிப்பது போல் எழுதுக.

# 4. இலக்கிய பஞ்சகம்

## திருக்குறள்

வள்ளுவர் தந்த திருமறையைத்—தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே—என்றும்
உத்தம ராகி ஒழுகுவமே. 1

## கம்பராமாயணம்

பாலின் சுவைக்கட லுண்டெழுந்து—கம்பன்
பாரிற் பொழிந்ததீம் பாற்கடலை
நாவின் இனிக்கப் பருகுவமே—நூலின்
நன்னய முற்றுந் தெளிகுவமே. 2

## சிலப்பதிகாரம்

தேனிலே ஊறிய செந்தமிழின்—சுவை
தேரும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும்—நிதம்
ஓதி யுணர்ந்தின் புறுவோமே. 3

## கலித்தொகை

கற்றவர் மெச்சும் கலித்தொகையாம்—இன்பக்
கற்பனை சேருங் களஞ்சியத்தை
முற்ற அளந்து தெரிவோமே—காதல்
மூழ்கும் துறைகண்டு வாழ்வோமே. 4

## பத்துப்பாட்டு

பண்டை இயற்கை வளங்களெல்லாம்—பத்துப்
பாட்டின் வளத்தினிற் கண்டறிந்து
மண்டல மெங்குங் கமழும்அருந்தமிழ்
வாசம் நுகர்ந்து மகிழ்வோமே. 5

—கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை

# 5. தந்தி வந்தது!

"ஐயா! வீட்டில் யார்? தந்தி வந்திருக்கிறது, வாருங்கள்!" என்று ஒரு வீட்டு வாயிலருகில் நின்று கூவினான் தந்திச் சேவகன். உள்ளேயிருந்த உலகநாதர் விரைந்துவந்து கையெழுத்திட்டுத் தந்தியை வாங்கினார். தந்திச் சேவகன் விடைபெற்றுச் சென்றான். இதற்குள் அவருடைய மனைவி மங்கையர்க்கரசியும், மகன் மதிவாணனும், சிறுமி செல்லமும் உள்ளிருந்து வந்து தந்திச் செய்தி என்ன என்று அறிய ஆவலாயிருந்தனர்.

"நமது கமலம் சென்னையிலிருந்து இன்றிரவு புறப்பட்டு நாளைக் காலை தன் கணவனோடு வருகிறாள். மாப்பிள்ளை மணவாளர் தந்தியடித்திருக்கிறார்" என்று உலகநாதர் மகிழ்ச்சியுடன் தன் மனைவியை நோக்கித் தெரிவித்தார். யாவரும் மகிழ்ச்சியடைந்தனர். மங்கையர்க்கரசி உள்ளே சென்றாள். மதிவாணன் தன் தந்தையிடமிருந்த தந்தியை வாங்கிப்பார்த்துவிட்டு, 'அப்பா! இத்தந்தி சென்னையில் இன்று காலை ஒன்பது மணிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது மணி பத்துதான் ஆகிறது. அதற்குள் வந்துவிட்டதே!' என்று வியப்புடன் சொன்னான்.

**தந்தை:** நாமிருக்கும் திருச்சிராப்பள்ளி நகரமாயிருப்பதால், தந்தி உடனே வந்துவிட்டது; சிற்றூராயிருந்தால் சிறிது காலதாமதமாகும்.

**செல்லம்:** அப்பா! தந்தி எப்படி அனுப்புகிறார்கள்?

**தந்தை:** நமது நகரில் அஞ்சல் நிலையம் இருப்பது உனக்குத் தெரியும். இவ்வாறே பெரிய ஊர்கள் எல்லாவற்றிலும் அஞ்சல் நிலையங்கள் இருக்கின்றன. அந்நிலையங்களில் தந்தியனுப்பும் சாதனங்களை அமைத்திருக்கிறார்கள். அவற்றின் துணையால் தந்திச் செய்திகளை அனுப்புகிறார்கள். பெரிய நகரங்களில் தந்தி நிலையம் தனியே இருக்கும்.

**செல்லம் :** சென்னையில் அடித்த தந்தி இங்கு உடனே எப்படி வந்தது?

**மதிவாணன் :** செல்லம்! நான் தெரிவிக்கிறேன். தெருவில் தந்திக் கம்பங்கள் நிற்கின்றன அல்லவா? அவற்றில் பல கம்பிகள் இருப்பது உனக்குத் தெரியும். அக்கம்பிகள் காந்த சக்தியுள்ளவை. அவை ஒவ்வொரு தந்தி நிலையத்திலும் பொருத்தப்பட்டிருக்கும். அந் நிலையங்களில் தந்திச் செய்தியை அனுப்பவும், பெற்றுக் கொள்ளவும் சில கருவிகள் இருக்கின்றன. அவற்றின் வாயிலாக ஒலிக்குறிப்பு ஏற்பாட்டில் தந்திச் செய்தியை அனுப்புகிறார்கள்.

**செல்லம் :** தந்தி நிலையத்தில் ஒரு கருவி கட், கடக் என்று ஒலியை உண்டாக்குகிறதே, அதுதானா தந்தியடிக்கும் கருவி?

**மதிவாணன் :** ஆம். அக்கருவியின் வாயிலாக, கட் கடக் என்னும் ஒலியை உண்டாக்கினால் மற்றொரு தந்தி நிலையத்திலுள்ள கருவியில் அவ்வொலி உண்டாகும். ஒவ்வொரு எழுத்திற்கும் இன்னின்ன ஒலியென்று ஒலிக்குறிப்பு முறை இருப்பதால், அம்முறைப்படி நாம் எழுதிக்கொடுக்கும் செய்தியை ஒவ்வொரு எழுத்தாக ஒலியுண்டாக்குவார்கள். அதை மற்றொரு நிலையத்தார் கேட்டு உடனுக்குடன் ஒரு தாளில் எழுதி உரிய முகவரியுள்ளவர்களுக்குச் சேவகர்களின் வாயிலாக அனுப்புவார்கள். இத்தந்தி முறைக்கு டெலகிராப் என்று பெயர். அப்பாவுக்கு வந்தது இத்தந்திதான்.



டெலகிராப்

**செல்லம் :** ஒரு கருவியைக் காதில் வைத்துக் கொண்டு பேசுகிறார்களே, அதுவும் தந்திதானே?

**மதிவாணன் :** ஆம், அதுவும் தந்திதான். ஆனால், அதற்கு டெலிபோன் என்று பெயர். அப்பா! தந்தியடிப்பதற்கு ஒலிக்குறிப்பு ஏற்பாட்டைச் செய்தவர் யார்?

**தந்தை :** மோர்ஸ் என்பவர்.

**செல்லம் :** அண்ணா! தூரத்தில் உள்ளவர்களோடு டெலிபோனில் எப்படிப் பேசுகிறார்கள்?

**மதிவாணன் :** மின்சாரத்தின் துணையால்தான் இந்த அற்புதச் செயல் நடைபெறுகிறது. தந்தியடிப்பதற்குக் கம்பிகள் இணைக்கப் பட்டிருப்பது போலவே, தந்தி பேசுவதற்கும் கம்பிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. தந்தி பேசும் நிலையங்களிலோ, வீடுகளிலோ, கம்பிகளின் இணைப்புடன் பேசும் கருவிகள் இருப்பது உனக்குத் தெரியும். இக்கருவியில் பேசுவதற்கும், பேசுவதைக் கேட்பதற்கும் இரு வகைக் குழாய்கள் இருக்கின்றன.



டெலிபோன்

இதையெடுத்துக் காதில் வைத்துக் கொண்டால் செவிக்குழாய் வாயிலாகச் செய்தியைக் கேட்டு, வாய்க்குழாய் வாயிலாகச் செய்தியைச் சொல்லலாம். இக்கருவி கம்பியுடன் இணைக்கப்பட்டிருப்பதால் இங்ஙனம் பெருந்தொலைவில் உள்ளவர்களோடும் நேரில் பேசுவதுபோல் பேசமுடிகிறது. ஏன் அப்பா, பல வீடுகளில் டெலிபோன் கருவி இருக்கிறதே, நாம் பேச விரும்புகிறவரோடு மட்டும் எவ்வாறு பேச முடிகிறது?

**தந்தை :** மதிவாணு, சொல்கிறேன் கேள் : ஒவ்வொரு டெலிபோனுக்கும் ஒவ்வொரு எண் உண்டு. நாம் உள்ளூரிலுள்ள ஒருவரோடு பேசவேண்டுமாஞல் அவர் வீட்டு டெலிபோன் எண்ணை, நமது வீட்டிலிருக்கும் டெலிபோன் கருவியில் 1 முதல் 0 வரையிலுள்ள எண்களின் துணையால் அழைக்கவேண்டும். வேண்டிய எண்களைத் திருப்பிஞல் அவர் வீட்டு டெலிபோன் கருவியில் மணியடிக்கும். உடனே அவர் டெலிபோன் கருவியை எடுத்துக் கொண்டு நம்மோடு பேசுவார். வெளியூரிலுள்ள ஒருவரோடு பேச வேண்டுமாஞல், அவருடைய டெலிபோன் எண்ணைத் தந்தி நிலையத்திற்குத் தெரிவிக்கவேண்டும். அங்குள்ள அலுவலாளர் நமது டெலிபோனுடன் வெளியூர் நண்பரின் டெலிபோனை இணைத்து விடுவார். அதன் பிறகுதான் நாம் பேச முடியும்.

**செல்லம் :** எவ்வளவு தொலைவில் உள்ளவர்களோடும் பேசமுடியுமா? மிகவும் வியப்பான கருவி அப்பா! சென்னையிலிருக்கும் நம் அக்காவோடு பேச முடியுமா?

**தந்தை:** நன்ருய்ப் பேசலாம். நமது வீட்டில் டெலிபோன் இல்லாவிட்டாலும் தந்தி நிலையத்திற்குச் சென்று கட்டணம் செலுத்திவிட்டு விருப்பம்போல் பேசிவிட்டு வரலாம். ஆஞல், இதற்குக் கால அளவு உண்டு.

**மதிவாணன் :** இத்தந்தியைக் கண்டுபிடித்தவர் யார்?

**தந்தை:** இப்பொழுது நாம் பேசும் தந்தியைக் கண்டுபிடித்தவர் தாமஸ் ஆல்வா எடிசன் என்பவர். ஆஞல், இத்தந்திமுறையை முதன் முதல் கண்டுபிடித்தவர் கிரகாம் பெல் என்பவர். இவர் கண்டுபிடித்த முறையில் ஏதோ ஒரு குறையிருந்தது. அக்குறையைப் போக்கி இக்காலத்தில் எல்லோருக்கும் பயன்படும் வகையில் அமைத்து எடிசன் வெற்றி பெற்ருர்.

**மதிவாணன் :** இத் தந்தியால் பல நன்மைகள் ஏற்படுகின்றன அல்லவா ?

**தந்தை :** ஆமாம் ; எவ்வளவோ நன்மைகள் ஏற்படுகின்றன. சென்னை முதலிய பெரிய நகரங்களிலுள்ள வீடுகள், தொழிற்சாலைகள், வணிக நிலையங்கள், அலுவலகங்கள் முதலிய இடங்களிலெல்லாம் டெலிபோன் கருவி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இவ்விடங்களில் உள்ளவர்கள் உடனுக்குடன் இருந்த இடத்திலிருந்தே செய்திகளைத் தெரிவிக்கிறார்கள் ; அல்லது கேட்டறிகிறார்கள். இதனால் வணிகர்களுக்குக் காலமும் பொருளும் மிச்சமாவதுடன் செயல்கள் விரைவிலும் முடிகின்றன. இவ்வாறே அலுவலகங்களில் உள்ளவர்களும் பொதுமக்களும் அளவிறந்த நன்மைகள் அடைகிறார்கள்.

**மதிவாணன் :** கம்பியில்லாத் தந்தி என்பது என்ன ?

**தந்தை :** இந்தியாவிலிருந்து இங்கிலாந்தில் உள்ளவருக்கு விரைவில் செய்தி அனுப்ப வேண்டுமானால் என்ன செய்வது ? அவ்வளவு தொலைவுக்குக் கம்பிகள் ஏற்படுத்த முடியுமா ? கடலில் கம்பங்கள் நிறுத்துவது எப்படி ? ஆகையால், கம்பியில்லாமலே செய்தியனுப்பும் முறையை ஏற்படுத்தினர். இதற்குத்தான் கம்பியில்லாத் தந்தி என்று பெயர். இந்த ஏற்பாட்டில் வெற்றி பெற்றவர் மார்க்கோனி என்பவர். இப்புதுமை ஏற்பட்டதால் உலகமுழுவதும் செய்தி பரவுவது எளிதாய் விட்டது. எல்லாம் விஞ்ஞானத்தின் விந்தைகள் ! சென்னைக்குச் செல்லும்பொழுது கம்பியில்லாத் தந்தி நிலையத்திற்கு உங்களை அழைத்துப் போய் அதன் விவரத்தைத் தெரிவிக்கிறேன். வாருங்கள் உள்ளே போவோம்.

" தந்தி வந்தது ! டெலகிராப், டெலிபோன், கம்பியில்லாத் தந்தி எல்லாவற்றையும் பற்றிப் பேசி

விட்டோம்!" என்று மதிவாணனும் செல்லமும் மகிழ்ச்சியோடு சொல்லிக்கொண்டு தந்தையுடன் உள்ளே சென்றார்கள்.

### குறிப்பு

இது விஞ்ஞான சம்பந்தமான கட்டுரை. இதில் டெலகிராப், டெலிபோன் ஆகியவற்றின் விவரங்கள் உரையாடல் முறையில் விளக்கப்பட்டுள்ளன.

### கேள்விகள்

1. தந்திச் செய்தி எவ்வாறு அனுப்பப்படுகிறது?
2. டெலிபோனில் எவ்வாறு பேசுகிறார்கள்?
3. வெளியூர்க்காரரோடு டெலிபோனில் பேச என்ன செய்ய வேண்டும்?
4. வீட்டில் டெலிபோன் இல்லாதவர்கள் டெலிபோனில் எவ்வாறு பேசுகிறார்கள்?
5. தந்தியால் ஏற்படும் நன்மைகள் யாவை?
6. கம்பியில்லாத் தந்தி என்பது யாது?

### பயிற்சி

I. *மொழிப் பயிற்சி*

1. பொருள் கூறுக:—மூகவரி, இணைப்பு, தொலைவு, அலுவலாளர், கட்டணம், அலுவலகம், வணிகர்.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—அஞ்சல் நிலையம், சாதனம், வாயிலாக.

II. *வாக்கியப் பயிற்சி*

1. தந்தியால் மக்களுக்கு நன்மை ஏற்படுகிறது—இதில், நன்மை—எழுவாய்; ஏற்படுகிறது—பயனிலை. எழுவாய் ஒருமையாய் இருப்பதால், பயனிலையும் ஒருமையாய் இருக்கிறது. 'நன்மைகள்' என்று எழுவாய் பன்மையாய் இருந்தால், 'ஏற்படுகின்றன' என்று பயனிலையும் பன்மையாய் இருக்கும்.
2. எழுவாய் பயனிலைகளைப் பன்மையாய் மாற்றி எழுதுக:—
   அ. நான் டெலிபோனில் பேசினேன்.
   ஆ. தந்திக் கம்பத்தில் கம்பி இருக்கிறது.

III. *கட்டுரைப் பயிற்சி*

1. டெலகிராப் என்பதைப்பற்றிப் பத்து வரிகளில் தெரிவிக்க.
2. டெலிபோனைப்பற்றி, உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

# 6. அறிவானந்தன்

பல்வளம் நிறைந்த பாண்டிய நாட்டில் சுந்தர பாண்டியன் என்ற வேந்தன் செங்கோல் செலுத்தி வந்தான். இவன் நல்லறிவும் நல்லொழுக்கமும் உடையவனுகையால், தனது அவைக் களத்தில் அவ்வப்பொழுது பல புலவர்களைக் கூட்டி அவர்களுடன் இன்னுரையாடி மனங்களிப்பான்.

பாண்டியனது அவையில் அறிவானந்தன் என்ற ஒருவன் இருந்தான். இவன் நகைச்சுவை ததும்பப் பேசுவதில் மிக வல்லவன். மன்னனும் புலவர்களும் நுண்ணிய கருத்துக்களை எண்ணிப் பேசுங்கால் இடையிடையே நகைச்சுவை விளக்கும் சொற்களைக் கூறி யாவரையும் இன்புறுத்துவான். அதனுல், அரசன் அறிவானந்தனிடம் அன்புகொண்டு ஆதரித்துவந்தான்.

ஒரு சமயம் பாண்டிய மன்னனுக்கும் சேர வேந்தனுக்கும் நாட்டு எல்லை காரணமாகச் சச்சரவு ஏற்பட்டது. இச் சச்சரவால் எல்லையில் காவலாக இருந்த பாண்டிய வீரர்கள் சேரநாட்டு வீரர்களோடு போர் செய்து அவர்களை நெடுந்தூரம் ஓடும்படி துரத்திவிட்டுத் திரும்பினர். இச்செய்தியைத் தூதர்கள் வந்து பாண்டிய மன்னனிடம் தெரிவித்தனர். அப்பொழுது புலவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்த அரசன் வெற்றிச் செய்தியைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தான்.

பாண்டிய நாட்டு வீரர்களின் வெற்றியைக் கேட்ட புலவர்கள் வீரர்களைப் பாராட்டிப் புகழ்ந்தனர். அப்பொழுது அங்கிருந்த அறிவானந்தன் "அரசே! சேர நாட்டு வீரர்களின் திறமையே திறமை! வெற்றி பெற்றவர்கள் அவர்களே!" என்று பாராட்டிப் பேசினுன். இவன் மொழியைக் கேட்ட புலவர்கள் திகைத்துப் பேசாதிருந்தனர். "அறிவானந்தா! நீ என்ன சொல்கிறுய்? நமது வீரர்களுக்கு அஞ்சிச் சேர நாட்டு

வீரர்கள் ஓடிய செய்தியைக் கேட்டாயல்லவா? அங்ஙனமிருக்க, அவர்கள் வெற்றி பெற்றுள்ளதாக நீ கூறுவது எங்ஙனம்?" என்று சிறிது சினத்துடன் கேட்டான்.

அறிவானந்தன் அமைதியாக, "அரசே! நான் உண்மையையே உரைத்தேன். சேர நாட்டு வீரர்கள் ஓடியது உண்மைதான். நமது வீரர்கள் அவர்களைத் துரத்திச் சென்றதும் உண்மைதான். ஆனால் நமது வீரர்களால் அவர்கள் ஓட்டத்தைப் பிடிக்க முடிந்ததா? எவ்வளவு விரைவாய் ஓடியிருக்கிறார்கள்! ஆகையால் சேர நாட்டு வீரர்களின் திறமையை நான் பாராட்டுகிறேன். ஓட்டத்தில் வெற்றி பெற்றவர்கள் சேர நாட்டு வீரர்கள் தானே?" என்று விளக்கிக் கூறினான். அரசரும் புலவர்களும் நகைத்து, அறிவானந்தனின் நுண்ணறிவைப் பாராட்டினர்.

அறிவானந்தனின் உள்ளத்தில் நெடுநாட்களாய் ஓர் அவா இருந்துவந்தது. அது, படையில் சேர்ந்து தானும் ஒரு வீரனாய் விளங்கவேண்டும் என்பதுதான். அதற்கேற்ற காலத்தை எதிர்நோக்கியிருந்தான். ஏற்ற காலமும் ஏற்பட்டது. பாண்டியனுக்கும் சேரனுக்கும் எல்லை காரணமாக எழுந்த சச்சரவு போராக மூண்டது. இருதிறத்தாரும் படைகளைத் திரட்டிக்கொண்டு போர் புரிவதற்குத் தயார் செய்தனர். பாண்டியனின் படை வீரர்கள் போர்க்களம் நோக்கிப் புறப்படலாயினர்.

பாண்டியன் நாட்டுப் பாதுகாவலுக்கும் ஆட்சியலுவல்களுக்கும் தக்க ஏற்பாடு செய்துவிட்டுப் போர்க்களம் செல்லத் துணிந்தான். அப்பொழுது முகவாட்டத்துடன் அருகிலிருந்த அறிவானந்தனை நோக்கி, "அறிவானந்தா! ஏன் சோர்ந்து காணப்படுகிறாய்? உனக்குள்ள குறை யாது?" என்று பாண்டியன் கேட்டான்.

அறிவானந்தன், "அரசே! எனக்கு நீண்டநாளாய் ஓர் ஆவல் இருக்கிறது. அதைத் தங்களிடம் தெரிவிக்க

அஞ்சிப் பேசாமல் இருக்கிறேன். தங்களால்தான் என் ஆவல் நிறைவேறும்" என்று பணிவுடன் கூறினான். பாண்டியன் வியப்புடன் நோக்கி, "அறிவானந்தா! உன் விருப்பத்தை என்னிடம் தெரிவிக்க அச்சம் ஏன்? எதை வேண்டுமானாலும் கேள். உன் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கிறேன்" என்று ஊக்கமூட்டித் தெரிவித்தான்.

அறிவானந்தன் அகமகிழ்ந்து, "அரசே! நான் வீரர்களுக்குரிய உடுப்புக்களையணிந்து வீரனாக விளங்க விரும்புகிறேன். இதுவே எனது ஆவல். ஆகையால் தங்கள் படையில் என்னைச் சேர்த்துக்கொள்ள கட்டளையிடுமாறு வேண்டுகிறேன்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். அரசர் கலகலவென்று நகைத்து, "அறிவானந்தா! இதுதானா உனது ஆவல்! நகைமொழிகளைப் பேசிக் களித்து வாழும் உனக்குப் படையிற் சேர்ந்து பணியாற்ற இயலுமா? படையின் கட்டுத்திட்டங்களெல்லாம் கடுமையானவை. அவற்றின்படி நடக்க உன்னால் முடியாதே! தவறு நேர்ந்தால் கடுந் தண்டனை விதிக்க நேரும். இவற்றையெல்லாம் எண்ணிப்பார்! படையின் விதிகளுக்கு அடங்கி நடக்க விருப்பமானால் உன்னைப் படையில் சேர்ப்பதில் எனக்கொன்றும் தடையில்லை" என்று தெரிவித்தான்.

இதைக் கேட்ட அறிவானந்தன், "அரசே! வீரனாக விளங்கவேண்டுமென்று மிகுந்த ஆவலுடன் இருக்கிறேன். ஆகையால் படையின் விதிகளுக்குக் கட்டுப்பட்டுத் தவறாது நடப்பேன். கட்டளையிட வேண்டுகிறேன்" என்று உறுதியாய் உரைத்தான். இவன் உறுதியைக் கண்ட பாண்டியன் இவனைப் படையில் சேர்த்துக்கொள்ளும்படி படைத் தலைவனிடம் தெரிவித்தான். போதிய பயிற்சியில்லாத அறிவானந்தனைப் படையிற் சேர்த்துக்கொள்ளப் படைத் தலைவன் விரும்பவில்லை; ஆயினும் மன்னனின் கட்டளையை மறுக்கவியலாது காவற்படையில் சேர்த்துக்கொண்டான்.

பாண்டியனும் வீரர்களும் போர்க்களம் சென்று பாசறை ஏற்படுத்தித் தங்கினர். மறுநாள் தொடங்கிப் பகற்பொழுதில் வீரர்கள் அணிவகுத்து முன்னேறிப் போய் மாற்றாருடன் போர்செய்து வந்தனர்; இரவில் பாசறையில் தங்கியிருந்தனர். இவ்வாறு சிலநாட்கள் சென்றன.

இரவில் பாசறையைக் காவல்செய்யும் பணி அறிவானந்தனுக்குக் கொடுக்கப்பட்டது. வீரனுக்குரிய உடுப்புக்களை அணிந்து, கச்சையை இடையில் கட்டி வாளைக் கையிலேந்தி மிடுக்காக நடந்துசெல்லும்பொழுது அறிவானந்தன் மிக மகிழ்ச்சியடைந்தான்; கிடைத்தற்கரிய பெரும்பேறு கிட்டியதுபோல் பெருமிதமடைந்தான். இவ்வின்பம் இரண்டொரு நாட்களே இருந்தது. அரண்மனையில் உண்டுகளித்து உறங்கி இன்புற்றிருந்த அறிவானந்தனுக்கு இரவுமுழுவதும் கண்விழித்துக் காவல்செய்வது பெருந் தொல்லையாகத் தோன்றியது. காவல் புரியும்பொழுது கண்கள் சுற்றும்; தூக்கமயக்கம் நிலை தடுமாறச் செய்யும். ஆயினும் கடமையில் தவறினால் கடுந் தண்டனை கிடைக்குமே என்று அஞ்சித் தூங்காமலிருந்து துன்பப்பட்டான். தன்னை வீரர் படையில் சேர்க்காமல் காவல் படையிற் சேர்த்த படைத்தலைவனை வெறுத்தான். வீரனாக வேண்டுமென்று விரும்பியது தவறென்றும் தன்னை வெறுத்துக் கொண்டான். அரசனிடம் தெரிவித்துக் காவற்படையிலிருந்து விலகுவதற்கு வழியாது என்று எண்ணலானான்.

ஒருநாள் அறிவானந்தன் பாசறையில் காவல்புரிந்து வரும்போது தூக்கம் கண்களைச் சுற்றியதால், கையிலிருந்த வாளை உறையிலிட்டு மறைவான ஓரிடத்தில், சாய்ந்து உட்கார்ந்து தூங்கிவிட்டான். இவன் பலநாள் நல்லுறக்கமின்றி அவதிப்பட்டவனாகையால், சிறிது நேரத்தில் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டான். அப்பொழுது காவற்படைஞர் தம் பணியைக் குறைவின்றிச் செய்கின்

றனரா என்பதை ஆராய்வதற்காகச் சுற்றிவந்த படைத் தலைவன், அறிவானந்தன் கண்ணுறங்குவதைக்கண்டு, 'இவனுக்கு நாளை மாலையில் தகுந்த தண்டனையளிக்க வேண்டும்' என்று எண்ணி, அறிவானந்தனின் இடையி லிருந்த உறையிலிருந்து வாளையுருவி எடுத்துக்கொண்டு போய்விட்டான். அறிவானந்தன் கண்விழித்தபொழுது வாளைக் காணாது திகைத்து, என்ன துன்பம் நேருமோ என்று அஞ்சியிருந்தான். 'வாளெங்கே' என்று கேட் டால் என்ன செய்வது என்றெண்ணி மரத்தால் வாள் போல் செய்து கைப்பிடியமைத்து உறையிலிட்டுக் கொண்டான்.

மறுநாள் மாலையில் காவற்படை வீரர்கள் பாசறை யின்முன் வரிசையாக நின்றனர். இரவு காவலுக்கு ஏற்பாடு செய்வதற்காக இங்ஙனம் நாள்தோறும் கூடுவது வழக்கம். முன்னிரவில் தம் கடமையில் தவறியவர் களுக்கு இக்கூட்டத்தில் யாவர் முன்னிலையிலும் தண் டனையளிப்பதும் உண்டு. பாண்டியனும் படைத்தலைவ னும் வீரர்களைப் பார்வையிட வந்தனர். படைத்தலைவன் அறிவித்திருந்தபடி அறிவானந்தனிடம் வாளைக் கேட்டுத் தண்டிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் பாண்டியன் வந்தான். வந்ததும் அறிவானந்தனின் இடையிலுள்ள உறையில் வாளிருப்பதைக்கண்டு வியப்படைந்தான்; படைத் தலைவன் திகைத்தான்.

பாண்டியன் 'இதில் ஏதோ சூதிருக்கிறது' என்று எண்ணி, கூட்டத்திலிருந்த ஒரு வீரன் தன் கடமையில் தவறிவிட்டான் என்று அவனைப் பொய்யாகக் கடிந்து பேசி, 'அறிவானந்தா! கடமை தவறிய இவனை உன் வாளால் கொன்றுவிடு' என்று சினத்துடன் கட்டளை யிடுபவன்போல் தெரிவித்தான்.

அறிவானந்தன் திகைத்துவிட்டான். தன் மரக் கத்தியை வெளியில் எடுக்கச் செய்வதற்காகவே அரசர் இத்தந்திரம் செய்கிறார் என்பதை நொடிப்பொழுதில்

உணர்ந்துகொண்டான். உடனே அறிவானந்தன் கைகுவித்து வானத்தைநோக்கி, 'கடவுளே! இவ்வீரன் எந்தக் குற்றமும் செய்யவில்லையே! இவனைக் கொல்வது முறையாகுமா? குற்றமற்ற இவனைக் கொல்லும் பாவச்செயலைச் செய்யும் பணி எனக்கா ஏற்படவேண்டும்? இவன் குற்றமற்றவன் என்பது உண்மையானால் என் வாளை மரவாளாக மாற்றவேண்டும்' என்று வேண்டிக்கொண்டு விரைவாக வாளை உருவினான். யாவரும் மரவாளைக் கண்டு வியப்பும் திகைப்பும் அடைந்தனர். படைத்தலைவனும் திகைத்து நின்றான்.

பாண்டியன் அறிவானந்தனின் திறமையை நன்கறிவானாகையால் திகைப்படையாமல் மகிழ்ந்து "அறிவானந்தா! உன் அறிவுத் திறமையைப் பாராட்டுகிறேன். உன் சமயோசிதச் செயலைக்கண்ட மகிழ்ச்சியால் இப்பொழுது தண்டனையளிக்காமல் உன்னை மன்னித்துவிடுகிறேன். இனி, நீ காவற்படையிலிருந்து பணியாற்றவேண்டுவதில்லை. நீ வழக்கம்போல் நமது அரண்மனையில் இருந்துவரலாம்" என்று தெரிவித்தான்.

பாண்டியனின் மொழிகளைக்கேட்ட அறிவானந்தன் 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று களிப்படைந்தான்; தொல்லையான வேலையிலிருந்து விடுதலை பெற்றதற்காகவும் மகிழ்வடைந்தான்.

## குறிப்பு

இது நகைச்சுவைபற்றிய கதையாகும். இதில் நுண்ணறிவுடன்கூடிய இரு நிகழ்ச்சிகள் உள்ளன.

## கேள்விகள்

1. அறிவானந்தன் தோற்று ஓடிய சேரநாட்டு வீரர்களை 'வெற்றி வீரர்' என்று பாராட்டியது ஏன்?

2. அறிவானந்தன் விரும்பியது யாது? அதனை எங்ஙனம் பெற்றான்?

3. அறிவானந்தன் சமயோசித அறிவுடையவன் என்பது எதனால் விளங்குகிறது?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—நுண்ணிய, விளக்கும், சச்சரவு, அவா, மாற்றார், பாசறை.

2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—
அவைக்களம், இன்புறுத்துவான், நிறைவேறும், கட்டுத்திட்டங்கள், கச்சை, மிடுக்காக.

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—செங்கோல், நல்லறிவு, இன்னுரை, கடுந்தண்டனை, வியப்படைந்தான், மரவாள்.

2. காவலாக இருந்த வீரன்—இதில் 'இருந்த' என்பது எச்சவினை. இது 'வீரன்' என்னும் பெயரைக்கொண்டு முடிவதால் பெயரெச்சம் ஆகும். நடந்து சென்றான்—இதில் 'நடந்து' என்பது எச்சவினை. இது 'சென்றான்' என்னும் வினையைக்கொண்டு முடிவதால் வினையெச்சம் ஆகும். இவ்வாறே பெயரெச்சம், வினையெச்சம் ஆகியவற்றை இப்பாடத்திலிருந்து எழுதுக.

### III. கட்டுரைப் பயிற்சி

1. இக்கதையை அறிவானந்தனே கூறுவதுபோல் எழுதுக.

2. 'அறிவானந்தனின் சமயோசித அறிவு' என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.

# 7. கால்நடைப் பண்ணை

நமது இந்திய நாட்டில் கிராமங்கள் அதிகம். முப்பது கோடிக்கு மேற்பட்ட இந்திய மக்களில் பெரும்பாலோர் இக்கிராமங்களில் வசிப்பவர்களேயாவர். இவர்கள் பயிர்த் தொழிலையே முக்கியத் தொழிலாகக்கொண்டு வாழ்கிறார்கள். இவர்கள் செய்யும் பயிர்த் தொழிலுக்கு உறுதுணையாயிருந்து உதவுவன காளை மாடுகளேயாம். உழுதல், பரம்படித்தல், நீர் இறைத்தல், பாரம் இழுத்தல் முதலிய பல தொழில்களில் மாடுகள் விவசாயிகளின் தோழுகை நின்று உழைக்கின்றன. ஆகையால் நம் நாட்டில் மாடுகள் இல்லாமல் பயிர்த்தொழில் நடைபெறாது. இத்தகைய மாடுகள் முதலியவற்றைக் கால்நடைகள் என்கிறோம்.



விவசாயம் செழிக்கவேண்டுமானால் விவசாயிகளின் நிலை உயரவேண்டும்; கால்நடைகள் வளத்துடன் பெருக வேண்டும். கால்நடைகள் பெருகினால்தான் பயிர்த் தொழில் சிறப்படைந்து உணவுப் பொருள்கள் பெருகும். ஆகையால் கால்நடைகளைப் போற்றி முறையுடன் வளர்க்கும் பண்ணைகள் தமிழ்நாடெங்குப் ஏற்பட வேண்டும்.

கால்நடைப் பண்ணைகள் ஏற்படுத்துவோருக்கு அவற்றைப்பற்றிய நுட்பங்கள் தெரிந்திருக்கவேண்டும். வளர்க்கும் முறை, நோய் வராமல் பாதுகாக்கும் முறை,

நோய் வந்தால் தணிக்கும்வகை, தீனிவகை, நடத்தும் வகை முதலியவை தெரிந்திருக்கவேண்டும்; மேய்ச்சல் காடு, நீர் வசதி முதலியவை பொருந்தியிருக்கவேண்டும்; செல்வச் சிறப்பும் மாடு வளர்ப்பில் ஆர்வமும் மிகுந் திருக்கவேண்டும். இத்தகையவர்களே கால்நடைப் பண்ணை வைத்து வெற்றியடையமுடியும்.

தமிழ் நாட்டில் பெருஞ் செல்வர்கள் கால்நடைகளை வளர்க்கிறார்கள். ஆனால் இவர்கள் தங்கள் நிலபுலங் களில் பயிர் செய்வதற்குத் தேவையான மாடுகளையே வைத்திருக்கிறார்கள். இவர்கள் தம் கால்நடைகளுக்குத் தொழுவம் அமைத்துச் சிறந்த முறையில் காப்பாற்று கிறார்கள். ஆயினும் சில இடங்களில் மேய்ச்சல் நிலம் இல்லாமையாலும் வளர்க்கும் முறையின் சீர்கேடுகளா லும் எருதுகள் வளத்துடன் காணப்படுவதில்லை.

தமிழ் நாட்டில் காங்கேயம் எருதுகள் மிகவும் புகழ் பெற்றவை. இவ்வெருதுகளைப் பெருகச்செய்யும் அரும் பணியைச் செய்துவருபவர் **பழையகோட்டை பட்டக் காரர்** அவர்கள். இவர் நடத்தும் கால்நடைப் பண்ணை இந்தியாவிலேயே மிகச் சிறந்ததென்று இதனை எல்லோ ரும் பாராட்டுகிறார்கள்.

பழையகோட்டை என்பது ஈரோடு புகைவண்டி நிலையத்திற்குத் தென்கிழக்கே சுமார் இருபது மைல் தூரத்திலுள்ள ஓர் ஊர். இவ்வூரில் பட்டக்காரர் பரம் பரையினர் செல்வாக்குடையோராக வாழ்ந்து வருகின் றனர். இப்பட்டக்காரர் மேற்பார்வையில் கால்நடைப் பண்ணை இருந்து வருகிறது. இவ்வூரின் சுற்றுப்புறம் கால்நடை வளர்ப்புக்கு ஏற்றதாய்ப் புன்செய்க் காடுகள் நிறைந்திருக்கிறது. இங்குச் சுண்ணாம்புக் கற்கள் அதிகம். ஆகையால் இந்நிலத்தில் முளைக்கும் புல் முதலிய பயிர் களில் சுண்ணாம்புச் சத்து இருக்கிறது. இவற்றை மேயும் மாடுகளுக்கு எலும்பு ஊற்றம் அதிகமாகும்.

மேய்ச்சல் நிலம் நாலாயிரம் ஏக்கர் வரையில் இருக்கிறது. இந்நிலத்தில் கொழுக்கட்டைப் புல், வெண்ணம் புல், ஓட்டன் புல், குருட்டுப் புல், சோளப் புல் முதலிய புல் வகைகள் முளைக்கின்றன. இன்னும் நரிப் பயிற்றங் கொடி, சவுரிக் கொடி, செப்பு நெருஞ்சி முதலியவையும் முளைக்கின்றன. இவையெல்லாம் மாடுகளுக்கு நல்ல தீனிகளாகும். இம் மேய்ச்சல் நிலம் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரிவின் நாற்புறத்திலும் வேலி உண்டு. மேய்ச்சல் நிலத்தில் வெள்வேலா மரங்கள் பலவற்றைப் பார்க்கலாம். இவைகள் மாடுகளுக்கு நிழலைத் தருகின்றன. இம்மரத்தின் காய்கள் மாடுகளுக்குச் சிறந்த உணவாகும். இக்காய்கள் முற்றிக் கீழே உதிருங் காலத்தில் நிலத்தில் புல் இருக்காது. அப்பொழுது மாடுகள் இக்காய்களைத் தின்று தண்ணீர் குடிக்கும். இவ்வுணவால் மாடுகள் கொழுத்து வளரும்.

மேய்ச்சல் நிலத்தின் பிரிவுகள் 'குரைகள்' என்று சொல்லப்படும். இக்குரைகளில் கால்நடைகளை மேய விடுவார்கள். அவற்றை வயது வகையிலும் இன வகையிலும் பிரித்து விடுவார்கள். ஒரு குரையில் ஐம்பது முதல் நூறு வரையில் கால்நடைகளை மேயவிடுவதுண்டு. இக்கால்நடைகள் மேய்ச்சல் காடுகளிலேயே இருந்து இரவு பகலாக மேயும். அங்கு வெட்டப்பட்டிருக்கும் சரிவான கிணறுகளில் இறங்கித் தண்ணீர் குடிக்கும். வெயில், மழை, பனி, காற்று எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு வளர்வதால் இக்கால்நடைகளுக்குப் பிற்காலத்தில் கடினமான வேலைகளைச் செய்யும் திறமை ஏற்படுகிறது.

ஒவ்வொரு குரைகளிலும் ஒரே மாதிரியான கன்றுகள் மேய்வதைப் பார்க்க அழகாயிருக்கும். இவைகள் தம் விருப்பம்போல் மேய்ந்துகொண்டும் துள்ளிக் குதித்து விளையாடிக்கொண்டும் இருப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். இக்கன்றுகளை வேலையாட்கள் கண்காணித்து வருவதோடு அடிக்கடி கவனித்துக் கன்று

களின் வளர்ச்சிக்குத் தக்கபடி குழைகளை மாற்றி எண்ணிக்கையைக் குறைப்பார்கள்.

மேய்ச்சல் காடுகளில் மேய்ந்த இம்மாடுகள் கட்டுக் கடங்காமல் இருக்கும். மாடுகளைப் பிடித்துப் பழக்கும் திறமையுள்ளவர்கள் பலர் இப்பண்ணையில் இருக்கிறார் கள். அவர்கள் மாடுகளைத் தந்திரமாகப் பிடித்துக் கொண்டுவந்து தொழுவத்தில் அடைத்துத் தீனிகொடுத் துப் பழக்குவார்கள். கால்நடைகளுக்குக் கொடுக்கும் உணவைத் 'தீவனம்' என்று சொல்வது வழக்கம். மேய்ச்சல் நிலத்தில் மூன்று ஆண்டுகள் வளர்ந்த மாடு களை நல்ல முறையில் வளர்ப்பதற்குப் பருத்திக் கொட்டை, பிண்ணாக்கு, அரிசித்தவிடு முதலியவற்றைக் கலந்து கொடுப்பார்கள். கொள்ளு, பயறு, உளுந்து, தட்டைப்பயறு முதலியவற்றைத் தண்ணீரில் ஊற வைத்து நன்றாய் ஆட்டி மற்ற உணவுடன் கலந்து கொடுப்பதும் உண்டு. இவற்றையுண்ணும் மாடுகள் வளப்பத்துடன் வளரும்.

ஓர் ஆள் இரண்டு மாடுகள்வீதம் பிடித்துவந்து பழக்குவார்கள். இவர்கள் நாள்தோறும் காலை வேளை யில் மாடுகளைத் தண்ணீர் ஊற்றிக் கழுவி விடுவார்கள். மத்தியானம், மாலை வேளைகளில் மாடுகளின் உடம்பைக் கையால் தேய்ப்பார்கள். இப்பழக்கத்தால் ஒருமாத காலத்தில் மாடுகள் நன்றாய்த் தீனி தின்னும்; கூச்சம் நீங்கிப் பழகிவிடும். பிறகு இரண்டு மாதங்களில் மாடுகள் வளப்பத்துடன் வளர்ந்து வனப்புடன் விளங்கும்.

ஒவ்வொரு ஆண்டிலும் மாசி மாதத்தில் காளைமாடு களைக் காட்டிலிருந்து பிடித்துவந்து பழக்கத் தொடங்கு வார்கள். இவ்வேலை ஆனி மாதத்தில் முடிவடையும். அப்பொழுது 300 அல்லது 400 மாடுகள்வரையில் ஒரே கட்டுத்தரையில் கட்டப்பட்டிருக்கும் காட்சி பார்ப் பவர்க்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கும். இவ்வாறு பழக்கிய

மாடுகளைத் தேவையானவர்களுக்கு விற்பார்கள். இவை கண்ணபுரம், திருப்பூர் சந்தைகளுக்குக் கொண்டுபோகப் படுகின்றன. அங்குப் பலர் வந்து மாடுகளை வாங்கிப் போகிறார்கள். ஜதை ஜதையான இம்மாடுகள் ஒரு தாய் வயிற்றில் பிறந்த இரட்டைப் பிள்ளைகள்போல் ஒரே மாதிரியாய் இருப்பது வியப்பை யூட்டும்.

பட்டக்காரர் பண்ணையில் குதிரைகள், ஆடுகள், மாடுகள் ஆகிய கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. ஆயினும் பெரும்பான்மையானவை காங்கேயம் மாடுகளேயாம். காங்கேயம் என்னும் ஊர்ப்பகுதியில் இம்மாடுகள் உற்பத்தி செய்யப்படுவதால் இவை இப்பெயர் பெற்றன. இம்மாடுகளாலேயே இப்பண்ணை மிகுந்த புகழ்பெற்றிருக்கிறது.

காங்கேயம் மாடுகள் நடுத்தரமான உயரம் உடையவை. இவை உறுதியான உடலும் சிறிய தலையும் அகன்ற நெற்றியும் கனமுள்ள கொம்பும் உருண்டு திரண்ட திமிலும் குட்டையான கால்களும் கொண்டவை. இவற்றின் வால் நீளமானது; வால் மயிர் குஞ்சம்போல் கருமையாயிருக்கும்; இது தரையைத் தொடும். இத்தகைய காங்கேயம் மாடுகள் பார்ப்பதற்கு மிக அழகாயிருக்கும்.



தரையைத் தொடும் வால்

இம்மாடுகள் வலிமையுள்ள உடற்கட்டுடன் இருப்பதால் சுறுசுறுப்பும் பாரம் இழுப்பதில் திறமையும் உள்ளனவாய் இருக்கின்றன. இந்தியாவிலேயே இம்மாடுகள் மிகச் சிறந்தவை என்று பெயர் பெற்றிருக்கின்றன. மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி முதலிய மாவட்டங்களில் உள்ளவர்கள், இவ்வெருதுகளை மிகுதியாக வாங்குகிறார்கள். இப்பண்ணையிலிருந்து ஆண்டு

தோறும் 60 அல்லது 70 ஜதை எருதுகள் விற்கப்படு கின்றன. ஒரு ஜதை எருதின் விலை சுமார் 600 ரூபாய் முதல் 2500 ரூபாய்வரையில் ஆகும்.

பெரிய நகரங்களில் பொருட்காட்சிச்சாலைகள் நடை பெறுவதுபோல் கால்நடைக் கண்காட்சிச் சாலைகளும் ஆங்காங்கு நடைபெறுகின்றன. அவற்றில் பல ஊர் மாடுகள் வந்திருக்கும். கண்காட்சிச்சாலையார் சிறந்த மாடுகளுக்குப் பரிசு கொடுப்பார்கள். இவ்வாறு நடந்த கால்நடைக் கண்காட்சிச் சாலைகளில் காங்கேயம் மாடுக ளான இவைகளே முக்கியமான பரிசுகளைப் பெற்றிருக் கின்றன.

இக்கால்நடைப் பண்ணையை அரசாங்க அதிகாரிகள், கால்நடை வல்லுநர்கள், ஆராய்ச்சி செய்கிறவர்கள், மாணுக்கர்கள் முதலிய பலர் வந்து பார்வையிட்டுக் களிப் படைகிறுர்கள்; வெளிநாடுகளிலிருந்தும் பலர் வந்து பார்த்துக் களிக்கிறுர்கள். இவற்ருல் இப்பண்ணையின் மேன்மையை நன்கறியலாம். இப்பண்ணையை இப் பொழுது நன்முறையில் நடத்திவரும் பட்டக்காரர் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் அவர்கள் ஆவார்.

## குறிப்பு

இது. கால்நடை வளர்ப்பைப்பற்றி அறிவிக்கும் கட்டுரை. இதில் மேய்ச்சல் நிலம், உணவு வகை, வளர்க்கும் முறை, பழக்கும் வகை முதலிய செய்திகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## கேள்விகள்

1. காளைமாடுகள் பயிர்த்தொழிலுக்கு எவ்வெவ்வாறு உதவு கின்றன?
2. கால்நடைப்பண்ணை ஏற்படுத்துவோர் அறிய வேண்டுவன யாவை?
3. தமிழ் நாட்டில் உள்ள சிறந்த கால்நடைப்பண்ணை யாது? அது எங்கேயுள்ளது?

பட்டக்காரர் பண்ணையின் சிறப்பு என்ன?

5. மேய்ச்சல் நிலத்தில் மாடுகளுக்கு உணவாகும் புல்வகை முதலியவை யாவை?
6. பட்டக்காரரது மேய்ச்சல் நிலத்தின் விவரத்தைக் கூறுக.
7. மேய்ச்சல் நிலத்தில் மாடுகள் எவ்வாறு வளர்கின்றன?
8. மேய்ச்சல் நிலத்திலிருந்து மாடுகளைப் பிடித்துவந்து எவ்வாறு வளர்த்துப் பழக்குகிறார்கள்?
9. காங்கேயம் மாடுகளின் சிறப்பென்ன? இவை இப்பெயர் பெற்றது ஏன்?
10. பட்டக்காரர் கால்நடைப்பண்ணை எவ்வாறு பெருமை பெற்றுள்ளது?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—கால்நடை, தொழுவம், கண்காணித்து, செல்வர்கள், அரும்பணி, வனப்பு.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—ஊற்றும், சந்தை, திமில், உடற்கட்டு, ஆண்டுதோறும, பொருட்காட்சிச் சாலை, நன்முறையில்.

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—அரும்பணி, தென்கிழக்கு, மேற்பார்வை, காலாயிரம், கட்டுக்கடங்காமல், கட்டுத்தரை.
2. எதிர்சொற்கள் கூறுக:—புன்செய், நிறைந்திருக்கிறது, காலவேளை, வெளிநாடு, மேன்மை. (மாதிரி:—புன்செய் X நன்செய்)

### III. கட்டுரைப் பயிற்சி

1. ஒரு காங்கேயம் மாடு தன் வளர்ப்பைப்பற்றிக் கூறுவதுபோல் எழுதுக.
2. உங்கள் ஊரில் மாடுகள் வளர்ப்பதைப்பற்றி நீங்கள் அறிந்தவாறு எழுதுக.

# 8. இந்தியக் குடியரசு

இந்தியா இப்பொழுது குடியரசு நாடாய் விளங்குகிறது. ஆனால் சில ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டு அடிமை நாடாய் இருந்தது. இந்நிலைமையை மாற்றிச் சுதந்தரம் பெறுவதற்காகக் காங்கிரஸ் பேரவை தோன்றி ஐம்பது ஆண்டுகளுக்குமேல் சுதந்தரப் போராட்டம் செய்துவந்தது. இப்போராட்டம் இறுதியில் வெற்றிபெற்று 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாள் இந்தியா சுதந்தரமடைந்தது. இந்திய மக்கள் அனைவரும் அன்று களிப்படைந்து சுதந்தர விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர். பின்னர், 1950-ஆம் ஆண்டு ஜனவரி 26-ஆம் நாளில் இந்தியா குடியரசு நாடாயிற்று. அன்றுமுதல் நாம் ஆண்டுதோறும் ஜனவரி 26-ஆம் நாளில் குடியரசு விழாவைக் கொண்டாடிவருகிறோம்.

நமது நாட்டில் ஆட்சி செய்துவந்த அரசர்கள் ஒற்றுமையில்லாமல் இருந்ததால், இங்கு வியாபாரம் செய்ய வந்த ஆங்கிலேயர்கள் நாளடைவில் சிறிதுசிறிதாக இந்தியாவைக் கைப்பற்றி ஆட்சி செய்யத் தொடங்கினார்கள். 1792-ஆம் ஆண்டில் பாஞ்சாலங்குறிச்சி என்ற பாண்டிய நாட்டு ஊரில் ஆட்சிசெய்துவந்த வீரபாண்டியக் கட்டபொம்மன் என்ற சிற்றரசன் ஆங்கிலேயருக்கு அடிபணிய மறுத்து அவர்களுடன் எதிர்த்து நின்றான். 'வந்தவர்களை வரவேற்று விருந்தளிப்போம். ஆனால், அடிமையாய்



வீரபாண்டியக் கட்டபொம்மன்

இருந்து சிறுமைப்படோம்' என்று இவன் முழங்கினான். இந்தியச் சுதந்தரப் போராட்டத்தின் முதல் முழக்கமாக இவன் குரல் இருந்தது. அதனால் சினங்கொண்ட ஆங்கிலேயர்கள் படையெடுத்துச் சென்று பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை இடித்துத் தகர்த்து வீரபாண்டியனைத் தூக்கிலிட்டுக் கொன்றார்கள். நாட்டின் சுதந்தரத்தைக் காக்கத் தன் உயிரையே கொடுத்த வீரபாண்டியனை இப்பொழுது மக்கள் யாவரும் போற்றிக் கொண்டாடுகிறார்கள்.

பின்னர், இந்தியா சுதந்தரம் பெறவேண்டும் என்னும் நோக்கத்துடன் காங்கிரஸ் பேரவை இடையறாது முயன்று வந்தது. கோபால கிருஷ்ண கோகலே, பால கங்காதர திலகர், வ. உ. சிதம்பரனார் முதலிய அரும் பெருந் தலைவர்களெல்லாம், சுதந்தரத்திற்காகப் பெருந் தொண்டு செய்தார்கள். 1921-ஆம் ஆண்டில் உலகம் போற்றும் உத்தமராகிய மகாத்மா காந்தியண்ணல் காங்கிரஸில் சேர்ந்து தொண்டாற்றத் தொடங்கினார். சில ஆண்டுகளில் இந்தியாவே விழித்தெழுந்து வீறுகொள்ளலாயிற்று. இந்திய மக்கள்



மகாத்மா காந்தியண்ணல்

அனைவரும் சுதந்தர வேட்கை மிகுந்து ஒற்றுமையுடன் சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஒத்துழையாமை இயக்கம், உப்புப் போர் முதலிய போராட்டங்களெல்லாம் நடைபெற்றன. 1942-ஆம் ஆண்டில் 'வெள்ளையரே வெளியேறுங்கள்' என்று காந்தியடிகள் முற்போக்கான இயக்கத்தைத் தொடங்கினார். இதனால் இந்தியாவில் பெருங் கொந்தளிப்பு ஏற்பட்டது. இந்திய மக்களின் சுதந்தர ஆர்வத்தைக் கண்ட ஆங்கிலேயர்கள்

ஆட்சியை இந்தியரிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறினர். இந்தியா சுதந்தரம் அடைந்தது.



ஜவஹர்லால் நேரு

இந்தியச் சுதந்தரப் போராட்டத்தில் ஜவஹர்லால் நேரு, பாபு இராஜேந்திர பிரசாத், சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் முதலிய தலைவர்களெல்லாம் அரும்பாடுபட்டார்கள்; பலமுறை சிறைசென்று துன்புற்றார்கள். பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் தடியடிபட்டும் சிறையிலிருந்தும் வருந்தினர்கள். இவ்வாறு பலர் பல்லாண்டுகள் பாடுபட்டு முயன்றதாலேயே இந்தியா சுதந்தரம் பெற்று விளங்குகிறது.

ஜவஹர்லால் நேரு செல்வம் நிறைந்த குடும்பத்தில் பிறந்தவர். ஆயினும் இளம்பருவத்திலிருந்தே இந்தியா சுதந்தர நாடாய் விளங்கவேண்டும் என்று ஆவல்கொண்டார். அதனால் செல்வ வாழ்க்கையில் இன்புற்றிருக்க விரும்பாமல் காந்தியடிகள் தொடங்கிய போராட்டத்தில் ஆர்வத்துடன் கலந்துகொண்டு பலமுறை சிறைபுகுந்து பல்லாண்டுகள் இருந்தார். இப்பொழுது இந்தியக் குடியரசாட்சியில் பிரதம மந்திரியாய் விளங்குகிறார். இவரது நாட்டுப்பற்றையும் தன்னலமில்லாத தொண்டையும் இந்திய மக்கள் அனைவரும் போற்றிக் கொண்டாடுகிறார்கள்.



பாபு இராஜேந்திர பிரசாத்

பாபு இராஜேந்திர பிரசாத் என்பவர் காந்தியடிகளின் அன்புக்குரிய சீடராவார். சுதந்தரப் போராட்டத்தில் இவர் பெரும் பங்கு கொண்டு நீண்ட காலம் உழைத்து வந்தார். அதனால் சிறையிலும் புகுந்து வருந்தினார். சிறந்த அறிவும் அடக்கமும் கொண்ட இவரது தொண்டினை யாவரும் போற்றினர். இவர் இப்பொழுது குடியரசுத் தலைவராய்ப் பெருமை பெற்று விளங்குகிறார்.

சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார், தென்னிந்தியாவில் காங்கிரஸ் இயக்கம் தழைத்தோங்கு

வதற்குக் காரணமாயிருந்த தலைவர்களில் சிறந்தவராவார். சுதந்தரப் போராட்டத்தில் இவர் ஈடுபட்டு வேதாரணியம் உப்புப் போராட்டத்தை மிகத் திறமையுடன் நடத்தினார். இதைக்கண்டு தமிழ் மக்கள் யாவரும் சுதந்தர வேட்கை கொண்டு கிளர்ச்சியடைந்தனர். இத்தகைய அருஞ் செயல்களால் பெரும் புகழ்பெற்ற இவர் சிறையிலிருந்தும் வாடினார். இந்தியா சுதந்தரம் பெற்றதும் இவர் அமைச்சராகவும், வங்காளக் கவர்னராகவும், இந்தியக் கவர்னர் ஜெனரலாகவும் வீற்றிருந்து, இப்பொழுது சென்னை இராச்சியத்தின் முதன் மந்திரியாய் விளங்குகிறார்.



சக்கரவர்த்தி
இராசகோபாலாச்சாரியார்

இத்தகைய தலைவர்களும் தொண்டர்களும் அரும் பாடுபட்டு முயன்றதாலேயே இந்தியா குடியரசாயிற்று. ஆகையால் இவர்களையெல்லாம் போற்றி இவர்களுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். இந்தியா நமது நாடு என்பதை எண்ணி, இது என்றும் சுதந்தர நாடாய் விளங்குவதற்குப் பாடுபடவேண்டும். இந்நோக்கத்துடன் கடமைபுரிதல், நற்குடிமகனாய் வாழ்தல், சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிதல், அரசாட்சியினருடன் ஒத்துழைத்தல் முதலியவற்றில் விருப்பம் கொள்ளவேண்டும். இவ்வாறு வாழ்ந்து சுதந்தரமாய் இருப்பதே சுதந்தர இன்ப வாழ்வாகும்.

## குறிப்பு

இது, இந்தியா குடியரசு பெற்றதையும், அதற்காகப் பாடுபட்ட தலைவர்களையும் பற்றித் தெரிவிக்கும் பாடமாகும்.

## கேள்விகள்

1. இந்தியா சுதந்தரமடைந்ததும், குடியரசானதும் எவ்வெப் பொழுது?
2. இந்தியச் சுதந்தரப் போராட்டத்தில் முதல் முழக்கம் செய்த சிற்றரசன் யார்? அவன் முழங்கிய மொழி என்ன?
3. காந்தியடிகள் செய்த சுதந்தரப் போராட்டங்கள் யாவை?
4. சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்டு உழைத்த மூன்று தலைவர்களைப் பற்றித் தெரிவிக்க.
5. குடியரசு இந்தியாவில் நமது கடமைகள் யாவை?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—சிறுமை, தகர்த்து, பேரவை, இடையறுது, அண்ணல், வீறு, வேட்கை, வீற்றிருந்து.
2. ஒவ்வொருவாக்கியத்தில் அமைத்து எழுதுக:—போராட்டம், குடியரசு விழா, சிற்றரசன், ஈடுபட்டனர், உப்புப்போர், தொந்தளிப்பு, ஒத்துழைத்தல்.

### II. வாக்கியப் பயிற்சி

1. தனி வாக்கியம், தொடர் வாக்கியம், கலப்பு வாக்கியம் என்று வாக்கியம் மூன்று வகைப்படும். இந்தியா சுதந்தரம் பெற்றது —இதில் ஒரு எழுவாயும், ஒரு பயனிலையும், ஒரு செயப்படு பொருளும் இருக்கின்றன. ஆதலால் இது தனி வாக்கியம் ஆகும்.
2. மணியடித்தது; பள்ளிக்கூடம் தொடங்கியது—இவ்விரண்டு வாக்கியங்களும் ஒன்றோடொன்று தொடர்ந்து நிற்பதால், தொடர் வாக்கியம் ஆகும்.
3. 'வெள்ளையரே! வெளியேறுங்கள்' என்று காந்தியடிகள் கூறினர்—இதில் 'காந்தியடிகள் கூறினர்' என்பது முதல் வாக்கியம்; 'வெள்ளையரே வெளியேறுங்கள்' என்பது துணை வாக்கியம். இவ்விரண்டையும் இணைப்பதற்கு 'என்று' என்னும் இடைச்சொல் வந்துள்ளது. இவ்வாறு வரும் வாக்கியங்கள், கலப்பு வாக்கியம் ஆகும்.

# 9. காந்தியடிகளின் பெருமை

இந்திய நாடு சுதந்தரம் எய்தநல்
தந்திரம் தந்தது யார்?—சிறு
கந்தை 'பக்கீர்' என்று தந்தொரு வன்சொன்ன
காந்தியென் னும்பெரியார் 1

அஞ்சிக் கிடந்தநம் நெஞ்சம் துணிந்திட்
ஆண்மை எழுப்பினதார்?—ஒரு
வஞ்சமில்லாதவர் வாய்மையின் தூய்மையின்
வாழ்க்கையர் காந்தியவர் 2

ஆயுதம் இன்றியும் யாரும் வணங்கிடும்
அன்பைப் பெருக்கினதார்?—சற்றும்
சாயுதல் செய்திடாச் சத்தியமூர்த்திநம்
தவமுனி காந்தியவர் 3

நாட்டினுக் காயுயிர் கேட்பினும் தந்திட
நானென்று முன்வருவோர்—பலர்
போட்டியிட் டேவர வீரம் புகுத்தினர்
புண்ணியர் காந்தியவர் 4

தன்னை வதைப்பவர் தங்களுக் கும்அன்பைத்
தாங்குவதே தவமாம்—என்று
முன்னை இந்நாட்டினில் சொன்னவர் சொற்களை
முற்றுவித் தார்காந்தி 5

காந்தியெ னும்பெயர் சாந்தம்எ னும் சொல்லின்
காட்சியின் மாட்சியென்றே—இனி
மாந்தர்கள் எங்குமே ஏந்தி அதன்வழி
மங்கலம் எய்திடுவார். 6

—நாமக்கல் கவிஞர்

# 10. சித்தார்த்தனின் கருணை

## (நாடகம்)

### காட்சி 1

**இடம் :** *அரண்மனைக்குப் பக்கத்தில் உள்ள பெரிய பூந் தோட்டம்*

**காலம் :** *மாலை*

**உறுப்பினர் :** *அரச குமாரனாகிய சித்தார்த்தன்*

**சித்தார்த்தன் :** *(தனக்குள்)* தேவதத்தன் எங்கேயோ போய்விட்டான். இந்த அழகிய பூஞ்சோலையைக் கண்டு களிக்க அவனுக்கு மனம் இல்லை; வேட்டையாடுவதிலேயே அவனுக்கு விருப்பம். தரையில் பசும் புல் எவ்வளவு செழிப்பாய் வளர்ந்திருக்கிறது! செடிகள் தழைத்து வளர்ந்து பூத்து மணம் வீசுகின்றன! இவைகள் காற்றில் அசைவது நம்மை அன்போடு 'வா' என்று முகமலர்ந்து வரவேற்பதுபோல் இருக்கிறதே! மரங்களில் எவ்வளவு பழங்கள் பழுத்திருக்கின்றன! தம்மிடம் வந்தவர்களுக்கு இவைகள் விருந்தளிக்கத் தயாராய் இருக்கின்றனபோலும்! இந்தத் தாமரைக் குளம் எவ்வளவு அழகாய் இருக்கிறது! அன்னப் பறவைகள் எவ்வளவு மகிழ்ச்சியுடன் பறந்து திரிந்து வந்து மலர்களில் உட்காருகின்றன! மீன்கள் நீரில் களிப்புடன் துள்ளியோடுவது எவ்வளவு வேடிக்கையாய் இருக்கிறது! வண்டுகள் ரீங்காரம் செய்துகொண்டு ஒவ் வொரு பூவுக்கும் போய்த் தேனைக் குடிக்கின்றனவே!

*[அப்பொழுது ஒரு புறா அவன் அருகில் வந்து விழுகிறது; சித்தார்த்தன் அதைப் பார்க்கிறான்.]*

ஐயோ! இது என்ன கொடுமை! இப்புறாவின் உடம்பில் அம்பு தைத்திருக்கிறதே!

*[விரைவாகப் புறாவைத் தன் மடியில் தூக்கி வைத்துக்கொண்டு அம்பை எடுக்கிறான்; இரத்தம் பீறிட்டு வருகிறது. உடனே பக்கத்திலுள்ள ஒரு பச்சிலையைப் பறித்துக் கசக்கிக் காயத்தில வைக்கிறான்; இரத்தம் நின்று விடுகிறது. தண்ணீர் கொடுக்கிறான். புறா கண் விழித்துப் பார்க்கிறது.]*

ஐகா ! இந்தப் புரு எவ்வளவு துடிதுடிக்கிறது ! மிகவும் வலிக்கிறதுபோலும் ! நம் உடம்பில் ஊசி குத்தினாலே வலி பொறுக்கமுடியவில்லையே ! இதன் உடம்பில் அம்பு பாய்ந்தால் எவ்வளவு வேதனையாய் இருக்கும் ! இதை யறியாத எவனோ ஒரு பாதகன் இதன்மேல் அம்பை எய்திருக்கிறானே ! அவன் சிறிதும் இரக்கமில்லாதவனாகவே இருக்கவேண்டும் ! இந்தப் புருவை நானே காப்பாற்றி வளர்ப்பேன் !

## காட்சி 2

**இடம் :** *பூந்தோட்டத்தின் மற்றோர் புறம்*

**காலம் :** *அதே மாலை*

**உறுப்பினர் :** *சித்தார்த்தனின் பெரிய தகப்பன் பிள்ளையாகிய தேவதத்தன், சித்தார்த்தன்.*

*[தேவதத்தன், கையில் வில் அம்புகளுடன் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு வருகிறான்.]*

**தேவதத்தன் :** அம்பு புருவின் உடம்பில் பாய்ந்ததும், அது பறந்துபோய்விட்டதே ! எங்கே போயிருக்கும் ? இனி அது உயிருடன் இருக்காது. எங்கேயாவது புதர்களின் உள்ளே விழுந்துவிட்டதோ ? எவ்வளவு அழகாய் இருந்தது ! அதை எப்படியாவது தேடிக் கண்டு பிடிக்கவேண்டும்.

*[சித்தார்த்தன் இருந்த இடத்திற்குவந்து பார்க்கிறான். அவன் மடியில் புரு உயிருடன் இருப்பதைக் கண்டதும் ஆவலுடன் அருகில் ஓடி வருகிறான்.]*

புரு இங்கே வந்து அகப்பட்டுக்கொண்டதா ? நல்லதாய்ப் போயிற்று ! நான் எங்கேயெல்லாம் தேடினேன் !

**சித்தார்த்தன் :** (வியப்புடன்) இந்தப் புருவை நீ தேடினாயா ? ஏன் தேடினாய் ?

**தேவதத்தன் :** நான் இதன்மேல் அம்பு எய்தேன். அம்பு பட்டதும் இது பறந்து ஓடிவிட்டது. அதனால் தேடினேன்.

சித்தார்த்தன் : எவ்வளவு இரக்கமில்லாத செயல்! இந்தப் புறா உனக்கு என்ன தீமை செய்தது! உன் வில்லினாலே இது எவ்வளவு துன்பப்படுகிறது பார்! நான் காப்பாற்றுவிட்டால், இது இறந்துபோயிருக்கும். இதை அரண்மனைக்குக் கொண்டுபோய் வளர்க்கப் போகிறேன்.

தேவதத்தன் : நான்தான் அம்பு எய்து இந்தப் புறாவை விழச்செய்தேன். இதை என்னிடம் கொடுத்து விடு. நான் வளர்க்கிறேன்.

சித்தார்த்தன் : நான்தான் இந்தப் புறாவைக் காப்பாற்றினேன். இரக்கமில்லாத உன்னிடம் கொடுக்க மாட்டேன். நானே வளர்க்கிறேன்.

தேவதத்தன் : புறாவின்மேல் நான் அம்பு எய்யாவிட்டால் இது எப்படி உனக்குக் கிடைக்கும்? அதனால், புறா எனக்கே உரியது. பேசாமல் கொடுத்துவிடு.

சித்தார்த்தன் : நான் காப்பாற்றுவிட்டால் புறா இறந்துபோயிருக்குமே! அதனால் எனக்கே புறா உரியதாகும். எது சரி என்று முனிவரிடம் போய்க் கேட்போம். வருகிறாயா?

தேவதத்தன் : சரி, வா போவோம்.

[இருவரும் போகிறார்கள். புறா சித்தார்த்தனிடம் இருக்கிறது.]

## காட்சி 3

இடம் : பூந்தோட்டத்திற்குப் பக்கத்தில் இருக்கும் ஓர் இலைக் குடிசை.

காலம் : அதே மாலை

உறுப்பினர் : சித்தார்த்தன், தேவதத்தன், முனிவர்.

சித்தார்த்தன் : முனிவர் பெருமானே! வணக்கம். தாங்கள் அன்போடு எங்கள் வழக்கைக் கேட்டு முறை சொல்ல வேண்டுகிறோம். இதோ இந்தப் புறாவைத் தங்கள் முன்னிலையில் வைக்கிறேன்.

**முனிவர் :** அடாடா ! இந்தப் புறுவின் உடம்பில் காயம் இருக்கிறதே ! இதைக் காயப்படுத்தியவர் யார் ?

**தேவதத்தன் :** நான்தான் இதன்மேல் அம்பு எய்தேன். இது எனக்கு உரியது. இவன் இதைப் பிடித்துக்கொண்டு தரமாட்டேன் என்கிறான். இதை என்னிடம் கொடுத்துவிடுங்கள் !

**சித்தார்த்தன் :** இவன் அம்பு எய்ததால் புறு துடிதுடித்து என் அருகில் வந்து விழுந்தது. நான் காயத்திற்கு மருந்து போட்டு இதைக் காப்பாற்றினேன். இல்லாவிட்டால் இறந்துபோயிருக்கும். இவனிடம் கொடுத்தால், புறுவின் காயம் ஆறாமல் இறந்துபோனாலும் போய்விடும். ஆகையால் நான் புறுவின் காயத்தை ஆற்றித் தீனி கொடுத்து வளர்க்க விரும்புகிறேன். புறுவை என்னிடமே கொடுக்க வேண்டுகிறேன்.

**முனிவர் :** பிராணிகளிடத்தில் அன்பு காட்டுகிறவன் நண்பனாவான் ; அவைகளுக்குத் துன்பம் செய்கிறவன் பகைவனாவான். சித்தார்த்தன் புறுவிடம் இரக்கங் காட்டினான். அதனால் புறு சித்தார்த்தனுக்கே உரியது. தேவதத்தா ! நீ இரக்கமில்லாமல் புறுவுக்குத் துன்பம் செய்தாய் ! இது உனக்கு உரியதாகாது. புறு இறந்துபோயிருந்தால் இதற்கு உயிர் கொடுக்க உன்னால் முடியுமா ? முடியாது. ஆகையால், நீ இனிமேல் பிராணிகளுக்குத் துன்பம் செய்யாதே !

**தேவதத்தன் :** முனிவர் பெருமானே ! தங்கள் அறிவுரையால் நான் நல்லறிவு பெற்றேன். விளையாட்டாகப் புறுவுக்குத் துன்பம் செய்துவிட்டேன். அதற்காக வருந்துகிறேன். இனி எந்தப் பிராணிக்கும் துன்பம் செய்யமாட்டேன். சித்தார்த்தனோடு சேர்ந்து நானும் புறுவின் காயத்தை ஆற்றத் துணை செய்வேன்.

**சித்தார்த்தன் :** முனிவர் பெருமானே ! நாங்கள் புறுவின் காயம் ஆறியதும் இதைப் பறந்துபோகும்படி விட்டுவிடுவோம்.

முனிவர்: ஆம்; அதுதான் சரி. பறந்து திரியும் பிராணிகளைக் கூட்டில் அடைத்து வைக்கக்கூடாது. உங்களுக்கு என் வாழ்த்து. போய் வாருங்கள்.!

[சித்தார்த்தனும் தேவதத்தனும் முனிவரை வணங்கிவிட்டுப் போகிறார்கள்.]

## குறிப்பு

இந்நாடகம் புத்தர் பெருமானின் இளம்பருவ வரலாற்று நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பட்டதாகும். சித்தார்த்தன் என்பது புத்தரின் இயற்பெயராம்.

## கேள்விகள்

1. சித்தார்த்தன் பூஞ்சோலையின் அழகைக்கண்டு கூறியது என்ன?
2. சித்தார்த்தன் புறவை எங்ஙனம் காப்பாற்றினான்?
3. தேவதத்தனுக்கும் சித்தார்த்தனுக்கும் ஏற்பட்ட விவாதம் என்ன?
4. விவாதத்தை முனிவர் எங்ஙனம் தீர்த்தார்?
5. தேவதத்தன் நல்லறிவு பெற்றுக் கூறியது என்ன?
6. இந்நாடகத்தால் அறியும் நீதி யாது?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—கருணை, மணம், விரைவு, பாதகன், மெய்தேன்.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—அம்பு, பீறிட்டு, உரியது, நண்பன், பகைவன்.

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—பசும்புல், அறிவுரை, நல்லறிவு, உரியதாகாது.
2. திணை என்பது பொருள்களின் பிரிவாகும். மனிதர்களும் தேவர்களும் உயர் திணையாவார்கள்; இவரல்லாத உயிர்உள்ள பொருள்களும் உயிரில்லாத பொருள்களும் அஃறிணையாகும், (அல் + திணை = அஃறிணை) இப்பாடத்திலிருந்து உயர்திணை. அஃறிணைப்பெயர்களை எடுத்து எழுதுக.

# 11. எனது இன்பச் செலவு

நான் மதுரை நகரிலுள்ள சௌராஷ்டிரா உயர் நிலைப் பள்ளியில் முதல் படிவத்தில் கல்வி பயில்கிறேன். ஒருநாள் எங்கள் தமிழாசிரியர் பாடங் கற்பிக்கும் பொழுது 'தமிழ்நாட்டின் தெற்கெல்லை கன்னியாகுமரி' என்று தெரிவித்தார். அன்றிலிருந்து கன்னியாகுமரி யைக் காணவேண்டுமென்ற ஆவல் எனக்கு இருந்து வந்தது.

ஒருநாள் நான் என் தந்தையிடம் என் ஆவலைத் தெரிவித்தேன். அவர் மகிழ்ச்சியுடன் கன்னியா குமரிக்கு அழைத்துப்போவதாகத் தெரிவித்தார். கால் ஆண்டுத் தேர்வு முடிந்ததும் பள்ளியில் விடுமுறை ஏற்பட்டது. அவ்விடுமுறையில் நான் கன்னியா குமரிக்குச் சென்று பல ஊர்களையும் பார்த்துக் களித்து வந்தேன். என் தந்தை என்னையும் என் தாயார், அண்ணன், அக்காள் ஆகிய எல்லோரையும் மோட் டாரில் அழைத்துக்கொண்டுபோய் எல்லாவற்றையும் காண்பித்துப் புதுமைகளையெல்லாம் தெரிவித்தார். அவ் விவரங்களை இங்குத் தெரிவிக்கிறேன்.

நாங்கள் ஒருநாள் மாலை மதுரையிலிருந்து புறப்பட் டோம். வழியில் பசுமலை, விருதுநகர், கோவில்பட்டி முதலிய ஊர்களையெல்லாம் பார்த்துக்கொண்டே போனோம். நான் சாலையின் இருமருங்கிலுமுள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்தேன். வலப்புறத் தில் இடையறாது தோன்றும் மலைத்தொடர்கள் மிகுந்த வியப்பையூட்டி மகிழ்ச்சியளித்தன. பலவிடங்களில் பனைமரக் காடுகள் பார்ப்பதற்கு விந்தையாயிருந்தன. விருதுநகர் பெரிய ஊராயிருந்தது. இங்கு வியாபாரம் மிகுதி என்று என் தந்தை தெரிவித்தார். கோவில் பட்டி அருகில் உள்ள 'வீரபாண்டியக் கட்ட பொம்மன் சமாதி' என்று சொல்லப்படும் இடத்தில் வண்டியை நிறுத்தி இறங்கிப் பார்த்தோம். இது சாலை யின் மேற்புறத்தில் இருக்கிறது. சமாதி என்பது கட்டிடமாக இல்லை; கற்குவியலாக இருக்கிறது. கட்ட

காணப் புறப்பட்டோம். கன்னியாகுமரிக் கோயிலை அடைந்து அங்குக் கீழ்ப்புறமுள்ள நீண்ட வெளியில் கதிரவன் தோற்றத்தை எதிர்நோக்கி நின்றோம். எங்களைப்போல் இன்னும் பலர் அங்கு நின்றுகொண்டிருந்தனர். நேரம் நெருங்க நெருங்க நாங்களெல்லாம் ஆவலுடன் கிழக்கு வானத்தில் வைத்தகண் மாறாமல் பார்த்துக்கொண்டிருந்தோம். அடிவானத்தில் செந்நிற ஒளி தோன்றியது. பிறகு சிறிதுசிறிதாக நெருப்புருண்டைபோல் சூரியன் தோன்றியது. அது கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. நாங்கள் சிறிது நேரம் வரையில் அவ்வின்பக் காட்சியைக் கண்டு களித்துவிட்டுக் கடலில் நீராடச் சென்றோம்.

தமிழகத்தின் தெற்கெல்லையாய் விளங்கும் கன்னியாகுமரி முனையை இன்று கண்ணாரக் கண்டு களித்தேன். என் உள்ளத்தில் எழுந்த மகிழ்ச்சியை எவ்வாறு எடுத்



குமரிமுனை ; நீராடுமிடம்

துரைப்பது ! எதிரில் இந்து மகா சமுத்திரம் எழிலுடன் விளங்குகிறது. இங்கே கிழக்குக் கடலும், மேற்குக் கடலும் ஒன்றாய்க் கூடுகின்றன. இவ்விடத்தில் தென்

னிந்தியாவின் தரைப்பகுதி முடிவடைகிறது. இங்குக் கடலில் நீராடுவது புண்ணியமெனக் கருதிப் பலர் வந்து நீராடுவதைப் பார்த்தேன். 'குமரித் தீர்த்தம்' என்று குறிக்கப்படும் இவ்விடத்தில் மக்கள் நீராடுவதற்குச் சங்கிலிகட்டி வசதி செய்திருக்கிறார்கள். ஆங்காங்குக் கற்பாறைகள் இருக்கின்றன. நாங்கள் இங்கு நீராடிய பின்னர், புத்தாடைகள் அணிந்து கன்னியாகுமரிக் கோயிலுக்குப் போனோம்.

குமரியம்மன் கோயில் சிறியதாயினும் அழகாயிருக்கிறது. குமரியம்மனின் வடிவம் யாவர் மனத்தையும் கவரும்படியான பேரழகு உடையதாய் உள்ளது. இவ்வம்மன் திருமணமின்றிக் கன்னியாய் இருப்பதாகவும், அதனாலேயே கன்னியாகுமரி என்று பெயர் ஏற்பட்டதாகவும் என் தந்தை தெரிவித்தார். ஆகையால், இவ்வூருக்குக் 'கன்னியாகுமரி' என்ற பெயரும், தரை முடிவுக்குக் 'குமரிமுனை' என்ற பெயரும் ஏற்பட்டுள்ளன என்று அறிந்தேன்.

குமரியம்மன் கோயிலின் உள்ளே சுற்றிவரும் பொழுது கிழக்குவாயில் அடைபட்டிருந்தது. 'இந்த வாயில் ஏன் அடைபட்டிருக்கிறது' என்று நான் கேட்டேன். அதற்கு என் தந்தை, 'முற்காலத்தில் கன்னியம்மனின் மூக்கில் மிகுந்த ஒளியுள்ள நாகரத்தினம் பதித்த அணியொன்று இருந்ததாம். அவ்விரத்தினத்தின் ஒளி கடலில் பல மைல்கள் தூரம்வரையில் வீசியதாம். அதைக்கண்டு இரவில் கப்பலோட்டி வரும் மாலுமிகள் கலங்கரை விளக்கமோ என்று மயங்கினார்களாம். அதனால், இக்கிழக்கு வாயிலைத் திறக்கவேண்டாமென்று மூடிவிட்டார்களாம். அப்பொழுதுமுதல் இது மூடியே இருக்கிறதென்று சொல்கிறார்கள். அந்த நாகரத்தினம் இப்பொழுது கோயிலில் இல்லை' என்று தெரிவித்தார்.

கன்னியாகுமரியைப் பார்ப்பதற்குப் பலர் வருகிறார்கள். அவர்கள் தங்கியிருப்பதற்குப் பல வசதியான

இடங்கள் இருக்கின்றன. கடலோரத்தில் மீன் பிடிக்கும் பரதவர்கள் குடிசைகள் கட்டிக்கொண்டு வாழ்கிறார்கள். கடற்கரையில் அழகிய பலநிற மணல்கள் காணப்படுகின்றன. நான் செம் மணல், கருமணல், அரிசி



கடற்கரை

போன்ற மணல் முதலியவற்றையெல்லாம் பார்த்து மகிழ்ந்து ஒவ்வொரு வகையிலும் சிறிது சிறிது எடுத்துக் கொண்டேன். பிறகு நாங்கள் நீண்ட கடற்கரையில் நடந்துபோய் அகன்ற கடற்பரப்பைப் பார்த்து வந்தோம்.

நாங்கள் உணவருந்திய பிறகு மோட்டாரிலேறிப் புறப்பட்டு நாகர்கோயில் நோக்கிச் சென்றோம். வழியில் சுசீந்திரம் முதலிய ஊர்களையெல்லாம் பார்த்துக் கொண்டே போய் நாகர்கோயிலை அடைந்தோம். நான் வழியெல்லாம் நீர்வளப்பமுள்ள நிலங்களில் பயிர்கள் செழித்து வளர்ந்திருப்பதைக்கண்டு களிப்படைந்தேன். இப்பகுதி 'நாஞ்சில் நாடு' என்று சொல்லப்படுகிறது என்றும், நெல் மிகுதியாக விளையும் இடமென்றும் என் தந்தையின் வாயிலாக அறிந்தேன்.

நாகர்கோயிலில் என் தந்தை ஒரு வியாபாரியைக் கண்டு வியாபார சம்பந்தமான செய்திகளைப் பேசுவதற்காக அங்குத் தங்கினார். அப்பொழுது நானும் என் அண்ணனும் ஒரு தமிழறிஞரின் துணையுடன் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களைக் காணவேண்டுமென்ற விருப்பத்துடன் மோட்டார் வண்டியிலேறிப் போனோம். கவிமணியவர்கள் புத்தேரி என்ற சிற்றூரில் சிறிய இல்லத்தில் தங்கியிருக்கிறார். நாங்கள் கையுடன் கொண்டுபோயிருந்த கனிவகைகளை வைத்து அவரைக் கண்டு வணங்கினோம். அவர் முதுமையினால் உடல் மெலிந்து படுக்கையில் இருந்தார். எங்களைக் கண்டதும் அன்புடன் முகமலர்ந்து வரவேற்று இன்னுரை பேசிக் களிக்கச் செய்தார். அவருடைய பாடல்களின் சிறப்பைப் பற்றி என் அண்ணன் பாராட்டிப் பேசினார். சிறிது நேரமானதும் நாங்கள் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டு நாகர்கோயிலையடைந்தோம்.

பின்னர், நாங்கள் பகலுணவு உண்டதும் புறப்பட்டு நேரே மதுரை வந்து சேர்ந்தோம். இப்பயணம் பொதுவாக என் மனத்திற்கு மிகவும் இன்பத்தையளித்தது. சிறப்பாகக் கன்னியாகுமரியில் நான் கண்ட கடற் காட்சியும், கதிரவன் தோற்றக் காட்சியும், சுற்றுப்புறக் காட்சியும் மறக்கமுடியாத மகிழ்ச்சியையும் மனக்கிளர்ச்சியையும் அளித்துள்ளன. இனி விடுமுறை ஏற்படுங் காலத்திலெல்லாம் பலவிடங்களுக்கும் சென்று ஆங்காங்குள்ள வியப்பூட்டும் செய்திகளையும் இயற்கையின்பங்களையும் பார்த்தறிந்து இன்புறவேண்டுமென்று எண்ணியிருக்கிறேன்.

## குறிப்பு

இது, உல்லாசப் பிரயாணம் பற்றிய பாடம். இதில் கன்னியாகுமரிமுனை, குமரியம்மன் கோயில் முதலியவை குறித்துச் சில செய்திகள் ஒரு மாணவன் நேரில் அறிந்து கூறும் முறையில் விளக்கப்பட்டுள்ளன. இன்பச் செலவு—உல்லாசப் பிரயாணம்.

## கேள்விகள்

1. கன்னியாகுமரிப்பயணத்தில் வழியில் கண்ட காட்சிகள் யாவை?
2. குமரிமுனையில் கண்ட கதிரவன் தோற்றக் காட்சியைத் தெரிவிக்க.
3. குமரிமுனையின் இயற்கையமைப்பையும் சுற்றுப்புறக் காட்சியையும் மாணவன் எவ்வாறு தெரிவிக்கிறான்?
4. குமரியம்மன் கோயிலைப்பற்றியும் அம்மனைப்பற்றியும் மாணவன் தெரிவிப்பன யாவை?
5. கன்னியாகுமரிப் பயணத்தில் மாணவன் பார்த்த வேறு இடங்கள் யாவை?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—தேர்வு. சமாதி, விந்தை, மிகுதி, கதிரவன், கலங்கரை விளக்கம், பரதவர்கள், மருங்கு.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—இயற்கைக் காட்சி, பரந்தகடல், வடிவம், சுற்றுப்புறம்.

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—தெற்கெல்லை, கற்குவியல், முன்னேற்பாடு, படுத்துறங்கினோம், செந்நிறம், புத்தாடை, இன்னுரை.
2. எதிர்ச்சொற்கள் கூறுக:—வலப்புறம், மேற்புறம், சிறியது, முதுமை.

### III. கட்டுரைப் பயிற்சி

1. நீ உன்வகுப்பு மாணவருடன் சென்றுவந்த ஒரு பயணத்தைப் பற்றி எழுதுக.
2. நீ பார்த்துவந்த ஒரு தொழிற்சாலையைப்பற்றி விவரித்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

# 12. எவரெஸ்டு வீரர்

உலகிலுள்ள பல மலைகளில் மிகவுயர்ந்து விளங்குவது இமயமலையேயாகும். இது, இந்தியாவின் வடக்கேயுள்ளது. இது எப்பொழுதும் பனியால் மூடப்பட்டுப் பனிக்கட்டிக்கு உறைவிடமாயிருப்பதால் இமயமலை என்றும் பனிமலை என்றும் பலவாறு சொல்லப்படும். இம்மலையின் சிகரங்கள் பல வானுற ஓங்கி உயர்ந்துள்ளன. இவற்றில் எவரெஸ்டு என்னும் சிகரம் 29002 அடி உயரமுள்ளதாய் இருக்கிறது. இது உலகிலேயே மிகவுயர்ந்த சிகரமாகும்.

எவரெஸ்டு சிகரத்தில் ஏறுவதற்குப் பல்லாண்டுகளாகப் பலர் முயன்று வந்தனர். ஆனால் எவரும் வெற்றிபெற முடியாமல் இருந்துவந்தது. ஆயினும், எவரெஸ்டு சிகரத்தை எட்டிப்பிடிக்கவேண்டுமென்று உறுதிகொண்டிருந்த குழுவினர் பலர், இடையறாது முயற்சி செய்துவந்தனர். அதன்பயனாக இப்பொழுது வெற்றி ஏற்பட்டுள்ளது. 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' அல்லவா?

இமயமலையில் ஏற முயன்றவர்கள் மேனாட்டார்களேயாவர். 1914-ஆம் ஆண்டில் ஜெனரல் ஸி. ஜி. புரூஸ் என்பவர் இமயமலையில் ஏற முயன்றார். அவ்வாண்டில் முதல் உலகப்போர் தொடங்கியதால் அவர் நோக்கம் நிறைவேருமற் போய்விட்டது. ஜெனரல் புரூஸ் மீண்டும் 1922-ஆம் ஆண்டிலும், 1924-ஆம் ஆண்டிலும் இருமுறை இமயமலையில் ஏற முயன்றார். இம் முயற்சியில் 27,000 அடிகள் வரையில் ஏறினராயினும் சிலர் உயிரிழக்க நேரிட்டதைத்தவிர வெற்றி கிட்டவில்லை. 1933-ஆம் ஆண்டில் ஷ்யூ ரட்லெஜ் என்பவர், துணைவர் சிலருடன் எவரெஸ்டு சிகரத்தின்மேல் ஏறமுயன்று 28,190 அடிகள் வரையில் போய் அதற்குமேல் செல்லமுடியாமல் திரும்பிவிட்டனர். 1938-ஆம் ஆண்டில் டில்மென் என்பவர் முயன்று வெற்றியின்றித் திரும்பினார். 1951-ஆம் ஆண்டில் ஷிப்டன் என்பவர் நேபாளத்தின் பக்க



எவரெஸ்டு சிகரம்

மாக ஏறி வழிகோலியதோடு நின்றுவிட்டார். இடை யிடையே வேறு சில முயற்சிகளும் நடைபெற்றன.

பின்னர், ஸ்விஸ் மலையேறும் குழுவினர் 1952-ஆம் ஆண்டில், ஷிப்டன் முயன்ற வழியில் மலையேற இரு முறை முயன்றனர். இரண்டாம் முயற்சியில் 28,200 அடிகள் வரையில் ஏறித் திரும்பினர். அதன்பின் கர்னல் ஹண்ட் என்பவரின் தலைமையில் ஒரு குழு வினர் ஷிப்டன் வகுத்த வழியிலேயே சென்று இப் பொழுது வெற்றிபெற்றுவிட்டனர். 32 ஆண்டுகளில் 11-ஆவது முயற்சியில் இவ்வெற்றி கிட்டியுள்ளது.

பல்லாண்டுகளாக மனிதனின் ஆற்றலுக்குக் கட்டுப் படாமல் இருந்த பனிமலைச் சிகரம் இறுதியில் பணிந்து விட்டது! இவ்வெற்றியில் பங்குகொண்ட பிரிட்டிஷ் குழுவினரில் ஹிலரி என்பவரும், ஷெர்பா டென்சிங் என்பவருமே எவரெஸ்டு சிகரத்தை அடைந்து வெற்றிக் கொடி நாட்டியவர்களாவர். இவர்கள் 1953-ஆம் ஆண்டு, மே, 29-ஆம் நாள் இமயமலை உச்சியில் நின்று வெற்றி முரசு கொட்டினர். இச்செய்தி ஜூன், 1-ஆம் நாள் உலகமெங்கும் பரவியது; யாவரும் களிப்படைந்தனர்.

'நான் மலைமகன். ஆகையால் மலையின்மேல் ஏறு வது போன்ற செயல்களில் இயல்பாகவே எனக்கு விருப் பம் இருந்து வந்தது. எவரெஸ்டு சிகரத்தை எட்டிவிட வேண்டுமென்று இளம் பருவத்திலிருந்தே நான் கனவு கண்டு வந்தேன். கடவுள் அருளாலும் அருகில் இருந் தோரது நல்லன்பாலும் பிரிட்டிஷ் குழுவினரின் ஒத் துழைப்பாலும் என் கனவு நனவாயிற்று. எவரெஸ்டு சிகரத்தை அடைந்ததும் அங்கிருந்து நாற்புறத்திலும் சுற்றிப்பார்த்தேன். எங்கு நோக்கினும் குன்றுகளும் சிகரங்களும் கடவுளைப்போல் காட்சியளித்தன. சம வெளிகளெல்லாம் துண்டு துண்டாகத் தோன்றின' என்று எவரெஸ்டு வீரராகிய டென்சிங், தம் இளம் பருவ விருப்பத்தையும், சிகரத்தில் கண்ட காட்சியையும் தெரிவித்துள்ளார்.

ஷெர்பா டென்சிங் என்பவர் நேபாளத்தில் பிறந்து இந்தியாவில் குடியேறி வாழ்பவராவார். இவருக்கு இப்பொழுது முப்பத்தொன்பது வயதாகிறது. இவர் நிறைந்த ஊக்கமும் இடையுருத முயற்சியும் உடையவர். எவரெஸ்டு மலையில் ஏறும் முயற்சியில் இவர் பலமுறை பங்கு கொண்டவர். இறுதியாக ஒன்பதாம் முயற்சியில் வெற்றி பெற்ருர். எவரெஸ்டு வீரராகிய இவர் உலகப் புகழ் பெற்று எல்லோராலும் பாராட்டப்பெறும் பெருமையை அடைந்துள்ளார். இவரைப் பல நாட்டினரும் தத்தம் நாடுகளுக்கு அழைத்துப்போய்ப் போற்றிக் கொண்டாடுகின்றனர்.



எவரெஸ்டு வீரர் டென்சிங்

இந்திய அரசாங்கத்தார் எவரெஸ்டு வீரர் டென்சிங்கைப் பாராட்டிப் பலர் முன்னிலையில் பொற்பதக்கம் வழங்கினர். பிரிட்டனில் எலிஸபெத் அரசியார் இவரைக் கொண்டாடி 'ஜார்ஜ் மெடல்' அளித்தார். இவ்வாறே பலரும் இவரைப் பாராட்டிப் போற்றியதுடன் பல வகைப் பரிசுகளும் அளித்தனர். இவற்ருல் எவரெஸ்டு வீரர் நாடெங்கும் சுற்றிப்பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்பொழுது யாவருடைய அன்பையும் இன்னுரையையும் கண்டு களிப்படைந்தார்.

'செயற்கரிய செய்வார் பெரியர்' என்ருர் திருவள்ளுவர். இம்மொழிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிருர், எவரெஸ்டு வீரராகிய ஷெர்பா டென்சிங். பதினெட்டு வயதிலிருந்து மலையேறும் முயற்சியில் ஈடுபட்டு

இடையறாது முயன்றுவந்த இவர் 'விடாமுயற்சி வெற்றி யளிக்கும்' என்ற பழமொழிக்குச் சான்றாய் மிளிர்கிறார்.

## குறிப்பு

இது, எவரெஸ்டு சிகரத்தைக் கண்டுபிடிக்க முயன்ற முயற்சி களையும் இறுதியில் வெற்றிபெற்ற விவரத்தையும் அறிவிக்கும் பாட மாகும். இது புதுமை காண்பதில் மக்களுக்குள்ள விருப்பத்தையும் துணிவையும் விளக்குகிறது.

## கேள்விகள்

1. இமயமலையின் சிறப்பு என்ன?
2. எவரெஸ்டு சிகரத்தில் ஏற முயன்ற முயற்சிகளைத் தெரிவிக்க.
3. எவரெஸ்டு சிகரத்தில் ஏறி வெற்றி பெற்றவர்கள் யாவர்?
4. 'எவரெஸ்டு வீரர்' என்று டென்சிங் கொண்டாடப்படுவது ஏன்? அவர் பெற்ற பெருமைகள் யாவை?
5. டென்சிங் தமது இளம்பருவ விருப்பத்தையும் சிகரத்தில் கண்ட காட்சியையும் பற்றித் தெரிவித்துள்ளது என்ன?
6. இப்பாடத்தால் அறியும் நீதி என்ன?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:— உறைவிடம், வாளுற, சிகரம், குழுவினர், வழிகோலினார், ஆற்றல்.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:— நோக்கம், இடையூறு, பங்கு கொண்டார், ஒத்துழைப்பு.

### II. வாக்கியப் பயிற்சி

1. இமயமலை மிகவும் உயரமானது:— இவ்வாக்கியத்தில் செயப் படுபொருள் இல்லை. ஆகையால் இது செயப்படுபொருள் இல்லாத வாக்கியமாகும். இதுபோல் இப்பாடத்திலிருந்து நான்கு வாக்கியங்கள் தெரிவிக்க.
2. டென்சிங் எவரெஸ்டு சிகரத்தையடைந்தார்.—இவ்வாக்கியத் தில் செயப்படுபொருள் இருக்கிறது. ஆகையால் இது செயப் படுபொருள் உள்ள வாக்கியமாகும். இவ்வாறே நான்கு வாக்கியங்கள் கூறுக.

### III. கட்டுரைப் பயிற்சி

1. டென்சிங் பெற்ற பெருமைகளை அவரே கூறுவதுபோல் எழுதுக.
2. 'எவரெஸ்டு சிகரம்' என்னும் தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.

# 13. ஆறு

கல்லும் மலையும் குதித்துவந்தேன்—பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன் ;
எல்லை விரிந்த சமவெளி—எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன். 1

காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன்—அதில்
கண்குளி ரப்பயிர் கண்டுவந்தேன் ;
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன்—அங்கென்
ஆசை தீரவிளை யாடிவந்தேன் 2

ஏறாத மேடுகள் ஏறிவந்தேன்—பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன் ;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன்—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். 3

ஆயிரம் காலால் நடந்துவந்தேன்—நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்துவந்தேன் ;
நேயமுறப் புன்செய்க் காட்டிலும்—அங்கங்கு
நீரை இறைத்து நெடுகவந்தேன். 4

பஞ்சை அரைத்துநூல் நூற்றுவந்தேன்—சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்துவந்தேன் ;
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரில்—குழாய்
நீராக வும்சென்று பாய்ந்துவந்தேன் 5

மாங்கனி தேங்கனி வாரிவந்தேன்—நல்ல
வாச மலர்களும் அள்ளிவந்தேன் ;
தீங்கரும் பாயிரம் தள்ளிவந்தேன்—மிகத்
தேனும் தினையுமே சேர்த்துவந்தேன். 6

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

# 14. தந்தையின் கடிதம்

**கோ. சு. பழனிச்சாமி கவுண்டர்**
**பெருநிலக் கிழார்**

கோயமுத்தூர்
16-10-**

*செல்வன் முத்தையன், முதல் படிவம்*
*அர்ச். சூசையப்பர் உயர்நிலைப்பள்ளி*
*திருச்சிராப்பள்ளி*

அன்புள்ள மகனே,

உனக்கு எல்லா நலமும் உண்டாவதாக: இங்கு உனது தாய், தங்கை முதலிய யாவரும் நலம். உன் கடிதத்திலிருந்து உனது நலமறிந்து மகிழ்ச்சியடைந்தேன். இக்கடிதத்தில் உனக்குச் சில செய்திகளை அறிவிக்கலாமென்று எண்ணுகிறேன்.

மகனே! நமது தாய்மொழி தமிழ் என்பது உனக்குத் தெரியும். தமிழ்மொழி பேசும் நாமனைவரும் தமிழராவோம் என்பதும் நீ அறிந்ததே. தமிழராகிய நாம் தமிழ்மொழியை ஆர்வத்துடன் பயின்று தேர்ச்சிபெற வேண்டியது இன்றியமையாததல்லவா? தமிழ் மொழியை நன்கு பயிலாத ஒருவர் தம்மைத் தமிழர் என்று சொல்லிக்கொள்வது பொருந்துமா? தமிழ் மொழியை நன்கு பயிலாதவர் 'தமிழரெனப் பெயர் கொண்டு இங்கு வாழ்ந்திடுதல் நன்றோ?' என்று பாரதியார் பாடியது உனக்குத் தெரியுமே! ஆகையால், நீ தமிழ்மொழியை ஊக்கத்தோடு பயின்று பிழையறப் பேசவும் எழுதவும் பழகவேண்டும்.

இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் உன் கடிதத்தில் பல பிழைகள் இருப்பதேயாகும். அவற்றுள் சில பிழைகளை மட்டும் குறிப்பிடுகிறேன்:

1. நான் முயர்ச்சியுடன் படித்து வருகிரேன்
2. பத்து ருபாய் அனுப்பும்படி கெட்டுக்கொல்கிரேன்
3. என்னிடம் நான்கு சட்டைகள் இருக்கிறது

முதல் வாக்கியத்தில் எழுத்துப் பிழைகள் இருக்கின்றன. 'முயற்சியுடன்,' 'வருகிறேன்' என்று எழுதுவதுதான் சரியாகும். இவ்வாறான எழுத்துப் பிழைகள் இல்லாமல் எழுதுவதற்கு நீ முயலவேண்டும். புத்தகங்களைப் படிக்கும்பொழுது சொற்களிலுள்ள எழுத்துக்களை ஊன்றி நோக்கிப் படித்துவந்தால் எழுத்துப் பிழையின்றி எழுதும் திறமை ஏற்படும்.

இரண்டாவது வாக்கியத்தில் எழுத்துப் பிழையினால் ஏற்பட்ட சொற்பிழைகள் இருக்கின்றன. 'கேட்டுக் கொள்கிறேன்' என்று எழுதுவதற்கு, நீ 'கெட்டுக் கொல்கிரேன்' என்று எழுதியிருக்கிறாய். 'கெட்டு' என்றால் 'அழிந்து' என்று பொருளாகும். 'கொல்கிரேன்' என்றால் 'அழிக்கிறேன்' என்று பொருளாகும். 'கே' என்ற எழுத்தை 'கெ' என்றும், 'ள்' என்ற எழுத்தை 'ல்' என்றும் பிழையாக எழுதியதால் எவ்வளவு மாறான பொருள்கள் ஏற்பட்டுவிட்டன பார்! இவ்வாக்கியத்திலும் வல்லின 'ற' வுக்கும், இடையின 'ர' வுக்கும் வேறுபாடு தெரியாமல் எழுதியிருக்கிறாய்.

மூன்றாவது வாக்கியத்தில் 'இலக்கணப் பிழை' இருக்கிறது. 'நான்கு சட்டைகள்' என்பது பன்மை எழுவாயல்லவா? இதற்குப் பயனிலையும் பன்மையாக இருக்கவேண்டாமா? 'இருக்கிறது' என்பது ஒருமைப் பயனிலையன்றோ? 'இருக்கின்றன' என்று எழுதுவது தான் சரியாகும்.

பொதுவாக இவ்வாறான பிழைகளுக்குக் காரணம் 'கவனமின்மை' என்று சொல்லலாம். கல்விப் பயிற்சியில் கருத்துள்ள மாணாக்கர்கள் ஊன்றிய கவனத்துடன் படிக்கவும் எழுதவும் வேண்டும். இங்ஙனம் தவறாமல் செய்துவந்தால் பெரும்பாலும் இத்தகைய பிழைகள் ஏற்படமாட்டா.

எழுத்துப்பிழை, சொற்பிழை, இலக்கணப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் வேண்டுமானால், அதற்கு இலக்கணப் பயிற்சி மிக இன்றியமையாதது. ஆதலால்,

இலக்கணத்தை விருப்பத்துடன் பயின்றறிய வேண்டும். ஆசிரியர் வகுப்பில் இலக்கணம் கற்பிக்கும்பொழுது கவனத்துடனிருந்து கற்பதுடன், தெரியாதவற்றைக் கேட்டறிந்து கொள்ளவேண்டும்.

தமிழில் நீ தேர்ச்சிபெற வேண்டுமானால், செய்யுட்களை மனப்பாடம் செய்து பயிலவேண்டும். இதன் பொருட்டு நீ திருக்குறள் மூலமும் பொழிப்புரையும் உள்ள ஒரு புத்தகத்தை வாங்கிக்கொள். அதிலுள்ள குறள்களில் விடுமுறை நாள்தோறும் ஐந்து குறள்கள் வீதம் பொருளுடன் மனப்பாடம் செய்துகொண்டுவா. இது, ஒவ்வொருவர் வாழ்வுக்கும் பெரும் பயனளிக்கும் சிறந்த நூலாகும்.

உடல் நலம் நன்றாயிருந்தால்தான் கல்வியில் தேர்ச்சி பெற முடியும். ஆகையால், நீ ஊக்கத்துடன் உடற் பயிற்சி செய்து வரவேண்டும். சுவரை வைத்துத்தானே சித்திரம் எழுதவேண்டும்? உடற்பயிற்சி ஆசிரியர் கற்பிக்கும் பயிற்சிகளைச் செய்வதுடன், பந்தாடுதல் முதலிய விளையாட்டுக்களிலும் நீ உள்ளக் கிளர்ச்சியுடன் ஈடுபடவேண்டும். உடல் நலத்திற்கு நாள்தோறும் காலையில் குளித்தல், குறித்த வேளையில் உண்ணுதல், உறங்குதல் முதலியவை ஒழுங்காக இருக்கவேண்டும்.

இச்செய்திகளையெல்லாம் நீ நன்கு கவனித்துக் கடைப்பிடிப்பாய் என்று நம்புகிறேன். இன்று நீ கேட்டுக்கொண்டபடி பத்து ரூபாய் அனுப்பியிருக்கிறேன். உன் நலத்திற்கு அடிக்கடி கடிதம் எழுது. இங்கு நேற்றுமுதல் மழை பெய்கிறது. திருச்சியிலும் மழையிருக்குமென்று நினைக்கிறேன்.

அன்புள்ள
**கோ. சு. பழனிச்சாமி.**

## பயிற்சி

1. உன் கல்விப்பயிற்சியைக் குறித்து உன் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதுக.
2. உன் பள்ளிக்கூடத்தில் நடந்த விழாவை விவரித்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.



# 15. வெற்றிலை

நமது நாட்டில் வெற்றிலைபாக்கு மெல்லுவோர் பலர் இருக்கிறார்கள். செல்வர்முதல் எளியவர்வரையில் பலநிலையில் உள்ளவர்களும் இப்பழக்கம் உடையோராய் இருப்பதைக் காண்கிறோம். இவ்வெற்றிலை, ஒருவர்க்கொருவர் அன்புகாட்டுதற்குரிய பொருளாக மதிக்கப் பட்டு வருகிறது. திருமணக் காலங்களிலும் பிற சமயங்களிலும் தம் வீட்டிற்கு வந்தவர்களை வரவேற்று அன்புடன் வெற்றிலைபாக்கு வழங்கும் வழக்கத்தால் இதனை நன்கறியலாம். ஆகையால், வெற்றிலையானது மிகுதியாக விற்பனை செய்யப்படும் பொருள்களில் ஒன்றாய் விளங்குகிறது. ஆகவே, வெற்றிலையைப் பயிர்செய்வது மிகுந்த ஊதியம் தரும் தொழில் என்பதைக் கூற வேண்டுவதில்லை.

வெற்றிலை, கொடியில் உண்டாவதாகும். வெற்றிலைக்கொடியில் தோன்றும் இலைகளைக் கிள்ளாமல் விட்டால், கொடி முதிர்ந்தபிறகு பொன்னிறமுள்ள சிறு சிறு பூக்கள் பூத்துப் பசுமையான காய்கள் உண்டாகும். ஆனால், பயிர்செய்வோர் இவ்வாறு காய்க்கும்படி விடுவதில்லை; இலைகள் தோன்றத் தோன்ற அவற்றைக் கிள்ளிக்கொண்டே யிருப்பார்கள். ஆகையால், கொடி

யில் பெரும்பாலும் பூவோடு கூடிய காய்கள் காணப்படுவதில்லை. அதனாலேயே இதற்கு 'வெறுமையிலை' என்று பொருள்படும் 'வெற்றிலை' என்னும் பெயர் ஏற்பட்டது.

வெற்றிலை, உரமுள்ள மேட்டு நிலங்களிலேயே பயிர் செய்யப்படுகிறது. மருதநிலங்களைச் சார்ந்த கரிசல் மண்ணில் இது மிகச் செழிப்பாய்ப் பயிராகும். இப்பயிருக்கு மிகுதியாய் எருவிடல் வேண்டும்; தண்ணீர் தட்டில்லாமல் இருக்கவேண்டும். இப்பயிருக்கு ஆட்டெரு, மாட்டெரு, பன்றியெரு முதலியவை ஏற்றவையாகும்.

வெற்றிலையை எவ்வாறு பயிர் செய்கிறார்கள்? முதலில் நிலத்தைச் சமப்படுத்தி, அந்நிலமெங்கும் ஏறக்குறைய இரண்டடி இடைவெளி விட்டு முக்கால் அடி ஆழமும் ஒன்றரையடி அகலமுமுள்ள நீண்ட கால்வாய்கள் வெட்டுவார்கள். வெட்டிய மண்ணை இடையில் விடப்பட்டிருக்கும் இடங்களில் போட்டு மேடாக்குவார்கள். பின்னர், கால்வாய்களில் நீரை நிரப்புவார்கள். நீர் நிறைந்ததும் மேடுகளிலுள்ள மண்ணைக் கிளறிப் பரப்பிவிட்டு, இருபக்க ஓரங்களிலும் பக்கமொன்றுக்கு இரண்டிரண்டு வரிசையாகப் பள்ளமுண்டாக்கி அகத்தி விதைகளைப் பதித்து மண்ணைப்போட்டு மூடுவார்கள். அகத்தி விதைகள் பதிக்குமிடங்கள் நேர்நேராக இருக்கவேண்டும். இங்ஙனம் இரண்டு வரிசைகளும் சேர்ந்த இடத்திற்குக் 'கங்கு' என்று பெயர். விதைகளைப் பதித்தபின்னர், அவ்விடங்களில் கால்வாய்களிலுள்ள நீரை இறைத்து வருவார்கள். நாளடைவில் கால்வாய்களின் அடியிலிருக்கும் சேற்றுமண்ணை அள்ளி மேட்டின் இருபுறங்களிலும் பூசிப் புல் முதலியவை முளைக்காமல் வழுவழுப்பாக்கி ஓரங்கள் உயர்ந்திருக்கும்படி செய்வார்கள்.

அகத்தி விதைகள் முளைத்து வளரும். அகத்திக் கன்றுகள் இடுப்பளவு உயரம் வளர்ந்ததும், வெற்றிலைக்

கொடிகளைத் துண்டு துண்டுகளாக அறுத்து, இரண்டு வரிசைகளிலும் நேர்நேராக முளைத்திருக்கும் அகத்திக் கன்றுகளுக்கு இடையிலுள்ள இடத்தில் நட்டுக் கால் வாய்களிலுள்ள நீரை இறைப்பார்கள். நட்ட இடம் அதிகம் காய்ந்துவிடாமல் மூன்று நாட்களுக்கு ஒருமுறை நீர் இறைத்துக்கொண்டு வருவார்கள். வெற்றிலைக் கொடிகள் தளிர்த்துக் கிளைவிட்டுப் பக்கங்களில் படரும். அப்பொழுது அகத்திக் கன்றுகளின் அடிப்பாகத்தில் நெருக்கமாயிருக்கும் கிளைகளை ஒடித்துவிட்டு, மேற் பாகத்தைச் சேர்த்துக் கட்டிவிடுவார்கள். பின்னர், அகத்திக் கன்றுகளில் வெற்றிலைக்கொடிகள் படரும்படி செய்வார்கள். இங்ஙனம் வெற்றிலைக்கொடி பயிர்செய் யும் நிலங்களில் காற்றுப்புகாதபடி நாற்புறத்திலும் முருக்க மரங்கள் அகத்தி மரங்கள் முதலியவற்றை வளர்த்து வாழைச்சருகுகளைக்கொண்டு அடைத்து வேலி போல் அமைப்பதுண்டு. வெற்றிலைக்கொடி பயிர்செய் யும் இடத்தைக் 'கொடிக்கால்' என்று சொல்வார்கள்.

வெற்றிலைக்கொடிகள் பயிரானபிறகு நான்காண்டு கள்வரையில் பயனளிக்கும். இடையறுது மிகுதியாய்த் தளிர்த்துக்கொண்டிருக்கும் வெற்றிலைகளைக் கிள்ளி யெடுத்து நீரிலிட்டுக் கழுவி அடுக்கி, விற்பனைக்கு அனுப்புவார்கள். முதல் ஆண்டில் தோன்றும் இலை களை 'இளங்கால் வெற்றிலை' என்றும், இரண்டாவது ஆண்டிலிருந்து தோன்றும் இலைகளை 'முதுகால் வெற்றிலை' என்றும் கூறுவர். முதுகால் வெற்றிலை தான் வெளுப்பும் மென்மையும் உடையதாய் இருக்கும்.

வெற்றிலை, இந்தியா, இலங்கை, பர்மா முதலிய நாடுகளில் பயிராகிறது; தமிழ்நாட்டில் பலவிடங்களி லும் பயிராகிறது. மலையாளத்தில் வீடுகளின் முன் புறத்திலும் கொல்லைகளிலும் பயிர்செய்கிறார்கள். சென்னையில் மைலாப்பூர் வெற்றிலையும், தஞ்சாவூரில் கும்பகோணம் வெற்றிலையும், மதுரையில் திண்டுக்கல் வெற்றிலையும் சிறந்தவையாகப் பலரும் விரும்பி வாங்கு

கிறார்கள். திருச்சிராப்பள்ளியில் திண்டுக்கல் வெற்றிலையைச் செல்வர்கள் பெரிதும் விரும்புகிறார்கள்.

வெள்ளை வெற்றிலை, பச்சைவெற்றிலை, கற்பூர வெற்றிலை, காரவெற்றிலை என்று வெற்றிலையில் பல வகைகள் உண்டு. மக்கள் உணவு உண்டபின் இவ் வெற்றிலையில் சுண்ணாம்பு தடவிப் பாக்குடன் சேர்த்து மெல்லுவதை நாம் நன்கறிவோம். இதனால் உண்ட உணவு சீரணிக்கும் என்று சொல்வர். இன்னும், வெற்றிலை மருந்துக்கும் பயன்படுகிறது. இது, மங்கலப் பொருளாகக் கருதப்படுவதால் திருமணம், இறைவன் வழிபாடு முதலிய காரியங்களுக்குப் பயன்படுகிறது.

தமிழ்நாட்டில் நீண்டகாலமாகவே வெற்றிலை பயன் பட்டு வந்துள்ளது என்று தமிழ்நூல்களிலிருந்து தெரிகிறது. அந்நூல்கள், மெல்லிலை, வெள்ளிலை, தாம்பூலம் முதலிய பெயர்களில் வெற்றிலையைக் குறிக்கின்றன. இவ்வெற்றிலைப்பயிர்த் தொழிலால் பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள்.

## குறிப்பு

இது, பயிர்த்தொழில்பற்றிய பாடம். இதில் வெற்றிலைக் கொடி பயிர்செய்யும் முறை, பயிராகுமிடம், வெற்றிலையின் வகை, பயன் முதலியவை விளக்கப்பட்டுள்ளன.

## கேள்விகள்

1. 'வெற்றிலை' என்ற பெயர் ஏற்பட்டது ஏன்?
2. வெற்றிலைக்கொடியை எவ்வாறு பயிர்செய்கிறார்கள்.
3. வெற்றிலை எந்தெந்த நாடுகளில் பயிராகிறது?
4. தமிழ்நாட்டில் எந்தெந்த ஊர்களில் பயிராகும் வெற்றிலையை மக்கள் விரும்புகிறார்கள்?
5. வெற்றிலையின் வகைகள் யாவை? வெற்றிலை எவ்வெவ்வாறு பயன்படுகிறது?
6. வெற்றிலைக்குத் தமிழ்நூல்களில் வழங்கும் பெயர்கள் யாவை?
7. குறிப்பு வரைக:—கன்று, கொடிக்கால், இளங்கால் வெற்றிலை, முதுகால் வெற்றிலை.

# செய்யுட்பகுதி—பொது

## I. கடவுள் வணக்கம்

### பரம்பொருள்

#### பல மதத்தார் சொல்லும் பரம்பொருள்

அல்லா என்பார் சிலபேர்கள் ;
அரன்அரி என்பார் சிலபேர்கள் ;
வல்லான் அவன்பர மண்டலத்தில்
வாழும் தந்தை என்பார்கள் ;
சொல்லால் விளங்கா 'நிர்வாணம்'
என்றும் சிலபேர் சொல்வார்கள்.
எல்லாம் இப்படிப் பலபேசும்
ஏதோ ஒருபொருள் இருக்கிறதே! 1

#### பரம்பொருளை வணங்கி வாழ்வோம்

அந்தப் பொருளை நாம்நினைத்து
அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம்.
எந்தப் படியாய் எவர்அதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன ?
நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப் போம் ;அதை வணங்கிடுவோம் ;
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம். 2

—நாமக்கல் கவிஞர்

#### உலகுக்கு ஒரு கடவுள் உண்டு

வானின்றி மழையு மில்லை; வயலின்றி விளைவு மில்லை;
ஆனின்றிக் கன்று மில்லை; அரியின்றி யொளியு மில்லை;
கோனின்றிக் காவ லில்லை; குமரர்தாய் இன்றி யில்லை;
மேனின்ற கடவு ளின்றி மேதினி யில்லை மாதோ. 3

—வேதநாயகம் பிள்ளை

## சிவபெருமான்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே. 4

—திருநாவுக்கரசர்

## திருமால்

குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்தபி ரான்பரன்
சென்று சேர்திரு வேங்கட மாமலை
ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே. 5

—நம்மாழ்வார்

## இயேசுநாதர்

வானமும் பூமியும் மகிழ்கொண்டு ஓங்கிட
ஞானமும் நன்மையும் நனிசிறந் திட
ஊனமும் பாவமும் ஒழியத் தோன்றிய
தீனரட் சகன்பதம் சிந்தித் தேத்துவாம். 6

—*H. A.* கிருட்டின பிள்ளை

## தமிழ்த் தாய்

தமிழென்ற பெயருடைய தையால்! உனதினிய
அமிழ்த மொழியால் அடியேம் வணங்குகின்றோம் 7
முன்னைப் பழம்பொருள்போல் முன்தோன்றிநின்றுலவும்
அன்னையே! செந்தமிழே! அடியேம் வணங்குகின்றோம் 8

—பெ. கோவிந்த மூப்பனார்

## இந்தியத் தாய்

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே—அவர்

சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே—இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்தியென்
வாயுற வாழ்த்தேனோ! 9

—பாரதியார்

## இறைவனை வேண்டுதல்

### முதல் நிலை

நல்வரந்தந் தாளுவாய்
நாதனே! அபேதனே! (நல்வரம்)

### இடை நிலை

அல்லும் பகலும் உன்னை நாட
அற்புதபர மார்த்தந் தேட (நல்வரம்)

### இறுதி நிலை

அன்பருடனே கூடவும் அனுதினம்துதி பாடவும்
இன்பசாகரம் ஆடவும் ஈனரைக்கண்டால் ஓடவும்
(நல்வரம்)

பஞ்சபுலனை அடக்கவும் பாவக்கடலைக் கடக்கவும்
நெஞ்சம் ஒடுங்கிக் கிடக்கவும் நீதி நெறியில் நடக்கவும்
(நல்வரம்)

தீனர்களையே தாங்கவும் சிந்தைத்துயரம் நீங்கவும்
ஞானவழியில் ஓங்கவும் நானுன்அடியில் தூங்கவும்
(நல்வரம்)

பததாபரவும் தேவனே! பரமதிவ்விய சுபாவனே!
வித்தகமனோ பாவனே! வேதநாயகன் சிவனே! 10
(நல்வரம்)

—வேதநாயகம் பிள்ளை

## குறிப்புரை

1. அல்லா—முஸ்லிம்கள் தொழும் கடவுள்
அரன்—சிவன்
அரி—திருமால்
பரமண்டலம்—மோட்ச உலகம்
நிர்வாணம்—புத்தமதத்தினர் சொல்லும் முத்தி நிலை
2. பிறரை—மற்ற மதத்தினரை
வந்திப்போம்—துதிப்போம்
3. ஆன்—பசு
அரி—சூரியன்
கோன்—அரசன்
மேதினி—உலகம்
4. வீக்கு—இன்பத்தை மிகச் செய்கின்ற
மூச—மொய்க்கின்ற
அறை—ஒலிக்கின்ற
பொய்கை—குளம்
5. குன்றம்—கோவர்த்தன மலை
ஞாலம்—உலகம்
ஓயும்—நீங்கும்
6. நனி—மிகவும்
ஊனம்—கேடு
தீனரட்சகன்—எளியவரைக் காப்பவன்; ஏசுநாதர்
7. தையால்—பெண்ணே
அடியேம்—நாங்கள்
8. பரம்பொருள்—கடவுள்
9. எந்தை—என் தந்தை
முந்தையர்—முன்னோர்கள்
வந்தனை—வணக்கம்
இருத்தி—வைத்து
10. சாகரம்—கடல்
ஈனர்—இழிந்தவர்
தூங்கவும்—தங்கியிருக்கவும்
தீனர்களை—எளியவர்களை
வித்தகம்—அறிவு
சீவன்—உயிர்

## கேள்விகள்

1. கடவுளைப் பற்றிப் பல மதத்தார் சொல்வதென்ன? பரம்பொருளை நாம் எவ்வாறு வணங்கவேண்டும்?
2. கடவுள் உண்டு என்பது எவற்றால் விளங்குகிறது?
3. ஈசனின் திருவடி நிழல் எவ்வாறு இன்பமளித்தது என்று திருநாவுக்கரசர் தெரிவிக்கிறார்?
4. திருமால் செய்த செயல்கள் யாவை? எவ்வெப்பொழுது செய்தார்?
5. இயேசுநாதர் தோன்றியதால் ஏற்பட்ட நன்மைகள் யாவை?
6. தமிழ் மொழி பழமையானது என்பது எதனால் தெரிகிறது?
7. இந்திய நாட்டை நாம் ஏன் வணங்கவேண்டும்?
8. வேதநாயகம் பிள்ளை இறைவனிடம் வேண்டுவது என்ன?

# II. அறவுரை

## 1. திருக்குறள்

### கடவுள் வாழ்த்து

அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே யுலகு. 1

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 2

### மழையின் சிறப்பு

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை. 3

தானம் தவமிரண்டும் தங்கா, வியனுலகம்
வானம் வழங்கா தெனின். 4

### மக்கள் பேறு

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும், தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். 5

மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல். 6

### அன்புடைமை

அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். 7

அன்பீனும் ஆர்வ முடைமை; அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. 8

## இனியவை கூறல்

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி யினிய சொலின். 9

இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 10

## செய்ந்நன்றி யறிதல்

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 11

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. 12

## அடக்கம் உடைமை

அடக்கம் அமரருள் உய்க்கும் ; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். 13

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 14

## ஒழுக்கம் உடைமை

ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 15

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை ; இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. 16

## பொறையுடைமை

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 17

ஒறுத்தார்க்கு ஒருநாளை யின்பம் ; பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 18

### பயனில சொல்லாமை

சீர்மை சிறப்பொடு நீங்கும், பயனில
நீர்மை யுடையார் சொலின். 19

சொல்லுக சொல்லிற் பயனுடைய ; சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். 20

### தீவினையச்சம்

இலனென்று தீயவை செய்யற்க ; செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து. 21

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந் தற்று. 22

### ஒப்புரவறிதல்

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. 23

ஊருணி நீர்நிறைந் தற்றே, யுலகவாம்
பேரறி வாளன் திரு. 24

### ஈகை

நல்லா றெனினும் கொளல்தீது ; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. 25

இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள. 26

### புகழ்

தல் இசைபட வாழ்தல் ; அதுவல்லது
ஊதிய மில்லை யுயிர்க்கு. 27

வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர். 28

## அருளுடைமை

மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை. 29

வலியார்முன் தன்னை நினைக்க, தான் தன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து. 30

## கள்ளாமை

உள்ளத்தால் உள்ளலுந் தீதே, பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வே மெனல். 31

களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும். 32

## வாய்மை

தன்னெஞ் சறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். 33

புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். 34

## வெகுளாமை

மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனால் வரும். 35

நகையும் உவகையும் கொல்லுஞ் சினத்தில்
பகையும் உளவோ பிற. 36

## இன்னா செய்யாமை

இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல். 37

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 38

**ஊழ்**

இருவேறு உலகத் தியற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு. 39

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது. 40

—திருவள்ளுவர்

## குறிப்புரை

**திருக்குறள்**—சிறந்த குறள் வெண்பாக்களால் ஆகிய நூல். இது யாவருக்கும் பொதுவான நீதியை அறிவிக்கும் உயர்ந்த நூல்; அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகளை உடையது; 1330 குறள் வெண்பாக்களை உடையது.

1. அகரம்—'அ' என்ற எழுத்து
முதற்று—முதலையுடையது
2. மலர்மிசை—மணமாகிய தாமரை மலரில்
நீடு—அழிவில்லாமல்
3. துப்பார்க்கு—உண்பவருக்கு
துப்பு ஆய—நன்மையாகிய
துப்பு ஆக்கி—உணவுகளை உண்டாக்கி
4. வியன் உலகம்—பெரிய உலகத்தில்
வானம்—மழை
5. ஈன்ற பொழுதின்—பெற்ற காலத்தில் உண்டான மகிழ்ச்சியைவிட
உவக்கும்—மகிழ்வான்
6. என் நோற்றான் கொல்—என்ன தவத்தைச் செய்தானோ?
7. புன் க(ண்)ணீர்—அற்பமான கண்ணீர்
பூசல்தரும்—பலர் அறியச் செய்யும்
ஈனும்—தரும்
கடா—அளவில்லாத
9. அல்லவை—பாவங்கள்
நல்லவை—நன்மையைத்தரும் சொற்களை
10. இனிய—இனிய சொற்கள்
கவர்ந்தற்று—தின்பதுபோல் ஆகும்
11. காலத்தினால்—ஒருவனுக்கு ஆபத்து வந்த காலத்தில்
ஞாலத்தின்—உலகத்தைவிட
12. நன்று அல்லது—தீமையை
13. அமரருள்—தேவர் உலகத்தில்
உய்க்கும்—செலுத்தும்
ஆர் இருள்—வாழ்வதற்கரிய நரகத்தின்
யா—எல்லாவற்றையும்
14. சோகாப்பர்—துன்பமடைவர்
15. விழுப்பம்—சிறப்பை
ஓம்பப்படும்—பாதுகாக்கப் படும்
16. இழுக்கத்தின்—நல்லொழுக்கத்திலிருந்து தவறுதலால்
17. அகழ்வாரை—தோண்டுபவரை
தலை—முதன்மையான அறமாம்
18. இறந்தார்க்கு—தண்டித்தவர்க்கு
பொன்றுந்துணையும்—உலகம் அழியுமளவும்
19. நீர்மையுடையார்—நற்குணம் உடையவர்

சீர்மை—மேம்பாடு
20. சொல்லில்—சொற்களில்
சொல்லற்க—சொல்லா
திருப்பாராக
21. இலன் என்று—நான் வறுமை
யுடையேன் என்று நினைத்து
22. வியாது—விடாமல் வந்து
உறைந்தற்று—தங்கிய
தன்மையதாகும்
23. தாளாற்றி—முயற்சிசெய்து
தந்த—சம்பாதித்த
வேளாண்மை—உபகாரத்தை
24. ஊருணி—ஊரில் வாழ்வார்
நீர் உண்ணும் குளம்
உலகு அவாம்—உலக நடையை
விரும்பிச் செய்யும்
25. நல் ஆறு—முத்தியடைவதற்கு
நல்ல வழி
மேல் உலகம்—முத்தி
உலகத்தை அடைதல்
26. எவ்வம்—துன்பம் தரும்
மொழியை
27. வாழ்தல்—வாழக்கடவர்
ஊதியம்—பயன்
28. இசைஒழிய—புகழ்
உண்டாகாமல்
29. மன்னுயிர்—நிலைபெற்ற
உயிர்களை
அருள் ஆள்வாற்கு—அருள்
உடையவனாய் இருப்ப
வனுக்கு
30. தன்னை—அஞ்சி நிற்கும் தனது
நிலையை
31. உள்ளலும்—நினைத்தலும்
கள்வேம்—வஞ்சித்துக்
கொள்ளுவோம்
எனல்—என்று நினைக்காமல்
இருப்பாராக
32. அளவு இறந்து—அளவைக்
கடந்து
33. பொய்த்தபின்—பொய்
சொன்னால்
சுடும்—வருத்தும்
34. புறந்தூய்மை—உடம்பின்
பரிசுத்தம்
அமையும்—உண்டாகும்
35. மறத்தல்—மறப்பாராக
36. சினத்தின்—கோபத்தைப்
பார்க்கிலும்
37. நன்னயம்—இனிமையான
மகிழ்ச்சிகளை
விடல்—இரண்டையும்
மறத்தலாம்
38. இன்னா—துன்பம் தருவன
வற்றை
முற்பகல்—பகலின்
முற்பகுதியில்
39. திரு—செல்வமுடையவராதலும்
தெள்ளியர்—அறிவுடையவர்
40. வகுத்தான்—தெய்வம்
துய்த்தல்—அனுபவித்தல்
அரிது—இல்லை

## கேள்விகள்

1. கடவுள் முதன்மையானவர் என்பது எவ்வாறு? உலகில் அழிவில்லாமல் வாழ்பவர் யார்?

2. மழையின் சிறப்பு யாது? அது இல்லையானால் எவை நடக்கா?

3. தாய் எதனால் மகிழ்ச்சியடைவாள்? தந்தைக்கு மகன் செய்யும் உதவி யாது?

அன்பை எது காட்டும்? அது தரும் சிறப்பு என்ன?

5. இன்சொல்லால் ஏற்படும் பயன் என்ன? கடுஞ்சொல் கூறுவது எது போல் ஆகும்?

6. உலகினும் பெரியது யாது? 'நன்றன்று', 'நன்று'—எவை?

7. அடக்கமும் அடங்காமையும் என்ன செய்யும்? நாவடக்கம் ஏன் வேண்டும்?

8. உயிரினும் சிறந்தது எது? மேன்மையும் பழியும் எவற்றால் ஏற்படும்?

9. இகழ்வாரை எதுபோல் பொறுக்கவேண்டும்? பொறுத்தார்க்கு என்ன உண்டாகும்?

10. பயனில்லாத சொற்களைச் சொன்னால் எவை நீங்கும்? சொல்லுக, சொல்லற்க—எவற்றை?

11. 'இலனென்று தீயவை செய்யற்க'—என்றது ஏன்? தீயவை செய்தார் எவ்வாறு கெடுவர்?

12. பொருளுக்குப் பயன் யாது? 'பேரறிவாளன் திரு'—எத்தகையது?

13. கொள்ளல் தீது, ஈதல் நன்று—இவற்றை விளக்குக. குலனுடையானிடம் உள்ள குணங்கள் யாவை?

14. உயிர்க்கு ஊதியம் எது? உலகில் வாழ்பவர் யார்?

15. தன்னுயிர் அஞ்சும் வினை யாருக்கு இல்லை? எளியவரைத் துன்புறுத்தாதிருக்க வழி யாது?

16. எது உள்ளத்தால் உள்ளலும் தீது? அளவிறந்து கெடுவது யாது?

17. ஏன் பொய் சொல்லக்கூடாது? மனத்தூய்மை எதனால் ஏற்படும்? எதுபோல?

18. கோபத்தை ஏன் மறத்தல் வேண்டும்? கோபத்தின் கொடுமை என்ன?

19. இன்னா செய்தாரைத் தண்டித்தல் எவ்வாறு? 'பிற்பகல் தாமே வரும்'—எது? ஏன்?

20. 'இருவேறு உலகத்தியற்கை'—எவை? பொருளை அனுபவித்தல் எவ்வாறு?

# 2. நல்வழி

### உழவுத் தொழிலின் உயர்வு

*ஆற்றங் கரையின் மரமும் அரசறிய*
*வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்*
*உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்*
*பழுதுண்டு வேறோர் பணிக்கு.* 1

### இரு சாதிகள்

*சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்*
*நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்*
*இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்*
*பட்டாங்கி லுள்ள படி.* 2

### உலகோர் இயல்பு

*மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி*
*இரந்தழைப்பார் யாவருமங் கில்லை—சுரந்தமுதம்*
*கற்றா தரல்போல் கரவாது அளிப்பரேல்*
*உற்றார் உலகத் தவர்.* 3

### நற்குடியில் பிறந்தாரின் நன்மை

*ஆற்றுப் பெருக்கற்று அடிசுடுமந் நாளுமவ்வாறு*
*ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு*
*நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்*
*இல்லையென மாட்டார் இசைந்து.* 4

### மிதமிஞ்சிய செலவின் கேடு

*ஆன முதலில் அதிகம் செலவானால்*
*மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை*
*எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்*
*நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.* 5

## மூடர் இயல்பு

பூவாதே காய்க்கும் மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்கு
உரைத்தாலும் தோன்றாது உணர்வு. 6

—ஔவையார்

## குறிப்புரை

நல்வழி:—மக்களுக்கு நன்மையான வழியைத் தெரிவிக்கும் நூல். இந்நூலில் 40 செய்யுட்கள் உண்டு.

1. அரசு—அரசன்
ஏற்றம்—உயர்வு
பழுது—குற்றம்
பணி—தொழில்

2. நெறி—வழி
வழுவா—தவறாத
மேதினி—உலகம்
பட்டாங்கு—மேலான நூல்கள்

3. இரந்து—கெஞ்சி
அமுதம்—பால்
கற்றா (கன்று + ஆ)—கன்றை யுடைய பசு
கரவாது—ஒளிக்காமல்

4. பெருக்கு—வெள்ளம்
உலகு—உலகத்தில் வாழ்பவரே
நல்கூர்ந்தார்—வறியவர்

5. ஆனமுதலில்—தனக்குக்கிடைத்த பொருளைவிட
மதி—அறிவு
நாடு—அறிந்துகொள்

6. பூவாதே—பூக்காமலே
தூவா—தூவி
நன்றாகா—முளைத்துப்பயன் படாத
பேதை—அறிவில்லாதவன்
உணர்வு—அறிவு

## கேள்விகள்

1. ஆற்றங்கரையில் உள்ள மரம் என்ன ஆகும்? இது எதற்கு உவமானம்? இதனால் அறியும் நீதி என்ன?
2. உயர்ந்தவர், இழிந்தவர்—யாவர்?
3. உலகத்தார் எதனால் உற்றாராய் ஆவர்? எதுபோல?
4. நற்குடிப்பிறந்தாரின் தன்மை யாது? அதற்கு உவமானம் என்ன?
5. அளவுக்குமிஞ்சிச் செலவு செய்பவன் அடையும் நிலை யாது?
6. பூவாதே காய்க்கும் மரம், விதைத்தாலும் நன்றாகா வித்து—இவற்றால் நீங்கள் அறிந்து கொண்ட செய்திகள் யாவை?

# 3. நீதி வெண்பா

## இன்சொல்லும் கடுஞ் சொல்லும்

*மென்மதுர வாக்கால் விரும்பும் சகம்;கடின*
*வன்மொழியி னாலிகழும் மண்ணுலகம் ;—நன்மொழியை*
*ஓதுகுயில் ஏதங் குதவியது? கர்த்தபந்தான்*
*ஏதபரா தஞ்செய்தது? இன்று.* 1

## உத்தமர் இயல்பு

*பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும*
*சின்னம் படவருத்தம் செய்தாலும்—முன்னிருந்த*
*நற்குணமே தோன்றும்; நலிந்தாலும் உத்தமர்பால்*
*நற்குணமே தோன்றும் நயந்து.* 2

## பெரியோர் சேர்க்கையும் சிறியோர் சேர்க்கையும்

*சந்தனத்தைச் சேர்தருவுந் தக்க மணங்கமழும்*
*சந்தனத்தைச் சார்வேய் தழல்பற்ற—அந்தவனம்*
*தானுமச் சந்தனமுந் தன்னினமும் மாய்வதன்றித்*
*தானுங் கெடச்சுடுமே தான்.* 3

## தீயவரை விட்டு நீங்கவேண்டும்

*கொம்புளதற் கைந்து; குதிரைக்குப் பத்துமுழம்;*
*வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி*
*தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்து*
*நீங்குவதே நல்ல நெறி.* 4

## கற்றோருக்குச் சென்றவிடத்தில் சிறப்பு

*ஆனை மருப்பும் அருங்கவரி மான்மயிரும்*
*கான வரியுகிரும் கற்றோரும்—மானே!*
*பிறந்த இடத்தன்றிப் பிறிதொருதே சத்தே*
*செறிந்த இடத் தன்றோ சிறப்பு.* 5

## உயிரைக் கொடுத்தேனும் உதவும் உத்தமர்

பாலினீர் தீயணுகப் பால்வெகுண்டு தீப்புகுந்து
மேலுநீர் கண்டமையும் மேன்மைபோல்—நூலினெறி
உற்றோர் இடுக்கண் உயிர்கொடுத்து மாற்றுவரே
மற்றோர் புகல மதித்து. 6

### குறிப்புரை

**நீதி வெண்பா**—நீதியைத் தெரிவிக்கும் வெண்பாக்களாலாகிய நூல். வெண்பா என்பது ஒருவகைப் பாட்டு. இந்நூலில் 100 வெண்பாக்கள் உள்ளன. இந்நூலை இயற்றிய ஆசிரியர் இன்னாரென்று தெரியவில்லை.

1. மதுரவாக்கு—இனிய சொல்
சகம்—உலகம்; இது மக்களைக் குறித்தது.
கர்த்தபம்—கழுதை
2. சின்னம்பட—சீர்குலையும்படி
நலிந்தாலும்—வருந்தினாலும்
நயந்து—மிகுந்து
3. தரு—மரம்
மணம் கமழும்—வாசனை வீசும்
சார்வேய்—சேர்ந்த மூங்கில்
தழல்—நெருப்பு
4. ஐந்து—ஐந்து முழம்
கரிக்கு—யானைக்கு
வம்புசெறி—தீமை மிகுந்த
5. மருப்பு—தந்தம்
கவரிமான்—ஒருவகை மான்
வரி உகிர்—புலியின் நகம்
மானே—பெண்ணே
செறிந்த—சேர்ந்த
6. வெகுண்டு—கோபித்து
நூலின் நெறி உற்றோர்—நூல்களின் விதிப்படி நடக்கும் நல்லோர்
இடுக்கண்—துன்பம்

### கேள்விகள்

1. உலகோர் எத்தகைய சொல்லை விரும்புவர்? அது எதனால் விளங்குகிறது? கழுதையின் குரலை வெறுப்பது ஏன்? இதனால் அறிவது என்ன?
2. உத்தமரிடம் நற்குணமே தோன்றும் என்பது எவற்றால் விளங்குகிறது?
3. நல்லவரோடு சேர்ந்தால் நன்மையும் தீயவரோடு சேர்ந்தால் தீமையும் ஏற்படும் என்பதை எவற்றால் அறியலாம்?
4. 'தீயவரைவிட்டு நீங்கவேண்டும்' என்பது எவ்வாறு தெரிவிக்கப் படுகிறது?
5. கற்றோர்க்கு எவ்விடத்தில் சிறப்பு ஏற்படும்? வேறிடத்தில் சேர்ந்து சிறப்படைவன யாவை?
6. நல்லோர் பிறர் துயரை எங்ஙனம் மாற்றுவர்? அது எதனால் விளங்குகிறது?

# III. கதை

## 1. குருவியும் குரங்கும்

பாடுறு மூட னுக்குப்
பற்பல போதித் தாலும்
வீடுடை யவனை வீட்டை
இழந்திடச் செய்வான் என்று
நேடுறு சன்மன் சொல்வான் :
நெடியதோர் பழும ரத்தில்
கூடுகொண் டனஇ ரண்டு
தூக்கணங் குருவி தாமே. 1

குளிரினால் நடுங்கி வானக்
கொடுமழை யால்ந னைந்து
நளிர்சுரத் தோடு தேகம்
நடுங்கியே பற்கள் கிட்டி
வளமறு குரங்கொன் றங்கு
வந்தது ; குருவி பார்த்தே
இளகிய மனத்தி னாலே
இன்சொலால் ஒன்று சொல்லும் : 2

" கைகள்கால் இருந்தும் இந்தக்
கன்மத்தை அனுப விக்கும்
செய்திஎன் ? " என்ன, " ஊசி
மூஞ்சிகொள் சிறிய மூடா,
வைதுநீ புத்தி சொல்ல
வல்லையோ ? " எனக்கோ பித்து
நெய்திடும் அதன்தன் கூட்டை
நெடுங்கையால் பிய்த்த தன்றே.

—வீரமார்த்தாண்ட தேவர்

## குறிப்புரை

இக் கதைப்பகுதி பஞ்ச தந்திரம் என்ற நூலில் உள்ளதாகும். பஞ்ச தந்திரம்—ஐந்து தந்திரங்கள். அவை: நட்புப்பேறு, நட்புப் பிரித்தல், அடுத்துக்கெடுத்தல், பொருள் அழிவு, ஆராயாது செய்தல் என்பனவாம். இவை முறையே சுகிர்லாபம், மித்திரபேதம், சந்தி விக்கிரகம், அர்த்தநாசம், அசம்பிரேட்சியகாரித்துவம் என்று வடமொழியில் கூறப்படும். 1. தங்களுக்குச் சமானமானவர்களோடு கூடிப் பகையில்லாமல் வாழ்ந்திருத்தல்; 2. நட்பைக்கெடுத்துப் பகை உண்டாக்கல்; 3. பகைவரைச் சேர்ந்து உறவுகொண்டு வெல்லுதல்; 4. தன் கையில் கிடைத்த பொருளை அழித்தல்; 5. காரியத்தைத் தெளிவாய் விசாரிக்காமல் செய்தல்—என்று இவை பொருள்படும். இத்தந்திரங்கள் கதைகள் வாயிலாக இந்நூலில் விளக்கப்படுகின்றன. வடமொழியில் உள்ள இந்நூலை வீரமார்த்தாண்ட தேவர் என்பவர் தமிழில் இயற்றியுள்ளார். சோமசன்மா என்ற அந்தணன் அரச குமாரர்களுக்குக் கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது.

1. பாடுஉறு—துன்பப்படுகிற
   போதித்தாலும்—கற்பித்தாலும்
   கேடுஉறு—நல்ல எண்ணம் பொருந்திய
   சன்மன்—சோமசன்மா என்ற அந்தணன்
2. நளிர்—நடுக்கும்படியான
   இளகிய—இரக்கமுள்ள
3. கன்மம்—துன்பம்
   வல்லையோ—வல்லமையுடையாயோ?
   நெடுங்கையால்—பெரிய கையால்
   பிய்த்தது—பிய்த்து எறிந்தது

## கேள்விகள்

1. பஞ்சதந்திரம் என்பது என்ன? ஐந்து தந்திரங்கள் யாவை?
2. சோமசன்மா என்பவன் சொன்ன நீதி யாது?
3. தூக்கணங்குருவிகள் எங்கே கூடுகட்டியிருந்தன?
4. குரங்கு குருவியின் இடத்திற்கு ஏன் வந்தது?
5. குருவி குரங்கிடம் கேட்டது என்ன?
6. குரங்கு கோபத்துடன் என்ன சொல்லியது? பிறகு என்ன செய்தது?

இக்கதையிலிருந்து அறியும் நீதி யாது?

8. இக்கதையைச் சுருக்கி எழுதுக.
9. இக்கதையைத் தூக்கணங்குருவி சொல்வதுபோல் எழுதுக.

---

## 2. காந்தி அடிகள்

இந்தியா ஈன்ற மைந்தருள் ஒருவன்
கூர்ச்சர நாடன் கூர்த்த மதியினன்
தாய்மொழி காத்து நாயன் ஆனவன் ;
தன்னுயிர் போல மன்னுயிர் போற்ற
நல்லறம் என்னும் இல்லறம் ஏற்றோன் ;

மக்களை ஈன்று மிக்கவன் ஆனான் ;
செயற்கை வெறுத்த செம்மை யாளன் ;
இயற்கை இன்பமே இன்பெனக் கொள்வோன் ;
உண்மை கடைப்பிடித்து ஒழுகும் சீலன்
உண்மை காரணமா உயிரையும் விடுவோன்

வானம் துளங்கினும் மீனம் படினும்
மலைகள் வீழினும் அலைகள் பொங்கினும்
தன்னிலை மாறாத் தன்மை யாளன் ;
உலகில் உள்ள அலகிலா உயிர்கள்
தன்னுயிர் என்னும் தருமம் பெற்றவன் ;

பிறர்க்குக் கேடு மறந்தும் சூழான் ;
'அன்புடையார் பிறர்க் கென்பும் உரியர்'
என்னும் மெய்ம்மொழிக் கிலக்கியம் ஆனோன் ;
உண்மைஅஞ் சாமை ஒண்பே ராயுதம்
தாங்கி என்றும் ஈங்கு முரண்படு

தேக சக்தியை ஏக சக்தியாம்
ஆன்ம சக்தியால் அடக்கும் வீரன் ;
சினத்தை ஒழித்த இனத்தனவர் உறவோன் ;
யாண்டுத் துன்பம் எவர்க்கு நேரினும்
ஆண்டே அவனுடல் அணையும் அன்றே ;

அவனுடல் மற்றவர் உடலே ஆகும்;
அவன்பொருள் மற்றவர் பொருளே ஆகும்;
அவனுயிர் மற்றவர் உயிரே ஆகும்;
தனக்கென வாழாத் தன்மை பெற்றவன்;
அன்பே வடிவாய் அமர்ந்த அண்ணல்;
'இன்பு பிறர்க்கே உழைத்தல்' என்போன்;
சாந்த மயமெனும் காந்திப் பெயரோன்;
நற்றவன் அடியைப் பற்றுவை ஆயின்,
ஐய, யாக்கையின் பயனது விளங்கும்.

—திரு. வி. கலியாணசுந்தரனார்

## குறிப்புரை

இப்பகுதி நாட்டுப்பாடல் என்னும் நூலில் உள்ளதாகும். காந்தியடிகளின் சிறப்பை இந்தியத்தாய் தம் மக்களுக்கு அறிவிப்பதாக இது கூறப்பட்டுள்ளது. இதனை இயற்றிய ஆசிரியர் சிறந்த தமிழறிஞர்; அரசியலிலும் ஈடுபட்டுச் சுதந்தரத்திற்காக உழைத்தவர்; தொழிலாளர் நலனுக்காக அரும்பாடுபட்டவர். இவர் பல தமிழ் நூல்கள் இயற்றியுள்ளார்.

குர்ச்சரம்—ஒரு தேசம்
கூர்த்தமதியினன்—கூர்மையான அறிவுடையவன்
நாயன்—தலைவன்
மன்னுயிர்—நிலைபெற்ற உயிர்கள்
ஈன்று—பெற்று
துளங்கினும்—அசைந்தாலும்
மீனம்—நட்சத்திரம்
தன்னிலை—உண்மையிலிருந்து
அலகுஇலா—அளவில்லாத
குழான்—எண்ணமாட்டான்
என்பும்—உடம்பினும்
முரண்படு—மாறுபடுகின்ற
யாண்டு—எவ்விடத்தில்
அணையும்—சேரும்
அண்ணல்—பெருமையுள்ளவன்
இன்பு—இன்பம்
நற்றவன்—சிறந்த தவத்தினன்
பற்றுவை ஆயின்—கடைப் பிடித்தால்
யாக்கையின்—உடம்பின்

## கேள்விகள்

1. காந்தியடிகள் பிறந்த நாடு எது?
2. காந்தியடிகள் உண்மையைக் கடைப்பிடித்த சிறப்பைத் தெரிவிக்க.
3. காந்தியடிகள் கைக்கொண்ட ஆயுதங்கள் எவை?
4. காந்தியடிகளின் தியாகச் செயல்களைத் தெரிவிக்க.
5. காந்தியடிகளின் சிறப்புக்களைப் பத்து வரிகளில் எழுதுக.
6. காந்தியடிகளை நாம் ஏன் கடைப்பிடித்து வாழவேண்டும்?

# 3. புத்தரும் ஏழைச் சிறுவனும்

*[புத்தர் பெருமான், செல்வபோகத்தைத் துறந்து அரண்மனையை விட்டு வெளியேறினார். இரவும் பகலும் இடைவிடாது நடந்து உடல் மெலிந்தார்; உணவும் உறக்கமும் இன்றிக் கைகால் தளர்ந்து ஒரு காட்டில் மயங்கி விழுந்துகிடந்தார்.]*

### ஆயர்குலச் சிறுவன் புத்தரைக் காணுதல்

*ஆடுகள் மேய்த்துவரும்—ஒருவன்*
*ஆயர் குலச்சிறுவன்*
*வாடிக் கிடந்தவனைச்—செல்லும்*
*வழியின் மீது கண்டான்.*

### சிறுவனின் தயக்கம்

*தெய்வ குலத்திவனை—எளியேன்*
*தீண்டலும் ஆகாதினிச்*
*செய்வதும் யாதெனவே—சிறிது*
*சிந்தை தயங்கி நின்றான்.*

### சிறுவனது அன்புச் செயல்

*உள்ளம் தெளிந்துடனே—வெள்ளாடு*
*ஒன்றை அழைத்து வந்து*
*வள்ளல் மயக்கொழிய—மடுவை*
*வாயில் கறந்துவிட்டான்.*

### புத்தர் எழுந்து பால் கேட்டல்

*நிலத்திற் கிடந்த ஐயன்—மெல்ல*
*நிமிர்ந்து தலை தூக்கிக்*
*"கலத்தினி லேகொஞ்சம்—பாலைக்*
*கறந்து தருவாய்" என்றான்.*

## சிறுவன் பால்தர மறுத்தல்

" ஐயையோ! ஆகாது" என்றான்—சிறுவன்
" அண்ணலே! யானும் உனைக்
கையினால் தீண்டவொண்ணா—இடையன் ஓர்
காட்டு மனிதன்" என்றான். 5

## புத்தர் கூறிய அறிவுரை

" இடர் வரும்போது—உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன் பிறந்தவர்போல்—மாந்தர்
உறவு கொள்வாரப்பா. 6

ஓடும் உதிரத்தில்—வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும்—சாதி
தெரிவ துண்டோ அப்பா? 7

எவர் உடம்பினிலும்—சிவப்பே
இரத்த நிறமப்பா
எவர்விழி நீர்க்கும்—உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா 8

பிறப்பினால் எவர்க்கும்—உலகில்
பெருமை வாராதப்பா
சிறப்பு வேண்டுமெனில்—நல்ல
செய்கை வேண்டும் அப்பா. 9

நன்மை செய்பவரே—உலகம்
நாடும் மேற்குலத்தார்;
தின்மை செய்பவரே—அண்டித்
தீண்ட ஒண்ணாதார்" 10

## சிறுவன் பால் தருதல்

நிலத்துயர் ஞானி—இவை
நிகழ்த்தி, 'என் தம்பீ!
கலத்தினிலே கொஞ்சம்—பாலைக்
கறந்து தா' என்ருன். 11

ஆயர் சிறுவனும்—கலத்தில்
அளிக்க வாங்கியுண்டு
தாயினும் இனியன்—கொண்ட
தளர்ச்சி நீங்கினனே. 12

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

## குறிப்புரை

இப்பாடல்கள் 'ஆசிய சோதி' என்னும் நூலில் உள்ளவை.

1. ஆயர்—இடையர்
2. சிந்தை—மனம்
3. வள்ளல்—புத்தர்
   மடு—பால் மடி
4. கலத்தினிலே—பாத்திரத்தில்
5. அண்ணலே—பெருமையுடையவரே
   தீண்டலொண்ணு—தொடக்கூடாத
6. இடர்—துன்பம்
7. உதிரத்தில்—இரத்தத்தில்
8. உவர்ப்பு—உப்பு
9. வாராது—வராது
10. தின்மை—தீமை
    அண்டி—நெருங்கி
11. நிலத்து உயர் ஞானி—உலகில் சிறந்த புத்தர்
    நிகழ்த்தி—சொல்லி
12. தாயினும்—தாயைவிட

## கேள்விகள்

1. ஆயர்குலச் சிறுவன் புத்தரைக் கண்டு என்ன எண்ணினுன்?
2. புத்தரின் மயக்கத்தை நீக்க சிறுவன் செய்ததென்ன?
3. புத்தர் கண்விழித்துச் சிறுவனிடம் என்ன கேட்டார்?
4. சிறுவன் புத்தருக்குப் பால் தர மறுத்தது ஏன்?
5. புத்தர் சிறுவனிடம் கூறிய அறிவுரை யாது?
6. புத்தர் எவ்வாறு தளர்ச்சி நீங்கினுர்?
7. இக்கதையால் அறியும் நீதி யாது?

# IV. இயற்கை அழகு

## காலை வானம்

கோழிகூ விற்று ! வையம்,
கொண்டதோர் இருளைத் தங்க
மேழியால் உழுதான் அந்த
விரிகதிர்ச் செல்வன் ; பின்னர்
ஆழிசூழ் உலகின் காட்சி
அரும்பிற்று ! முனைய வீழ்ந்து
வாழிய வைய மென்று
மலர்ந்தது காலை வானம் ! 1

—பாரதிதாசன்

## கதிரவன் ஒளி

வான மெங்கும் பரிதியின் சோதி ;
மலைகள் மீதும் பரிதியின் சோதி ;
தானை நீர்க்கடல் மீதிலும் ஆங்கே
தரையின் மீதும் தருக்களின் மீதும்
கான கத்திலும் பற்பல ஆற்றின்
கரைகள் மீதும் பரிதியின் சோதி ;
மான வன்தன் உளத்தினில் மட்டும்
வந்து நிற்கும் இருள்இது வென்னே ! 2

—பாரதியார்

## சோலை

விரைமலர்த் தேன்வண் டெல்லாம்
வீணையை யிழற்ற, ஆங்கே
மரங்கொத்திப் புட்கள் தாளம்
வகைப்படுத் திடத்த டாகக்
கரையினில் அலைக்க ரங்கள்
கவின்மிகு தங்கம் ஆர்ப்பக்
கருங்குயில் பாடத் தோகைக்
கணிகையின் றாடும் சோலை ! 3

—பாரதிதாசன்

### மாலைக்காலம்

செங்கதிர் வெம்மை தணிந்ததடி—வாசத்
தென்றல் உலாவி எழுந்ததடி
பொங்கிவருஞ் சோணை மாநதியும்—ஒரு
பொன்னிறம் பெற்றுப் பொலியுதடி 4

முல்லை மலர்ந்து மகிழ்ந்ததடி—ஆம்பல்
மூடிய வாயுந் திறந்ததடி
எல்லையிலா மலர்ச் சோலையிலே—வண்டும்
இன்னிசை பாடித் திரிந்ததடி. 5

தாயும் இரங்கி வருகுதடி—கன்றும்
தாவிக் குதித்தோடிச் செல்லுதடி
ஆயும் பொழிலில் பறவையெல்லாம்—அந்தி
அங்காடி போல ஒலிக்குதடி. 6

—கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளை

## குறிப்புரை

இப்பகுதியில் இயற்கைக் காட்சிகளை வருணிக்கும் பாடல்கள் அமைந்துள்ளன.

1. வையம்—உலகம்
மேழி—ஏரின் ஒரு பாகம்
தேர்ச்செல்வன்—சூரியன்
ஆழி—கடல்
அரும்பிற்று—தோன்றியது
2. பரிதி—சூரியன்
தானை—சேனை
தருக்கள்—மரங்கள்
மானவன்—மனிதன்
இருள்—அறியாமை
3. விரை—மணம்
மிழற்ற—ஒலிக்க
புட்கள்—பறவைகள்
கவின்—அழகு
ஆர்ப்ப—ஒலிக்க
தோகைக்கணிகை—மயிலாகிய நாட்டியப்பெண்
4. செங்கதிர்—சிவந்த கிரணங்களையுடைய சூரியன்
தென்றல்—தெற்கிலிருந்து வரும் காற்று
சோணமாநதி—ஓர் ஆறு
5. ஆம்பல்—அல்லி
எல்லையிலா—அளவில்லாத
6. பொழில்—சோலை
அங்காடி—கடைவீதி

## கேள்விகள்

1. கதிரவன் தோற்றத்தை ஆசிரியர் எவ்வாறு வருணிக்கிறார்?
2. கதிரவனின் ஒளி எங்கெங்குப் பரவி விளங்குகிறது?
3. சோலையில் நாட்டிய கச்சேரி எவ்வாறு நடந்தது?
4. மாலைக்காலத்தில் கண்ட காட்சிகளைத் தெரிவிக்க.

# V. தனிப் பாடல்கள்

## தமிழ் நாட்டின் சிறப்பு

வேழம் உடைத்து மலைநாடு ; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து ;—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து ; தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து. 1

—ஔவையார்

## இருபொருள் நயம்

பெரியவிட மேசேரும் ; பித்தர்முடி யேறும் ;
அரியுண் ணும் உப்புமே லாடும்—எரிகுணமாம்
தேம்பொழியுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம். 2

## இகழ்வது போலப் புகழ்தல்

அப்பன் இரந்துண்ணி ; ஆத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாமன் உறிதிருடி—சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத் தானுக்கிங்கு
எண் ணும் பெருமை யிவை. 3

—காளமேகப் புலவர்

## சோழ பாண்டியரின் சிறப்பு

வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்றும் முதுகுக் கிடான் கவசம்—துன்றும்
வெறியார் தொடைகமழும் மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடுக்கி னென்று. 4

—ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும்

## கவித்திறமை

வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன ?
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை—மங்காத
சீரகத்தைத் தந்திரேல் தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியா ரே. 5

—சொக்கநாதப் புலவர்

## திருக்குறளின் பெருமை

மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞால முழுதும் நயந்தளந்தான் ; வாலறிவின்
வள்ளுவரும் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாமளந்தார் ஓர்ந்து. 6

—பரணர்

## குறிப்புரை

இப்பாடல்கள் தனிப்பாடல் திரட்டு என்னும் நூலில் உள்ளன வாகும்.

1. வேழம்—யானை
   மலைநாடு—சேரநாடு
   பூழியர்—பாண்டியர்
   தெண் நீர்—தெளிந்த நீர்
   சான்றோர்—பெரியோர்
   இப்பாடல் பாம்புக்கும்
   எலுமிச்சம் பழத்துக்கும்
   சிலேடையாகப் பாடியது.
2. விடம்—நஞ்சு
   பித்தர்—பயித்தியமுள்ளவர்;
   சிவன்
   அரி—அரிதல்; காற்று
3. இப்பாடல் நிந்தாஸ்துதியாகும்
   அப்பன்—சிவபெருமான்
   ஆத்தாள்—உமாதேவி
   மாமன்—திருமால்
   அண்ணன்—விநாயகர்
4. இப்பாடலில் முன் இரண்டடி
   ஒட்டக்கூத்தரும் பின் இரண்டடி
   புகழேந்திப் புலவரும்
   பாடியதாகும்.
   வளவன்—சோழன்
   தம்பிரான்—தலைவன்
   துன்றும்—மலர்கள் நெருங்கிய
   வெறி ஆர்—வாசனைபொருந்திய
   தொடை—பூமாலை
   மீனவர்கோன்—பாண்டிய
   மன்னன்
   புறம் கொடுக்கின்—முதுகு
   காட்டினால்
5. வெங்காயம்—கொடிதாகிய
   உடல்
   சுக்கு ஆனால்—சுக்குப்போல்
   உலர்ந்தால்
   வெந்தை அத்தால்—கொடிய
   வினையால்
   இச்சரக்கை—இவ்வுடலை
   மங்காத—குறையாத
   சீர் அகம்—சிறந்த இடம்;
   மோட்சம்
   பெருங்காயம்—வலிமையான
   உடல்
   ஏரகம்—சுவாமிமலை
   செட்டியார்—முருகர்
6. குறளாய்—வாமனனாய்
   வாலறிவின்—மெய்யறிவுடைய
   உள்ளுவ—நினைக்கின்றவை
   ஓர்த்து—எண்ணி

## கேள்விகள்

1. தமிழ்நாட்டின் பிரிவுகள் எவை? அவற்றின் சிறப்புக்கள் யாவை?
2. பாம்புக்கும் எலுமிச்சம் பழத்துக்கும் பொருந்தும் இரு பொருள் வைத்ததைத் தெரிவிக்க.
3. காளமேகப் புலவர் முருகப்பெருமானை எவ்வாறு இகழ்வதுபோலப் புகழ்கிறார்?
4. ஒட்டக்கூத்தர் சோழனின் பெருமையை எவ்வாறு தெரிவித்தார்? அதைப் புகழேந்திப் புலவர் பாண்டியனின் பெருமையாக மாற்றியது எவ்வாறு?
5. சொக்கநாதப் புலவர் முருகப்பெருமானிடம் வேண்டுவது என்ன?
6. திருக்குறளின் பெருமையைத் தெரிவிக்க.

# VI. நாட்டுப் பாடல்கள்

## பாண்டிய நாட்டுச் சிறப்பு

பூதனபெருகும் சோலை தென்னன் வளநாடு
கனியுதிரும் சோலை கனமதுரை நன்னாடு
வாழை வடக்கினும் வான்கமுகு மேற்கினும்
கரும்பும் இளநீரும் கண்திறந்து மடைபாயும்
கட்டுக் கலங்காணும் கதிர்உழக்கு நெற்காணும்
அரிதாள் அறுத்துவர மறுதாள் பயிராகும்
அரிதாளின் கீழாக ஐங்கலத்தேன் கூடுகட்டும்
யானைகட்டத் தாளும் வானமட்டும் போராகும்
மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெலென்று
யானைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை. 1

—அல்லியரசிமாலை

## தலையலங்காரம்

பூவாழை எண்ணெய்தொட்டுப் போத மயிர்கோதி
சீவியே சிக்கறுத்துச் சிமிள்போலக் கொண்டையிட்டு
வாரி முடித்தார்கள் மாணிக்கக் கொண்டையிட்டார்.
ஒவ்வோர் மயிர்களுக்கு எவ்வேழு பொன்னிதழாம்
பொன்னிதழும் பூவிதழும் போத முடித்தகொண்டை
சுற்றி முடித்துவைத்த கொண்டைவந்து தோளசைய
ஆயிரம் பொன்பெற்ற அன்பான சவுரிவைத்து
கொண்டை சடைவில்லை குப்பி யலங்கரித்து
ஆண்மயிலும் பெண்மயிலும் அணிந்தார் அழகுபெற
சந்திரபிறை சூரியபிறை சடைநாகம் தான்அணிந்தார். 2

—பவளக்கொடிமாலை

## கட்டபொம்மன் கொலுச்சிறப்பு

விஸ்தார மேல்கட்டி முத்திலங்கப் பஞ்சு
மெத்தைமேல் வைத்ததிண்டுந் துலங்க
உத்தமன் கட்டபொம் மேந்திர துரை வெகு
உல்லாச மாகக் கொலுவிருந்தான்

சிங்கார மாகக் கொலுவிருக்க அங்கே
சேவக ரெல்லோரும் சூழ்ந்திருக்க
கங்கா குலாதிபன் பிள்ளைமகன் சதுரக்
கம்பளி மேல்சபை செய்திருக்க

நாட்டிய மாட வொயிலாட நல்ல
நங்கையர் மங்களம் பாடிவரத்
தேட்டுக் கதிபதி பாஞ்சைப் பதித்துரைச்
செல்வ னென்றுகட் டியங்கூற
காவல் காரன்மகன் வெள்ளையன் சிங்கேறு
சேவல் கட்டிவிளை யாடுவனும்
சேவ லெடுத்துப் பறவைவிட்டு வெள்ளைச்
சேவலைக் கட்டிக் குதிபோட்டு
எட்டுப் பகடை பனிரண்டு விழுமென்று
எக்களிப் பாய்ப்பாசி தானுருட்டி
கட்ட பொம்மேந்திர னாமைத் துரையுடன்
கட்டாக வேவிளை யாடுவாராம். 3

—கட்டபொம்மன் கும்மி

## குறிப்புரை

1. இப்பகுதி பாண்டிய நாட்டின் நீர்வளத்தைத் தெரிவிக்கிறது. இதனை இயற்றியவர் புகழேந்திப் புலவர் என்று வழங்கிவருகிறது. இதில் பாண்டிய நாட்டின் வளம் வருணிக்கப்படும் வகையையறிந்து இன்புறலாம்.

2. இதுவும் புகழேந்திப் புலவர் பாடியதாகவே வழங்கிவருகிறது. இப்பகுதியில் பவளக்கொடி என்பவளுக்குத் தாதிமார் அலங்காரம் செய்த வகை வருணிக்கப்பட்டுள்ளது. இதில் முற்காலத்து அணிவகைகளையும் அலங்கார வகைகளையும் அறிந்து மகிழலாம்.

3. இதனை இயற்றியவர் இன்னாரென்று தெரியவில்லை. இப்பகுதியில் இந்தியச் சுதந்தரப் போராட்டத்திற்கு முதல் முழக்கம் செய்த பாஞ்சாலங் குறிச்சி மன்னன் வீரபாண்டியக் கட்டபொம்மன், கலெக்டர் ஜாக்சனைப் பேட்டி காணவந்து இராமநாதபுரத்தில் தங்கியிருந்தபொழுது கொலு வீற்றிருந்த சிறப்பு வருணிக்கப்படுகிறது. இதனால் அக்காலச் சிற்றரசரின் சிறப்பையறியலாம்.

## கேள்விகள்

1. பாண்டிய நாட்டின் வளப்பத்தை ஆசிரியர் எவ்வாறு வருணிக்கிறார்?
2. பவளக்கொடியின் தலையலங்காரச் சிறப்பைத் தெரிவிக்க. முற்கால அணிவகைகள் யாவை?
3. கட்டபொம்மன் கொலு வீற்றிருந்த சிறப்பு யாது?

# VII. பல்வகைப் பாடல்கள்

## உடற் பயிற்சி

இளங்கன்று பிறந்தவுடன் எழுந்தோடி விளையாடி
உளம்பெற்ற மகிழ்ச்சியுடன் உடற்பயிற்சி செய்வதனால்
வளம்பெற்று நாடோறும் வளருவதைக் காண்போமேல்
விளங்குமுடற் பயிற்சிநிதம் வேண்டுமென உணர்
வோமே. 1

—கா. சி. சிவசங்கர முதலியார்

## மலர்கள்

வண்டின் வரவெதிர் பார்த்துநிற்போம்—நல்ல
வாசனை வீதியில் வீசிநிற்போம்.
உண்டு களிக்க மதுவளிப்போம்—சற்றே
உட்காரப் பீடமும் இட்டுவைப்போம்.
மங்கைய ரோடு குமரரையும்—மணம்
வாய்த்த மணஞ்செய்து வாழவைப்போம்.
தங்கமும் பொன்னும் மணிகளுமே—எம்மைத்
தாழ்ந்து வணங்கமேல் தங்கிடுவோம்.
ஈசன் அடியில் பணிந்திருப்போம்—அவர்
ஏந்து முடிமீதும் ஏறிநிற்போம்.
பூசனை செய்யும் அடியவரின்—உள்ளம்
பொங்கு களிப்பெலாம் காட்டிநிற்போம். 2

—கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை

## உழவரின் சிறப்பு

ஏராலே சேறாக்கி யெருவாலே கருவாக்கி
நீராலே பைங்கூழை நிலைப்பிப்பார் தமையன்றிக்
காராலே காவேரி நதியாலே காசினியில்
ஆராலே பசிதீர்வார் அகலிடத்திற் பிறந்தோரே. 3

—கம்பர்

## இயேசுநாதரின் சிறப்பு

"ஆண்மைகொள் யேசு புவிக்குப்
புரிந்ததென் தோழி?—அவர்
அன்பெனும் நன்முரசெங்கும்
முழக்கினர் தோழா—அந்தக்
கேண்மைகொள் யேசுவின் கீர்த்தி
உரைத்திடு தோழி—அவர்
கீர்த்தி உரைத்திட வார்த்தை
கிடைக்கிலை தோழா—நலம்
தாண்டவம் ஆடிடச் செய்தவ
ரோ அவர்? தோழி—அன்று
தம்மைப் புவிக்குத் தரும்பெரு
மானவர் தோழா—அந்த
ஆண்டவன் தொண்டர்கள் ஆகிடத்
தக்கவர் யாவர்—எனில்
'அன்னியர்' 'தான்' என்ற
பேத மிலாதவர் தோழா!"

—பாரதிதாசன்

## செய்யவேண்டுவன

வாலிபந் தனில்வித்தை கற்கவேண்டும்; கற்ற
வழியிலே நிற்கவேண்டும்;
வளைகடல் திரிந்துபொன் தேடவேண்டும்; தேடி
வளர்அறம் செய்யவேண்டும்;
சிலமுடை யோர்களைச் சேரவேண்டும்; பிரிதல்
செய்யா திருக்கவேண்டும்;
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண்டும்;
தியாகம் கொடுக்கவேண்டும்; [கொண்டு

ஞாலமிசை பலதருமம் நாட்டவேண்டும்; நாட்டி
நன்றாய் நடத்தவேண்டும்;
நம்பன்இணை யடிபூசை பண்ணவேண்டும்; பண்ணி
னாலுமிகு பக்திவேண்டும்;

ஆலமமர் கண்டனே ! பூதியணி முண்டனே !
அழகன்எம தருமைமதவேள் !
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே ! 5

—அம்பலவாணக் கவிராயர்

## தொழில்

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே !
இயந்தி ரங்கள் வகுத்திடு வீரே ?
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே !
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே !
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே !
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே. 6

—பாரதியார்

## சுதந்தரத் திருநாள்

இந்திய நாட்டின் சுதந்தரத் திருநாள்
இன்பம் யாவையும் இனிமேல் தருநாள்
செந்தமிழ்த் தாயின் திருப்புகழ் பாடித்
தெய்வம் தொழுவோம் யாவரும் கூடி

பொதுநலம் ஒன்றே குறியெனப் போற்றி
பொல்லா வழக்கம் யாவையும் மாற்றி
புதுப்புது அறிவினைப் புகுத்திடல் புரிவோம்
பூரண வளர்ச்சியின் நன்மைகள் தெரிவோம். 7

—நாமக்கல் கவிஞர்

## வாழ்த்து

பொலிக பூரணம் ! பொங்குக வெற்றியே !
பொலிக நல்ல புதுயுக வாழ்க்கையே !
பொலிக புண்ணிய பாரத பூமியே !
பொலிக மங்கலம் பூவுயிர் யாவிற்கும் ! 8

—கவியோகி சுத்தானந்த பாரதியார்

## குறிப்புரை

1. உளம்—மனம்
   வளம்—வளப்பம்
2. மது—தேன்
   மணம்—திருமணம்
3. கரு—பயிர் வளர்வதற்கான வளப்பம்
   பைங்கூழ்—பயிர்
   கார்—மேகம்
   காசினி—உலகம்
   அகலிடம்—அகன்ற இடமுள்ள உலகம்.
4. சேசு—இயேசுநாதர்
   புவிக்கு—உலகத்திற்கு
   கேண்மை—நட்பு
   கிடைக்கிலை—கிடைக்கவில்லை
   பேதம்—வேறுபாடு
5. வலை—வலைத்துள்ள
   சீலம்—ஒழுக்கம்
   கம்பன்—சிவபெருமான்
   இணையடி—இரண்டு பாதங்கள்
   ஆலம்—நஞ்சு, விஷம்
   கண்டன்—கழுத்தை யுடையவன் : சிவன்
   பூதி—விபூதி, திருநீறு
   முண்டன்—நெற்றியை யுடையவன்
   தரு—மரம்.
6. வகுத்திடுவீர்—செய்வீர்
   அரும்பும்—தோன்றும்
   நமக்கே—உங்களுக்கு
   இசைக்கின்றேன்—சொல்கிறேன்
7. திருப்புகழ்—சிறந்த புகழை
   பொல்லாவழக்கம்—தீயவழக்கங்கள்
8. பொலிக—சிறக்க
   பாரதபூமி—இந்தியா
   பூ உயிர்—உலகத்துஉயிர்கள்

## கேள்விகள்

1. உடற்பயிற்சி அவசியம் என்பது எதனுல் தெரிகிறது ?
2. மலர்கள் தங்கள் மேன்மையை எவ்வாறு தெரிவிக்கின்றன ?
3. உழவரின் சிறப்பைத் தெரிவிக்க.
4. தோழன் தோழி உரையாடலால் விளங்கும் இயேசுநாதரின் பெருமைகள் யாவை ?
5. அறப்பளீசுர சதகத்திலிருந்து செய்யத்தக்கவை இன்னவை என்பதைத் தொகுத்துக் கூறுக.
6. கல்வி, செல்வம், தருமம் என்பவற்றைப்பற்றி நீங்கள் தெரிந்து கொண்டவை யாவை ?
7. நாடுமேன்மையடைய பாரதியார் தெரிவிக்கும் தொழில்கள் யாவை ?
8. இந்திய நாட்டில் இன்பம் பெருக நாம் என்ன செய்யவேண்டும் ?
9. சுத்தானந்த பாரதியார் இந்தியாவை எங்ஙனம் வாழ்த்துகிறார் ?

# கம்பர் தமிழ் வாசகம்

## இரண்டாம் புத்தகம்

இரண்டாம் படிவம்—பொது

**ஏழாம் வகுப்பு**

**வித்துவான் தி. சி. குழந்தைவேல் முதலியா**
அர்ச். சூசையப்பர் கல்லூரி உயர்நிலைப்பள்ளி
திருச்சிராப்பள்ளி

முருகன் பதிப்பகம்

குளித்தலை P.O. திருச்சிராப்பள்ளி

முதற் பதிப்பு: அக்டோபர், 1953

பதிப்புரிமை

விலை அணா பதினைந்து

PRINTED AT
ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL PRESS, TRICHINOPOLY—H.O.

# முன்னுரை

சென்னை அரசியலார் தமிழ்மொழியை முதன் மொழி யாக்கியதிலிருந்து கல்வி பயிலும் மாணவரிடையே ஆர்வம் பெருகி, அவர்கள் தமிழ் மொழியைக் கற்பதில் உள்ளக் கிளர்ச்சி பெற்று வருகின்றனரெனலாம். இந்நிலையில் தமிழ் மொழியைச் சிறப்பாகப் பயிலும் மாணவர் நலங்கருதி, 1951-ல் **பொதுப் படிப்பு, சிறப்புப் படிப்பு** என இரு பிரிவுகளாகத் தமிழ்ப் பாடத்திட்டங்களை வகுத்து புதிய பாடத்திட்டத்தை வெளியிட்டனர். இப்பாடத்திட்டத்திற் கிணங்கவே, 'கம்பர் தமிழ் வாசகம்' என்னும் இப்பாட நூல் அமைக்கப்பெற்றுள்ளது. இது, இரண்டாம் படிவம் பொது படிப்புக்குரியதாகும்.

இப்பாட நூலில், தேசியம், இலக்கியம், வரலாறு, கைத்தொழில், பயிர்த்தொழில், விஞ்ஞானம், கற்பனைக் கதை, நகைச்சுவை நிகழ்ச்சி, புதுமை காணல் முதலிய பல்வகைப் பொருள்களில் ஏற்றவை வகுப்பின் அளவறிந்து கொடுக்கப் பட்டுள்ளன. இவை கட்டுரை, உரையாடல், கடிதம், சொற் பொழிவு, நாடகம், சுயசரிதம், கேளிக்கைப் பயணம் முதலிய வகைகளில் விளக்கப்பட்டுள்ளன.

செய்யுட் பகுதியில், பழமையும் புதுமையும் தழுவிய பலவகைப் பாக்கள் அமைந்துள்ளன. அவை கடவுள் நெறி, அறநெறி, கதை, இயற்கை, நாட்டுப் பாடல், பலவகைச் சுவை முதலிய பலதிறம் பற்றியவையாகும். புதுமைப் பாக்களின் ஆசிரியர்களுக்கு எனது நன்றி உரியதாகும்.

நன்முறையில் அமைக்கப்பட்டுள்ள இப்பாடநூலைக் கல்வியதிகாரிகளும், கல்விநிலையத் தலைவர்களும், தமிழாசிரி யர்களும் ஆதரித்து மாணவர்களுக்குப் பயன்படச்செய்யுமாறு வேண்டுகிறேன்

**தி. சி. கு.**

# பொருளடக்கம்

## உரைநடைப்பகுதி


| எண் | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | கண்ணகி கண்ட காட்சி | 1 |
| 2. | மாணவர் ஆட்சி மன்றம் | 5 |
| 3. | தமிழகம் | 10 |
| 4. | நாமக்கல் கவிஞர் | 14 |
| 5. | கைத்தொழில் | 18 |
| 6. | 'நான் கண்ட மேட்டூர் அணை' | 19 |
| 7. | தாமஸ் ஆல்வா எடிசன் | 24 |
| 8. | பருத்தியும் ஆடையும் | 28 |
| 9. | போலி வைத்தியர்! (நாடகம்) | 36 |
| 10. | தமிழ்த்தாய் | 44 |
| 11. | கூட்டுறவுப் பால் பண்ணை | 45 |
| 12. | வீர மல்லம்மாள் | 50 |
| 13. | வானொலி | 56 |
| 14. | உடல் நல வழிகள் | 61 |
| 15. | உடல் நலம் பேணல் | 67 |
| 16. | தோட்டக் கலை | 68 |
| 17. | ஆப்பிரிக்காவில் வழிவகுத்தவர் | 73 |


## செய்யுட்பகுதி


| | | |
| --- | --- | --- |
| I. | கடவுள் வணக்கம் | 1 |
| II. | அறவுரை | |
| | 1. திருக்குறள் | 5 |
| | 2. நன்னெறி | 13 |
| | 3. நாலடியார் | 15 |
| III. | கதை | |
| | 1. மலையும் அணிலும் | 17 |
| | 2. வீரமங்கை | 19 |
| | 3. பிரமசாரியும் பொரிமாத்தோண்டியும் | 22 |
| IV. | இயற்கையழகு | 25 |
| V. | தனிப் பாடல்கள் | 27 |
| VI. | நாட்டுப் பாடல்கள் | 29 |
| VII. | பல்வகைப் பாடல்கள் | 31 |

# கம்பர் தமிழ் வாசகம்

## இரண்டாம் புத்தகம்—பொது

### 1. கண்ணகி கண்ட காட்சி

சோழநாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்தில் கோவலன் என்ற வணிகனொருவன் இருந்தான். இவன் மனைவி கண்ணகி என்ற கற்பரசி. கோவலன் தீய வழியில் தன் திரண்ட செல்வத்தை இழந்ததால் வாணிகம் செய்து பொருள் தேடும்பொருட்டுக் கண்ணகியுடன் மதுரை செல்லப் புறப்பட்டான். வழியிடையில் கௌந்தியடிகள் என்ற பெண்பால் சமணத்துறவி, கண்ணகிக்குத் துணையாகச் சேர்ந்தார்.

மூவரும் பல நாட்கள் வழி நடந்து பல விடங்களையும் பார்த்துக்கொண்டே உறையூரை யடைந்தனர். அங்கிருந்து தெற்கு நோக்கி வனவளங்களை யெல்லாம் பார்த்து மகிழ்ந்துகொண்டே சென்று எயினர்கள் வாழும் சிற்றூரை யடைந்தனர். அது நாற்புறத்திலும் மரங்கள் அடர்ந்து நிழல் பொருந்தியிருந்தது. கண்ணகி வழி நடந்த களைப்பால் மெய் சோர்ந்திருந்தாள். வெயிலின் வெப்பமும் மிகுதியாயிருந்தது. ஆகையால், அவர்கள் அங்குப் பகற் பொழுது தங்கிப் புறப்படக் கருதினர்.

கோவலன் அண்மையிலிருந்த நீர் நிலையையடைந்து நீர் பருகிவிட்டுத் தாமரையிலையில் தண்ணீர் கொண்டு வந்து மற்றிருவரும் குடிக்கக் கொடுத்தான்; அவர்கள் நீர் குடித்த பிறகு, சோலையிலிருந்த ஐயை கோவிலுக்கு இருவரையும் அழைத்துக்கொண்டு போனான். அங்கிருந்த ஒரு மேடையில் மூவரும் அமர்ந்தனர்.

இவ்வாறிருக்கும்பொழுது, கொற்றவையாகிய ஐயைக்குத் தொண்டாற்றும் சாலினி என்ற தேவராட்டி திடீரென்று மருள்கொண்டு ஊரின் நடுமன்றில் நின்று ஆரவாரித்தாள். அவள் மெய்ம்மயிர் சிலிர்க்க, உடல்

நடுங்க, கைகளை மேலே யுயர்த்தி, ஆட்டமாடி, "ஏ, வில்லேந்து வேடர்களே! நீங்கள் இக் கலையூர்தியாகிய ஐயைக்குப் பலியூட்டி எவ்வளவு காலமாயிற்று! அவளை மறந்தமையால் உங்கள் வளங் குன்றிவிட்டது! இன்னும் காலம் கடத்திஞல் நீங்கள் நலம் பெறமாட்டீர்கள். உடனே பலிக் கடன் கொடுங்கள்!" என்று வாக்குரைத்தாள்.

இம் மொழிகளைத் திரண்டு நின்று கேட்ட வேடர்கள், உடனே ஐயைக்குப் பூசை செய்வதெனப் பேசி முடிவு செய்தனர். அவர்கள் வழக்கம்போல் வேடர் குலக் குமரி யொருத்தியை ஐயைபோல் அலங்கரிக்கத் தொடங்கினர். எயினரிற் சிலர் அக்குமரியின் நெளிந்த கூந்தலைச் சடையாகப் பின்னி, அதனைப் பாம்பின் குட்டி போல் பொன்னுற் செய்த கயிறு கொண்டு கட்டினர்; அச்சடைமுடியில் பன்றியின் சிங்கப்பல்லை மூன்றும் பிறையெனச் சாத்தினர்; புலிப் பற்களை ஒழுங்கு பெறக் கோத்துத் தாலியாகச் சூட்டினர்; புலியின்தோலை மேகலையாக அணிந்தனர்; வலிய சிலையை வளைத்துக் கையிற் கொடுத்தனர். பிறகு, அக் குமரியைக் கலைமான் மீது ஏறியமரச் செய்தனர்.

இங்ஙனம் ஐயையின் வடிவாய் அலங்கரித்துக் கோயிலின்முன் நிறுத்தியதும், எயினர்கள் பூசை செய்யத் தொடங்கினர். அவர்கள் ஐயை தெய்வத்தின் முன் மயில், கிளி முதலியவற்றைக் காணிக்கையாக விட்டு, பறை, திருச்சின்னம், கொம்பு, குழல் முதலிய வாத்தியங்களை முழக்கி மணியோசை யெழுப்பி ஆரவாரம் ஏற்படச் செய்தனர்.

வேட்டுவப் பெண்கள் சந்தனம், பூ, எள்ளுருண்டை, தினைச்சோறு, அவரை, துவரை ஆகியவற்றின் புழுக்கல் முதலிய பொருள்களைக் கொண்டுவந்து ஐயை முன் னிலையில் வாழையிலை பரப்பிப் படைத்தனர். மணங் கமழ் புகை யெழுப்பி யாவரும் ஐயையின் அடிதொழுது வணங்கித் துதித்தனர். அப்பொழுது எயினர்கள்

தங்கள் பூசையை யேற்றுக்கொண்டு நலம்புரியவேண்டு மென்று கொற்றவையை வேண்டிக்கொண்டனர்.

தேவி, எயினரின் பூசையை ஏற்று மகிழ்ந்தவளாய்த் தேவராட்டிமேற் பொருந்தினாள். உடனே தேவராட்டி மருள்கொண்டு பேசத்தொடங்கி, கோயிலின் ஒரு புறத்தில் தன் கணவனோடிருந்த கண்ணகியைச் சுட்டிக் காட்டி, "இவளோ, கொங்கச் செல்வி! குடமலையாட்டி! தென்றமிழ்ப்பாவை! செய்தவக் கொழுந்து! ஒருமாமணியாய் உலகுக்கோங்கிய திருமாமணி!" என்று கூறினாள். யாவரும் வியப்புடன் கேட்டுக்கொண்டிருந்தனர்.

கண்ணகி, எயினர்கள் செய்யும் கொற்றவை வழிபாட்டைத் தொடக்கத்திலிருந்து கண்ணிமையாது பார்த்துக்கொண்டிருந்தாள். இவ்வழிபாடு, வழி நடந்து வந்த களைப்பால் வாடியிருந்த கண்ணகிக்கு இன்பக் காட்சியாய் இருந்தது. முடிவில் தேவராட்டி தன்னைச் சுட்டிக்காட்டிப் பேசிய மொழிகளைக் கேட்டதும் 'சாலினி தெய்வமால் கொண்டு கூறினள்' என்றெண்ணி நகைத்தாள். இனி தனக்கு வரக்கூடிய தெய்வப் பெருநிலையை ஐயை அருளினள் என்பதைக் கண்ணகி உணரவில்லை.

தேவராட்டியின்மேற் பொருந்திய கொற்றவை வேடர்களுக்கு வேண்டிய வரங்களை அருள, அவர்கள் அகமலர்ந்து களிப்பு மிகுந்து தத்தம் இருப்பிடம் சேர்ந்தனர். கொற்றவை வழிபாட்டுக் காட்சியைக் கண்டதால் களைப்பு நீங்கியிருந்த கண்ணகி, தன் கணவனுடன் எழுந்து புறப்படலானாள்.

## குறிப்பு

இது, இலக்கியம் பற்றிய பாடமாகும். இதில் கொற்றவை வழிபாட்டு நிகழ்ச்சி விவரிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி சிலப்பதிகாரம் என்னும் நூலில் உள்ளது. இந்நூலை இயற்றியவர் இளங்கோவடிகள்.

## கேள்விகள்

1. கோவலனும் கண்ணகியும் மதுரைக்குப் புறப்பட்டது ஏன் அவர்களுடன் பயணம் செய்தவர் யார்?
2. வழியிடையில் கோவலன் முதலியோர் எங்கே தங்கினர்?
3. கண்ணகி ஐயை கோயிலில் கண்ட காட்சி யாது?
4. எயினர்கள் கொற்றவை வழிபாட்டை எங்ஙனம் செய்தனர்?
5. தேவராட்டி கண்ணகியைக் குறித்துக் கூறியதென்ன?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—எயினர், கருதினர், பருகி, மன்று, ஆரவாரித்தாள், ஊர்தி, கலை, குன்றிவிட்டது, மேகலை, நிணம், புழுக்கல். (மாதிரி: — எயினர் = வேடர்)
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—திரண்ட, வாணிகம், துறவி, தேவராட்டி, (மாதிரி:—என்னிடம் திரண்ட செல்வம் இருக்கிறது.)

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—கற்பரசி, சிற்றூர், காற்புறம், பகற்பொழுது, தொண்டாற்றும், நிணச்சோறு, தென்றமிழ், அகமலர்ந்து, தத்தம். (மாதிரி:—கற்பு + அரசி = கற்பரசி)
2. பறவை — இது, பல பறவைகளுக்குப் பொதுவான பெயரானதால், பொதுப் பெயர் ஆகும். கிளி—இது ஒருவகைப் பறவைக்கே சிறப்பான பெயராகையால், சிறப்புப் பெயர் ஆகும். பின்வருவன என்ன பெயர்கள் என்று கூறுக:— மரம், மனிதர், கோவலன், ஊர், தென்னை, புலி, விலங்கு.

### III. வாக்கியப் பயிற்சி

1. எயினர் பூசை செய்தனர்—இது செய்வினை வாக்கியம் எனப்படும். எயினரால் பூசை செய்யப்பட்டது—இது செயப்பாட்டு வினை வாக்கியம் எனப்படும்.
2. செயப்பாட்டு வினை வாக்கியங்களாக மாற்றுக:—மாடு தண்ணீர் குடித்தது. கண்ணன் புத்தகம் படித்தான். நான் பந்து விளையாடினேன்.

### IV. கட்டுரைப் பயிற்சி

1. 'கொற்றவை வழிபாடு' என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.
2. ஐயைபோல் அலங்கரித்த செயலை வருணித்து எழுதுக.



# 2. மாணவர் ஆட்சி மன்றம்

என் பெயர் இராமலிங்கம். நான் இரண்டாம் படிவத்தில் கல்வி பயின்று வருகிறேன். நான் வெளியூரிலிருந்து வந்து கல்வி பயில்வதால் பள்ளியைச் சேர்ந்த மாணவர் விடுதியில் உணவு, உறைவிடம்பெற்று இருந்து வருகிறேன். என்னைப்போலவே பல படிவங்களில் கல்வி பயிலும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் விடுதியில் தங்கியிருக்கிறார்கள்.

எங்கள் விடுதியின் பொறுப்பாளர் ஒருநாள் மாலை எங்களையெல்லாம் விடுதிமன்றத்தில் கூடச்செய்து, "அன்புள்ள மாணவர்களே! இப்பொழுது இந்தியா குடியரசு நாடாய் விளங்குகிறது. அமரகவி பாரதியார் கூறியுள்ளபடி நாமனைவரும் இந்நாட்டு மன்னர் என்பதில் தடையில்லை. இருபத்தொரு வயது நிரம்பிய ஒவ்வொருவருக்கும் இந்த நாட்டையாளும் தகுதியுடையோரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையுண்டு. அதைத்தான் வாக்குரிமை என்கிறோம். மக்களிற் பெரும்பான்மையோரின் வாக்குரிமை பெற்றவர்களே மன்னர்போலிருந்து ஆட்சி

செய்து வருகிறார்கள். நாம் தகுந்தவர்களைத் தேர்ந்தெடுத்தால்தான் ஆட்சி நன்கு நடைபெறும். ஆட்சி நன்றாய் இருந்தால்தான் நாம் நலமடைய முடியும். ஆகையால், ஆட்சியில் திறமையுடையோர் பலர் பெருகவேண்டும்" என்று முதற்கண் முன்னுரையாகத் தெரிவித்தார்.

பின்னர், "மாணவர்களே! நீங்கள் இப்பொழுது இளைஞர்களாய் இருக்கிறீர்கள். ஆனால், நீங்கள்தாம் பிற்காலப் பெரியோர்கள் ஆவீர்கள். இப்பொழுது பிரதம மந்திரியாய் இருக்கும் ஜவஹர்லால் நேரு, ஒரு காலத்தில் கல்வி பயிலும் மாணவராய் இருந்தவர்தானே? ஆதலால் நீங்கள் இப் பருவத்திலேயே ஆட்சியில் கருத்தும், பணிபுரிவதில் பயிற்சியும் கொள்ளவேண்டும். நூற்றுக்கணக்காக இங்குக் குழுமியிருக்கும் நீங்கள் அனைவரும் பலவூரைச் சேர்ந்தவர்கள். ஆகையால், பலவூர்கள் சேர்ந்த நாடுபோல் இந்த விடுதி விளங்குகிறது. வெவ்வேறு குல, மதங்களையுடைய நீங்களனைவரும் ஒருதாய் வயிற்றிற் பிறந்த சகோதரர்கள்போல் ஒற்றுமையாய்க் கூடி வாழ்கிறீர்கள். ஆதலால், நீங்களே நாட்டு மக்களாய் இருக்கிறீர்கள். இங்ஙனம் வாழும் நீங்களே மாணவர் விடுதியைப் பொறுப்பேற்று நடத்த வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இதன் பொருட்டே உங்களை இங்குக் கூடும்படி செய்துள்ளேன். அப் பொறுப்பால் உங்களுக்கு ஆட்சியில் பயிற்சி ஏற்படும்; கடமையில் பற்றுண்டாகும்; குற்றங்குறைகளை யுணர்ந்து திருந்தும் அல்லது திருத்தும் மனப்பண்பு வளரும். நான் உங்கள் அலுவல்களை உடனிருந்து கண்காணித்து வருவேன்" என்று மாணவர் ஆட்சியைப்பற்றிக் குறிப்பிட்டார்.

அதன்பின், "மாணவர்களே! நீங்கள் அனைவரும் நமது ஆட்சி மன்றத்தின் உறுப்பினர்களாவீர்கள். உறுப்பினர்களாகிய உங்களுக்குள் பத்து அமைச்சர்களையும் பத்து அவைச்செயலர்களையும், தலைவர் ஒருவர், துணைத் தலைவர் ஒருவர் ஆகிய இருவரையும் நீங்கள்

தேர்ந்தெடுக்கவேண்டும். ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு துறையில் பணியாற்றும் பொறுப்புடையவராவார். அவைச்செயலர் அமைச்சருக்குத் துணைபுரிபவராவார். ஆகவே ஒவ்வொரு துறையிலும் இரண்டிரண்டு பேர் கூடிப் பணிசெய்வர். தலைவர், துணைத் தலைவர் இருவரும் மன்றம் கூடும்பொழுது தலைமைதாங்கி இவர் பணிகளின் குறைநிறைகளை ஆராய்ந்து கூறுவர் ; திட்டங்கள் அமைக்கத் துணைசெய்வர். அமைச்சர்கள் பணியாற்றும் துறைகள் ஒழுக்கம், கல்வி, பொதுநலம், உடற்பயிற்சி, விளம்பரம், கருவூலம், பொதுப்பணி, உட்பொறுப்பு, வேளாண்மை, சட்டம் என்பனவாகும். நாளைய தினம் தேர்தல் நடைபெறும்" என்று கூறி முடித்தார். நாங்கள் மகிழ்வுடன் கலைந்து சென்றோம்.

மறுநாள் குறிப்பிட்ட வேளையில் தேர்தல் நடைபெற்றது. ஒவ்வொரு பதவிக்கும் சிற்சிலர் போட்டியிட்டதால் வெளியுலகில் நடைபெறுவதுபோலவே தேர்தல்முறை கையாளப்பெற்றது. விடுதிப் பொறுப்பாளரின் மேற்பார்வையில் மாணவர்களே இத் தேர்தலை நடத்தினர். உறுப்பினர், தேர்வுச் சீட்டில் தமக்கு விருப்பமானவரின் பெயருக்கெதிரில் × இக் குறியையிட்டுத் தேர்வுப் பெட்டியில் இட்டனர். பின்னர், தேர்வுச் சீட்டுகள் கணக்கிடப்பட்டு முடிவு தெரிவிக்கப்பட்டது. இத்தேர்தல் போட்டியில் நானும் கலந்து கொண்டதால் அமைச்சனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

ஆட்சி மன்றத்தாராகிய நாங்கள் அடிக்கடி கூடி விடுதியின் செயல்களைக் குறித்து ஆராய்ந்து பலவகை முடிவுகளைச் செய்கிறோம் ; அவைகளை நடைமுறையில் நிறைவேற்ற முயல்கிறோம். ஒழுக்க அமைச்சர், மாணவர்களின் நல்லொழுக்கநெறியின் நலங்களைக் கருத்துடன் பாதுகாக்கிறார் ; கல்வி அமைச்சர், காலை இரவு வேளைகளில் யாவரும் கல்வியில் கருத்தூன்றும்படி கண்காணிக்கிறார் ; அன்றியும், திங்கள் இதழ், கிழமையிதழ், நாள்தாள் முதலியவற்றில் மாணவர்களுக்கு ஏற்றவற்றை

வரவழைத்து மாணவர்கள் மாலையில் படிக்கும்படி பணியாற்றுகிறார்; நலத்துறையமைச்சர், விடுதியில் மாணவர்களுக்கு நோய் ஏற்படா வண்ணம் பார்த்துக்கொள்கிறார்; ஏற்பட்டால் மருத்துவ உதவிபெறச் செய்கிறார்: உடற்பயிற்சி அமைச்சர், பலவகைப் பயிற்சிகளிலும், விளையாட்டுக்களிலும் மாணவர்கள் ஈடுபடும்படி இயக்குகிறார்; விளம்பர அமைச்சர், வெளியுலகில் நிகழும் சிறப்பு நிகழ்ச்சிகளை யாவருமறியச் செய்கிறார்; கருவூல அமைச்சர், மாணவர்களுடைய பொருள்களின் காவலராயிருக்கிறார்; பொதுப்பணி யமைச்சர், விடுதியின் பொதுப்பணிகளைக் கவனிக்கிறார். வேளாண்மை யமைச்சர், விடுதியைச் சேர்ந்த பயிர்ப் பண்ணையில் காய்கறி முதலியவை பயிராகும்படி பணியாற்றுகிறார்; உட்பொறுப்பு அமைச்சர், சமையலறை, பண்டசாலை முதலியவைகளைப் பார்த்துக்கொள்கிறார். சட்ட அமைச்சனாகிய நான் எல்லா அமைச்சர்களுக்கும் துணையாயிருக்கிறேன்.

இங்ஙனம் நாங்கள் ஆட்சிமன்றம் நிறுவிப் பலவகை ஆட்சிப் பணிகளைச் செய்துவருவதால், பொறுப்புணர்ச்சி, பொதுநலக் கருத்து, ஆட்சித் திறமை முதலியவை வளர்ந்து முன்னேறுகிறோம். இதனால் குடியரசு இந்தியாவில் நற்குடிமக்களாய், நல்லாட்சி புரிவோராய் விளங்குவோம் என்பதில் தடையில்லை.

## குறிப்பு

இது, மாணவரிடையே ஆட்சிப் பொறுப்புக்குரிய பயிற்சி ஏற்படவேண்டுமென்னும் கருத்தை விளக்கும் பாடமாகும். இதில், வாலாஜாபாக் வள்ளலார் மாணவர் இல்லத்தின் நிகழ்ச்சி முறை தழுவப்பட்டுள்ளது. தலைப்பிலுள்ளது, அவ்வில்லத்து ஆட்சி மன்றத்தின் படமாகும்.

## கேள்விகள்

1. விடுதியின் பொறுப்பாளர் ஆட்சியைப்பற்றி அறிவித்தது என்ன?

2. அவர் மாணவர் ஆட்சியைப் பற்றி என்ன தெரிவித்தார்?
3. ஆட்சிமன்ற அமைப்பைக் குறித்துப் பொறுப்பாளர் கூறியது என்ன?
4. ஆட்சி மன்றத் தேர்தல் எவ்வாறு நடந்தது?
5. ஆட்சி மன்றத்தார் யாவர்? அவர்களின் பணிகள் யாவை?
6. ஆட்சி மன்றத்தால் ஏற்படும் நன்மை என்ன?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—உறைவிடம், மன்றம், உரிமை, குழுமி, பற்று, உறுப்பினர், பணி, கருவூலம், சிறுவி.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—விடுதி, பொறுப்பாளர், கண்காணித்து, ஈடுபடும்படி.

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—வெளியூர், குடியரசு, வாக்குரிமை, நல்லொழுக்கம், உட்பொறுப்பு.
2. எதிர்ச் சொற்கள் கூறுக:—நலம், ஒற்றுமை, நல்லொழுக்கம், உட்பொறுப்பு, (மாதிரி:—நலம் × தீது.)

### III. வாக்கியப் பயிற்சி

1. கண்ணன் தண்ணீர் குடித்தான்.—இவ்வாக்கியத்திலுள்ள 'கண்ணன்' என்னும் எழுவாய்க்குப் பதிலாக, கமலம், மனிதர்கள், மாடு, ஆடுகள் என்னும் எழுவாய்களைத் தனித் தனியே வைத்து எழுதுக.
2. நான் திருக்குறள் படித்தேன்.—இது, செய்திவாக்கியம்; நாள்தோறும் படி.—இது, கட்டளைவாக்கியம்; நீ படித்தாயா?—இது, வினாவாக்கியம்; இச்சோலை என்ன அழகு!—இது, உணர்ச்சிவாக்கியம். இவ்வாறு வாக்கியம் நான்கு வகைப்படும்.

### IV. கட்டுரைப் பயிற்சி

1. 'மாணவர் ஆட்சி மன்றம்' என்னும் தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.
2. நீங்கள் பார்த்தறிந்த ஒரு இல்லத்தின் மாணவர் ஆட்சியைப் பற்றி எழுதுக.

# 3. தமிழகம்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், வேங்கட மலைக்குத் தெற்கிலமைந்த நிலப்பகுதியில் வாழ்ந்திருந்த மக்களனைவரும் தமிழ் மொழி பேசி வந்தனர். ஆகையால் இவர்கள் தமிழர் என்று குறிக்கப்பெற்றனர். தமிழர் வாழ்ந்திருந்த இந்நிலப் பகுதி தமிழ் நாடு என்றும், தமிழகம் என்றும் வழங்கப்பெற்றது. அப்பொழுது வடக்கில் வேங்கட மலையும், தெற்கில் கன்னியா குமரியும், கிழக்கிலும், மேற்கிலும் முறையே வங்கக் கடலும் அரபிக் கடலும் நான்கு எல்லைகளாய் இருந்தன.




தமிழகம்

'வடவேங்கடம் தென் குமரி, ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' என்று ஆசிரியர் பனம்பாரனார் பழந் தமிழகத்தின் எல்லையைக் குறித்துள்ளார்.

இத் தமிழகம் முற்காலத்தில் சேர, சோழ, பாண்டிய நாடுகளென்று மூன்று பிரிவுகளையுடையதாய் விளங்கியது. அக்காலத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் செங்கோல் செலுத்திச் சிறப்புற விளங்கிவந்ததால் நாட்டு மக்கள் யாவரும் கல்வி, கலை, தொழில், வாணிகம், விவசாயம் முதலியவற்றில் வளம்பெற்று மகிழ்ந்து வாழ்ந்து வந்தனர்.

சேர நாட்டில் வஞ்சி என்பது தலைநகரமாய் விளங்கியது; முசிறி, தொண்டி என்பவை துறைமுகப் பட்டினங்களாய் விளங்கின. இவ்விடங்களிலிருந்து மிளகு, யானைத் தந்தம், மயில் தோகை, முதலிய பல வகைப் பண்டங்கள் மரக்கலங்களில் அயல் நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. சேர மன்னர்கள் பலர் சிறந்த வீரர்களாய் விளங்கினர். செங்குட்டுவன் வடநாடு சென்று வெற்றி வீரனாய்த் திரும்பிவந்து கண்ணகிக்குக் கோயிலெடுத்து வழிபட்டசெய்தி யாவருமறிந்ததாகும்.

சோழ நாட்டில் உறையூர், காவிரிப்பூம்பட்டினம் ஆகியவை தலைநகரங்களாய் விளங்கின. காவிரிப்பூம் பட்டினம் கடற்கரையில் அமைந்திருந்ததால் சிறந்த துறைமுகப்பட்டினமாய்த் திகழ்ந்திருந்தது. இத் துறைமுகத்தின் பெருமை, பத்துப் பாட்டிலுள்ள பட்டினப் பாலையால் நன்கறியலாம். இங்கு இடையறாது ஏற்றுமதியும் இறக்குமதியும் நடைபெற்று வந்தன. மரக்கலம் செலுத்துவோர்க்கு வழியறிவிக்கும் கலங்கரை விளக்கம் இந்நகரின் கடற்கரையில் இருந்தது. நாகப்பட்டினம் இப்பொழுது கப்பல் துறைமுகமாய் விளங்கி வருகிறது. சோழ மன்னர்களில் திருமாவளவன் என்னும் கரிகாலன் பெரும் புகழ்பெற்றவனாவான். இவன் வீரம் மிகுந்தவனாய் விளங்கி முறையுடன் ஆட்சி புரிந்துவந்ததோடு இசை, நடனம் முதலிய கலைகளையும் வளர்த்துவந்தான்.

பாண்டிய நாட்டின் தலைநகரம் மதுரையும் கொற்கையும் ஆகும். இவற்றில் கொற்கை துறைமுகப் பட்டினமாய் விளங்கியது. பாண்டிய மன்னர்கள் செந்தமிழ் வளர்த்த சிறப்புடையவர்கள். இவர்கள் முச்சங்கம் நிறுவி முதுதமிழ் போற்றிய பெருமையை இறையனார் அகப்பொருள்உரை விளக்கமாய் எடுத்துரைக்கிறது. சங்க இலக்கியங்கள் என்று பெருமையுடன் குறிக்கப்பெறும் பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் பாண்டிய மன்னர் ஆதரித்து வளர்த்த தமிழ்ச் சங்கப்

புலவர்கள் தொகுத்தவையேயாகும். பாண்டிய மன்னரில் நெடுஞ்செழியன் முதலியோர் புகழ்பெற்றவர்களாவர்.

இத்தகைய தமிழகத்தில் காவிரி, வைகை, தாமிரபரணி, பேரியாறு, பெண்ணையாறு, பாலாறு முதலிய ஆறுகள் நீர் பெருகியோடி நிலவளத்தைப் பெருக்கி வந்தன. ஆகையால், மக்கள் வாழ்வுக்கு இன்றியமையாத உணவுப் பொருள்கள் மிகுதியாய் விளைந்து செல்வம் கொழிக்கும் நாடாய்த் திகழச் செய்துவந்தன.

நாட்டுப் பரப்பில் மிக விரிந்திருந்த இத் தமிழகம் இப்பொழுது சுருங்கிய அளவில் இருக்கிறது. இதற்குக் காரணம் சேரநாடு கேரளமானதும், ஆந்திரம் தனியானதுமாகும். வடக்கெல்லையாகிய வேங்கடம் ஆந்திர இராச்சியத்தில் சேர்ந்துள்ளது. தெற்கெல்லையாகிய குமரிமுனை திருவாங்கூர் இராச்சியத்தில் சேர்ந்து இருந்துவருகிறது. ஆகவே, இக்காலத் தமிழகம் பதினொரு மாவட்டங்களின் அளவில் சுருங்கிவிட்டது. ஆயினும், இந்தியாவிலுள்ள மூன்று பெரிய நகரங்களில் ஒன்றான சென்னையைத் தனக்குரிய தலைநகராகக்கொண்டு விளங்குவது, தமிழகத்தார் பெருமைப்படக்கூடியதாகும்.

தமிழகம் பழமைபோல் தமிழரசு நாடாய் விளங்க வேண்டும். தமிழ் மொழி வளர்ந்து பலவகைக் கலை நூல்கள் பெருகி உயர்வடையவேண்டும். தமிழ் மக்கள் அறிவு, கலை, தொழில், வாணிகம், விவசாயம் முதலிய எல்லாத் துறைகளிலும் ஏற்றம்பெற்று வல்லுநர்களாய் ஒளிரவேண்டும். இந்நலங்கள் ஏற்பட்டால் குறுகிய நிலப்பரப்புள்ள தமிழகம் குபேர நாடாய்ப் பொலிவு பெறுமென்பதில் ஐயமில்லை.

## குறிப்பு

இது, வரலாறு பற்றிய பாடமாகும். இதில், பழந்தமிழகத்தின் உயர்வும் இக்கால நிலையும் ஓரளவு உணர்த்தப்பட்டுள்ளன.

## கேள்விகள்

1. தமிழ் நாட்டின் நான்கெல்லைகள் யாவை?
2. பழந்தமிழகத்தின் சிறப்பென்ன?
3. சேர, சோழ, பாண்டிய நாடுகளின் பெருமைகள் யாவை?
4. தமிழகத்தின் துறைமுகப்பட்டினங்கள் யாவை?
5. தமிழகத்து ஆறுகள் யாவை? அவற்றால் தமிழகமடைந்த சிறப்பு யாது?
6. தமிழகத்தின் இக்கால நிலை யாது? தமிழகம் ஏற்றம் பெற என்ன செய்யவேண்டும்?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—நிறுவி, கொழிக்கும், பரப்பு, ஏற்றம், பொலிவு, வாணிகம்.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—தலைநகர், செங்கோல், அயல்நாடு, துறைமுகம், தமிழரசு.

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—நிலப்பகுதி, தென்குமரி, பழந்தமிழ், செந்தமிழ், அகப்பொருள், முச்சங்கம், முதுதமிழ், நாட்டுப்பரப்பு.
2. நிலம், நீர்—இப்பெயர்களுக்குக் காரணம் விளங்கவில்லை. ஆகையால் இவை இடுகுறிப் பெயர் ஆகும். நாற்காலி—இது 'நான்கு கால்களையுடையது' என்று காரணந்தெரிவதால், காரணப் பெயர் ஆகும்.
3. பின்வரும் இடுகுறி, காரணப் பெயர்களைத் தெரிவிக்க: பறவை, செருப்பு, முன்னி, வளையல், காற்று.

### III. கட்டுரைப் பயிற்சி

தமிழ்நாட்டின் சிறப்பு' என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.

2. உங்கள் ஊரின் சிறப்பைப்பற்றி விவரித்து எழுதுக.

# 4. நாமக்கல் கவிஞர்

இக்காலக் கவிஞர்களில் சிறந்து விளங்குவோர் சிலர். அவர்களில் 'காந்தியக் கவிஞர்' என்றும், 'அரசவைக் கவிஞர்' என்றும் புகழ்ந்து போற்றப்படும் நாமக்கல் கவிஞர் ஒருவராவார். இவர் பெயர் வே. இராமலிங்கம் பிள்ளை என்பதாகும். இவர் சேலம் மாவட்டத்திலுள்ள நாமக்கல் என்னும் ஊரில் வாழ்ந்து வருவதால், 'நாமக்கல் கவிஞர்' என்று குறிக்கப்படுகிறார்.



வே. இராமலிங்கம் பிள்ளை

நாமக்கல் கவிஞர் நாமக்கல்லுக்கு அருகிலுள்ள மோகனூர் என்ற ஊரில், 1888-ஆம் ஆண்டு, அக்டோபர், 19-ஆம் நாள் பிறந்தார். இவரது தந்தை வேங்கடராம பிள்ளை. கவிஞர் இளம் பருவத்தில் உயர்நிலைக் கல்வி பயின்று தேர்ச்சிபெற்றதும், திருச்சிராப்பள்ளியிலிருந்த எஸ். பி. ஜி. கல்லூரியிற் சேர்ந்து எப். ஏ. வகுப்பில் பயின்று வந்தார். இடையில் கல்லூரிப் படிப்பைக் கைவிட நேர்ந்தது.

கவிஞர் இளம்பருவத்திலேயே கவிபாடும் திறமை பெற்று விளங்கினார். கல்விபயிலுங் காலத்தில் கவியியற்றுவதில் ஆர்வங்கொண்டு பல பாடல்களைப் பாடி மகிழலானார். இவருக்கு ஓவியம் தீட்டுவதிலும் திறமையிருந்தது. ஆகவே, கவியியற்றுதல், ஓவியம் தீட்டுதல் ஆகிய இருகலைகளிலும் கருத்தூன்றி இடையறா முயற்சியுடன் ஈடுபட்டு வந்தார். இவ் விடா முயற்சியே இவரை

மேன்மையான நிலையில் விளங்கச் செய்துள்ளது எனலாம்.

உலகம் போற்றும் உத்தமராகிய காந்தியண்ணல், இந்தியச் சுதந்தரப் போராட்டத்தைக் கிளர்ச்சியுடன் நடத்தியபொழுது, கவிஞரின் மனம் அதில் ஈடுபட்டது. நாடு விடுதலை பெற்றுச் சுதந்தரம் பெறவேண்டுமென்னும் ஆவல் கவிஞரின் உள்ளத்தில் கிளர்ந்தெழுந்தது. ஆகையால், இவர் காங்கிரஸ் பேரவையில் சேர்ந்து தொண்டாற்றத் துணிந்தார். காந்தியடிகளின் சுதந்தர உணர்ச்சி மிகுந்த சொற்பொழிவுகளைப் பத்திரிகைகளில் தவருது படித்துவந்த இவர், காந்தியடிகளிடம் பேரன்பு கொண்டார். அதனுல் காந்தியடிகளின் மொழிகளைப் பொன்னெனப் போற்றி யொழுகினர்; அம்மொழிகளைக் கவிகளில் அமைத்துப் பாடினர்.

இந்தியச் சுதந்தரப் போராட்ட வரலாற்றில் சிறப்பாகக் குறிக்கத்தகும் உப்பளப்போர், 1930-ஆம் ஆண்டில் காந்தியடிகளால் தொடங்கப்பட்டது. அப்பொழுது கவிஞர் 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது, சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சாருவீர்!' என்னும் பாடலைப் பாடினர். வேதாரணியம் உப்பளப் போரில் ஈடுபட்ட தமிழ் நாட்டுத் தொண்டர்கள் இப் பாடலை உள்ளக் கிளர்ச்சியுடன் பாடிக்கொண்டு பல ஊர்களின் வழியே அணிவகுத்துச் சென்ருர்கள். அதனுல், இப்பாடல் மிகுந்த புகழ்பெற்றுக் கவிஞரை யாவரும் அறியச் செய்தது.

கவிஞரின் புகழ் நாடெங்கும் பரவவே, இவரை எல்லோரும் பாராட்டலாயினர். அதனுல், களிப்பும் ஊக்கமும் கொண்ட கவிஞர், எண்ணிறந்த பாடல்களைப் பாடிப் பத்திரிகைகள் பலவற்றில் வெளியிட்டுவரலானர். அவையெல்லாம் இப்பொழுது பல நூல்களின் உருக்கொண்டு வெளிவந்துள்ளன. அவை சங்கொலி, காந்தியஞ்சலி, தமிழன் இதயம் முதலியனவாம்.

பின்னர் இவர் இயற்றிய அவளும் அவனும் என்னும் காவிய நூல் முதலியனவும் வெளிவந்துள்ளன.

கவிஞர் உரைநடையிலும் பல நூல்களை இயற்றியுள்ளார். அவை இலக்கிய இன்பம், மலைக் கள்ளன், என் கதை முதலியனவாம். இலக்கிய இன்பம் என்பது, தமிழ்ச்சுவை நிரம்பிய கட்டுரை நூலாகும். மலைக் கள்ளன் என்பது, நவீன கதையாகும். என் கதை என்பது, கவிஞரின் சுய சரிதையாகும்.

கவிஞரின் பாடல்கள், எளிமையும் இனிமையும் உடையவை; அருங்கருத்துக்கள் நிறைந்தவை; உணர்ச்சிப் பெருக்கும் ஓசை நயமும் பொருந்தியவை; அடுக்கு மொழிகளும் அழகிய வருணனைகளும் அமைந்தவை; மிடுக்கு நடையும் மேன்மைப் பொருளும் கொண்டவை. இத்தகைய பாடல்களை இளைஞர்களும் படித்து மகிழலாம்.

கவிஞரின் பெருமையையறிந்த சென்னை அரசியலார், இவருக்கு 'அரசவைக் கவிஞர்' என்னும் தகுதியையளித்துப் போற்றினர். இங்ஙனம் பெருமைபெற்ற கவிஞரைத் தமிழக அன்பர்கள் பலரும் மகிழ்வுடன் கொண்டாடினர்

எளிய குடும்பத்தில் பிறந்த கவிஞர், தமிழ்மொழியில் பெரும்பற்றுடையவராய் விடாது முயன்றுவந்ததால், யாவரும் போற்றும் பெருநிலையில் விளங்குகிறார். அன்பு, அடக்கம், அமைதி முதலிய அரும் பண்புகள் நிறைந்த கவிஞர், தமிழன்னைக்குப் புகழ்சிறந்த பாமாலைகள் சூட்டி மகிழ்ந்து பல்லாண்டு வாழ்வாராக!

## குறிப்பு

இது, வாழ்க்கை வரலாறு பற்றிய பாடமாகும். இதில், நாமக்கல் கவிஞரின் வரலாறு, பெருமை, நூல்கள் முதலியவை சுருக்கமாய்த் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## கேள்விகள்

1. நாமக்கல் கவிஞர் என்பவர் யார்? இவருக்குள்ள புகழ்ப் பெயர்கள் யாவை? இப்பெயர்கள் ஏற்படக் காரணங்கள் யாவை?
2. நாமக்கல் கவிஞரின் வரலாற்றைக் கூறுக.
3. கவிஞருக்கு எதனால் புகழ் ஏற்பட்டது?
4. கவிஞர் இயற்றியுள்ள நூல்கள் யாவை?
5. கவிஞர் பாடலின் சிறப்பென்ன?
6. கவிஞரின் அரும்பண்புகள் யாவை?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—ஆர்வம், தீட்டுதல், அண்ணல், தொண்டு, சாருவீர், காவியம், அமைதி.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—கல்லூரி, சொற்பொழிவு, சுயசரிதை, பற்று, தமிழன்னை, பல்லாண்டு.

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—அரசவை, இளம்பருவம், கிளர்ந்தெழுந்தது, பேரவை, பொன்னென, உப்பளப்போர், சங்கொலி.
2. காடு + விடுதலை = காட்டுவிடுதலை. இவ்வாறு பின் வருவனவற்றைச் சேர்த்துக்கூறுக:—ஆடு + கால்; வயிறு + வலி; காடு + பன்றி; கயிறு + கட்டில்.

### III. வாக்கியப் பயிற்சி

1. நாயும் பன்றியும் சண்டையிட்டது—இது பிழையுள்ள வாக்கியம். 'நாயும் பன்றியும்' என்பது பன்மையாய் இருப்பதால், 'சண்டையிட்டன' என்று எழுதுவது தான் சரியாகும்.
2. பிழைகளைத் திருத்தி எழுதுக:—
   (1) வாழை மரங்கள் வரிசையாய் வளர்கிறது.
   (2) செடிகள் குட்டையாய் இருக்கிறது.
   (3) பாலும் சர்க்கரையும் இனிப்பானது.

### IV. கட்டுரைப் பயிற்சி

1. நாமக்கல் கவிஞர் வரலாற்றைச் சுருக்கி எழுதுக.
2. இவர் தன் வரலாற்றைத் தானே கூறுவதுபோல் எழுதுக.

---

# 5. கைத்தொழில்

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் ;
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் ;
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருந்திடல் உனக்கே சரியாமோ ? 1

உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் நடவாது ;
விழவும் கலையும் விருந்துகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ ? 2

நெசவுக் காரர்கள் நெய்யாமல்
நிலத்தவர் உடைக்கென் செய்திடுவார் ?
குயவர் செய்திடும் பாண்டமன்றோ
குடித்தனம் நடத்திட வேண்டுமென்றும் ? 3

கொல்லரும் தச்சரும் கூடாமல்
கூடமும் மாடமும் வீடாமோ ?
கல்லடி சிற்பியும் தச்சருமே
காரியம் பலவினுக் கச்சாணி. 4

சலவை சவரம் செய்தாலும்
சாக்கடை கழுவுதல் செய்தாலும்
உலகுக் கதனால் உபகாரம்
ஒன்றும் தெரியார் வெறும்பாரம் 5

ஏழை செல்வன் என்றுவரும்
எல்லாப் பிணக்கும் நின்றுவிடும் ;
வாழிய வாழிய கைத்தொழில்கள்
வாழி நித்திய சத்தியமும். 6

—நாமக்கல் கவிஞர்

# 6. 'நான் கண்ட மேட்டூர் அணை'

திருச்சிராப்பள்ளி,
14—10—**.

அன்புமிக்க நண்ப,

நலம். நலமறிய அவா. சென்ற வாரம் நான் நேரிற் கண்டு களித்து வந்த மேட்டூர் அணையின் விவரங்களை இக்கடிதத்தின் வாயிலாக உனக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எங்கள் பள்ளிக்கூட மாணவர் மன்றத்தின் உறுப்பினர்கள் கூடி மேட்டூர் அணைக்குக் கேளிக்கைப் பயணம் செய்வதென முடிவு செய்தனர். அதன்படி பயணத்திட்டம் வகுத்துச் சென்று வந்தனர். அப் பயணத்தில் ஐம்பது மாணவர்கள் கலந்துகொண்டனர். அவர்களில் நானும் ஒருவன். இரண்டு ஆசிரியர்கள் துணை புரிந்தனர். நான் மேட்டூர் அணையை நேரிற் பார்த்து மகிழ்ந்து அறிந்த விவரங்களை யெல்லாம் குறிப்பாக எழுதிக்கொண்டதோடு ஆசிரியர் அறிவித்த செய்திகளையும் குறித்துக்கொண்டு வந்தேன். அக் குறிப்புக்களின் துணைக்கொண்டே இக்கடிதத்தை எழுதுகிறேன்.

சோழநாட்டிற்கு மேற்கே பெரிய நீர்த்தேக்கம் நிறுவினால் மிகுந்த பயன் விளையுமென்று அறிஞர்கள் கருதினார்கள். மேட்டூருக்கு அருகில் இருமலைகளுக்கு இடையில் காவிரியாறு பாய்ந்து வருகிறது. அம்மலைகள் காவிரியின் இரு கரைகள்போல் அமைந்திருப்பதால், அணையேற்படுத்துவதற்கு ஏற்ற இடம் அதுவே யென்று கண்டனர். அணை யேற்பட்டால் சோழநாட்டின் உழவுத் தொழில் பெருகிச் செழிக்குமென்றும் உறுதி செய்தனர். 1925-ஆம் ஆண்டு, ஜுலை, 20-ஆம் நாள் அணைகட்டும் வேலை தொடங்கப்பெற்றது. மூன்று ஆண்டுகளில் முன்

னேற்பாடுகள் முடிந்த பிறகு, 1928-ஆம் ஆண்டில் அணையின் வேலை தொடங்கி, ஆறு ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பெற்றது. 1934-ஆம் ஆண்டு, ஆகஸ்டு, 21-ஆம் நாள், சென்னையில் அப்பொழுதிருந்த கவர்னர் அணையைத் திறந்து வைத்தார். இவ்வணை கட்டி முடிக்க 450 லட்சம் ரூபாய் செலவாயிற்று எனத் தெரிகிறது.



மேட்டூர் அணை

மேட்டூர் அணையின் நீளம் 5,300 அடிகள்; உயரம் 176 அடிகள்; மேற்புறத்தின் அகலம் $20\frac{1}{2}$ அடிகள். இதன் இருபுறத்திலும் கைப்பிடிச் சுவர்கள் இருக்கின்றன. நீர்த்தேக்கம் 60 சதுரமைல் பரப்புள்ளது. 33 மைல் தூரம் நீர் எதிர்த்துத் தேங்கியுள்ளது. இதன் மிகுந்த ஆழம் 165 அடிகளாகும்.

இவ்வணையில், நீர்ப்போக்கை ஒழுங்குபடுத்துவதற்கு எண்பதுக்கு? எஃகினாலாகிய பெரிய மதகுக் கதவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அணையின் உயர்ந்த நீர்மட்டம், கடல் மட்டத்திலிருந்து 790 அடிகளாம். ஆகையால் 770,

720, 670 அடிகள் உயரங்களில் மூன்று வரிசை மதகுகள் இருக்கின்றன. மூன்று வரிசையிலும் முறையே 16, 8, 5 மதகுகள் உண்டு. மதகுக் கதவுகள் மின்சாரத்தின்



துணையால் இயக்கப்படுகின்றன. இன்னும் இவ்வணையில் கசிவுநீர்ச் சுரங்கம், கசிவுநீர்க் கால்வாய் முதலியவை அமைக்கப்பெற்றுப் பல வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வணை ஏற்பட்டபிறகு சிறிய ஊராயிருந்த மேட்டூர் பெரிய நகரமாய் மாறியுள்ளதென்று எங்கள் ஆசிரியர் தெரிவித்தார்.

இவ்வணை சிறப்புற நிறைவேறியதற்கு அறிகுறியாக, இதனருகில் ஒரு நினைவுக்குறியாய் ஒரு கட்டிடம் நிறுவப்பெற்றுள்ளது. இது ஒரு குன்றின்மேல் எண்கோண வடிவத்தில் அமைந்துள்ளது. சுவர்களில் அணையின் உருவப்படமும், விவரக் குறிப்புக்களும் வரையப் பெற்றுள்ளன. இங்கிருந்து பார்த்தால் அணையும், நீர்த் தேக்கமும் கண்கொள்ளாக் காட்சியாய் அழகுற விளங்குகின்றன. அணையின் மறுபுறத்தில் பெரிய பூஞ்சோலையமைந்து, இன்பக்காட்சி வழங்குகிறது.

மேட்டூர் அணை ஏற்பட்டபிறகு ஏராளமான நிலங்கள் பயிர் செய்வதற்குரிய வளம் பெற்று உணவுப் பொருள் முதலியவை விளைந்து வருகின்றனவாம். சிறப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் மூன்று லட்சம் ஏக்கருக்கு மேலாகப் புதிய நிலங்கள், நெற்பயிர் முதலியவை விளையும் நீர்வளத்தைப் பெற்றுள்ளனவாம்.

மேட்டூர் நீர்த்தேக்கத்தில் மின்சார உற்பத்தி நிலையம் அமைந்துள்ளது உனக்குத் தெரியும். இதன் உதவியால் நூல் ஆலை முதலிய பலவகைத் தொழிற்சாலைகள் நடைபெறுவதும் நீ அறிந்ததே. மேட்டூரில் நெசவுத் தொழிற்சாலை, வனஸ்பதி தொழிற்சாலை முதலியவை யுள்ளன.

நான், உலகப் புகழ்பெற்ற மேட்டூர் அணையைப் பார்த்துவந்ததிலிருந்து, இது போன்று காணத்தகுந்த பலவிடங்களையும் பார்த்து மகிழ வேண்டுமென்ற ஆவல் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. சென்னையிலுள்ள நீ, உன் பள்ளியின் கேளிக்கைப் பயணத்தில் கலந்துகொண்டு பலவிடங்களைப் பார்த்து வந்திருப்பாயே. நீ பார்த்தறிந்த புதுமைகளைக் கடிதத்தின் வாயிலாகத் தெரிவிக்கிறாயா?

## குறிப்பு

இது, மேட்டூர் அணையின் விவரத்தைக் கடிதமுறையில் தெரிவிக்கும் பாடமாகும். இதில் அணையின் அமைப்பு, பயன் முதலியவை தெரிவிக்கப்பட்டுள்ளன.

## கேள்விகள்

1. மேட்டூரில் அணைகட்டத் திட்டமிட்டது ஏன்? இவ்வணை எங்கு அமைந்துள்ளது? எப்பொழுது ஏற்பட்டது?
2. மேட்டூர் அணையின் அமைப்பு விவரத்தைத் தெரிவிக்க.
3. மேட்டூர் அணையின் நீர்ப்போக்கை ஒழுங்குபடுத்தச் செய்துள்ள ஏற்பாடு யாது?
4. மேட்டூர் அணையால் ஏற்பட்டுள்ள பயன் என்ன?
5. மேட்டூரில் காணும் பிற காட்சிகள் யாவை?

## பயிற்சி

### மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக :—பயணம், மதகு, இயக்கப்படுகின்றன, நிறுவப்பெற்றுள்ளது.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக :—வாயிலாக, கேளிக்கைப்பயணம், நீர்த்தேக்கம், எஃகு, வசதி.

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக :—பரப்புள்ளது, எண்கோணம், உருவப்படம், பூஞ்சோலை.
2. இப்பாடத்திலிருந்து வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் ஆகியவற்றிற்கு இரண்டிரண்டு உதாரணங்கள் கூறுக.

### III. வாக்கியப் பயிற்சி

1. மேட்டூர் அணை மிகவும் பெரியது.—இது செய்தி வாக்கியம். நீ மேட்டூர் அணையைப்பார்.—இது கட்டளை வாக்கியம். நீ மேட்டூர் அணையைப் பார்த்தாயா ?—இது வினா வாக்கியம். மேட்டூர் அணை எவ்வளவு பெரியது !—இது உணர்ச்சி வாக்கியம்.
2. பின் வருவன இன்னின்ன வாக்கியங்கள் என்று தெரிவிக்க.

    (1) முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்
    (2) இப்பட்டாடை எவ்வளவு பளபளப்பு
    (3) நீங்கள் எப்பொழுது ஊரிலிருந்து வந்தீர்கள்
    (4) ஒற்றுமையே வலிமையாகும்
    (5) ஐயா எங்கள் கூட்டத்திற்குத் தாங்கள் வருக
    (6) திருடன், திருடன் ஓடி வாருங்கள்
    (7) விடுமுறை காலில் வெளியூருக்குப் போனீர்களா
    (8) காவிரி எவ்வளவு பெரிய ஆறு
    (9) ஆ இச்சோலை மிக அழகாய் இருக்கிறது
    (10) காந்தியடிகள் உலகில் சிறந்த பெரியார்

### IV. கட்டுரைப் பயிற்சி

1. மேட்டூர் அணை தன் வரலாற்றைக் கூறுவதுபோல் எழுதுக.
2. 'அணையின் பயன்' என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.

# 7. தாமஸ் ஆல்வா எடிசன்

இக்காலத்தில், விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாக எத்தனையோ புதுமையான கருவிகளெல்லாம் கண்டு பிடிக்கப்பட்டு, அவற்றால் மக்கள் வாழ்வு மலர்ச்சிபெற்று வருகிறது. இத்தகைய வியத்தகு கருவிகளைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகளில், **தாமஸ் ஆல்வா எடிசன்** என்பவர் தலைசிறந்து விளங்குகிறார். இவர் கண்டுபிடித்த பேசும் படக்காட்சி, மின்சார விளக்கு, மின்சார விசிறி, ஒலிபெருக்கி முதலியவை, இக்கால மக்கள் வாழ்க்கையில் இன்றியமையாதனவாய் விளங்கிவருகின்றன.



தாமஸ் ஆல்வா எடிசன்

எடிசன் அமெரிக்காவிலுள்ள ஓஹியோ என்னும் மாவட்டத்தைச் சேர்ந்த **மிலான்** என்னும் ஊரில், 1847-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம், 11-ஆம் நாள் பிறந்தார். இவருடைய தந்தை, **சாமுவேல் எடிசன்**; தாய், **நான்ஸி எலியட்**. இவர்கள் எளியவர்களாயினும் எடிசனை அன்புடன் போற்றி வளர்த்தார்கள்.

எடிசன் ஐந்து வயதினரானதும் இவரது தாயாரே இவருக்குக் கல்வி கற்பித்துவந்தார். எடிசன் கல்வியில் கருத்துடையவராய்ப் பயின்றார். இடையிடையே, அமெரிக்காவில் குடியரசு ஏற்படுத்திய ஜார்ஜ் வாஷிங்டன் முதலிய வீரர்களின் வரலாறுகளையும், உழைப்பால் உயர்ந்த பெஞ்சமின் பிராங்கிளின்போன்ற பெருமக்களின்

வரலாறுகளையும் தாயார் சொல்லக் கேட்டறிந்தார். இவ் வரலாறுகள் எடிசனின் இளமையுள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்து, நாட்டுப்பற்று, பிறர்க்குதவும் விருப்பம், உழைப்பு முதலிய நற்பண்புகள் கிளர்ந்தெழச் செய்தன. இப்பெரியோர்களைப்போல் தாமும் இடையறாது முயன்று முன்னேறி அழியாப் புகழ் பெறவேண்டுமென்று எடிசன் அவாக்கொண்டார்.

எடிசன் இளம்பருவத்தில் தாயார் சொல் தட்டாது நடந்துவந்தார்; அவர் கொடுத்த சிறு நூல்களைத் திறமையாகக் கற்ருர்; சிறுசிறு கடிதங்கள், கட்டுரைகள் முதலியவைகளை எழுதப் பயிற்சி பெற்ருர். இங்ஙனம் எடிசன் பன்னிரண்டு வயதுவரையில் தாயாரிடமே கல்வி பயின்றுவந்தார்.

எடிசனின் வீட்டில் ஒரு பெட்டை வாத்து முட்டைகளின்மீது அமர்ந்து அடைகாத்துவந்தது. இவ்வாறு அடைகாத்துவருவதால் முட்டைகளுக்கு வெப்பம் ஏற்பட்டுக் குஞ்சு பொரிக்கும் என்பதை எடிசன் அறிந்தார். அதனுல் ஒருநாள் எவரும் அறியாதபோது முட்டைகளின்மீது படுத்துக்கொண்டார்! பெற்ருேர் எடிசனைத் தேடிக் காணுமல் கவலையடைந்தனர். முடிவில், அடைகாக்கும் மைந்தனைக் கண்டு வியப்படைந்தனர்.

எடிசனின் தந்தை எளியவரானதால், இவர் பள்ளிக்குச்சென்று கல்வி பயிலமுடியாமற் போயிற்று. ஆகையால், இவர் புகைவண்டி நிலையத்தில் செய்தித்தாள் விற்கும் அலுவலில் அமர்ந்தார்; புகைவண்டியிலேயே பயணம் செய்தும் செய்தித்தாள்களை விற்பதுண்டு. இத்தொழிலின் இடையில் ஓய்வு ஏற்படும் வேளைகளில் பல நூல்களைக் கருத்தூன்றிக் கற்றுவந்தார். இளமையிலேயே இவருக்கு இரசாயன நூலில் ஆர்வமிருந்ததால், அந்நூல்களைப் பயின்று ஆராய்ச்சியும் செய்துவந்தார்.

எடிசன் புகைவண்டியிலுள்ள தமதறையில் இரசாயன ஆராய்ச்சி செய்வது வழக்கம். ஒருநாள் வண்டி செல்லும்பொழுது, மிகுந்த விரைவினுல் அசைந்தாடியது. அதனுல், ஆராய்ச்சிக்காக கண்ணுடிக்

குழாயில் வைத்திருந்த தீப்பாஷாணம் கீழே விழுந்து வண்டியில் தீப்பிடித்தது. உடனே வண்டி நின்றதும் வண்டிக்காவலன் (Guard) ஓடிவந்து தீயை அணைக்கச் செய்தான். அவன் எடிசனின் செயலால் வண்டியில் தீப்பிடித்ததையறிந்து மிகுந்த சினத்துடன் வண்டியி லிருந்த பொருள்களையெல்லாம் வெளியே எறிந்ததன்றி எடிசனின் கன்னத்தில் ஓங்கியறைந்தான். இதனால், எடிசனின் காது செவிடாயிற்று. எதிர்பாராத இந்த அவமானத்தால் எடிசன் மனந்தளர்ந்து தம் முயற்சியைக் கைவிடவில்லை. பிறகு தம் வீட்டிலேயே ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்துவந்தார்.

எடிசன் விடாமுயற்சியுடன் முயன்று பற்பல செயல்களில் முன்னேற்றமடைந்து வந்தார்; சிறுசிறு கருவிகளைச் செய்து வெற்றிபெற்று வந்தார். இவற்றால் இவரது திறமையைப் பலர் அறிந்து பாராட்டலாயினர். டெலிபோன் என்னும் பேச்சுத் தந்தியைச் செம்மை செய்யும் புதிய கருவியைக் கண்டுபிடித்து பெருந் தொகைக்கு விற்றார். பின்னர், பல புதுமைகளைப் படிப்படியாகக் கண்டுபிடித்து உலகம் புகழும் பெரிய விஞ்ஞானியாய் விளங்கலானார்.

எடிசன் கண்டுபிடித்தவைகளில் ஒலிபெருக்கி, சைக்ளோஸ்டைல் மிஷின், கிராமபோன், மின்சார விளக்குகள், டைனமோ, பேசும் படக்காட்சி முதலியவை உலகெங்கும் பரவிப் பயன்பட்டுவருகின்றன. இவற்றால் எடிசன் பெருஞ் செல்வராய்த் திகழ்ந்து உயர்நிலையை யடைந்தார்.

இங்ஙனம் தம் அறிவாராய்ச்சியாலும், அயரா உழைப்பாலும் முன்னேற்றமடைந்த எடிசன், நீண்ட காலம் ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டிருந்து முடிவில் 1931-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், 31-ஆம் நாள் காலமானார்.

எடிசன் கண்டுபிடித்த விஞ்ஞானக் கருவிகள் பலவும், மக்கள் வாழ்க்கையில் பயன்பட்டுவருகின்றன. ஆதலால், எடிசன் இறந்தும் இறவாதவராகவே இருந்து

வருகிறார். இவரது ஊக்கமும், முயற்சியும், உழைப்பும் யாவருமறிந்து மேற்கொள்ளத்தக்க உயர் பண்புகளாகும்.

## குறிப்பு

இது, வாழ்க்கை வரலாறு பற்றிய பாடமாகும். இதில், எடிசனின் இளம்பருவ நிகழ்ச்சிகளும் கண்டுபிடித்த கருவிகளும் பிறவும் சுருக்கமாய்த் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## கேள்விகள்

1. எடிசனின் பிறப்பு வளர்ப்பைத் தெரிவிக்க.
2. எடிசன் எங்ஙனம் கல்வி பயின்றார்? அப்பொழுது நேர்ந்த ஒரு அதிசய நிகழ்ச்சி யாது?
3. எடிசனின் இளமபருவ விருப்பம் யாது? அதற்குக் காரணமென்ன?
4. இளம்பருவத்தில் எடிசன் என்ன தொழில் செய்தார்? அப்பொழுது நேர்ந்த ஒரு நிகழ்ச்சி யாது?
5. எடிசன் எவ்வாறு முன்னேற்றமடைந்தார்?
6. எடிசன் கண்டு பிடித்த கருவிகள் யாவை?
7. எடிசனின் உயர்பண்புகள் யாவை?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—வியத்தகு, பண்பு, விரைவு, காவலன், நிகழ்ந்து, அயரா.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—இடையறாது, பெற்றோர், புகைவண்டி நிலையம், ஓய்வு, இரசாயனநூல், ஆராய்ச்சி, கைவிடவில்லை.

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—படக்காட்சி, குடியாக, காட்டுப்பற்று, அறிவாராய்ச்சி, விஞ்ஞானக்கருவி.
2. பயின்றார்—இது, முற்று வினை. பயின்று, பயின்ற—இவை எச்சவினைகள். இவ்வாறே, படித்தான், கண்டான், நின்றது என்ற முற்று வினைகளை எச்சவினைகளாக்குக.

### III. கட்டுரைப் பயிற்சி

1. 'எடிசன் கண்டு பிடித்த கருவிகள்' என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.
2. எடிசன் வரலாற்றை அவரே கூறுவதுபோல் எழுதுக.



# 8. பருத்தியும் ஆடையும்

உணவும் ஆடையும் மக்களுக்கு இன்றியமையாத பொருள்களாகும். உணவின்றி உயிர்வாழ முடியாதது போலவே, ஆடையின்றி மானத்துடன் வாழமுடியாது. ஆகையால் உணவுக்கு அடுத்தபடியாக ஆடை இன்றியமையாததாய் இருக்கிறது. சிறுபான்மையோராகிய செல்வர்கள் பட்டாடை, கம்பளியாடை முதலியவற்றைப் பகட்டாக அணிகிறார்கள். ஆனால், பெரும்பான்மையோராகிய எளியவர்களும், நடுத்தர நிலையில் உள்ளவர்களும் பருத்தி ஆடையையே அணிகிறார்கள். ஆகையால் நமது நாட்டில் நெல் முதலிய தானியங்களைக் கொடுக்கும் உணவுப் பயிர்களைப்போலவே, ஆடை நெய்வதற்குரிய பஞ்சினைத்தரும் பருத்திப் பயிரும் முக்கியப் பயிராய் விளங்குகிறது.

இந்தியாவில் நெடுங்காலத்திற்கு முன்னிருந்தே பருத்தி விளைகிறது. பருத்திப் பயிரின் தோற்றமே இந்தியாவில்தான் என்று கூறுவர். ஆயினும், இப்

பொழுது உலகநாடுகள் பலவற்றிலும் பருத்திப் பயிர் பரவி விளைந்து வருகிறது. இத்தகைய பருத்தி, பயிர் செய்யப்படும் வகை, ஆடையின் உற்பத்தி முதலியவற்றை ஆராய்ந்தறிவோம்.

பருத்தி விதைத்துப் பயிர்செய்வதற்கு ஏற்றவிடம் செம்மண் கருமண் நிலங்களாகும். செம்மண் நிலத்தை விட, கருமண் நிலத்தில் மழைநீர் ஊறிப் பல நாட்கள் வரையில் இருக்குமாதலால், இந்நிலத்தில் பருத்திப் பயிர் செழித்து வளர்கிறது. இப் பயிருக்கு நீர் தேங்கியிருக்க வேண்டியதில்லை. மண்ணின் ஈரத்திலேயே பயிர் செழித்து வளர்ந்து கதிரவன் ஒளியால் தழைக்கும். நன்ருய் வளர்ந்தபிறகு மிகுதியான மழை பெய்தாலும் தாங்கும்.

பருத்தி விதையை விதைத்துப் பயிர் செய்கிருர்கள். கடினமான தரையில் விதைத்தால் விதை முளைக்காது. பருத்தி விதைப்பதற்கு மாசி, பங்குனி, சித்திரை மாதங்களும் ஆவணி, புரட்டாசி, ஐப்பசி மாதங்களும் ஆகிய இரு பருவங்கள் ஏற்ற காலமாகும். கோடையில் விதைத்த பருத்திப் பயிர் நெட்டையாகவும், குளிர்காலத்தில் விதைத்த பருத்திப் பயிர் குட்டையாகவும் விளைகின்றன. பஞ்செடுக்கும் காலத்தில் சூரியனின் ஒளி மிகுதியாய் வேண்டும். இல்லையெனில் பருத்தி நன்கு விரியாது. ஆகையால், பறிக்கும் காலம் மழைக்காலமாய் வராதபடி பார்த்து விதைக்கவேண்டும்.

ஒவ்வொரு கணுவிலும் பருத்திச்செடி கிளைவிட்டு அடர்த்தியாய் வளர்ந்து பூப்பூக்கும். பூ மஞ்சள் நிறமாய் இருக்கும். ஒவ்வொரு பூவிலும் காய்கள் தோன்றும். காய் முதிர்ந்து கதிரவன் வெப்பத்தால் வெடித்துப் பஞ்சு வெளிப்படும். அப்பொழுது பருத்திக் காடு எங்கு நோக்கினும் வெண்ணிறத் தோற்றத்துடன் மிகஅழகாய்க் காணப்படும். பஞ்சுக்காய் வெடித்ததும் ஆட்கள் திர

ளாக வந்து செடியிலுள்ள பஞ்சையெடுத்துக் கூடையில் நிரப்புவார்கள். பஞ்செடுக்கும் காலத்தில் நல்ல வெப்பம் தட்பநிலை வேண்டும். பருத்தி ஏறக்குறைய ஆறுமாத காலத்தில் பயன் தரும் பயிராகும்.

பருத்தியில் கம்போடியா, காக்கிநாடா, கருங்கண்ணி, உப்பன் முதலிய பலவகையுண்டு. இவற்றுள் கம்போடியா பருத்தியே சிறந்ததாகும். கம்போடியா என்பது இந்தோ சீனவிலுள்ள ஓர் ஊர். அவ்வூரிலிருந்து இப்பருத்தி கொண்டுவரப்பட்டதால், இதற்கு இப்பெயர் ஏற்பட்டது. காக்கிநாடா பருத்தியும் சிறந்ததேயாகும். இது, காக்கிநாடா என்னும் ஊரிலிருந்து ஏற்றுமதியாவதால் இப்பெயர் பெற்றது. நீண்ட இழைகளையுடைய பருத்தி கருங்கண்ணி என்றும், குட்டையிழைகளையுடையது உப்பன் என்றும் சொல்லப்படுகின்றன. கம்போடியா பருத்தி கோயம்புத்தூர், மதுரை முதலிய இடங்களிலும், காக்கிநாடா பருத்தி குண்டூர், நெல்லூர் முதலிய இடங்களிலும், கருங்கண்ணியும் உப்பனும் மதுரை, இராமநாதபுரம் முதலிய இடங்களிலும் செழித்து வளருகின்றன.

உலக முழுவதிலுமுள்ள பல நாடுகள் பருத்தியை விளைவிக்கின்றன. ஆயினும், அமெரிக்க ஐக்கிய நாடுகள், இந்தியா, சோவியத் ரஷ்யா, சீனு, பிரேசில், எகிப்து ஆகிய ஆறு நாடுகளே பருத்திப் பயிரில் சிறந்து விளங்குகின்றன என்று கூறுகின்றனர். பருத்தி விளைவில் அமெரிக்காவுக்கு அடுத்த நிலையில் இந்தியா இருப்பது பெருமைக்குரியதேயாகும்.

இந்தியாவில், சென்னை, பம்பாய், பஞ்சாப், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், நிஜாம் ஆகிய இடங்களில் பருத்தி மிகுதியாய்ப் பயிராகிறது. சென்னை இராச்சியத்தில் கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு முதலிய மாவட்டங்களில் பருத்தி விளைகிறது. உலக முழுவதிலும்

ஓராண்டில் விளையும் பருத்தி, 400 பவுண்டு எடையுள்ள 360 லட்சம் கட்டுகள் என்றும், அவற்றுள் பெரும்பகுதி அமெரிக்கா, இந்தியா ஆகிய இருநாடுகளிலேயே விளைகிற தென்றும் கணக்கிட்டுள்ளனர்.

பருத்தி விளைவில் நாம் பெருமைப்படக்கூடிய நிலையில் இருப்பினும், அப்பருத்தியை ஆடையாக நெய்யும் தொழிலில் நாம் பெருமைப்படக்கூடிய நிலையிலில்லை; பிற்போக்கான நிலையிலேயே இருந்துவருகிறோம். நம் நாட்டிலிருந்து ஏராளமான பஞ்சு கப்பல்களில் ஏற்றுமதியாகிப் போவதே இதற்குப் போதுமான சான்று.

நம் நாட்டில் பஞ்சை மணையிலிட்டு அரைத்துப் பஞ்சு வேறாகவும் கொட்டை வேறாகவும் பிரித்து, பஞ்சை வில்லால் அடித்துத் தூய்மை செய்து திரித்துக் கைராட்டினத்திலோ தக்களியிலோ நூல் நூற்று வந்தார்கள். கோடிக்கணக்கான எளிய மக்கள் குடிசைத் தொழிலாக இதைக் கைக்கொண்டிருந்தனர். நூற்ற நூலைக் கைத்தறியில் ஆடையாக நெய்யும் தொழிலையும் குடிசைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். ஆங்கிலேயரின் அரசாட்சியில் இத்தொழில்கள் மங்கி மறையும் நிலையில் இருந்த பொழுது, காந்தியடிகளின் முயற்சியால் இவை புத்துயிர் பெற்று எழுச்சியடைந்தன. ஆயினும் இயந்திரங்களின் உதவியால் ஆடைகள் ஏராளமாய் உற்பத்தியாவதால், அவற்றுடன் போட்டியிடமுடியாமல் இத்தொழில்கள் தத்தளிக்கின்றன என்றே சொல்லவேண்டும்.

பல ஆண்டுகளாய் மேனாடுகளிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமானமுள்ள ஆடைகள் ஆண்டுதோறும் இந்தியாவுக்கு இறக்குமதியாகி வந்தன. இவ்விறக்குமதி, நம் நாடு சுதந்தரமடைந்தபிறகு சிறிது சிறிதாகக் குறைந்து வருகிறதெனலாம். இதற்குக் காரணம் இந்தியாவில் ஆங்காங்கு நூல் ஆலைகளும் நெசவாலைகளும் ஏற்பட்டு வளர்ச்சிபெற்று வருவதேயாகும்.



நூல் ஆலை: கதிர்கள்



வடநாட்டில் பல ஆண்டுகளுக்குமுன்னரே பெரிய பெரிய ஆலைகள் ஏற்பட்டு ஆடைகளை ஏராளமாய் உற்பத்தி செய்துவருகின்றன. தென்னாட்டில் சில ஆண்டுகளாய் ஆலைத்தொழில் நடைபெற்று வருகிறது. மதுரை, கோயம்புத்தூர், சென்னை, திருச்சிராப்பள்ளி முதலிய நகரங்களில் நூலாலைகளும் நெசவாலைகளும் நிறுவப்பட்டுப் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவற்றில் வேலைசெய்து வருகிறார்கள். இவை இன்னும் பெருகி வளர்ச்சியடைந்தால் பிற நாட்டு ஆடைகளின் இறக்குமதி குறைந்து நம் நாடு செல்வ வளர்ச்சிபெற்றுச் சிறப்படையும். அப்பொழுதுதான் நம் நாட்டில் பொருந்தியுள்ள வறுமை நோய் நீங்கி மக்கள் யாவரும் சுதந்தர இன்பத்தைப் பெற்றுக் களிப்படைவார்கள்.

## குறிப்பு

*இது, தொழில் பற்றிய பாடமாகும். இதில், பருத்திப்பயிர், நெசவுத்தொழில் பற்றிய செய்திகள் பொருளாதார அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன.*

## கேள்விகள்

1. *பருத்திப்பயிரின் இன்றியமையாமையைத் தெரிவிக்க.*
2. *பருத்தியின் தாயகம் எது?*
3. *பருத்தி எவ்வாறு பயிர் செய்யப்படுகிறது?*
4. *பருத்தியின் வகைகள் யாவை? அவற்றின் இயல்புகள் எவை.*
5. *பருத்தி விளைவில் சிறந்த நாடுகள் எவை? அவற்றுள் இந்தியாவுக்குள்ள பெருமை யாது?*
6. *முற்காலத்தில் ஆடை நெசவுத்தொழில் எவ்வாறு நடைபெற்றது? அதன் தற்கால நிலை யாது?*
7. *நம் நாட்டில் ஆலைத் தொழில் நடைபெறும் இடங்கள் யாவை?*

## பயிற்சி

### 1. *மொழிப் பயிற்சி*

1. *பொருள் கூறுக:—கதிரவன், வெப்பம், தட்பம், தூய்மை, நிறுவப்பட்டு.*

2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—பகட்டாக, செசவு, கம்போடியா, கருங்கண்ணி, ஏராளமாய்.

## II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—நெடுங்காலம், ஏற்றவிடம், வெண்ணிறம், புத்துயிர், மேனாடு.
2. மனிதர் பஞ்சை எடுக்கிறார்கள்—இதிலுள்ள 'பஞ்சு' என்பது பெயர்ச்சொல். இதில் 'ஐ' சேர்ந்து 'பஞ்சை' என்று வந்துள்ளது. 'ஐ' என்பது இரண்டாம் வேற்றுமை உருபு ஆகும்.
3. கீழ் வருவனவற்றில் இரண்டாம் வேற்றுமை உருபுள்ள சொற்களைத் தெரிவிக்க:—
   (1) அமெரிக்கா பருத்தியை மிகுதியாய் விளைவிக்கிறது.
   (2) கழுதை மூட்டையைச் சுமக்கும்.
   (3) குதிரை தண்ணீரைக் குடிக்கிறது.
   (4) பாகன் யானையை நடத்திச் சென்றான்.
   (5) தந்தை தன் மகனை அழைத்துப்போனார்.

## III. வாக்கியப் பயிற்சி

1. பஞ்சு பருத்திச்செடியில் உண்டாகிறது—இதில், 'பஞ்சு' எழுவாய்; பாலன் பஞ்சை நூலாக்கினான். இதில், 'பஞ்சு' செய்யப்படுபொருள். இவ்வாறே, பருத்திச்செடி, நெசவாலை, ஆடை, நூல் ஆகிய சொற்களை எழுவாயாகவும் செயப்படு பொருளாகவும் அமைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.
2. இப்பாடத்திலிருந்து மூன்று வாக்கியங்களை எழுதி, அவற்றி லுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைத் தெரிவிக்க.

## IV. கட்டுரைப் பயிற்சி

1. 'பருத்திப்பயிர்' என்னும் தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.
2. நீங்கள் நேரில் பார்த்த ஒரு நெசவாலை, அல்லது கைத்தறியைப்பற்றி விவரித்து எழுதுக.

# 9. போலி வைத்தியர்!

## (நாடகம்)

### காட்சி 1

இடம்: மருதூர்

காலம்: மாலை

உறுப்பினர்: மாணிக்கம், அவன் மைத்துனனாகிய முத்தையன்.

[மாணிக்கம் வயலில் பயிர் செய்து வாழ்பவன். முத்தையன் ஒரு வேலையும் செய்யாமல் மாணிக்கத்தின் உழைப்பில் உண்டு ஊர்சுற்றித் திரிபவன்; மாணிக்கத்தை மதிக்காதவன்.]

**மாணிக்கம்:** ஏ முத்தையா! உள்ளே என்ன செய்கிறாய்? நான் திண்ணையிலிருந்து கத்துவது உன் காதில் விழவில்லையா?

**முத்தையன்:** ஏன் கத்துகிறீர்கள்?

**மாணிக்கம்:** 'குடிக்கத் தண்ணீர் கொண்டுவா' என்று எவ்வளவு நேரமாய்க் கூவுகிறேன். நீ காதில் விழாததுபோல் பேசாமல் இருக்கிறாயே!

**முத்தையன்:** எழுந்துவந்து தண்ணீர் குடித்து விட்டுப் போகிறதுதானே! தண்ணீர் கொண்டுவந்து கொடுக்க ஒரு ஆள் வேண்டுமா?

**மாணிக்கம்:** (சினத்துடன்) என்ன சொன்னாய்? வீண்சோறு தின்கிற பயலுக்குப் பேச்சைப் பார்! உன் அக்காள் கொடுக்கிற தைரியத்தில் உனக்குச் செருக்கு வளர்ந்துபோய்விட்டது! உன் ஆணவத்தை அடக்குகிறேன்.

[உள்ளேபோய் முத்தையனை அடிக்க முயல்கிறான். அதற்குள் அவன் மனைவி குறுக்கிட்டுத் தடுத்துவிடுகிறாள். முத்தையன் மெதுவாய் மாணிக்கத்தைப்பார்த்துச் சிரித்துக் கொண்டே கொல்லைப்புறம் போய்விடுகிறான். மாணிக்கம் கடுஞ்சினத்துடன் வெளியே போகிறான்.]

## காட்சி 2

இடம்: மருதூரின் புறம்

காலம்: மறுநாட் காலை

உறுப்பினர்: மாணிக்கம், காத்தான், சாத்தன்.

[மாணிக்கம் வயலில் வேலை செய்துகொண்டிருக்கிறான். அப்பொழுது முத்தையன் அருகிலுள்ள மார்தோப்பில் எக்களிப்புடன் தெம்பாங்கு பாடிக்கொண்டிருக்கிறான்.]

மாணிக்கம்: இந்தப் பயல் முத்தையன் காளைமாடுபோல் வளர்ந்திருந்தும் ஒன்றுக்கும் பயனில்லாமல் ஊர்சுற்றித் திரிகிறான். எது சொன்னாலும் கேட்பதில்லை. அடித்து அறிவு புகட்டலாமென்றால் நம் மனைவி இடந்தர மாட்டேன் என்கிறாள். தம்பியின்மேல் அவளுக்கு அவ்வளவு அன்பு! இருக்கட்டும் இவனை எந்த வகையிலாவது அடிபடச் செய்தால்தான் என் ஆத்திரம் தணியும்.

[அப்பொழுது சாலையின் வழியாக இருவர் வந்து நிற்பதைப் பார்க்கிறான். அவர்கள் மாணிக்கத்திடம் ஏதோ கேட்க விரும்புவதுபோல் தெரிந்தது.]

ஒருவன்: நீங்கள் இந்த ஊர்தானே?

மாணிக்கம்: ஆமாம். நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?

மற்றவன்: என் பெயர் காத்தான்; இவன் பெயர் சாத்தன். நாங்கள் இருவரும் அரசூர் பண்ணையின் ஆட்கள். இவ்வூரில் யாரோ சிறந்த வைத்தியர் ஒருவர் இருக்கிறாராமே! அவரை உங்களுக்குத் தெரியுமா?

மாணிக்கம்: (சிறிது யோசித்துவிட்டுத் திடீரென்று ஓரெண்ணம் தோன்றியவன்போல் முகமலர்ந்து) ஆம், ஆம். இவ்வூரில் ஒரு வைத்தியர் இருக்கிறார். எதற்காக அவரைப்பற்றிக் கேட்கிறீர்கள்?

சாத்தன் : எங்கள் பண்ணையார் மகளுக்குச் சில நாளாய்ப் பைத்தியம் ஏற்பட்டிருக்கிறது. எவ்வளவோ மருந்துகள் கொடுத்தும் பயனில்லை. இந்த ஊர் வைத்தியர் கெட்டிக்காரர் என்று சொன்னார்கள். அதனால் அவரை அழைத்துவரும்படி பண்ணையார் எங்களை அனுப்பினார்.

மாணிக்கம் : (கலகலவென்று நகைத்து) மிகவும் நல்லது! பைத்தியத்தைத் தெளியவைக்க நல்ல வைத்தியரை அழைக்க வந்தீர்கள்!

காத்தான் : ஏன் சிரிக்கிறீர்கள்? அவர் திறமையானவர் என்று சொன்னார்களே!

மாணிக்கம் : வைத்தியர் திறமையுள்ளவர்தான். அதில் சிறிதும் தடையில்லை. ஆனால்; அவரை உங்களால் அழைத்துப்போக முடியாதே!

சாத்தன் : ஏன்?

மாணிக்கம் : அவர் அரைப் பைத்தியமாயிற்றே!

[காத்தானும் சாத்தனும் வியப்புடன் ஒருவரையொருவர் பார்க்கின்றனர்.]

காத்தான் : அவர் எங்கேயிருக்கிறார்? நாங்கள் எவ்வாறாவது அழைத்துப்போகிறோம்.

மாணிக்கம் : அதோ பாருங்கள்! அந்த மாந்தோப்பில் பாடிக்கொண்டிருக்கிறாரே, அவர்தான் வைத்தியர்! நான் சொல்வதை நன்றாய் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அவரிடம்போய்க் கூப்பிட்டால், 'நான் வைத்தியன் அல்லன்' என்று சொல்லி வரமாட்டார்; நன்றாய் அடித்தால்தான் ஒப்புக்கொண்டு வருவார். நினைவிருக்கிறதா? நன்றாய் அடிக்கவேண்டும்!

[காத்தானும் சாத்தனும் 'சரி' என்று சொல்லிவிட்டுப் போகிறார்கள். மாணிக்கம் மகிழ்ச்சியுடன் வேலையில் ஈடுபடுகிறான்.]

## காட்சி 3

இடம்: மாந்தோப்பு

காலம்: அதே காலை

உறுப்பினர்: முத்தையன், காத்தான், சாத்தன்.

[பாடிக்கொண்டிருந்த முத்தையன், தன்னை நோக்கி இருவர் வருவதைக்கண்டு பாட்டை நிறுத்திவிட்டு அவர்களைப் பார்க்கிறான்.]

**காத்தான்:** ஐயா! தங்களைப் பார்க்கத்தான் வந்தோம்.

**முத்தையன்:** அப்படியா! மகிழ்ச்சி. என்னை எதற்காகப் பார்க்க வந்தீர்கள்?

**சாத்தன்:** என்ன அப்படிக் கேட்கிறீர்கள்? திறமையுள்ள ஒருவரை எல்லோரும்தான் தேடிவருவார்கள்! பார்த்தால் இளமையாகக் காண்கிறீர்கள்; அழகாகவும் இருக்கிறீர்கள். இப்பருவத்திலேயே........

**காத்தான்:** திறமையும் இருக்கிறது. மகளைப் பெற்று மனம் வருந்தும் அரசூர் பண்ணையார் உங்களை அழைத்துவரச் சொன்னதில் ஆச்சரியமேயில்லை!

**முத்தையன்:** (வியப்படைந்து) அரசூர் பண்ணையார் என்னை அழைத்துவரச் சொன்னாரா? எதற்காக?

**சாத்தன்:** உங்கள் திறமையைக் கேள்விப்பட்டதால் அழைத்துவரச் சொன்னார். வாருங்கள் போகலாம். உங்களுக்கு நல்லகாலம் ஏற்பட்டிருக்கிறது! பெரும் பொருள் கிடைக்கும்.

**முத்தையன்:** ('பண்ணையார் தன் மகளை நமக்குத் திருமணம் செய்துகொடுக்க நினைக்கிறார்போல் தோன்றுகிறது. நமக்கு வயல் வேலையொன்றும் தெரியாதென்று அறிந்தால் அவர் நம்மை வெறுத்துத் துரத்திவிடுவார். ஆகையால் இவர்களுடன் நாம் போகக்

கூடாது' என்று நினைத்து) ஐயா, நான் இப்பொழுது திருமணம் செய்துகொள்ள விரும்பவில்லை. நீங்கள் நினைப்பதுபோல் என்னிடம் ஒரு திறமையும் இல்லை. ஆகையால், நான் உங்களோடு வரமுடியாது.

**காத்தான் :** உங்கள் திறமை எங்களுக்குத் தெரியும். திருமணம் செய்துகொள்ள நாங்கள் அழைக்கவில்லை. வீண் பாசாங்கு செய்யவேண்டாம். வாருங்கள் போவோம்.

**முத்தையன் :** உண்மையில் என்னிடம் திறமையே யில்லை. பண்ணையார் பார்த்ததும் என்னை வெறுத்து விடுவார். நான் வரவில்லை.

**சாத்தன் :** நீங்கள் வைத்தியர் என்பதை நாங்கள் நன்றாய் அறிவோம். தெரியாதென்று நினைத்து வீண் மொழி பேசவேண்டாம். புறப்படுங்கள் ; நேரமாகிறது.

**முத்தையன் :** (வியப்படைந்து) வைத்தியரையா தேடி வந்தீர்கள்? நான் வைத்தியன் அல்லன். இந்த ஊர்க்கோடியிலுள்ள குடிசை வீட்டில் வைத்தியர் இருக்கிறார். அங்குப் போங்கள்.

*[காத்தானும் சாத்தனும் ஒருவரையொருவர் பார்த்துக்கொள் கின்றனர்.]*

**காத்தான் :** நீங்கள் வைத்தியர் என்பது எங்களுக்குத் தெரியும். உண்மையை ஒப்புக்கொண்டு எங்களோடு வராவிட்டால், வழியில் ஒருவர் சொன்னதுபோல் செய்யவேண்டிவரும்.

**முத்தையன் :** என்ன செய்வீர்கள்? எனக்கு விளங்கவில்லையே!

**சாத்தன் :** வழக்கப்படி செய்து உங்களை ஒப்புக் கொள்ளச் செய்வோம். உண்மையைச் சொல்லுங்கள் ; நீங்கள் வைத்தியர்தானே?

முத்தையன் : உண்மையைத்தான் சொல்கிறேன் நான் வைத்தியன் அல்லன்.

சாத்தன் : மீண்டும் கேட்கிறேன். நீங்கள் வைத்தியர் அல்லவா?

முத்தையன் : எத்தனை முறை சொல்வது? வழியிற்போன நீங்கள் இங்கே வந்து வம்பு செய்கிறீர்களே! நான் வைத்தியன் அல்லன்.

[இருவரும் முத்தையனை அடிக்கிறார்கள். அவன் 'நான் வைத்தியன்தான்' என்று அலறுகிறான்.]

காத்தான் : முன்னமேயே ஒப்புக்கொண்டிருந்தால் எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்? வேறு வழியில்லாமல்தான் நாங்கள் உங்களை அடித்தோம்.

சாத்தன் : உங்களை அடிக்கும்பொழுது எங்கள் மனம் எவ்வளவு பாடுபட்டது தெரியுமா?

முத்தையன் : உங்களுக்கு என்ன? என் உடம்பல்லவா துன்பப்பட்டது! எலும்பு நொருங்கும்படி அடித்துவிட்டீர்களே! என்னை ஏன் வைத்தியன் என்று ஒப்புக்கொள்ளச் செய்கிறீர்கள்? அதனால் உங்களுக்கு ஏற்படும் நன்மை என்ன?

காத்தான் : மறுபடியும் பைத்தியம் திரும்பிவிட்டதே! உண்மையில் நீங்கள் வைத்தியர் அல்லவா?

முத்தையன் : இல்லையே!

[உடனே இருவரும் முத்தையனை முன்னிலும் அதிகமாய் அடிக்கிறார்கள். முத்தையன் 'நான் வைத்தியன்தான்! வைத்தியன்தான்!!' என்று கதறிக்கொண்டே விட்டுவிடும்படி வேண்டுகிறான்.]

காத்தான் : அப்பாடா! வழிக்கு வந்தீரா? இல்லையென்று சொல்லி ஏன் அடிபடவேண்டும்?

முத்தையன் : அடிபட்டு இறப்பதைவிட வைத்தியனாகவும் இருக்கலாம்; வேறு பைத்தியனாகவும் இருக்கலாம். வாருங்கள் போவோம்.

[மூவரும் போகிறார்கள்.]

## காட்சி 4

இடம் : வயற்பக்கமுள்ள சாலை

காலம் : அதே காலை

உறுப்பினர் : முத்தையன், காத்தான், சாத்தன், மாணிக்கம்

[காத்தானும் சாத்தனும் முத்தையனை அழைத்துப்போகிறார்கள். மாணிக்கம் வயலில் வேலை செய்கிறான்.]

முத்தையன் : ஏ, அத்தான்! இவர்கள் என்னை இழுத்துப்போகிறார்கள் பார்!

மாணிக்கம் : (திரும்பிப் பார்த்துப் பரபரப்புடன் ஓடிவந்து) ஐயா, இவனை ஏன் அழைத்துப் போகிறீர்கள்? விட்டுவிடுங்கள். இவன் என் மைத்துனன்?

காத்தான் : என்ன ஐயா, நீங்கள்தானே இவரை வைத்தியர் என்று சொன்னீர்கள்?

மாணிக்கம் : ஆமாம். இவன் சொன்னபடி கேட்காமல் சோம்பேறியாய்ச் சுற்றிக்கொண்டிருந்தான். அதனால் அடிப்பட்டுத் துன்பப்பட்டால்தான் இவனுக்கு அறிவு வருமென்று நினைத்து வைத்தியனென்று சொல்லி இவனிடம் உங்களைப் போகச்சொன்னேன். நன்றாய் அடித்துவிட்டார்கள்போலிருக்கிறதே! பாவம், உடம்பெல்லாம் வீங்கியிருக்கிறதே!

முத்தையன் : அத்தான்! என்னை விட்டுவிடச் சொல்லுங்கள்! இனி நான் உங்கள் சொற்படி தவறாமல் நடக்கிறேன்.

மாணிக்கம் : ஐயா, அதோ அந்தக் குடிசை வீட்டில் இருப்பவர்தான் வைத்தியர். இவனை விட்டுவிடுங்கள்!

சாத்தன் : நல்ல காரியம் செய்தீர்! உங்கள் மைத்துனனை அடக்கி வழிக்குக் கொண்டுவருவதற்குச் செய்த தந்திரமா இது! நீர்தான் திறமையான வைத்தியர்! மைத்துனனின் அறியாமை நோயைப் போக்கிவிட்டீர் அல்லவா? நாங்கள் போய்வருகிறோம்.

[இருவரும் வைத்தியர் குடிசையை நோக்கிப் போகிறார்கள். முத்தையன் வேலைசெய்ய வயலுக்குப் போகிறான்]

## குறிப்பு

இது, நகைச்சுவையுள்ள நாடகமாகும். இது ஆங்கில நாடகமொன்றின் கருத்தைத் தழுவி புதுமையாய் அமைக்கப்பட்டது.

## கேள்விகள்

1. மாணிக்கத்திற்கு முத்தையன் மீது கோபமேற்பட்டது ஏன்?
2. மாணிக்கம் முத்தையனுக்கு அறிவூட்ட என்ன தந்திரம் செய்தான்?
3. பண்ணையார் ஆட்கள் முத்தையனிடம் தெரிவித்தது என்ன? அதை முத்தையன் எவ்வாறு மாறாகக் கருதினான்?
4. முத்தையன் பண்ணையாரிடம் செல்ல மறுத்தது ஏன்?
5. முத்தையன் தன்னை வைத்தியனென்று ஒப்புக்கொண்டது ஏன்?
6. முத்தையன் பண்ணையார் ஆட்களிடமிருந்து எவ்வாறு விடுதலை பெற்றான்?
7. இந்நாடகத்தால் அறியும் நீதி யாது?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக :—செருக்கு, ஆணவம், எக்களிப்பு, சாலே.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக :—குறுக்கிட்டு, தெமமாக்கு, வியப்புடன், ஈடுபடுகிறான், பாசாங்கு, லம்பு.

### II. கட்டுரைப் பயிற்சி

1. இந்நாடகத்தைச் சிறு கதையாகச் சுருக்கி எழுதுக.
2. பண்ணையார் ஆட்களுக்கும், முத்தையனுக்கும் நடந்த உரையாடல் நிகழ்ச்சியைப் பத்து வரிகளில் எழுதுக.

# 10. தமிழ்த்தாய்

வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே!
மாண்புகள் நீயே என்தமிழ்த் தாயே!
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே!
வீரரின் வீரமும், வெற்றியும் நீயே! 1

தாழ்ந்திடு நிலையினில் உனைவிடுப் பேனோ?
தமிழன்எந் நாளும் தலைகுனி வேனோ?
சூழ்ந்தின்பம் நல்கிடும் பைந்தமிழ் அன்னாய்!
தோன்றுடல் நீஉயிர் நான்மறப் பேனோ? 2

செந்தமிழே! உயிரே! நறுந் தேனே!
செயலினை மூச்சினை உனக்களித் தேனே
நைந்தாய் எனில்நைந்து போகுமென் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே! 3

முந்திய நாளினில் அறிவும் இலாது
மொய்த்தநன் மனிதராம் புதுப்புனல் மீது
செந்தா மரைக்காடு பூத்தது போல
செழித்தஎன் தமிழே ஒளியே வாழி! 4

—பாரதிதாசனார்

## கேள்விகள்

1. தமிழ்த்தாய் தமிழ்மக்களுக்குச் செய்யும் நன்மைகள் யாவை?
2. தமிழ்மகன் தமிழ்த்தாய்க்குச் செய்யவேண்டிய கடமைகள் யாவை?
3. தமிழ்த்தாயை நாம் ஏன் காக்கவேண்டும்?
4. தமிழ்மொழியைக் கவிஞர் எங்ஙனம் வாழ்த்துகிறார்?



# 11. கூட்டுறவுப் பால் பண்ணை

கூட்டுறவு என்பது கூடி வாழ்வதாகும். ஒருவர்க்கொருவர் உதவிபுரிந்துகொள்ளும் முறையில் பலர் ஒன்றுகூடி ஒற்றுமையாய்ப் பணிபுரிந்து பயன்பெற வேண்டுமென்பதே கூட்டுறவின் அடிப்படை நோக்கமாகும். இங்ஙனம் ஒவ்வொருவரும் பிறர்க்கும் நன்மை செய்து தாமும் நன்மைபெறும் வகையில் ஏற்பட்ட இக் கூட்டுறவு இயக்கம், நமது நாட்டில் 1904-ஆம் ஆண்டு முதல் பலவிடங்களிலும் பரவிப் பல துறைகளிலும் பயனளித்து வருகிறது. இவ்வியக்கம் செழித்துவளர அரசியலார் பலவகையில் உதவிபுரிவதுடன் தம் பொறுப்பில் அலுவலாளர்களை ஏற்படுத்திச் செவ்வனே நடைபெறவும் கண்காணித்து வருகின்றனர்.

நம் நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் பல துறைகளில் ஏற்பட்டுள்ளன. அவை நாணயச் சங்கம், பண்டசாலை, வீடுகட்டுதல், விவசாயப்பண்ணை, பால் பண்ணை முதலியனவாம். நாணயச் சங்கம் குறைந்த வட்டியில் பணவுதவி செய்து பணிபுரிகிறது. இதனால் விவசாயிகள்,

தொழிலாளர்கள், வியாபாரிகள் முதலியோர் தத்தம் தொழில்களை நன்கு செய்து நலமடைகிறார்கள். பண்ட சாலைகள், பண்டங்களைக் குறைந்த விலைக்கு வாங்கிக் குறைந்த விலைக்கு விற்கும் முறையில் நடைபெறுகிறது. இதனால் நல்ல பொருள்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கும் நலம் ஏற்படுகிறது. இவ்வாறே ஏனைய சங்கங்களும் நலம்பயக்கும் முறையில் நடைபெறுகின்றன. எடுத்துக் காட்டாகக் கடலூரில் நடைபெறும் பால் பண்ணையைப் பற்றிய விவரங்களை அறிவோம்.



கடலூர் பால் பண்ணை : பால் கறத்தல்

கடலூர் கூட்டுறவுப் பால் பண்ணை 1938-ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. இதன் அலுவல்கள் வளர்ந்து விரிந்துவிட்டதால், 1948-ஆம் ஆண்டில் இது ஒற்றுமைச் சங்கமாகப் (Union) பதிவாகியது. இதில்

நான்கு சங்கங்களும் தனிப்பட்டவர் ஒன்பது பேர்களும் உறுப்பினர்களாய்ச் சேர்ந்தனர். மக்களுக்கு வேண்டிய பால், நகரத்திலும் கிராமங்களிலும் பொதுப் பண்ணைகளில் தூய்மையான முறையில் கறக்கப்படுகிறது. இந்தப் பால் ஒன்று திரட்டப்பெற்று, ஒற்றுமைச் சங்கத்தின் வாயிலாக தேவையானவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. பால் கறப்பதற்கான பொதுத் தொழுவங்கள் 33 இருக்கின்றன. 569 பசுக்கள் 93 எருமைகள் ஆகியவற்றைக்கொண்டு 892 பாற்காரர்கள் நாள்தோறும் ஏறக்குறைய 530 படி பால் கறக்கிறார்கள்.

பால் கறப்பதற்காகப் பயன்படுத்தப்படும் பாத்திர பண்டங்களும் ஏனைய பொருள்களும் நன்கு தூய்மை செய்து உலர்த்தப்பட்டு உபயோகிக்கப்படுகின்றன. ஒற்றுமைச் சங்கத்தின் அலுவலாளரின் நேர் மேற்பார்வையில் பால் கறக்கப்படுகிறது. தொலைவான இடங்களுக்கும், ஊர்களுக்கும் சங்கத்தின் இரண்டு மோட்டார் வண்டியில் பால் விரைவில் கொண்டுபோய்ப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. மூடி முத்திரையிடப்பெற்ற பாத்திரங்களில் பால் அனுப்பப்படுகிறது. இவ்வளவு ஏற்பாடுகளுக்கு மேலும் பண்ணையின் துணையதிகாரி, பால் தூய்மையாகவும் நீர் கலவாமலும் இருக்கிறதாவென்று எதிர்பாராதநிலையில் வந்து அடிக்கடி பரிசோதனை செய்வார். பரிசோதனை அதிகாரிகள், கறக்கும் இடங்களிலிருந்து பாலைப் பரிசோதனை நிலையத்திற்கு அடிக்கடி அனுப்பி வைப்பார்கள்.

கூட்டுறவு முறையில் சேர்க்கப்படும் பால், வீடு வீடாகச் சென்று தேவையானவர்களுக்கு அளிக்கப்படுகிறது. அன்றியும் மருத்துவ நிலையம், சிறைச்சாலை, சிற்றுண்டிக் கடைகள், ஏனைய இடங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான அளவு அளிக்கப்படுகிறது. இங்ஙனம் நாள்தோறும் 530 படி பால் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இந்தப் பால் பண்ணைக்கு அரசியலார் உதவித் தொகையளித்து ஊக்கிவருகின்றனர். தென்னாற்காடு

மாவட்டக் கூட்டுறவு மத்திய நிதிச் சாலையினர் கடன் தொகையளித்து உதவிசெய்கின்றனர். இச்செய்திகள் 1951-ஆம் ஆண்டில் சென்னை அரசியலார் வெளியிட்டுள்ளனவாகும்.

சுகாதார முறைப்படி தொழுவம் அமைத்து மாடுகளைப் பேணி வருவதாலும், பால் கறப்பதாலும், கலப்பின்றியிருப்பதாலும் இப்பண்ணையிலிருந்து கிடைக்கும் பால் மக்களுக்குக் குறைந்த விலையில் நிறைந்த சத்துள்ள தாய்த் தூய்மையாகக் கிடைக்கிறது. இதனால், இப்பாலை வாங்கிப் பயன்படுத்துவோருக்குப் பலவகையில் நன்மை ஏற்படுகிறது.

இந்தப் பால் பண்ணை பலருடைய கூட்டுறவு முயற்சியில் நடைபெறுவதால், பெரிய அளவில் நடைபெறுவதற்கு வசதி ஏற்படுவதோடு பலரும் நன்மை பெறுவதற்கு வழியும் ஏற்படுகிறது. அன்றியும் பலரும் ஒன்றுகூடி ஒற்றுமையாய் வாழ்வதற்கும் வாய்ப்பையளிக்கிறது. இத்தகைய பால் பண்ணைகள் நம் நாட்டில் பலவிடங்களில் நடைபெறுகின்றன.

## குறிப்பு

இது கூட்டுறவு பற்றிய பாடமாகும். இதில், கூட்டுறவுச் சங்கங்களின் விவரமும், கடலூர் கூட்டுறவுப் பால் பண்ணையின் விவரமும் கொடுக்கப்பட்டுள்ளன.

## கேள்விகள்

1. கூட்டுறவு என்பது யாது? இதன் அடிப்படை நோக்கம் என்ன?

2. கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள் யாவை? அவை எவ்வெத் துறைகளில் மக்களுக்கு நன்மை செய்கின்றன?

3. கடலூர் பால் பண்ணை எவ்வாறு நடைபெறுகிறது? அதனால் ஏற்படும் நன்மை என்ன?

## பயிற்சி

### மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—செவ்வனே, கண்காணித்து, பயக்கும், எடுத்துக்காட்டு, தூய்மை, தொழுவம், வாய்ப்பு.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—கூட்டுறவு இயக்கம், அலுவலாளர், உறுப்பினர், தொலைவு, பரிசோதனை மருத்துவ நிலையம்.

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—இவ்வியக்கம், நாணயச் சங்கம், சிற்றுண்டி, கலப்பின்றி.
2. கண்ணன் மாடுகளை மேய்த்தான்.—கண்ணன்—இது உயர் திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, முதல்வேற்றுமைப் பெயர்ச்சொல்; 'மேய்த்தான்' என்ற வினைமுற்றைக் கொண்டு முடிகிறது. மாடுகளை—இது அஃறிணை, பலவின்பால், படர்க்கை, இரண்டாம் வேற்றுமைப் பெயர்ச்சொல்; 'மேய்த்தான்' என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிகிறது. மேய்த்தான்—இது உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, இறந்தகால வினைச்சொல்; 'கண்ணன்' என்னும் எழுவாய்க்குப் பயனிலையாக இருக்கிறது.—இவ்வாறு சொற்களுக்கு இலக்கணம் கூறுவது சொல்லிலக்கணம் சொல்வதாகும்.
3. பின்வரும் சொற்களுக்குச் சொல்லிலக்கணம் கூறுக:—
   (1) மாடு வீட்டில் வளர்கிறது.
   (2) குதிரை வண்டியை இழுக்கும்.
   (3) கண்ணகி மதுரைக்குச் சென்றாள்.

### III. கட்டுரைப் பயிற்சி

1. 'பால் பண்ணை' என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.
2. உங்கள் ஊரிலுள்ள பண்டசாலை அல்லது நாணயச் சங்கம் பற்றிக் கட்டுரை எழுதுக.



# 12. வீர மல்லம்மாள்

திருநெல்வேலி மாவட்டத்தில் பாஞ்சாலங்குறிச்சி என்னும் ஊர், வீரத்தின் உறைவிடமாய் விளங்கியிருந்தது. ஏழு வேட்டை நாய்களால் விரட்டப்பட்டு ஓடிவந்த ஒரு முயல், இங்கு வந்ததும் ஊக்கம் மிகுந்து திரும்பி வேட்டை நாய்களைச் சீறி எதிர்த்தது. அதனால் நாய்கள் அஞ்சியோடின. இந்த நிகழ்ச்சியை நாய்களோடு வந்த ஆட்கள் கண்டு வியந்து, தமது தலைவரான கட்டபொம்மன் என்பவரிடம் போய்த் தெரிவித்தனர். வீர அரசனாகிய கட்டபொம்மன் இம் மண்ணில் வீரப் பண்பு பொருந்தியிருக்கிறதென்று கருதி, கோட்டை முதலியன அமைத்துக் குடியேறினான். இப்புதிய ஊருக்குத் தன் பாட்டனாகிய 'பாஞ்சாலன்' என்பவனின் நினைவுக்குறியாகப் 'பாஞ்சாலங்குறிச்சி' என்னும் பெயரைச் சூட்டினான்.

இவ்வூரிலிருந்து அரசு புரிந்தோரில், வீரபாண்டியக் கட்டபொம்மன் என்ற மறமன்னர் பெரும் புகழ்

பெற்றவர். இவர் ஆட்சி செய்துவந்த காலத்தில், ஆங்கிலேயர்கள் வாணிகம் செய்யும் நோக்குடன் இந்தியாவுக்கு வந்தார்கள். அவர்கள் சிறிது சிறிதாகத் தம் செல்வாக்கைப் பெருக்கிக்கொண்டே வந்து ஆட்சியுரிமையிலும் தலையிட்டனர். அதனால், தென்னாடு முழுவதிலும் அதிகாரம் செலுத்தும் உரிமையைப் பெற்று, சிற்றரசரெல்லாம் தமக்குக் கீழ்ப்படிந்து கப்பம் செலுத்த வேண்டுமென்று கட்டளையிட்டனர். அவர்கள் பீரங்கி, துப்பாக்கி முதலிய பெரும் படைகளுடன் வல்லமை மிகுந்திருந்தனர். ஆகையால் அவர்களை எதிர்க்கும் வலிமையற்ற சிற்றரசர்கள் யாவரும் அடிபணிந்து கப்பம் செலுத்த இசைந்தனர். ஆனால், வீரபாண்டியன் மட்டும் ஆங்கிலேயர்களுக்குக் கப்பம் செலுத்த மறுத்து எதிர்த்து நின்றார். ஆங்கிலேயர்கள் கடுஞ்சினங்கொண்டனர். உடனே அவர்கள் பீரங்கி முதலிய பெரும் படைகளுடன் திரண்டுபோய்ப் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை முற்றுகையிட்டு இடித்துப் போர்செய்து வெற்றி பெற்றனர்; வெளியேறிய வீரபாண்டியனைப் பிடித்துவந்து **கயத்தாறு** என்னுமிடத்திலிருந்த புளிய மரத்தில் தூக்கிலிட்டுக் கொன்றனர்.

வீரபாண்டியனின் தம்பி **ஊமைத்துரை** என்பவர். இவர், ஆண்மையும் அஞ்சாமையும் மிகுந்த பெருவீரர். வீரபாண்டியனைத் தூக்கிலிட்டபொழுது, ஆங்கிலேயர்கள் இவரைப் பாளையங்கோட்டைச் சிறையில் பாதுகாப்பாக வைத்திருந்தனர். பல மாதங்கள் கழிந்த பின்னரும் ஆங்கிலேயர்கள் இவரைச் சிறையிலிருந்து விடுதலை செய்யவில்லை. அதனால் இவரது உறவினர் சிலரும் இவரிடம் பேரன்புடைய வீரர் பலரும் கூடி மறைமுகமாக வந்து சிறைக் காவலர்களைக் கட்டிப் போட்டுவிட்டு இவரைச் சிறையிலிருந்து விடுவித்து அழைத்தேகினர்.

ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சியை அடைந்ததும் முடிசூட்டிக்கொண்டு அரசரானார். உடனே

தகர்ந்துபோன கோட்டையை ஒருவார காலத்திற்குள் உறுதியாகக் கட்டச் செய்தார்; பல்லாயிரக் கணக்கான வீரர்களைப் படையாகச் சேர்த்துக்கொண்டு, ஆங்கிலேயர்களை எதிர்க்கத் தயாராய் இருந்தார்.

ஊமைத்துரை தப்பிச் சென்றதையறிந்த ஆங்கிலேயர், இவரைக் கைப்பற்ற முயன்றனர். முயற்சி பலிக்காமற் போகவே, திருநெல்வேலியிலிருந்து பெரும் படையைத் திரட்டிக்கொண்டு பாஞ்சைக்கு வந்தனர். இடிந்துபோயிருந்த கோட்டை உறுதியுடன் நிற்பதைக் கண்டு அவர்கள் வியந்தனர். இந்நிலையில் பாஞ்சை வீரர்களை எதிர்க்க முடியாதென்று கருதித் திரும்பிச் சென்று, மீண்டும் பெரும் படையுடன் வந்து கோட்டையை வளைத்துக்கொண்டனர்.

பாஞ்சை வீரர்கள் வாயில்களை அடைத்துக்கொண்டு கோட்டைக்குள்ளிருந்து வாள், வேல் வல்லயம் முதலிய படைக் கருவிகளுடன் போர்செய்ய முனைந்திருந்தனர். ஆங்கில வீரர்கள் நெடுநேரம் பீரங்கி வெடிதீர்த்துக் கோட்டையைத் தகர்க்க முயன்றனர். இறுதியில் கோட்டைச் சுவர் இடிந்து விழுந்து வழியேற்பட்டது. அவ்வழியாக ஆங்கில வீரர்கள் துப்பாக்கிகளுடன் திமு திமுவென்று உள்ளே நுழைந்தனர். பாஞ்சை வீரர்கள் நிலவறைகள் ஏற்படுத்திக்கொண்டு பதுங்கியிருந்து, உள்ளே நுழைந்த ஆங்கில வீரர்களைத் திடுமென வெளிப் பட்டுத் தாக்கியதும் மறைந்தனர். அதனால், நுழைந்தவர் ஒவ்வொருவரும் வாளுக்கு இரையாகி மண்ணில் புரண்டு மடிந்தனர்.

இதையறிந்த ஆங்கிலப் படைத் தலைவன் தன் வீரர்களை முன்னேறவேண்டாமென்று தடுத்து, கிச்சுக் குடுக்கையில் நச்சுப் புகையை நிரப்பிக் கோட்டைக்குள் எறியுமாறு ஏற்பாடு செய்தான். கிச்சுக் குடுக்கை என்பது நெருப்புள்ள சுரைக் குடுக்கையாகும். இதில் நஞ்சுள்ள புகை நிரம்பியிருந்ததால், இப்புகை கோட்டை

யினுள் பரவி அங்கிருந்த வீரர் அனைவரையும் மூச்சுத் திணறி மயங்கி விழும்படிசெய்தது. இந்த அழிவுச் செயலால் பலநூறு வீரர்கள் பதைத்து மாண்டனர். எஞ்சியவர்கள், நச்சுப் புகைக்கு அஞ்சி வெளியேறி ஓடத்தலைப்பட்டனர். வேறு வழியின்றி ஊமைத்துரை யும் அவர்களுடன் வெளியேறினார்.

பாஞ்சை வீரர்கள் வெளியேறி ஓடுவதைக் கண்ட ஆங்கிலவீரர் சிலர், அவர்களைப் பின்தொடர்ந்து துரத்திச் சென்றனர். மற்றவர்கள் பாஞ்சையைக் கைப்பற்ற நினைத்து, நச்சுப் புகை கலைந்துபோன பிறகு கோட்டைக் குள் விரைந்து புகுந்தனர். அப்பொழுது யாவரும் வியக்கத்தக்க ஒரு வீர நிகழ்ச்சி எதிர்பாராத நிலையில் ஏற்பட்டது.

கோட்டைக்குள் பல வீடுகள் அமைந்திருந்தன. ஊமைத்துரைக்கு நெருங்கிய உறவினரான பலரும் இவ் வீடுகளிலேயே வாழ்ந்துவந்தனர். பகைவர்கள் கோட்டைக்குள் நுழைந்ததையறிந்ததும், இவ்வீடுகளி லிருந்த மங்கையர் பலர், தம் மானத்தைக் காத்துக் கொள்ள விரும்பி ஈட்டியால் குத்திக்கொண்டும் வாளால் வெட்டிக்கொண்டும் மடிந்தனர்; சிலர் கிணறுகளில் வீழ்ந்தும், தீயை வளர்த்து அதில் இறங்கியும் மாண்டனர்.

இச்செயலைக் கண்டு வியந்தவண்ணம் ஆங்கில வீரர்கள் வெற்றி வீறுடன் வீதிகளில் நடந்துவந்தனர். அவர்களினிடையே படைத்தலைவன் ஒருவனிருந்தான். அவர்கள் ஒரு வீட்டினருகில் வரும்பொழுது ஒரு வேல் படைத்தலைவனது மார்பில் பாய்ந்தது. அவன் அங்கேயே மல்லாந்து வீழ்ந்து மடிந்தான். அருகில்வந்த வீரர்கள் அஞ்சி நின்று, வேல் எறிந்தவர் யாரென்று வீட்டின்பக்கம் பார்த்தனர். அப்பொழுது ஒரு வீட்டின் வெளியில் நின்றுகொண்டிருந்த இளமங்கையொருத்தி, விரைந்து வீட்டுக்குள் செல்வதைக் கண்டு ஓடிப்போய்ப் பார்த்தனர். அதற்குள் அவள் ஈட்டியால் குத்திக் கொண்டு தரையில் மடிந்து கிடந்தாள்.

இவ்வீர மங்கையின் பெயர் மல்லம்மாள் என்பதாம்; வீரலட்சுமி என்றும் கூறுவர். இவள், ஊமைத்துரையின் நெருங்கிய உறவினள்; இருபத்தொரு வயது நிரம்பியவள். பகைவர்கள் கோட்டையைக் கைப்பற்ற நுழைந்து உள்ளே வருவதைக்கண்டு இவள் ஆத்திரங் கொண்டாள். ஆயினும் வேறு வழியின்றி மானத்தைக் காக்க இறக்கத் துணிந்தாள். அப்பொழுது படைவீரர்கள் தன் வீட்டருகே வந்துவிடவும், சுவரில் சாத்தியிருந்த வேலை யெடுத்துக்கொண்டு விரைந்து வெளியே வந்து வெள்ளைத் துரையின் மார்பைக் குறி வைத்து வீசியெறிந்தாள். பகைவன் ஒருவன் பதறி வீழ்ந்தானென்பதைக் கண்ணால் கண்டதும் களிப்புடன் திரும்பி வீட்டினுள் சென்று ஈட்டியின் துணையால் இறந்தாள்.

வீர மல்லம்மாளின் இணையற்ற துணிவையும் வீரத்தையும் கண்ட ஆங்கிலவீரர்கள் அனைவரும் அதிசயித்தனர். இவள் புகழ் எங்கும் பரவியது. இவள் பாஞ்சாலங்குறிச்சி வரலாற்றில் அழியாப் புகழ்பெற்று என்றும் வீர மங்கையாகவே விளங்குகிறாள்.

## குறிப்பு

இது, துணிகர நிகழ்ச்சியை விளக்கும் பாடமாகும். இதில், பாஞ்சாலங்குறிச்சி வரலாற்றில் ஒரு பகுதியும், ஒரு மங்கையின் துணிவுச் செயலும் விளக்கப்படுகின்றன.

## கேள்விகள்

1. பாஞ்சாலங்குறிச்சி என்ற ஊர் ஏற்பட்ட வரலாறு யாது?
2. வீரபாண்டியக் கட்டபொம்மன் என்பவர் யார்? அவர் தூக்கி லிடப்பட்டு இறந்தது ஏன்?
3. ஊமைத்துரை என்பவர் யார்? இவரது வீரச் செயலைத் தெரிவிக்க.
4. பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையில் நடந்த போரை விவரிக்க.
5. பாஞ்சை வீரரின் தோல்விக்குக் காரணமென்ன?
6. வீர மல்லம்மாளின் வீரச்செயல் யாது? அவள் வரலாற்றைத் தெரிவிக்க.

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக :—பண்பு, மறம், வாணிகம், கப்பம், இசைந்தனர், திரண்டு, முற்றுகை, ஏகினர், தகர்ந்து, கஞ்ச, எஞ்சியவர்கள்.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக :—சூட்டினான், மறைமுகமாக, விடுவித்து, வெற்றி வீறுடன், இணையற்ற.

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக :—வீரப்பண்பு, சிற்றரசர், கடுஞ்சினம், நிலவறைகள், நச்சுப்புகை.
2. ஊமைத்துரை, மல்லம்மாள்—இப்பெயர்கள் மக்களைக் குறிப்பதால் உயர்திணையாகும். வாள், வேல்—இப்பெயர்கள் மக்களல்லாத மற்றப்பொருள்களைக் குறிப்பதால் அஃறிணையாகும்.
3. பின்வருவனவற்றிற்குத் திணை கூறுக :—மனிதர், கம்பர், கிளி, மலை, மண், வீரர், புத்தகம், ஆசிரியர், மாணவர்.

### III. வாக்கியப் பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் ஏற்ற எழுவாய்களை வைத்து எழுதுக :-
   (1)—— ஆங்கிலேயருக்குக் கப்பம் செலுத்த மறுத்தான். (கட்டபொம்மன், ஊமைத்துரை)
   (2)—— நிலவறையில் பதுங்கியிருந்து போர்செய்தனர். (ஆங்கில வீரர், பாஞ்சை வீரர்)
2. கோடிட்ட இடங்களில் ஏற்ற பயனிலைகளை வைத்து எழுதுக :-
   (1) சிற்றரசர்கள் கப்பம் செலுத்த ——. (இசைந்தனர், மறுத்தனர்)
   (2) கோட்டைக்குள் பல வீடுகள் ——. (இருந்தன, இருந்தது)

### IV. கட்டுரைப் பயிற்சி

1. 'பாஞ்சாலங்குறிச்சிப் போர்' என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.
2. மல்லம்மாளின் வீரச்செயலை அவளே கூறுவதுபோல் எழுதுக.

# 13. வானொலி

"அம்மா! இன்று எங்கள் பள்ளிக்கூடத்திலிருந்து நானும் இன்னும் மூன்று பெண்களும் போய் ரேடியோ வில் பேசினோமே! நீங்கள் கேட்டீர்களோ? எங்கள் ஆசிரியர் அழைத்துக்கொண்டுபோய்ப் பேசச் சொன்னார்!" என்று சிறுமி மணிமேகலை, பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டிற்கு வந்ததும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தாள். அதைக்கேட்ட தாய் களிப்படைந்து 'நாங்கள் உன் பேச்சைக் கேட்டோம்' என்றாள்.

அதற்குள் அங்கு வந்த அவள் தமக்கையாகிய தமயந்தி "எங்களுக்குத் தெரியுமே! நீ பாரதியாரின் வரலாற்றைப்பற்றிப் பேசினாய். நாங்கள் எல்லோரும் உன் பேச்சை நம் வீட்டிலிருக்கும் ரேடியோவில் கேட்டோம். ஆசிரியர் எழுதிக்கொடுத்ததை மனப்பாடம் செய்து நன்றாய்ப் பேசினாய்" என்று பாராட்டிச் சொன்னாள்.

மணிமேகலை :—இது மிகவும் வியப்பான கருவி! எங்கேயோ ஓரிடத்தில் பேசினால், அது எல்லாவிடங்களிலும் கேட்கிறதே! இது எப்படிக் கேட்கிறது?

தமயந்தி :—இதற்கு முக்கியமான ஆதாரம் மின்சாரம்தான். இதன் துணையாலேயே வானொலி நிலையத்தில் ஒலிபரப்புகிறார்கள். எவ்வாறு ஒலி பரப்பப்படுகிறது என்பதை விவரமாய்ச் சொல்கிறேன், கேள். நீ இன்று வானொலி நிலையத்திற்குச் சென்று 'மைக்' என்னும் கருவியின்முன் அமர்ந்து பேசினாயல்லவா? இக் கருவி உன் குரல் ஒலியை வாங்கும் ஆற்றலுடையது. அது அவ்வொலியை வாங்கி மின்



சார அலைகளாக மாற்ற உதவுகிறது. கூட்டங்களில் பேசுவோர் மைக்கின்முன் நின்று பேசுவதைப் பார்த்திருக்கிருயல்லவா? அதுவேபோன்ற கருவி தான் வாஞெலி நிலையத்தில் இருக்கிறது. இங்ஙனம் நாம் பேசுவதோ பாடுவதோ மின்சார அலைகளாக மாற்றப் பட்டு, விண் அலைகளின் உதவியால் குறிப்பிட்ட அளவுள்ள இடத்திற்கு அனுப்பப்படுகின்றன. நமது வீட்டிலிருக்கும் வாஞெலிப் பெட்டியாகிய 'வாங்கிகள்' அவ்வொலியை ஏற்று, பேச்சையோ பாட்டையோ தெளிவாய்க் கேட்கும்படி வெளியிடுகின்றன.

**மணிமேகலை** :—இது எவ்வளவு விந்தையான செயல்! மின்சாரத்தின் பெருமையே பெருமை!

**தமயந்தி** :—மணிமேகலை! மின்சாரத்தின் பெருமையைக் கேள். மின்சார அலை ஒரு விஞடியில் 1,86,000 மைல் தொலைவு விரைந்துசெல்லும் இயல்புடையது. இது 'ஈதர்' என்னும் 'விண்' வழியே கொண்டுசெல்லப் படுகிறது. இங்ஙனம் மின்சார அலை எல்லாவிடங்களிலும் பரவிச் செல்வதால், ஒருவரின் பேச்சை அதே வேளையில் எல்லோரும் கேட்கமுடிகிறது. ஒலியை ஏற்கும் கருவி, மின்சார அலைகளாக மாற்றும் கருவிகள், அவ்வொலியை வாங்கி வெளியிடும் கருவி ஆகிய எல்லாம் சேர்ந்த தொகுதியே 'வாஞெலி' ஆகும். இதையே நாம் 'ரேடியோ' என்கிருேம்.

**மணிமேகலை** :—இவ்வளவும் சேர்ந்ததுதாஞ ரேடியோ? நான் நமது வீட்டிலிருக்கும் பெட்டியைத் தான் 'ரேடியோ' என்று நினைத்திருந்தேன்! பேசுகிற இடம் வேறு, ஒலிபரப்பும் இடம் வேரு?

**தமயந்தி** :—ஆமாம். 'மைக்' இருக்குமிடம் நகரத்தின் அருகில் இருக்கும். ஒலிபரப்பும் நிலையம் சிறிது தூரத்தில் இருக்கும்; நாம் இருக்கும் திருச்சிராப்பள்ளியில் புகைவண்டிச் சந்திப்புக்கு அருகில் வாஞெலி நிலையம் இருப்பது உனக்குத் தெரியும். இதன் ஒலிபரப்பு

நிலையம் கிழக்கே ஏழு மைல் தூரத்தில் திருவெறும்பூருக்கு அருகில் இருக்கிறது. ஒருநாள் தஞ்சாவூருக்குப் போகும்பொழுது இந்நிலையத்தை இரயிலிருந்தபடியே உனக்குக் காண்பிக்கிறேன்.

**மணிமேகலை** :—வானொலிப்பெட்டி எல்லாவிடங்களிலும் இருக்கிறதா?

**தமயந்தி** :—வீடு, பள்ளிக்கூடம், கடை, பூங்கா முதலிய பலவிடங்களிலும் வானொலிப் பெட்டிகள் பெருகியிருக்கின்றன. இவற்றால் வானொலி நிலையத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் உடனே நாடெங்கும் பரவுகின்றன.

**மணிமேகலை** :—இந்த வானொலியைக் கண்டுபிடித்தவர் யார்?

**தமயந்தி** :—இப்பொழுது வழங்கும் வானொலி ஏற்பாட்டைக் கண்டுபிடித்தவர் மார்க்கோனி என்பவர். ஆனால், இதற்குரிய அடிப்படையுண்மையை ஆராய்ந்து கண்டறிந்தவர் இந்திய நாட்டு விஞ்ஞானியான ஜகதீச சந்திர போஸ் என்பவர். அவர் தாமறிந்த விஞ்ஞான உண்மையைக்கொண்டு பெரும் பொருள் திரட்ட நினைக்கவில்லை. அதனால், அவருடைய பெருந்தன்மை விளங்குகிறது. மார்க்கோனி என்பவர் இத்தாலி நாட்டு விஞ்ஞானப் பேரறிஞர். அவர் 1896-ஆம் ஆண்டில் கம்பியில்லாத்



ஜகதீச சந்திர போஸ்

ந்தி முறையைக் கண்டறிந்தார். அதிலிருந்து வளர்ந்ததுதான் வானொலி.

மணிமேகலை :—நமது நாட்டில் எங்கெங்கே வானொலி நிலையங்கள் இருக்கின்றன?

தமயந்தி :—இந்தியாவில் முதன்முதலாக 1927-ஆம் ஆண்டில் பம்பாயில்தான் வானொலி நிலையம் ஏற்பட்டது. பிறகு, டில்லி, கல்கத்தா, சென்னை, திருச்சிராப்பள்ளி, மைசூர் முதலிய பலவிடங்களில் வானொலி நிலையங்கள் ஏற்பட்டுள்ளன. சென்னை நிலையம் 1938-ஆம் ஆண்டிலும், திருச்சிராப்பள்ளி நிலையம் 1939-ஆம் ஆண்டிலும் ஏற்பட்டன. இவ்விரண்டு நிலையங்களும் தமிழ் மக்களாகிய நமக்கு மிகவும் பயன்தரும் முறையில் ஒலிபரப்புகின்றன. இந்நிலையங்களிலிருந்து பள்ளிக்கூட மாணவர்களுக்குத் தனியாக ஒலிபரப்புவது உனக்குத் தெரியும். விஞ்ஞானம், வரலாறு, வானநூல், இலக்கியம், கலை, நாடகம், கைத்தொழில், தேசியம் முதலிய பல செய்திகளை நாம் கேட்டறியலாம். இவற்றையெல்லாம் நீ கேட்டறிந்தால் உன் அறிவு வளர்ச்சியடையும்.

மணிமேகலை :—நான் இனிமேல் தவருமல் வானொலியில் வரும் பேச்சைக் கேட்கிறேன், அக்கா! வானொலியால் வேறு நன்மையில்லையா?

தமயந்தி :—எவ்வளவோ நன்மைகள் இருக்கின்றன. சிற்றூர்களில் வாழும் மக்களுக்குப் பொது வானொலிப் பெட்டிகள் அமைத்து விவசாய முறைகள், கைத்தொழில் முறைகள், சுகாதார முறைகள், நாட்டுச் செய்திகள் முதலியவைகளை அவர்களுக்கென்றே ஒலிபரப்புகிருர்கள். இதனுல் கல்வியறிவில்லாத பெரும்பான்மையான மக்கள் கேள்வியறிவால் பல துறைகளில் முன்னேறி வருகிருர்கள். நம் தலைவர்களாகிய ஜவஹர்லால் நேரு, இராசகோபாலாச்சாரியார் முதலியோர் பேசும் பேச்சுக்களையெல்லாம் நம் வீட்டிலிருந்தே கேட்டு மகிழ்கிறோம். இவைபோல் பல நன்மைகள் உண்டு.

இப்பொழுது வானொலியைப்பற்றி என்னென்ன தெரிந்து கொண்டாய்?

மணிமேகலை :—வானொலி எவ்வாறு ஒலிபரப்புகிறது? கண்டுபிடித்தவர் வரலாறு, வானொலி நிலையத்தின் விவரம், ஒலிபரப்பு நிலையம் உள்ள இடங்கள், வானொலியின் நன்மைகள் முதலியனவெல்லாம் தெரிந்து கொண்டேன். சரிதானா, அக்கா?

தமயந்தி :—சரிதான். வா, சிற்றுண்டியருந்தப் போவோம்.

## குறிப்பு

இது, விஞ்ஞானம் பற்றிய பாடமாகும். இதில் வானொலியின் விவரங்கள், பயன் முதலியவை விளக்கப்பட்டுள்ளன.

## கேள்விகள்

1. வானொலியில் எவ்வாறு ஒலி பரப்புகிறார்கள்?
2. 'மைக்' 'வாங்கிகள்'—இவற்றின் செயல்கள் என்ன?
3. மின்சாரத்தின் இயல்பு யாது?
4. வானொலி என்று நாம் எதைக் குறிப்பிடுகிறோம்?
5. வானொலியைக் கண்டுபிடித்தவர் யார்? அதன் அடிப்படை உண்மையை அறிந்தவர் யார்?
6. இந்தியாவில் வானொலி நிலையங்கள் எங்கெங்கே உள்ளன?
7. வானொலியால் ஏற்படும் பயன்கள் யாவை?

## பயிற்சி

I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக :—ஒலி, தமக்கை, ஆற்றல், பூங்கா, தொகுதி, பேரறிஞர்.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக :—மின்சாரம், வானொலி நிலையம், வாங்கிகள், வினாடி, நிகழ்ச்சிகள், வானநூல், விஞ்ஞானம்.

II. கட்டுரைப் பயிற்சி

1. வானொலியில் ஒலிபரப்பும் முறையைப்பற்றி விவரித்து எழுதுக.
2. 'வானொலியின் பயன்' என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.

# 14. உடல் நல வழிகள்

நாம் உயிரோடு வாழ்வதற்கு உணவு இன்றியமை யாத பொருளாக இருக்கின்றது. உணவே நமது உட லுக்கு வலிமையையும் வளர்ச்சியையும் கொடுக்கிறது. ஆகையால், நமக்கு வேண்டிய உடல் வலிமையையும் வளர்ச்சியையும் நாம் அடையவேண்டுமானால் எத்தகைய உணவுகளைச் சாப்பிடவேண்டுமென்று அறியவேண்டும் உணவைப்பற்றிய சில செய்திகளை முதலில் ஆராய்ந் தறிவோம்.

தென்னிந்தியாவில் நாம் அரிசியை முதன்மையான உணவாகக் கொள்கிறோம். வட இந்தியாவில் கோதுமை முக்கிய உணவாகக் கொள்ளப்படுகிறது. ஆனால் நாம் அரிசியையோ, கோதுமையையோ தனி உணவாகக் கொள்ளக்கூடாது. ஏனென்றால், அரிசி, கோதுமை முதலிய தானியங்களில் வேலை செய்வதற்கு வேண்டிய வலிமையைக் கொடுக்கும் சத்துப் பொருள்கள் மிகுதி. ஆனால், உடல் வளர்ச்சிக்குத் தேவையான பொருள்கள் இவைகளில் மிகக்குறைவு. பருப்பு வகைகளில் வளர்ச் சிக்கு வேண்டிய சத்துப்பொருள்கள் மிகுதியாக இருக் கின்றன. ஆகையால் நாம் துவரை, பட்டாணி, உளுந்து முதலிய பருப்புவகைகளை நமது உணவுடன் கலந்து சாப்பிடவேண்டும். பால், முட்டை, மீன், மாமிச வகைகள் முதலிய பொருள்களிலும் வளர்ச்சிக்கு வேண் டிய சத்துப்பொருள்கள் மிகுதியாக உள்ளன. நமது உடலுக்குக் கொழுப்புப் பொருளும் வேண்டுமாகையால் கொழுப்புள்ள பொருள்களாகிய நெய், நல்லெண்ணெய் முதலிய வகைகளையும் உணவுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும். நமது உடலிலுள்ள எலும்பு, பல், நகம் முதலியவைகளை வளர்ப்பதற்கு உப்புச் சத்து தேவை. இதைப் பெறுவதற்குப் போதுமான காய்கறிகளையும் பழவகைகளையும், பால், மோர் முதலியவற்றையும் நாம் உட்கொள்ளவேண்டும்.

இப்பொருள்களைத் தவிர உடலின் வளர்ச்சிக்கும், நோய்களைத் தடுப்பதற்கும் உயிர்ச்சத்துக்களாகிய 'வைட்டமின்கள்' மிகவும் அவசியம் என்று கண்டு பிடித்திருக்கின்றனர். இந்த வைட்டமின்கள் பச்சைக் காய்கறிகள், பழங்கள் கீரைகள், முட்டை, மீன் எண்ணெய், பால் ஆகியவற்றில் அதிகமாக இருக்கின்றன. அரிசியில் உமிக்கு அடுத்தாற்போல் இருக்கும் தவிட்டுப் பாகத்தில் இந்த உயிர்ச் சத்துக்கள் அதிகமாக இருக்கின்றன. இயந்திரத்தில் நெல் தீட்டப்படும்போது இந்தப் பாகம் நீங்கிவிடுகிறது. ஆகையால் நாம் இயந்திரத்தில் தீட்டின அரிசியை உபயோகிக்கக்கூடாது. கைக்குத்தல் அரிசியே சிறந்தது.

நாம் உடல் நலத்தோடு இருக்கவேண்டுமானால் எல்லாச் சத்துக்களும் கலந்த உணவையே உட்கொள்ளவேண்டும். ஒரு வீடு கட்டுவதற்கு பலவகைப் பொருள்கள் வேண்டுவதைப்போலவே நம் உடம்பைக் கட்டுவதற்கும் பலவகைப் பொருள்கள் வேண்டும். ஆகையால், நமது உணவு நமக்கு வேண்டிய எல்லாச் சத்துக்களும் அமைந்த கலப்பு உணவாக இருக்க வேண்டும்.

உணவைச் சமைக்கும்போது நாம் சில முறைகளைக் கவனிக்கவேண்டும். நாம் அரிசி மாவாலான இட்டிலி, பிட்டு முதலியவைகளை நீராவியால் வேகவைக்கிறோம். இவ்வாறு வேகவைத்த உணவுகள் சிறந்தவை. ஏனென்றால் ஆகாரத்திலுள்ள சத்து, தண்ணீரில் கரைந்து குறைவதில்லை; எளிதில் ஜீரணமாகும். பலர் அரிசியைச் சமைக்கும்போது மேல் கஞ்சியை வடிகட்டிவிடுகின்றனர். அது நல்லதன்று. அப்படிச் செய்வதால் அரிசியிலுள்ள வைட்டமின் சத்து எல்லாம் போய்விடும். பலர் காய்கறிகளையும் தண்ணீரில் வேகவைத்து வெந்த பிறகு, அவற்றைப் பயன்படுத்திக்கொண்டு, சத்தெல்லாம் இறங்கியிருக்கும் தண்ணீரை வீணாக்கி விடுகின்றனர். இவ்வாறு செய்யக்கூடாது. அளவாகத் தண்ணீரை

னூற்றி வேகவைத்து வைட்டமின்கள் வீணுகாதபடி சமைக்கவேண்டும். சிற்சில காய்களையும் பழங்களையும் சமைக்காமல் சாப்பிடுவதால் வைட்டமின்களை நாம் பெறக்கூடும்.

நாம் உயிர் வாழ்வதற்கு உணவைப்போல் காற்றும் நமக்கு இன்றியமையாததாம். ஆகையால் நாம் வசிக்கும் அறைகளில் காற்றோட்டம் இருக்கவேண்டும். நாம் சுவாசிக்கும்போது காற்றிலுள்ள பிராணவாயுவை உட்கொண்டு கரியமிலவாயுவை வெளிவிடுகிறோம். காற்றோட்டமில்லாவிடில் அறைகளிலுள்ள காற்றில் கரியமிலவாயு அதிகரிக்கும். நாம் அக்காற்றைச் சுவாசித்தால் தலைவலி, மயக்கம், பசியின்மை, மலச்சிக்கல் முதலான பல நோய்கள் உண்டாகும்.

நாம் வசிக்கும் அறைகளில் பலகணிகள் எதிர் எதிராக வைக்கப்படவேண்டும். அதிகம் குளிரெடுத்தாலும் நாம் போர்வையைப் போட்டு மூடிக்கொள்ள வேண்டுமேயொழிய பலகணிகளை மூடலாகாது. காற்றோட்டமில்லாத அறைகளில் வசிப்பவர்கள் அடிக்கடி சுவாச சம்பந்தமான நோய்களால் துன்புறுவர். மருத்துவச் சாலைகளில் எப்போதும் கதவுகளையும் பலகணிகளையும் திறந்தே வைத்திருக்கின்றனர். அங்ஙனமே நாமும் நம் வீடுகளிலும் செய்யவேண்டும்.

காற்றைப்போலவே கதிரவனொளியும் நமக்கு நன்மை தருகின்றது. நோய்களை உண்டாக்கும் நச்சுக் கிருமிகள் சிலவற்றைக் கதிரவனது கிரணங்கள் அழித்து விடும். என்புருக்கிநோய்க் கிருமிகள் கதிரவன் வெம்மையால் இறந்து விடுகின்றன. ஆகையால் நாம் குடியிருக்கும் வீடுகளில் கதிரவனொளி புகும்படி கதவுகளையும் பலகணிகளையும் திறந்தே வைக்கவேண்டும்.

நாம் உடல் நலத்தோடு வாழவேண்டுமானால் 'கூழானாலும் குளித்துக்குடி', 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்ற பழமொழிகளின்படி நம் உடலையும் ஆடை

களையும் தூய்மையாக வைத்துக்கொள்ளவேண்டும். ஆகையால் நாம் நாள்தோறும் சோப்பையாவது, சிகைக் காய்ப் பொடியையாவது உபயோகித்து சுத்தமான தண்ணீரில் குளிக்கவேண்டும். ஆடைகளைத் தூய்மையாக வைப்பதற்கு அவைகளைத் துவைக்கின்றோம். துணிகளிலுள்ள எண்ணெய்ப் பசையுள்ள அழுக்குகளைப் போக்க நாம் சோப்பைப் பயன்படுத்துகின்றோம். குளிர்ந்த நீரைக் காட்டிலும் வெந்நீர் அழுக்கை விரைவில் போக்கும். சில வேளைகளில் எண்ணெய், மை முதலியவைகளை ஊற்றிக்கொள்வதால் ஆடைகள் கறையாகின்றன. கறைகளைப்போக்க, அவைகள் எவற்றால் உண்டானவை யென்று முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். பிறகு அப்பொருள் கரையக்கூடிய திரவத்தை உபயோகித்துக் கறையை எடுத்துவிடலாம். வர்ணக்கறையைக் கற்பூரத் தைலத்தால் எடுத்துவிடலாம். மைக் கறையை எலுமிச்சம்பழச் சாற்றால் எடுத்துவிடலாம். இரத்தக் கறையைப் போக்குவதற்கு உப்பைக் கரைத்த வெந்நீரில் ஊறவைத்து நன்றாக அலசவேண்டும்.

நமக்கு உண்டாகும் நோய்கள் பெரும்பாலும் நச்சுக் கிருமிகளினாலேயே உண்டாகின்றன. இந்த நச்சுக் கிருமிகள் நாம் சுவாசிக்கும் காற்றின் மூலமாகவும், குடிக்கும் தண்ணீரின் மூலமாகவும், சாப்பிடும் உணவின் மூலமாகவும் நம் உடலினுள் சென்று நோய்களை உண்டாக்குகின்றன. ஆகையால், நாம் நமது வீடுகளின் சுற்றுப்புறங்களையும், உட்புறங்களையும் அழுக்கின்றி வைத்துக்கொள்ளவேண்டும். தண்ணீரை எப்பொழுதும் நன்றாகக் கொதிக்கவைத்து வடிகட்டிக் குடிக்கவேண்டும். கொதிக்கவைப்பதால் தண்ணீரிலுள்ள நோய்க்கிருமிகள் இறந்துபோகின்றன. நம் ஆகாரத்தையும் தூசி படியாமல் மூடிவைக்கவேண்டும். வியாதிகளைக் கொண்டுவரும் நச்சுக்கிருமிகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ஈ, கொசு முதலிய பூச்சிகளாலும் கொண்டுபோகப்படுகின்றன.

ஈக்கள் வாந்திபேதி, சீதபேதி, டைபாயிட் முதலிய கொடிய வியாதிகளைப் பரவச்செய்கின்றன. ஆகவே, ஈக்கள் மொய்க்காதபடி நாம் உணவுப்பொருள்களை மூடி வைக்கவேண்டும். திறந்து வைக்கப்பட்ட தின்பண்டங்களை ஒருபோதும் குழந்தைகளுக்கு வாங்கிக்கொடுக்கக் கூடாது. ஈக்கள், சாக்கடைகளிலும், குப்பை மேடுகளிலும் சாணக்குவியல்களிலும் முட்டையிட்டுப் பெருகி வளர்கின்றன. ஆகையால் ஈக்கள் பரவாமலிருக்க நமது வீடுகளையும், வீட்டின் சுற்றுப்புறங்களையும் குப்பை, சாணம் முதலிய அழுக்குக் குவியல்களில்லாமல் தூய்மையாக வைத்துக்கொள்ளவேண்டும்.

கொசுக்கள், மலேரியா என்னும் குளிர் காய்ச்சலைப் பரவச்செய்கின்றன. ஆகையால் கொசுக்கள் பெருகுவதை நாம் தடுக்கவேண்டும். ஓடாமல் தங்கியுள்ள நீர் நிலைகளிலேயே கொசுக்கள் முட்டை யிடுகின்றன. அப்படி நிற்கும் தண்ணீரின்மேல் மண்ணெண்ணெய் ஊற்றிவரவேண்டும். கொசுக்கள் மிகுதியாக உள்ள இடங்களில் நாம் கொசுவலைக்குள் தூங்கவேண்டும்.

எனவே, நாம் நமது உடல் நலமுடனிருக்க மேற்கூறியவற்றைக் கடைப்பிடித்து ஒழுகி நல்வாழ்வு அடைவோமாக.

## குறிப்பு

இது, சுகாதாரம் பற்றிய பாடமாகும். இதில் உணவு, உடை, காற்று, இருப்பிடம் முதலியவை பற்றிய செய்திகள் விளக்கப்படுகின்றன.

## கேள்விகள்

1. நாம் எத்தகைய உணவுகளை உட்கொள்ளவேண்டும்?
2. வைட்டமின்கள் எப்பொருள்களில் அதிகம் காணப்படுகின்றன?
3. உணவு சமைக்கும்போது கவனிக்கவேண்டுவன யாவை?
4. காற்றோட்டமில்லாத அறைகளில் வசிப்பதால் ஏற்படும் கெடுதிகள் யாவை?

5. நமது உடலினுள் நச்சுக்கிருமிகள் எவ்வெவற்றின்மூலமாக உட்செல்லுகின்றன? அவற்றைத் தடுக்க நாம். என்ன செய்யவேண்டும்?

6. ஈக்கள், கொசுக்கள் முதலியவற்றால் ஏற்படும் நோய்களைத் தெரிவிக்க.

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—வலிமை, பலகணி, கதிரவன், என்பு, வெம்மை, தூய்மை, கறை, கடைப்பிடித்து.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—சத்துப் பொருள்கள், கொழுப்புப் பொருள், கலப்புணவு, கிருமிகள், குவியல்.

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—தென்னிந்தியா, காற்றோட்டம், பசியின்மை, மலச்சிக்கல், மருத்துவச்சாலை, நச்சுக்கிருமி, என்புருக்கி, உட்புறம்.
2. தஞ்சாவூர் என்பது, 'தஞ்சை' என்று சுருங்கி வழங்குகிறது. இது மரூஉப் பெயர் எனப்படும். பாஞ்சை, குடந்தை, காஞ்சி, புதுவை, கோபி, கோவை—இவை எவற்றின் மரூஉப் பெயர்கள்?

### III. வாக்கியப் பயிற்சி

1. பின் வருவனவற்றைச் செய்வினை வாக்கியங்களாக மாற்றி எழுதுக:—
   (1) கொசுக்களால் குளிர் காய்ச்சல் ஏற்படுகிறது.
   (2) கதிரவன் ஒளியால் நோய்க் கிருமிகள் அழிகின்றன.
2. பின் வருவனவற்றைச் செயப்பாட்டுவினை வாக்கியங்களாக மாற்றி எழுதுக:—
   (1) நாம் அரிசி உணவை உண்கிறோம்.
   (2) இயந்திரம் அரிசியைத் தீட்டுகிறது.

### IV. கட்டுரைப் பயிற்சி

1. 'உணவும் உடையும்' என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.
2. நோய் உண்டாகும் காரணங்களை விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.

# 15. உடல் நலம் பேணல்

உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம் :
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ ? 1

சுத்த முள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு ; நீஅதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே. 2

காலை மாலை உலாவிநிதம்
காற்றுவாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே ! 3

கூழை யேநீ குடித்தாலும்
குளித்த பிறகு குடி, அப்பா !
ஏழை யேநீ ஆனாலும்,
இரவில் நன்றாய் உறங்கப்பா ! 4

தூய காற்றும் நன்னீரும்,
சுண்டப் பசித்த பின்உணவும்,
நோயை ஓட்டி விடும், அப்பா !
நூறு வயதும் தரும், அப்பா ! 5

அருமை உடலின் நலமெல்லாம்
அடையும் வழிகள் அறிவாயே ;
வருமுன் நோயைக் காப்பாயே ;
வையம் புகழ வாழ்வாயே. 6

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

# 16. தோட்டக் கலை

நம் நாட்டில் நீர்வளமும் நிலவளமும் மிகுதியாய் உள்ளன. அவற்றால் நெல், கோதுமை முதலிய உணவுக்குரிய தானியங்கள் அளவில்லாமல் விளைகின்றன. இத்தானியங்களைப் பயிர் செய்து விளைவிப்பது வேளாண்மை அல்லது விவசாயம் என்று சொல்லப்படும். இத்தானியங்கள் விளையும் நிலங்கள் **நன்செய்** எனப்படும். கேழ்வரகு, கம்பு, சோளம் முதலியவை விளையும் நிலங்கள் **புன்செய்** எனப்படும். ஆனால், காய்கறிகள், பழங்கள், மலர்கள் முதலியவை உண்டாகும் இடம் **தோட்டம்** எனப்படும். இத்தோட்டங்களைப் பற்றிய அறிவே தோட்டக் கலையாகும்.

ஒரு நாட்டின் செழிப்புக்கு வேளாண்மை மிகுந்திருக்க வேண்டியதுபோலவே, தோட்டங்களும் பெருகியிருக்கவேண்டும். இவற்றால் உணவுக்குரிய பொருள்கள் கிடைப்பதோடு கண்ணுக்கினிய காட்சியும், மனத்திற்கினிய இன்பமும் கிடைக்கின்றன. செடிகளின் செழுமையும், கொடிகளின் தழைவும், மலர்களின் மணமும், கனிகளின் இனிமையும் கண்ணுக்கும், மூக்குக்கும், நாவுக்கும் இன்பமளிப்பனவன்றோ? இன்னும் எழில் நிறை பொழிலும், அப்பொழில் தரு நிழலும், அந்நிழல் தரும் நலனும், மெல்லிளந் தென்றலும் உள்ளத்தைக் குளிர்விப்பனவன்றோ?

உழைப்பால் களைத்த மக்களின் அறிவுக்கு அக்களைப்பையகற்றி புத்துணர்ச்சியும் எழுச்சியும் ஊட்ட வல்லது அழகிய தோட்டங்களேயாகும். அதனாலேயே இக்காலத்தில் இல்லந்தோறும் செடி கொடிகளை வைத்துப் பயிர்செய்து எழில்பெற வளர்க்கும் முறை ஏற்பட்டுள்ளது; நகரங்களில் ஆங்காங்குப் பூங்காக்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

மைசூர் நகரம் பூங்காக்களால் பொலிவுபெற்றுத் திகழ்வதை அங்குச் சென்று வந்தவர்களெல்லாம் நன்கறிவர். புதுப்புதுச் செடிகள் பூத்துப் பார்ப்பவர் கண் பூக்கச் செய்யும் செய்குன்றுகளும், சிறு மரக்காவும், குளமும், ஓடையும், சதுக்கமும் அந்நகரை அணிசெய்கின்றன. பிருந்தாவனத்தின் அழகை எங்ஙனம் வருணிப்பது?



பிருந்தாவனம்

நம் வீட்டைச் சுற்றிலும் தோட்டம் அமைத்து அழகு செய்யவும் அதன் பயனை அனுபவிக்கவும் விரும்பினால், செடி கொடிகளின் அமைப்பையும், அவைகளின் தன்மைகளையும், அவற்றை வளர்க்கும் வகைகளையும் நன்கறிவது இன்றியமையாததாகும். ஒரு தோட்டத்தில் கண்ணைக்கவரும் பன்னிறப் பூச்செடிகளும், பழந்தரும் செடி கொடிகளும், கறிக்குதவும் காய்களைத்தரும் செடி கொடிகளும், மணமுள்ள மலர் மரங்களும் இருக்கவேண்டும்.

நீர்வளமும் நிலவளமும் தக்க எருவும் இருந்தால் செடிகொடிகள் வளமுடன் வளருமென்று பலர் எண்ணுவர். ஆனால், இவையேயன்றி, தோட்டத் தலைவனுடைய ஆர்வமும் கண்காணிப்பும் மிக இன்றியமை

யாதனவாகும். நல்ல விதைகளையும் அரிய செடிகளையும் பொருட்செலவு செய்து வரவழைத்தால்மட்டும் போதாது; குழந்தைகளைப் போற்றி வளர்ப்பது போலவே அவைகளை அன்றாடம் கவனித்து வளர்க்க வேண்டும்.

செடியின் அடிமுதல் நுனிவரையுள்ள வேர், தண்டு, கிளை, இலை, பூ, காய், கனி இவைகளின் உறுப்புக்களையெல்லாம் கூர்ந்துநோக்கியும் தொட்டுப்பார்த்தும் தாவர நூல் முறைப்படி அவற்றிற்கு என்னவேண்டும் என்பதை அறியவேண்டும்; அவ்வுறுப்புக்கள் நன்கு வளர்வதற்குரிய வெப்பதட்ப நிலையை உண்டுபண்ணிப் பாதுகாக்கவேண்டும்; இன்னும், வேரின் பக்கத்தில் கொத்தவேண்டும்; வேண்டும்போது நீர் பாய்ச்ச வேண்டும்; மிகுந்த நீரை வடியவிட வேண்டும்; மிகுதியான வெயிலை மறைக்கவேண்டும்; போதிய வெளிச்சத்தை உண்டுபண்ண வேண்டும்; மிகுதியாக வளர்ந்துள்ள இலை, கிளை முதலியவற்றைக் கத்தரித்து ஒழுங்கு செய்யவேண்டும்; காலமறிந்து உரம் போடவேண்டும்; பூச்சிகள் தாக்காமல் பாதுகாக்கவேண்டும்; விதைகளைத் தக்க காலத்தில் சேமித்துப் பக்குவப்படுத்தவேண்டும். இங்ஙனம் தோட்டவேலைகளை நன்கு கவனித்து வந்தால் முழுப்பயனையும் நாம் பெறலாம்.

பலவகைப் பழங்களைத் தரும் மரம் செடி கொடிகளைப் பயிர்செய்யும் வகையும், ரோஜாத் தோட்டம் அமைக்கும் முறையும், காய்கறித் தோட்டம் வளர்க்கும் வகையும், உல்லாசத் தோட்டம் உண்டுபண்ணும் விதமும் தோட்டக் கலையின் பல்வேறு பகுதிகளாகும். அவற்றைத் தனித்தனியே விளக்கிக்கூறும் நூல்கள் பலவுண்டு. அவற்றைப் படித்தறிவதுடன், ஒவ்வொரு தோட்டத்திற்கும் தனித்தமுறையில் என்ன வேண்டுமென்பதை நேரில் பார்த்தும் அறிவது இன்றியமையாததாகும்.

தமிழ்நாட்டிலுள்ள சிற்றூர்தோறும், ஒவ்வொரு வீட்டின் பின்புறத்திலும் தெங்கு, கமுகு, மா, பலா, எலுமிச்சை முதலிய பலவகைப் பழந்தருமரங்கள் ஒன்றேனும் பலவேனும் இருப்பதைப் பார்க்கலாம். இன்னும் பன்னீர், பவழமல்லி, நந்தியாவர்த்தம் முதலிய மலர்ச் செடிகளையும் காணலாம். மற்றும் வெண்டை, அவரை, கத்தரி, கீரை முதலிய காய்கறி வகைகளும் இருப்பதை அறியலாம். இவற்றில் ஒரு சிறிதாகிலுமுள்ள தோட்டம் மிகச் சிறிய வீடுகளிலும் இன்றியமையாது இன்றும் விளங்கிவருவது நமது முன்னோரின் நற்பழக்கத்தைக் காட்டுகிறது.

நாகரிக முறையில் தோட்டத்தை வனப்புறச் செய்யும் பழக்கம் இக்காலத்தில் ஏற்பட்டுள்ளது. ஆனால், இத்தோட்டத்தில் மணமற்ற பன்னிற மலர்கள் பூத்து விளங்குகின்றன. இப்பூச்செடிகள் காய்த்துக் கனி கொடுப்பதில்லை. கண்ணுக்கு இனிமைதரும் இச்செடிகள் ஒருவகையில் இன்பந்தருவனவாயினும் மணமுள்ள மலரும், காய்கனிகளும் தரும் பயனுள்ள செடிகொடிகளை வளர்ப்பதால், பயிர் செய்வோருக்கும் பிறர்க்கும் பயன் தருமன்றோ?

நாம் பெற்று வளர்த்த மக்களும் நமது சுற்றத்தாரும் நம்மைக் கைவிட்டாலும் விடலாம். நாம் வைத்து வளர்த்த மரம் செடி கொடிகள் நம்மை என்றும் கைவிடாமல் காக்கும். இவற்றைத் தக்க பருவம் அடையும் வரையில் பாதுகாத்து வளர்த்து விடுவோமானால், இவை தம் காய்கனிகளால் நம் கடும் பசியாற்றியும், நல்லிளநீரால் தாகந் தணித்தும், மெல்லிளந் தளிரால் மென்காற்று வீசி நம் மெலிவகற்றியும் பெற்ற பிள்ளைகளைக் காட்டிலும் பெரிது பேணுமென்பதில் ஐயமுண்டோ?

தோட்டவேலை நமது இயற்கையான கைவேலை. அதனைச் செய்யுங்கால் நமது உள்ளம் களிப்படைகிறது. அன்றியும், பூக்களின் பலவகை நிறமும், மணமும்,

கனிகளின் சுவையும், இலை பூக்களின் மென்மையும், தென்றலின் இசையும், நமது ஐம்புலன்களையும் இன்புறுத்துகின்றன. ஆகையால், தமிழ்நாட்டு இளைஞர்கள் தங்கள் இல்லந்தோறும் தோட்டம் அமைக்கவேண்டும்; இளமரக்கா ஏற்படுத்தவேண்டும்; பூஞ்சோலை பொலிவு பெறச் செய்யவேண்டும்; இவற்றில் ஏற்றதைச் செய்ய முயன்று தங்கள் ஓய்வு நேரத்தில் விதைகளைத் தெளித்தும், செடிகளை வளர்த்தும், மரங்களை நட்டும் பயனுள்ள பொழுதாய்க் கழிக்கவேண்டும். இதனால், நாடு செழித்து நலம் பெருகும் என்பதில் தடையில்லை.

## குறிப்பு

தோட்டக்கலைபற்றியது இப்பாடம். இதில், பூந்தோட்டம், காய்கறித்தோட்டம், பழத்தோட்டம் முதலிய செய்திகளும், அவற்றை வளர்க்கும்முறை பயன் முதலியவையும் பொது முறையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## கேள்விகள்

1. தோட்டக்கலை என்பது யாது?
2. நகரங்களில் பூங்காக்கள் ஏற்படுத்துவது ஏன்?
3. தாவரங்களைப் போற்றி வளர்க்கும் முறை யாது?
4. தோட்டக்கலையின் வகைகள் யாவை?
5. நமது முன்னோரின் நற்பழக்கத்தைக் காட்டுவது யாது?
6. மரஞ்செடி கொடிகள் நமக்கு எவ்வாறு நன்மை செய்கின்றன?
7. நாடு செழித்து நலம் பெருக நாம் என்ன செய்யவேண்டும்?

## பயிற்சி

I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—செழுமை, மணம், பொழில், தென்றல், பூங்கா, சதுக்கம், தாவரம், சேமித்து, தெங்கு, கமுகு, வனப்பு, பேணும்.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—நன்செய், புன்செய், புத்துணர்ச்சி, எரு, இளமரக்கா, பொலிவு.

II. கட்டுரைப் பயிற்சி

1. 'காய்கறித்தோட்டம்' என்ற தலைப்பில் சிறுகட்டுரை எழுதுக.
2. உங்கள் ஊரிலுள்ள, அல்லது நீங்கள் பார்த்த பூங்காவைப்பற்றி விவரித்து எழுதுக.

# 17. ஆப்பிரிக்காவில் வழிவகுத்தவர்

இக்காலத்தில் ஆப்பிரிக்காவைப்பற்றிய செய்திகளை யெல்லாம் கல்விப்பயிற்சியுடைய எல்லோரும் நன்கறி கின்றனர். ஆனால், நூறு ஆண்டுகளுக்குமுன் அங்குள்ள ஏரிகள், ஆறுகள், மலைகள், அருவிகள் முதலியவை எவரும் அறியாதனவாகவே இருந்துவந்தன. மேலும் அக்கண்டத்தின் உட்பகுதியைப்பற்றிய எச்செய்திகளும் விளங்காதனவாகவே இருந்துவந்தன. ஆகையால், 'இருண்டகண்டம்' என்று ஆப்பிரிக்கா குறிக்கப்பட்டது.

அக்காலத்தில் ஆப்பிரிக்காவைப்பற்றி அறிந்தவர்கள், அதனைப் பாலைவனம் நிறைந்த பாழான இடமென்றும், அங்கு வாழும் மக்கள் ஓயாமல் போரிடுகிற கொடியவர்கள் என்றும், நாகரிக மற்றவர்கள் என்றும் பலவாறு கூறிவந்தனர். ஆனால், டேவிட் லிவிங்ஸ்டன் என்பவர், ஆப்பிரிக்காவுக்கு வழி வகுத்துச்சென்று திரும்பிவந்து, "ஆப்பிரிக்கா ஆறுகளும் ஏரிகளும் நிறைந்த வளமுள்ள இடம்; அங்குள்ள மக்கள் திருந்தி முன்னேறக் கூடிய நற்பண்பு உடையவர்கள்" என்று தெரிவித்தார். அதன்பின்னரே, இருண்டகண்டம் ஒளி பெற்று அதன் எல்லாச் செய்திகளும் உலகத்தாருக்குத் தெரியலாயின.



டேவிட் லிவிங்ஸ்டன்

ஆப்பிரிக்காவின் உட்பகுதி, எவரும் நுழைதற்கரியு தாய் இருந்தது. அதன் வடக்கில் சஹாரா பாலைவனமும், தெற்கில் கலஹாரி பாலைவனமும் கடந்து செல்வதற்கு இயலாதனவாய் இருந்தன. உட்பகுதியில் தாங்கொணாத வெப்பம் மிகுதி. அங்கே உள்ளே செல்லமுடியாதவாறு மரம் செடி கொடிகள் அடர்ந்து வழியின்றியிருந்தது. இன்னும் சிங்கம், புலி முதலிய கொடிய விலங்குகளும், முதலை, நீர்யானை முதலியவைகளும் ஏராளமாய்க் குடி கொண்டிருந்தன; 'மலேரியா' போன்ற கொடிய நோய் களை உண்டுபண்ணும் கொசுக்களும், பாம்பு முதலிய நச்சுப் பிராணிகளும் மிகுதியாய் இருந்தன; குன்றுகளும் அருவிகளும் போக்குவரவுக்குப் பெருந்தடைகளாய் இருந்தன. இத்தகையகாரணங்களால் ஆப்பிரிக்காவுக்குள் செல்ல எவரும் அஞ்சியிருந்தனர். ஆயினும், அஞ்சா நெஞ்சமும் புதுமை காண்பதில் ஆவலுமுள்ள சிலர் உள் விவரங்களை அறிய முயன்றுவந்தனர். அவர்களில் மங்கோ பார்க், ஸ்டான்லி என்போர் குறிப்பிடத் தகுந்தவர்கள். இவர்களில், மாங்கோ பார்க் நைஜர்நதிப் பகுதியையும், ஸ்டான்லி, காங்கோ நதிப்பகுதியையும் கண்டறிந்து மேலும் உட்செல்லவியலாது திரும்பினர். டேவிட் லிவிங்ஸ்டனே இப்பகுதிகளைக் கடந்து சாம்பஸி நதிப்பகுதியையும், மத்திய ஆப்பிரிக்கா பகுதியையும் கண்டறிந்து புகழ்பெற்றார்.

டேவிட் லிவிங்ஸ்டன் ஸ்காத்லந்து நாட்டில், கிளாஸ்கோ நகருக்கு அருகிலுள்ள பிளாண்டிர் என்னும் சிற்றூரில், 1813-ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம், 19-ஆம் நாள் பிறந்தார். இவரது தந்தையாகிய நீல் லிவிங்ஸ்டன் என்பவர் தேயிலைக்கடைவைத்து வியாபாரம் செய்து வாழ்ந்துவந்த எளியவர். ஆகையால், டேவிட் சிறித் கல்வி பயின்றதும் பத்தாம் வயதிலேயே பஞ்சாலையில் வேலை செய்யும்படி நேரிட்டது. சிறுவராகிய டேவிட் கல்வியில் ஆர்வம் நிரம்பியவராகையால், பகலெல்லாம் வேலைசெய்துவிட்டு வீட்டுக்கு வந்தபிறகு, இரவில் நெடு

நேரம்வரையில் இலத்தீன், கிரீக் ஆகிய மொழிகளைப் பயின்றுவந்தார் ; பல நூல்களையும் கற்றுவந்தார்.

டேவிட்டுக்கு இளம்பருவத்திலிருந்தே அருஞ்செயல் புரியும் பேரெண்ணங்கள் இருந்துவந்தன. எவ்வாறேனும் முயன்று மருத்துவக் கலையில் தேர்ந்து எளிய நோயாளர்களுக்குத் தொண்டு செய்யவேண்டுமென்று ஆவல் கொண்டார். ஆகையால், பஞ்சாலையில் பதின்மூன்று ஆண்டுகள் வேலை செய்து, தமக்குக் கிடைத்துவந்த ஊதியத்தில் மிச்சம்பிடித்துச் சேர்த்துவந்தார். போதுமான பொருள் சேர்ந்ததும் கிளாஸ்கோ நகரிலுள்ள மருத்துவக் கல்லூரியிற் சேர்ந்து பயிலலானார். அக்காலத்தில் கோடை விடுமுறை ஏற்படும்பொழுதெல்லாம் தமது ஊருக்கு வந்து பழைய பஞ்சாலையில் வேலைசெய்து கல்விப் பயிற்சிக்குவேண்டிய பொருளைத் தேடிக்கொண்டார். இங்ஙனம் நான்காண்டுகள் விடாது முயன்று 1840-ஆம் ஆண்டில் மருத்துவக் கலைக்குரிய பட்டம் பெற்றார். இவருடைய ஊக்கமும் முயற்சியும் மாணவர்கள் அறிந்துகொள்ளத்தக்கனவாகும்.

டேவிட் மதப்பற்று மிகுந்தவர். ஆகையால், மாதா கோயிலுக்குச் சென்று வழிபடுவதும், கிறிஸ்துவ சமயத்தைப் பற்றி அறிஞர்கள் பேசும் அறிவுரைகளைக் கேட்பதும் இவருடைய வழக்கமாயிருந்தன. ஒருநாள் 'வெஸ்டுமின்ஸ்டர் ஆபே' என்னும் கோயிலுக்குச் சென்றிருந்தபொழுது, அங்கிருந்த சிறந்தவர்களான அரசர்கள், வாள்வீரர்கள், தூயோர் முதலியோரின் சமாதிகளைக் கண்டு, 'இவர்களைப்போல் நானும் செயற்கரிய செயல்களைச் செய்யவேண்டும்' என்று ஆவலுடன் எண்ணினார். மற்றொருநாள் கிறிஸ்துவத் தொண்டர்களின் கூட்டமொன்றுக்குச் சென்றிருந்தார். அக்கூட்டத்தில் மோபாத்து என்பவர் பேசினார். அவர் ஆப்பிரிக்காவின் சில பகுதிகளிலுள்ள காடுமேடுகளையெல்லாம் சுற்றிப் பார்த்தவர். அவருடைய பேச்சைக் கேட்ட டேவிட், கூட்டம் முடிந்தபிறகு மோபாத்தைக் கண்டு

பேசி மகிழ்ந்தார். அப்பொழுது மோபாத்து, "ஆப்பிரிக்காவில் நான் தங்கியிருந்த இடத்திற்கு வடக்கே மிகப் பெரிய வெளியிருக்கிறது. அங்கே காலைவேளையில் ஆயிரம் ஊர்களின் அடுப்புப் புகையைக் கண்டிருக்கிறேன். அங்கே இதுவரையும் ஒரு கிறிஸ்துவத் தொண்டராவது சென்றதில்லை" என்று தெரிவித்தார். இதைக் கேட்ட டேவிட், 'நான் உடனே ஆப்பிரிக்காவுக்குப் புறப்படுவேன்' என்றார். இதற்கு லண்டன் கிறிஸ்துவத் தொண்டர் கழகத்தினர் இசைந்தனர். டேவிட் கிறிஸ்துவத் தொண்டராகி ஆப்பிரிக்காவுக்குச் சென்று மதத் தொண்டும் மருத்துவத் தொண்டும் செய்ய விரும்பியதால், உடனே கிறிஸ்துவத் தொண்டர் கழகத்தில் தாமும் ஒரு பாதிரியாராகச் சேர்ந்தார். பின்னர், பெற்றோரிடம் விடை பெற்றுக்கொண்டு கழகத்தாரின் ஆதரவுடன் 1840-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 17-ஆம் நாள் ஆப்பிரிக்காவுக்குச் செல்லப் புறப்பட்டார். இவருடன் சிலர் துணையாகப் புறப்பட்டனர்.

லிவிங்ஸ்டன், ஜார்ஜ் என்ற கப்பலில் ஏறிக் கடலில் பயணம் செய்தார். எவரும் போகாத புதிய இடத்திற்குப்போய்ச் செயற்கரிய செயல் செய்யப்போகிறோம் என்ற எண்ணத்தால் ஏற்பட்ட களிப்பு இவர் உள்ளத்தில் பொங்கி நின்றது. அது, பிறந்த நாட்டையும் பெற்றோர் உற்றார் முதலியோரையும் பிரிந்த கவலையை மறக்கச் செய்தது. ஏறக்குறைய மூன்று மாதங்களுக்குப் பிறகு, இவர் ஆப்பிரிக்காவின் தென்கோடியிலுள்ள நன்னம்பிக்கை முனையைச் சுற்றி, அல்கோவா என்றவிடத்தில் கரையில் இறங்கி, அங்கிருந்து உள்நாட்டுக்குப் போகப் புறப்பட்டார். எருதுகள் பூட்டிய வண்டியில் ஏறிப் பலவித இடையூறுகளுடன் எழுநூறு மைல்களைக் கடந்து குருமன் என்ற இடத்தையடைந்தார். இது தான் மோபாத்து என்பவர் வாழ்ந்திருந்த இடம். இவ்விடத்தில் லிவிங்ஸ்டன் சில நாட்கள் தங்கியிருந்தார். இதற்கு வடக்கே ஆங்கிலப் பாதிரிமார் எவரும் சென்ற

தில்லை. ஆகையால், இவர் வடக்கே இருநூற்றைம்பது மைல் தூரமேனும் செல்லவேண்டுமென்று விரும்பினர்.

வடபகுதி சிங்கம் முதலிய கொடிய விலங்குகள் நிறைந்த இடமாகும். அதனாலேயே எவரும் வடக்கு நோக்கிச் செல்லத் துணியவில்லை. ஆயினும் லிவிங்ஸ்டன் மூன்று வேட்டைக்காரர்களைத் தன்னுடன் துணையாக வரும்படி அழைத்துக்கொண்டு ஏனையோருடன் பதினைந்து நாள் பயணம் செய்து மாபோட்ஸா என்னும் இடத்தை யடைந்தார். அங்குப் புதிதாக ஒரு நிலையத்தை ஏற்படுத்திக்கொண்டு அங்கேயே தங்கியிருந்து, அங்குள்ள மக்களுக்கு மதத்தொண்டும் மருத்துவத் தொண்டும் புரியலானார். காட்டைத் திருத்திப் பயிர் விளைக்கும் முறைகளை அவர்களுக்குக் கற்பித்தார். அவர்கள் பேசும் மொழியை விரைவில் நன்கு கற்றுக்கொண்டு அவர்களோடு பேசிப்பழகியதால், இவர் செயல்கள் நற்பயனளித்தன.

மாபோட்ஸா வளம் நிறைந்த பள்ளத்தாக்கு. இதன் பின்புறத்தில் குன்றுகள் சூழ்ந்திருந்தன. இரவில் சிங்கங்களின் முழக்கம் எழுந்து யாவரையும் நடுநடுங்கச் செய்யும். அவை அடிக்கடி வெளிப்பட்டுவந்து அந்நாட்டு மக்களின் ஆடுமாடுகளைக் கொன்று அழித்து வந்தன. ஆகையால், லிவிங்ஸ்டன் அச்சிங்கங்களை வேட்டையாடிக் கொல்லவேண்டுமென்று முனைந்தார். இவர், வேட்டைக்காரர்களின் துணையோடு காட்டிற்குள் போய், சிங்கத்தைக் கண்டு குறிவைத்து துப்பாக்கியால் சுட்டார். இந்நிகழ்ச்சியை இவரே பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

“நான் ஒரு குன்றின் முனையைச் சுற்றிப்போகையில், ஒரு விலங்கு செடி மறைவில் பாறையின்மேல் உட்கார்ந்திருந்தது. எனக்கும் அதற்கும் முப்பது கஜ தூரமிருக்கும். அதன் உடலுக்கு நன்றாய்க் குறிவைத்து இரட்டைக் குழாய்களையும் வெடிதீர்த்தேன். என்னுடன் வந்திருந்தவர்கள் ‘குண்டடி விழுந்தது’ என்று

கூவினார்கள். சிங்கம் செடிக்குப்பின்னே சினத்துடன் வாலை முறுக்கினதைக் கண்டேன். நான் மீண்டும் துப்பாக்கியில் குண்டும் மருந்தும் போட்டுக் கெட்டிக்கும் பொழுது வேட்டையாட்கள் கூச்சலிட்டார்கள். ஏனென்று பார்க்க எண்ணி நான் நிமிர்ந்தபொழுது அச்சிங்கம் என்மேல் பாய்ந்தது. அப்பொழுது நான் உயர்வான இடத்தில் இருந்தேன். சிங்கம் என் கைப் பட்டையைக் கௌவியதால் இருவரும் உருண்டு அடிவாரத்தில் விழுந்தோம். சிங்கம் உறுமிக்கொண்டு என்னைக் கௌவி உதறியது. நான் என்மேலிருந்த சிங்கத்தைத் தள்ளிவிடத் திரும்பினேன். அப்பொழுது சிங்கம் சிறிது தூரத்திலிருந்த வேட்டையாள் ஒருவன் மீது பாயமுயன்றது. அவன் சிங்கத்தை நோக்கிக் குறி வைத்துச் சுட்டான். இரண்டு குழாய்களும் குறி தவறின. உடனே சிங்கம் என்னைவிட்டு அவன்மீது பாய்ந்து அவன் காலைக் கடித்தது. அப்பொழுது இன்னொருவன் கையிலிருந்த ஈட்டியால் அதைக் குத்தப்போனான். அதைக் கண்ட சிங்கம் மற்றவன்மீது பாய்ந்து தோள்பட்டையைப் பிடித்தது. அந்நிலையில் நான் முன்பு சுட்டதால் பாய்ந்திருந்த குண்டுகள் அதன் உயிரைக் குடித்து விடவே, சிங்கம் இறந்து விழுந்தது."

இங்ஙனம் வீரச்செயல் புரிந்த லிவிங்ஸ்டன், சிங்கம் கடித்ததால் அதன் பற்கள் பதிந்து தோள் எலும்பு முறிந்து துன்பமடைந்தார். இக்காயம் ஆறப் பல நாட்களாயின. ஆயினும், இவர் தன் செயலில் ஊக்கம் குன்றாதிருந்தார். இங்ஙனம் சிறிது காலம் செல்ல, 1844-ஆம் ஆண்டில் மோபாத்து என்பவரின் மகளை மணம் செய்து கொண்டார். இவ்வம்மையார் பொதுத்தொண்டு செய்வதிலும், நாடு கண்டறிவதிலும் பெரு விருப்புள்ள தன் கணவனோடு கூடவேயிருந்து உதவி புரிந்துவந்தார்.

மாபோட்ஸாவுக்கு வடக்கே கலஹாரி என்னும் பாலைவனம் இருந்தது. இங்குச் செல்லவேண்டுமென்று

லிவிங்ஸ்டன் நெடுநாட்களாய் எண்ணிப் பயணத்திற்கு வேண்டிய கருவிகளையும் ஆட்களையும் சேர்த்துக்கொண்டு 1849-ஆம் ஆண்டில் புறப்பட்டார். நெடுந்தொலை சென்றபிறகு நாமி என்ற ஏரியையும், வளமுள்ள சுற்றுப்புறங்களையும் கண்டு மகிழ்ந்தார். இவ்வேரியை முதன் முதலாகக் கண்டறிந்தவர் இவரேயாவார். பின்னர், 1851-ஆம் ஆண்டில் மீண்டும் நெடுந்தொலை பயணம் செய்து ஒரு ஆற்றைக் கண்டார். அதுதான் இப்பொழுது சாம்பஸி என்று சொல்லப்படுகிறது. அதன் கரையில் அடர்ந்துள்ள காடுகள் வளமும் வனப்பும் உடையனவாயிருப்பதைக் கண்டு இவர் பெரு மகிழ்ச்சி யடைந்தார். அதுவே ஆப்பிரிக்காவின் நடுப் பகுதி யென்று உணர்ந்து, அந்த ஆற்றின் கரையில் லின்யாண்டி என்ற ஓரிடத்தைத் தமது தலைமையிட மாக அமைத்துக்கொண்டு மனைவி மக்களுடன் வாழ லானார்.

சிறிதுகாலம் செல்ல, 1855-ஆம் ஆண்டில், லிவிங்ஸ் டன் சிலருடன் புறப்பட்டுக் கிழக்குநோக்கிப் பயணம் செய்தார். வழியிடையில் ஒரு பெரிய நீர்வீழ்ச்சியைக் கண்டு களிப்படைந்து, இங்கிலாந்து அரசியின் நினைவாக அதற்கு 'விக்டோரியா நீர்வீழ்ச்சி' என்று பெயர் சூட்டினார். அப்பகுதியை நன்கு சுற்றிப் பார்த்தபிறகு, மேலும் பயணத்தைத் தொடங்கிக் 'குலிமேனே' என்ற துறைமுகத்தையடைந்தார். அங்கிருந்து கப்பலேறி, 1856-ஆம் ஆண்டின் இறுதியில் தமது தாயகம் திரும்பினார்.

டேவிட் லிவிங்ஸ்டன் பதினாறு ஆண்டுகளாய் ஆப்பிரிக்காவில் செய்துவந்த அரும்பணிகளைப் பத்திரிகை களின் வாயிலாக அறிந்திருந்த இங்கிலாந்து மக்கள், இவரைப் போற்றி மகிழ்வுடன் வரவேற்றனர். பல் கலைக் கழகங்கள் நன்மதிப்புப் பட்டங்கள் அளித்தன. இராயல் நிலநூல் கழகத்தினர் பொற்பதக்கம் வழங்

கினர். லிவிங்ஸ்டன் தாம் கண்டறிந்துவந்த புதுமைகளையெல்லாம் ஆங்காங்கே சொற்பொழிவுகளின் வாயிலாக வெளியிட்டு விளக்கினார். அதனால் இருண்ட கண்டம், ஒளிபெற்ற கண்டமாய் எல்லோருக்கும் தெரியலாயிற்று.

லிவிங்ஸ்டன், ஆங்கில அரசியலார் நன்கொடையாக அளித்த ஐயாயிரம் பொன்னுடன், மீண்டும் மனைவி மக்களோடு 1858-ஆம் ஆண்டில் ஆப்பிரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றடைந்தார். நோய்வாய்ப்பட்ட மனைவியை முனைநகரில் இருக்கச் செய்துவிட்டுத் தான் மட்டும் பலவிடங்களுக்கும் சென்று, இன்னல் பல எய்தினார். 1862-ஆம் ஆண்டில் மனைவி காலமானார். பின்னர், தமது பழைய நிலையத்திற்கு வரும் வழியில் நயாஸா என்னும் ஏரியைக் கண்டுபிடித்தார். நீண்ட பயணத்தால் இவர் நோய்வாய்ப்பட்டதால், 1864-ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்குச் சென்று ஓராண்டு தங்கியிருந்துவிட்டு மீண்டும் ஆப்பிரிக்காவையடைந்தார்.

லிவிங்ஸ்டன் நயாஸா ஏரியின் கரையோரமாக நீண்ட வழிப்பயணம் செய்து தங்கநீகா என்னும் ஏரியைக் கண்டுபிடித்து, அதன் கரையிலுள்ள உஜ்ஜீ என்னுமிடத்தில் தங்கியிருந்தார். இவ்விடம் கடற்கரையிலிருந்து 800 மைல் தொலைவில் உள்நாட்டில் உள்ளது. அதன்பிறகு, மீரு, பங்குவிலோ என்ற ஏரிகளைக் கண்டறிந்தார். இந்நிலையில் உணவுப்பொருள் முதலியவை செலவழிந்துவிட்டதால் உதவியை எதிர்பார்த்து உஜ்ஜியிலேயே தங்கியிருக்கலானார். நெடும் பயணத்தால் இவர் உடல் சோர்ந்திருந்தது.

லிவிங்ஸ்டன் ஆப்பிரிக்காவில் பயணம்செய்து வரும் செய்தியையும், இவர் கண்டறிந்து வெளியிடும் புதுமைகளையும் பொதுவாக வெளிநாட்டினர் மிக விருப்புடன் அவ்வப்பொழுது அறிந்து அகமகிழ்ந்துவந்தனர்; சிறப்பாக இங்கிலாந்து நாட்டினரும், அமெரிக்க நாட்டினரும்

ஆவலுடன் அறிந்து களிப்படைந்து வந்தனர். நெடுங் காலமாய் லிவிங்ஸ்டனைப்பற்றிய செய்தி சிறிதும் தெரியாமற்போகவே இவ்விரு நாட்டினரும் பெரிதும் கவலைகொண்டனர். 'நியூயார்க் ஹெரால்டு' என்னும் அமெரிக்கப் பத்திரிகையின் உரிமையாளர், ஹென்றி மார்ட்டின் ஸ்டான்லி என்ற இளைஞர் ஒருவரை, லிவிங்ஸ்டனைத் தேடிப்பார்த்து விவரங்களை அறிவிக்கும் படி செலவுக்குவேண்டிய பொருள்கொடுத்து அனுப்பி வைத்தார்.

ஹென்றி, கப்பலேறிப் பயணம்செய்து ஆப்பிரிக் காவையடைந்தார். அவர் அங்குப் பலவிடங்களிலும் தேடியலைந்து முடிவில் உஜ்ஜியையடைந்து லிவிங்ஸ்டன் தங்கியிருந்த கூடாரத்தைச் சேர்ந்தார். ஹென்றி, லிவிங்ஸ்டனைக் கண்டதால் களிப்படைந்து தாம் வந்த தன் காரணத்தை எடுத்துரைத்தார். இதனால், லிவிங்ஸ் டன் மனத்தளர்ச்சி நீங்கியவராய் மகிழ்வடைந்தார். ஹென்றி சிறிதுகாலம் லிவிங்ஸ்டனுடன் அங்கேயே தங்கியிருந்தபின்னர், விடைபெற்றுக்கொண்டு தமது நாட்டுக்குத் திரும்பினர்.

சில ஆண்டுகள் செல்ல, லிவிங்ஸ்டன் மேலும் வடக்குநோக்கிப் பயணம் செய்யலானர். ஆனல், நடு வழியிலேயே நோய்வாய்ப்பட்டு 1873-ஆம் ஆண்டு மே மாதத்தில் இறைவன் திருவடி சேர்ந்தார். இவரது உடல் இங்கிலாந்துக்குக் கொண்டுவரப்பட்டு லண்டன் நகரிலுள்ள வெஸ்ட் மின்ஸ்டர் கோயிலில் சிறப்பாக அடக்கம் செய்யப்பட்டது.

லிவிங்ஸ்டனின் அரிய முயற்சியினலேயே ஆப்பிரிக் காவின் அதிசயச் செய்திகளெல்லாம் உலக மக்களுக்குத் தெரியலாயின. இத்தகைய தன்னலமற்ற தொண்டரின் புகழ் உலகமுள்ளளவும் நிலைத்திருக்குமென்பதில் தடை யில்லை. 'ஆப்பிரிக்காவில் வழிவகுத்தவர்' என்ற புகழ் என்றும் குன்ருது நிற்குமன்ருே?

## குறிப்பு

இது, புதுமை காணல் என்னும் பொருள்பற்றிய பாடமாகும். இதில், டேவிட் லிவிங்ஸ்டன் என்பவரின் வரலாறு, ஆப்பிரிக்காவில் கண்டறிந்த புதுமைகள் முதலியவை விளக்கப்பட்டுள்ளன.

## கேள்விகள்

1. டேவிட் லிவிங்ஸ்டனின் வரலாறு யாது?
2. இவர் ஆப்பிரிக்கா செல்லத் துணிந்தது ஏன்?
3. லிவிங்ஸ்டன் அஞ்சா நெஞ்சமுள்ளவர் என்பது எந்நிகழ்ச்சியால் விளங்குகிறது?
4. இவர் ஆப்பிரிக்காவில் கண்டறிந்த புதுமைகள் யாவை?
5. இவர் 'வழிவகுத்தவர்' என்று புகழப்படுவது ஏன்?
6. 'இருண்ட கண்டம்' என்று எதற்குப் பெயர்? இப்பெயர் எதனால் ஏற்பட்டது? இங்கு எவரும் செல்லாததற்குக் காரணமென்ன? இது ஒளிபெற்றது எவ்வாறு?
7. லிவிங்ஸ்டனின் குணநலன்களைத் தெரிவிக்க.

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—வகுத்து, மருத்துவம், தூயோர், குன்றுது, இன்னல்.
2. எதிர்ச் சொற்கள் கூறுக:—உட்பகுதி, வெப்பம், உயர்வான, அருகு, பெருமை, புதுமை.

### II. கட்டுரைப் பயிற்சி

1. 'டேவிட் லிவிங்ஸ்டனின் விடாமுயற்சி' என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.
2. ஆப்பிரிக்காவின் அதிசயங்களைப்பற்றி விவரித்து எழுதுக.

# செய்யுட்பகுதி—பொது

## 1. கடவுள் வணக்கம்

### பரம்பொருள்

உலகெலாம் கடந்து நிற்கும்
    உலப்பிலா அறிவே! போற்றி
உலகெங்கும் கலந்து வைகும்
    ஒப்பிலா இறையே! போற்றி
உலகெலாம் ஒழுங்கில் செல்ல
    ஒளிபொழி பிழம்பே! போற்றி
உலகெலாம் வணங்கி ஏத்தும்
    ஒருவனே! போற்றி போற்றி. 1

—திரு. வி. கலியாணசுந்தரனார்

### முருகப்பெருமான்

இன்பப் பெருக்கே! அருட்கடலே!
    இறையே! அரியா இரும்பொருளே!
அன்பர்க் கருளும் பெருங்கருணை
    அரசே! உணர்வால் ஆம்பயனே!
வன்பர்க் கரிதாம் பரஞ்சோதி
    வடிவே! வடிவேல் மணியே! என்
துன்பத் திடரைப் பொடியாக்கிச்
    சுகந்தந் தருளத் துணியாயே. 2

—இராமலிங்க அடிகள்

## திருமால்

பச்சைமா மலைபோல் மேனிப்
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே!
ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்;
அரங்கமா நகரு ளானே. 3

—தொண்டரடிப்பொடி யாழ்வார்

## இயேசுநாதர்

அன்புநெறி சிறந்ததென
அகிலமுணர்ந் துய்ய
ஆண்டவனே! என்செய்தாய்!
அதைநினைந்தால் அந்தோ!
என்புருகும்; உயிருருகும்
எண்ணமெலாம் உருகும்;
எம்மொழியால் இயம்பவல்லேன்
ஏழைமகன் அப்பா! 4

மண்ணுலகில் அவதரித்தாய்;
மக்களிடை வதிந்தாய்;
மறைமொழிந்தாய்; அவ்வளவில்
மனம்நிறைய இல்லையோ?
பொன்னுடலை வதைத்துவிட்டாய்;
பொலியுயிரை நீத்தாய்;
பொறைஅன்பு நீஎன்னும்
பொருண்மை தெளிந்தேனே. 5

—திரு. வி. கலியாணசுந்தரனார்

## கலைமகள்

தெய்வம் யாவும் உணர்ந்திடுந் தெய்வம்
　　தீமை காட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
　　உயிரி னுக்குயி ராகிய தெய்வம்
செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
　　செம்மை நாடிப் பணிந்திடுந் தெய்வம்
கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்
　　கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம். 6

—பாரதியார்

## தமிழ்த் தாய்

வானார்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே!
மன்னியமூ வேந்தர்கள்தம் மடிவளர்ந்த மகளே!
தேனார்ந்த தீஞ்சுனைசால் திருமாலின் குன்றம்
தென்குமரி ஆயிடைநற் செங்கோல்கொள் செல்வி!
கானார்ந்த தேனே! கற்கண்டே! நற்கனியே!
கண்ணே! கண் மணியே! அக் கட்புலஞ்சேர் தேவி!
ஆனாத நூற்கடலை அளித்தருளும் அமிழ்தே
அம்மே! நின் சீர்ப்பெருமை அறைதலியார்க் கெளிதே! 7

கரந்தைக்கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளை

## இந்தியத் தாய்

மாரத வீரர் மலிந்தநன் னாடு
　　மாமுனி வோர்பலர் வாழ்ந்தபொன் னாடு
நாரத கானம் நலந்திகழ் நாடு
　　நல்லன யாவையும் நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்தநன் னாடு
　　புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
　　பாடுவ மிஃதை யெமக்கிலை யீடே. 8

—பாரதியார்

## குறிப்புரை

1. பரம்பொருள்—மேலான பொருள்; கடவுள்
உலப்பிலா—அழிவில்லாத
வைகும்—தங்கும்
பிழம்பே—திரட்சியே
எத்தும்—துதிக்கும்.
2. வன்பர்—தீயவர்
வடி—கூர்மையுள்ள
3. அச்சுதன்—அழிவில்லாதவன்; திருமால்
ஆயர்—இடையர்
அமரர் ஏறு—தேவர்களுக்குள் சிறந்தவன்.
4. நெறி—வழி
அகிலம்—உலகத்தார்
உய்ய—நல் வாழ்வுபெற
என்பு—எலும்பு
இயம்ப—சொல்ல.
5. வதிந்தாய்—வசித்தாய்
மறை—வேதம்
பொன் உடலை—சிறந்த உடம்பை
பொலி—விளங்குகிற
பொருண்மை—பொருள்.
6. தெய்வம் யாவும்—எல்லாத் தெய்வங்களும்
உய்வம்—வாழ்வோம்
எடுப்போர்—தொடங்குவோர்
7. வான் ஆர்ந்த—வானளாவிய
பொதியின் மிசை—பொதிய மலையில்
குன்றம்—திருப்பதி மலை
ஆறாத—குறையாத
அறைதல்—சொல்லுதல்
8. கானம்—இசை
திகழ்—விளங்குகின்ற
ஈடு—ஒப்பு

## கேள்விகள்

1. பரம்பொருளின் தன்மைகள் யாவை?
2. இராமலிங்க அடிகள் முருகப்பெருமானின் தன்மைகளை எங்ஙனம் போற்றுகிறார்? அவர் வேண்டுவது என்ன?
3. தொண்டரடிப்பொடி யாழ்வார் திருவரங்கநாதரிடம் என்ன வேண்டுகிறார்?
4. திரு. வி. க. இயேசுநாதரை எண்ணி வியந்து கூறுவதென்ன? இயேசுநாதர் செயலிலிருந்து விளங்கும் உண்மை யாது?
5. பாரதியார் கலைமகளை எங்ஙனம் போற்றுகிறார்? 'தெய்வம் யாவும் உணர்ந்திடுந் தெய்வம்', 'கைவருந்தி உழைப்பவர் தெய்வம்'—விளக்கி வரைக.
6. தமிழ்த்தாயை வளர்த்தவர்கள் யாவர்? அவள் செங்கோல் செலுத்தும் எல்லை எது?
7. இந்தியநாட்டின் சிறப்பென்ன? 'எமக்கில்லை ஈடு' என்று பாரதியார் களிப்புடன் கூறுவது ஏன்?

# II. அறவுரை

## 1. திருக்குறள்

### கல்வி

கற்க கசடறக் கற்பவை ; கற்றபின்
நிற்க அதற்குத் தக. 1

தொட்டனைத் தூறும் மணற்கேணி ; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. 2

### கேள்வி

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் ; அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை. 3

எனைத்தானும் நல்லவை கேட்க ; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 4

### அறிவுடைமை

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 5

அறிவுடையார் எல்லா முடையார் ; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். 6

### சிற்றினஞ்சேராமை

நிலத்தியல்பால் நீர்திரிந்து அற்றாகும் ; மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு. 7

மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி ; இனத்தானாம்
இன்னான் எனப்படும் சொல். 8

### தெரிந்து செயல்வகை

ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். 9

எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவ மென்பது இழுக்கு. 10

## சுற்றம் தழுவல்

சுற்றத்தால் சுற்றப் படஒழுகல், செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன். 11

காக்கை கரவா கரைந்துண்ணும்; ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே யுள. 12

## கண்ணோட்டம்

கண்ணிற் கணிகலங் கண்ணோட்டம்; அஃதின்றேல்
புண்ணென் றுணரப் படும். 13

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை யுடைத்திவ் வுலகு. 14

## ஊக்கமுடைமை

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும், அசைவிலா
ஊக்கம் உடையான் உழை 15

வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு. 16

## ஆள்வினையுடைமை

முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 17

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 18

## சொல்வன்மை

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. 19

இணரூழ்த்தும் நாறா மலரனையர், கற்றது
உணர விரித்துரையா தார். 20

## வினைத்தூய்மை

என்றும் ஒருவுதல் வேண்டும், புகழொடு
நன்றி பயவா வினை. 21

ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 22

## வினைத்திட்பம்

எண்ணிய எண்ணியாங் கெய்துப, எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். 23

துன்பம் உறவரினும் செய்க, துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. 24

## பொருட்சிறப்பு

இல்லாரை யெல்லாரும் எள்ளுவர்; செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. 25

அறனீனும் இன்பமும் ஈனும், திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். 26

## நட்பு

நிறைநீர நீரவர் கேண்மை; பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு. 27

உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 28

## பேதைமை

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில். 29

ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர், பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை. 30

## மருந்து

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு, அருந்தியது
அற்றது போற்றி யுணின். 31

அற்றால் அளவறிந் துண்க ; அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு. 32

## குடிமை

ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். 33

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். 34

## மானம்

பெருக்கத்து வேண்டும் பணிதல் ; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. 35

தலையின் இழிந்த மயிரனையர், மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. 36

## பெருமை

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். 37

பணியுமாம் என்றும் பெருமை ; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. 38

## பண்புடைமை

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். 39

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று. 40

## உழவு

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் ; அதனால்
உழந்தும் உழவே தலை. 41

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் ; மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர். 42

## விருந்தோம்பல்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 43

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல். 44

## ஒப்புரவறிதல்

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின். 45

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின். 46

## ஈகை

அற்றார் அழிபசி தீர்த்தல் ; அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. 47

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல், தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். 48

## புகழ்

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில். 49

தோன்றில் புகழொடு தோன்றுக ; அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று. 50

—திருவள்ளுவர்

## குறிப்புரை

**திருக்குறள்**—சிறந்த குறள் வெண்பாக்களால் ஆகிய நூல். இது யாவருக்கும் பொதுவான நீதியை அறிவிக்கும் உயர்ந்த நூல்; அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகளை உடையது; 1330 குறள் வெண்பாக்களையுடையது.

1. கசடு அற—ஐயந்திரிபு ஆகிய குற்றம் நீங்க
2. தொட்ட அனைத்து—தோண்டிய அளவாக
   கற்ற அனைத்து—கற்ற அளவாக
3. செவிச்செல்வம்—செவியால் வரும் செல்வமாம்; அதாவது கேள்வியால் எல்லாப் பொருளையும் அறிதல்
4. எனைத்தானும்—எவ்வளவு சிறியதானாலும்
   ஆன்ற—நிறைந்த
5. யார்யார் வாய்—எவர் எவர் சொல்ல
   மெய்ப்பொருள்—மெய்யாகிய பயனை
6. என் உடையரேனும்—எல்லாம் உடையவராயிருந்தாலும்
7. திரிந்து—தனது தன்மை வேறுபட்டு
   அற்றாகும்—அந்நிலத்தினது தன்மையதாகும்
8. உணர்ச்சி—பொது அறிவு
   இன்னான்—இப்படிப்பட்டவன்
9. ஆக்கம்—இலாபம்
   ஊக்கார்—மேற்கொள்ள மாட்டார்
10. எண்ணி—முடிக்கும் வழியை எண்ணி
    இழுக்கு—குற்றம்
11. பெற்றத்தால்—பெற்றதனால்
12. கரவா—மறைக்காமல்
    கரைந்து—தம் இனத்தை அழைத்து
    அன்ன நீரார்க்கே—அத்தன்மையுள்ள இயல்புடையவர்க்கே
13. கண்ணோட்டம்—தாட்சணியம்
    அஃது—அவ்வாபரணம்
14. சிதையாமல்—அழியாமல்
15. அதர் வினாய்—வழி கேட்டுக் கொண்டு
    அசைவு இலா—சலித்தலில்லாத
16. மலர்நீட்டம்—நீர்ப் பூக்களின் தாளினது நீளம்
    வெள்ளத்தனைய—நின்ற நீரின் அளவு உடையனவாம்
17. திருவினை—செல்வத்தை
    முயற்றின்மை—முயற்சியில்லாமை
    இன்மை—வறுமையை
18. தெய்வத்தான்—ஊழினால்
    வருத்தக்கூலி—வருத்தத்தின் கூலி அளவு
19. சோர்வு இலன்—மறதியில்லாதவன்
    இகல்—மாறுபாட்டில்
20. இணர்—கொத்தினிடத்தில்
    ஊழ்த்தும்—மலர்ந்திருந்தும்
21. நன்றி—அறம்
    ஒருவுதல்—ஒழிதல்
22. ஈன்றாள்—பெற்ற தாயினது
    காண்பான் ஆயினும்—கண்டு இரங்கும் தன்மையளாயினும்
23. எண்ணிய—அடைய எண்ணிய பொருள்களை
    எய்துப—அடைவார்
24. உற வரினும்—மிகுதியாய் வருமானாலும்
    துணிவு ஆற்றி—வலிமையுடையவராய்
25. என்னுவர்—இகழ்வர்
26. திறனறிந்து—செய்யும் வகையையறிந்து
27. நீரவர்—அறிவுடையாரது
    நிறைநீர—நாள்தோறும் வளரும் தன்மையனவாம்
28. உடுக்கை—ஆடை
    இடுக்கண்—துன்பம்
29. ஈரின்மை—யாவரிடத்திலும் தாட்சணியம் இல்லாத சொல்லும் செயலும் உடைமை

30. எதிலார்—அயலார்
ஆர—திருப்தியாய் அனுபவிக்க
தமர்—சுற்றத்தார்
31. யாக்கைக்கு—உடம்புக்கு
அற்றது—சீரணித்த விதத்தை
போற்றி—தெளிவாய் அறிந்து
32. உய்க்கும் ஆறு—கொண்டு செலுத்தும் வழி
33. இழுக்கார்—தவறமாட்டார்
34. குன்றுவ—தம் ஒழுக்கம் குறையும் தொழில்களை
35. பெருக்கத்து—நிறைந்த செல்வம் உள்ளபொழுது
சுருக்கத்து—வறுமையுள்ள பொழுது
36. இழிந்த—விழுந்த
இழிந்தக்கடை—தாழ்ந்த இடத்து
37. சிறப்பு—பெருமை சிறுமை என்ற சிறப்பியல்புகள்
38. பெருமை—பெருமையுடையவர்
அணியும்—சிறப்பிப்பார்
39. ஆரம்போலும்—ஆரத்தின் கூர்மைபோலும்
கூர்மையர்—கூர்மையான அறிவுடையவர்
40. கலம்—பாத்திரத்தின்
திரிந்தற்று—கெட்டது போலாகும்
41. சுழன்றும்—வேறு தொழில்களைச்செய்து திரிந்தும்
உழந்தும்—எல்லா வருத்தமும் அடைந்தும்
42. வாழ்வார்—சுதந்தரமாய் வாழ்கின்றவர்
43. இல்—வீட்டில்
வேளாண்மை—விருந்தினருக்கு உபகாரத்தை
44. அகன் அமர்ந்து—மனம் மகிழ்ந்து
செய்யாள்—இலக்குமி
உறையும்—வாழ்வாள்
45. நயனுடையான்கண்—உபகாரம் செய்பவனிடத்தில்
பழுத்தற்று—பழுத்தாற்போல் ஆகும்
46. படின்—உண்டாகுமானால்
மரத்தற்று—மரத்தைப் போலாகும்
47. அற்றார்—வறியவரது
அழிபசி—மிகுந்த பசியை
வைப்புழி—வைக்குமிடம்
48. வன்கணவர்—அருள் இல்லாதவர்
அறியார்கொல்—அறியாரோ?
49. ஒன்று—தனக்கு ஒப்பில்லையாக
பொன்றாது—அழியாமல்
50. புகழொடு—புகழுக்குக் காரணமான குணத்தோடு

## கேள்விகள்

1. கற்க, நிற்க என்று தெரிவிப்பன யாவை? மாந்தர்க்கு அறிவு எவ்வாறு வளரும்?
2. செவிச் செல்வமாவது யாது? ஆன்றபெருமை தருவது எது?
3. அறிவு எத்தகையதாகும்? அறிவுடையாரின் சிறப்பு என்ன?
4. நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும்—இதனால் அறியும் நீதி என்ன? 'இன்னான்' என்பது எதனால் [illegible]படும்?
5. அறிவுடையார் எதனை மேற்கொள்ள மாட்டார்? எது இழுக்காகும்?

6. செல்வம் பெற்றதால் பயனென்ன? காக்கையின் தன்மை யாது? அதனால் அறியும் நீதி என்ன?
7. கண்ணுக்கு அணிகலன் யாது? உலகம் யாருக்கு உரிமை உடையது?
8. செல்வம் யாரிடம் செல்லும்? மாந்தரின் உயர்வு எவ்வாறு ஏற்படும்? எதுபோல?
9. செல்வமும் வறுமையும் எவற்றால் ஏற்படும்? மெய் முயற்சியின் சிறப்பு யாது?
10. சொற்போரில் எவராலும் வெல்லப்படாதவன் யார்? மலர்ந்தும் மணம் இல்லாத மலர் போன்றவர் யார்?
11. என்றும் ஒழிதல் வேண்டியது யாது? தாய் பசித்திருந்தாலும் செய்யத் தகாதது எது?
12. எண்ணியதை எண்ணியபடி அடைபவர் யார்? இன்பம் பயக்கும் வினையை எவ்வாறு செய்தல் வேண்டும்?
13. பொருளின் சிறப்பு யாது? தீதின்றி வந்தபொருள் எவற்றைத் தரும்?
14. நீரவர் கேண்மை, பேதையார் நட்பு—இவை எவ்வாறு ஆகும்? நண்பனின் கடமை என்ன?
15. பேதையின் தொழில் என்ன? பேதையின் செல்வம் என்ன ஆகும்?
16. மருந்தின்றி வாழ வழி யாது? அளவறிந்து உண்டலின் பயன் என்ன?
17. குடிப்பிறந்தாரின் சிறப்பு என்ன?
18. பணிதலும் உயர்வும் எவ்வப்பொழுது வேண்டும்? நிலையிழந்த மாந்தரின் நிலைமை யாது?
19. 'பிறப்பொக்கும்', 'சிறப்பொவ்வா' என்று தெரிவிப்பன யாவை? பெருமை, சிறுமையுடையோரின் இயல்பு என்ன?
20. மரம்போல்பவர் யார்? பண்பிலான் பெற்ற செல்வம் எதுபோல் ஆகும்?
21. 'உழவே தலை' என்றது ஏன்? 'உழவரே வாழ்பவர்' என்றது ஏன்?
22. இல்லற வாழ்வின் பயன் யாது? எவர் இல்லத்தில் செல்வம் சேரும்?
23. பயன் மரம், மருந்தாகித் தப்பா மரம்—இவை யார் யாருக்கு உவமானம்?
24. செல்வத்தைச் சேர்த்து வைக்கச் சிறந்த வழி எது? அருள் இல்லாதவரின் இயல்பு என்ன?
25. உலகத்தில் அழியாது நிற்பது எது? அதனால் நாம் அறிவது யாது?

# 2. நன்னெறி

### சினங் காத்தல்

உள்ளங் கவர்ந்தெழுந்து ஓங்குசினங் காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ, தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு. 1

### நட்பின் நன்மை

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும் ;—பூக்குழலாய் !
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம். 2

### கீழோர் இயல்பு

உண்டு குணமிங்கு ஒருவர்க்கு எனினும்கீழ்க்
கொண்டு புகல்வதவர் குற்றமே ;—வண்டு மலர்ச்
சேக்கை விரும்பும் செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்பும் கனி. 3

### உயர்வு அறிவாலன்றிப் பிறப்பால் அன்று

ஆக்கும் அறிவால் அலது பிறப்பினால்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க ;—நீக்கு
பவரார் அரவின் பருமணிகண்டு ? என்றும்
கவரார் கடலின் கடு. 4

### கைம்மாறு கருதாமல் உதவுவோர்

கைம்மாறு உகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாம்செய்வர் ;—அம்மா !
முளைக்கும் எயிறு முதிர்சுவை நாவிற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று. 5

## அறிஞர் இயல்பு

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரம் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார் ;—நேரிழாய்!
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேல்
கைசென்று தாங்கும் கடிது. 6

—சிவப்பிரகாசர்

## குறிப்புரை

**நன்னெறி**—மக்களுக்கு நன்மையான வழிகளைக் கற்பிக்கும் நூல். நன்மை + நெறி = நன்னெறி : இதில் 40 வெண்பாக்கள் உள்ளன. இந்நூலை இயற்றிய சிவப்பிரகாசர், காஞ்சிபுரம் குமாரசாமி தேசிகரின் குமாரர். இவர் நீண்டகாலம் துறைமங்கலம் என்னும் ஊரில் வாழ்ந்துவந்தார். இவர் காலம் 200 ஆண்டுகளுக்கு முன்.

1. சினம்—கோபம்
   தடம்—பெரிய
   விளம்பு—சொல்
2. புணர்ந்தாலும்—கூடினாலும்
   நொய்து—அற்பம்
   குழலாய்—கூந்தலையுடையவளே
   புல்லினும்—சேர்ந்தாலும்
3. கீழ்—கீழ்மக்கள்
   சேக்கை—படுக்கை
   பொழில்வாய்—சோலையில்
4. மீக்கொள்—மேலாகக்கொள்கிற
   அரவு—நாகப்பாம்பு
   கடு—நஞ்சு
5. கைம்மாறு—மறு உதவி
   உகவாமல்—விரும்பாமல்
   எயிறு—பல்
6. இழாய்—ஆபரணத்தை யுடையவளே
   வியன்—பெரிய
   விரைகுவார்—முற்படுவார்
   கடிது—விரைந்து

## கேள்விகள்

1. சினங்காத்தல் அரிது—இது எதனால் விளங்குகிறது?
2. நெல், உமி நீங்கிக் கூடினாலும் முளைக்காது—இந்த உவமானம் விளக்கும் நீதி என்ன?
3. கீழ்மக்களின் இயல்பு யாது? அவர்களுக்குக் காட்டப்படும் உவமானம் என்ன?
4. ஒருவனுக்கு எதனால் உயர்வு ஏற்படுகிறது? அதனை உவமானத்துடன் விவரிக்க.
5. பல் நாவிற்கு எவ்வாறு உதவுகிறது? அதனால் அறியும் நீதி என்ன?
6. பேரறிஞரின் தன்மை யாது? அவருக்கு உவமானம் என்ன?

# 3. நாலடியார்

## கல்வியே அழகு தரும்

*குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்*
*மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து*
*நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையாற்*
*கல்வி யழகே யழகு.* 1

## கல்வியின் சிறப்பு

*களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்*
*விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்*
*கடைநிலத்தோ ராயினும் கற்றறிந் தோரைத்*
*தலைநிலத்து வைக்கப் படும்.* 2

## நற்குடிப்பிறந்தாரின் தன்மை

*ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை*
*அங்கண்மா ஞாலம் விளக்குறூஉம்—திங்கள்போல்*
*செல்லாமை செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற்கு*
*ஒல்கார் குடிப்பிறந் தார்.* 3

## நல்லோரைச் சேர்தலின் நன்மை

*ஊரங் கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்*
*பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்—ஓரும்*
*குலமாட்சி யில்லாரும் குன்றுபோல் நிற்பர்*
*நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.* 4

## பெருமை அளிப்பவை

*நல்ல குலமென்றும் தீய குலமென்றும்*
*சொல்லள வல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பின்*
*ஒண்பொரு ளொன்றோ, தவங்கல்வி யாள்வினை*
*என்றிவற்றா னாகும் குலம்.* 5

## மூவகை நட்பு

கடையாயார் நட்பிற் கமுகனையர் ; ஏனை
இடையாயார் தெங்கின் அனையார் ;—தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு. 6

—சமண முனிவர்

### குறிப்புரை

**நாலடியார்**—நான்கு அடிகளையுடைய வெண்பாக்களாலாகிய நூல். நான்கு + அடி + ஆர் = நாலடியார். இந்நூலுக்கு **வேளாண் வேதம்** என்ற வேறு பெயரும் உண்டு. இந்நூலில் 400 வெண்பாக்கள் உள்ளன. இந் நூல் பதினெண்கீழ்க்கணக்கு என்னும் தொகுப்பைச் சேர்ந்தது.

1. குஞ்சி—ஆண்களின் தலைமயிர்
   கொடுந்தானை—மடிப்புள்ள ஆடை
   கோடு—கரை
   நல்லம்—நன்மையுடையோம்
2. களர்நிலம்—உப்புநிலம்
   விழுமிதா—சிறந்ததாக
   நடைநிலத்தோர்—தாழ்ந்த குலத்தினர்
3. ஒரு புடை—ஒரு பக்கம்
   அம் கண்—அழகிய இடமகன்ற
   செல்லாமை—வறுமை
   ஒப்புரவு—உபகாரம்
   ஒல்கார்—தளரார்
4. அங்கணம் நீர்—சலதாரை நீர்
   உரவு நீர்—மிகுந்த நீரை
   பிறிது ஆகி—வேறாகி
5. சொல் அளவு—சொல்லும் அளவு
   தொல்—பழமையான
   ஆள்வினை—முயற்சி
6. கமுகு அனையர்—பாக்குமரத்தை ஒப்பாவார்
   தெங்கு—தென்னைமரம்
   பெண்ணை—பனைமரம்
   தொன்மை—பழமை

### கேள்விகள்

1. எவை அழகு ஆகா? எது அழகு ஆகும்? ஏன்?
2. சான்றோர் உப்பினை மேலாகக் கொள்வது ஏன்? அதனால் அறியும் நீதி யாது?
3. சக்கிரானின் இயல்பு யாது? இது நற்குடிப் பிறந்தார்க்கு ஒப்பாவது எப்படி?
4. குலப்பெருமை யில்லாதவர் எதனால் மேன்மை அடைவர்? எது போல?
5. எவற்றால் குலத்திற்குப் பெருமை ஏற்படும்?
6. கமுகு, தெங்கு, பெண்ணை—இவற்றின் தன்மைகள் யாவை? இவை யார் யாருக்கு உவமானம் ஆகும்? விளக்குக.

# III. கதை

## 1. மலையும் அணிலும்

### அணிலின் பேச்சு

'அற்பத் திருடா' என்றெனை யழைத்த
வெற்பே! யானும் விளம்பக் கேளாய்:

### மலையின் பெருமை

அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரு வண்மையும் உனக்கென்று
உரைமொழி முற்றும் உண்மையே ஆயின்,

### பல சேர்ந்ததே பெருமை

ஒருவகைப் பொருளின் ஒருல காமோ?
ஒருவெயில் மழையின் ஓராண்டு தேறுமோ?
பற்பல பொருளும் பற்பல பருவமும்
ஒன்றாய்க் கூடினே உலகாம், ஆண்டாம்.

### ஒவ்வொரு சிறப்பு

ஆதலின், யானிவ் வகிலமீ துதித்தே
இருப்பதை இழுக்கா எண்ணவும் மாட்டேன்;
என்தொழில் இயற்றவும் யாவர் வேறுளார்;
உன்பெரும் உருவெனக் கில்லை. உனக்கும்
என்சிறு வடிவில்லை. மேலும் என்றன்
உள்ளக் களிப்பில் உற்று நோக்கில்
எள்ளத் தனையும் உனக்கிலை யிலையே.

### மலையின் சிறப்பு

அணிற்பிள்ளை சாடி ஓடி அலைந்து
விளையா டற்கு விரிவிடம் பெறுவாய்.
ஐயம் இதற்கிலை, அடலும் ஆற்றலும்
ஒவ்வொரு வர்க்கும் ஒவ்வொரு விதமாம்;
அறத்தொடும் முறையொடும் ஆழ்ந்த அறிவொடும்
அனைத்துமிவ் வுலகில் அமைக்க லாயின.

## அணிலின் சிறப்பு

வனங்களை முதுகில் வகித்து நின்றிட
வல்லைநீ யாயின், மற்றிங் கெனைப்போல்
நெல்லைக் கொறிக்க நின்னா லாகுமோ?

## பெரியர் யார்? சிறியர் யார்?

யாவரே பெரியர்? யாவரே சிறியர்?
ஒன்றிற் பெரியர் ஒன்றிற் சிறியராம்;
ஒன்றிற் சிறியர் ஒன்றிற் பெரியராம்.
ஆதலின் அற்பர் ஆகா தவரென
ஓதுதல் மடமையின் சாதனை யாமே.

— கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

## குறிப்புரை

இது எமர்சன் (Emerson) என்பவர் இயற்றிய ஆங்கிலப் பாடலைத் தழுவி எழுதப்பட்டது. இரை தின்னுவதற்காக மலையின்மேல் ஏறிய அணிற்பிள்ளையை நோக்கி, மலையானது 'திருடன்' என்று இகழ்ந்ததால், அணிற்பிள்ளை மனம் வருந்தி மலைக்கு அறிவுரை கூறுவதாகக் கற்பனை நயத்துடன் இப்பாடல் இயற்றப்பட்டுள்ளது.

2. வெற்பு—மலை
   விளம்ப—சொல்ல
4. துளக்கல் ஆகா—அசைக்க முடியாத
5. வறப்பினும்—மழைபெய்யாமல் காய்ந்தாலும்
   வண்மை—ஈகை
8. ஆண்டு—வருஷம்
11. அகிலம்—உலகம்
12. இழுக்கா—குற்றமாக
18. சாடி—தாவி
20. அடல்—வெற்றி
24. வகித்து—தாங்கி
31. ஓதுதல்—சொல்லுதல்

## கேள்விகள்

1. மலையின் பெருமைகள் யாவை?
2. அணிற்பிள்ளை எதனை இழுக்காக எண்ணவில்லை என்று கூறியது? ஏன்?
3. 'ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு விதமாம்'—இதனை விளக்கி வரைக.
4. பெரியர் சிறியர் என்பதைப்பற்றி அணிற்பிள்ளை கூறியதென்ன?
5. அணிற்பிள்ளை சொல்லியதைச் சுருக்கித் தெரிவிக்க.

## 2. வீரமங்கை

### கதிரைவேலன் போர்புரிதல்

வடக்கிருந்த வாயிலிலே கதிரை வேலன்
வந்தெதிர்த்த பெரும்படைமேற் படையை ஏவி
அடுத்துநின்ற வேழமன்னன் வாழ்வீச் சுக்கள்
அத்தனைக்கும் விடைகூறித் தன்வீச் சுக்கும்
கொடுத்தவிடை பெற்றபடி இருந்தான்! சாவு
கொற்றவர்கள் இருவர்பால் மாறி மாறி
நொடிக்குநொடி நெருங்கிற்று! வெற்றி மங்கை
நூறுமுறை ஏமாந்தாள் ஆளைத் தேடி! 1

### கதிரைவேலன் மடிதல்

போர்செய்து கொண்டிருந்த கதிரை வேலன்
பொத்தென வீழ்ந் தான். அவனின் முதுகின் மீதில்
ஓர் ஈட்டி பாய்ந்தது போய்க் கருந்தி ரைக்குள்
உடல்மறைத்துக் கொண்டிருந்த நரிக்கண் ணன்,தன்,
பேர்மறைக்க எண்ணியே தான்அ ணிந்த
பெருந்திரையை, முகமூடித் துணியை, அங்கு
நேர்நின்ற தன்னுளை அணியச் செய்து
நெடிதுபோய் அரண்மனையில் நின்றி ருந்தான். 2

### நரிக்கண்ணனின் தீய நினைவு

நின்றிருந்த நரிக்கண்ணன், உடன்பி றந்த
நேரிழையாள் வரும்வழியில் விழியை வைத்தான்;
அன்றிருந்த என்கருத்தில் பாதி தீர்த்தேன்;
அவள் ஒழிந்தால், முக்காலும் தீரும்; பின்னும்
அன்னத்தைக் கொன்றொழித்தால் முழுதும் தீரும்;
அதன் பிறகன் றோஇந்த நாட்டின் ஆட்சி,
என்றென்றும் என்கையில் நிலைத்து நிற்கும்?"
எனநினைத்தான் தினையேனும் மானம் இல்லான். 3

## கண்ணுக்கினியாள் கணவனைக் காணுதல்

கொலைவாளும் கையுமாய் அரசி வந்தாள் ;
கொண்டவனைப் பிணமாகக் கண்டாள் ஆங்கே
நிலைகலங்கி நின்றிட்டாள் வீழ்ந்த தோநின்
நெடுமேனி ! வீழ்ந்ததோ கதிர்நா டிந்நாள் !
இலைநீதான் எனஅறிந்தால் அஞ்சி வாடும்
இந்நாட்டு மக்களை,யார் தேற்று வார்கள் ?
கலைந்ததுவோ என்காதல் ஓவி யந்தான் !"
எனக்கூறிக், கட்டழகன் உடலை அள்ளி 4

## கண்ணுக்கினியாள் நாணி வருந்துதல்

அணைத்திட்டாள் ! மலர்க்கையால் கன்னம் உச்சி
அணிமார்பு தடவினாள் ! ஈட்டியாலே
தணல்போலும் புண்பட்ட முதுகு கண்டாள்
தலைகுனிந்தாள் அப்பிணத்தை நிலத்திற் போட்டாள் !
இணைபிரியா மானமதும் எம்மை விட்டே
ஏகிற்றே ஐயகோ ! முதுகு காட்டத்
துணிந்ததுவோ தமிழாநின் தமிழ நெஞ்சம் !
தூயநின் மூதாதை, என்மூ தாதை 5

## வேழ மன்னன் மொழி

அனைவருள்ளும் எவரேனும் பகைவன் வாளை
அருமார்பில் முன்தோளில் ஏற்ற தின்றித்
தினையளவும் திரும்பிப்பின் முதுகில் ஏற்ற
சேதியினை இவ்வையம் கேட்ட துண்டோ ?
எனக்கூவித் திரும்புங்கால், எதிரில் நின்ற
இளவேழ நாட்டரசன், இரக்க மிஞ்ச,
" மனைவிளக்கே, நின்துணைவன் கதிரை வேலன்
வாட்போரை என்னோடு நிகழ்த்துங் காலை 6

## கண்ணுக்கினியாள் மனம்தேறி மனைசேர்தல்

முகமறைத்த ஒருதீயன் எவனோ பின்னே
முடுகிவந்து நடுமுதுகில் எறிந்தான் ஈட்டி!
திகைத்தேன்நான்! சாய்ந்தான்அம் மறவோர் மன்னன்!
திகழிமய மலைபோலும் அவன்கொண் டுள்ள
புகழ்க்கென்ன? உன்குடிக்கு வாய்த்த மானம்
போனதெனப் புலம்புவதும் என்ன? பெண்ணே
அகத்துன்பம் நீங்கிஇரு! செல்க உன்றன்
அரண்மனைக்கே" என்றுரைத்தான் சென்றாள்
பெண்ணாள். 7

—பாரதிதாசன்

## குறிப்புரை

இப்பகுதி 'பாண்டியன் பரிசு' என்னும் நூலில் உள்ளது. வீரச் சுவை நிரம்பிய இந்நூலை இயற்றிய பாரதிதாசனார், கனக. சுப்புரத்தினம் என்னும் இயற் பெயரினர். இவர் புதுச்சேரியில் வாழ்ந்து வருகிறார்.

1. கதிரைவேலன்—கதிர்நாட்டு மன்னன்
   கொற்றவர்—அரசர்
   ஏமாந்தான்—ஏமாறினான்
2. கருந்திரை—கரிய போர்வை
   நெடிது—நீண்ட தூரம்
3. சேரிழையாள்—கதிரைவேலன் மனைவியாகிய கண்ணுக்கினியாள்
   அன்னம்—கதிரைவேலன் மகள்
4. கொண்டவனை—கணவனை
   ஓவியம்—சித்திரம்
   அள்ளி—தூக்கி
5. தணல்—நெருப்பு
   மூதாதை—முன்னோர்
6. மனைவிளக்கே—பெண்ணே!
7. முடுகி—விரைந்து
   திகழ்—விளங்குகிற

## கேள்விகள்

1. கதிரைவேலன் வேழமன்னனோடு போர்செய்த சிறப்பு யாது?
2. நரிக்கண்ணன் என்பவன் யார்? அவன் செய்த இழிசெயல் யாது?
3. நரிக்கண்ணனின் தீய எண்ணம் என்ன?
4. கதிரைவேலன் இறந்ததைக்குறித்துக் கண்ணுக்கினியாள் எவ்வாறு வருந்தினாள்? பிறகு அவள் வெட்கிக் கூறியது என்ன?
5. கண்ணுக்கினியாளுக்கு வேழமன்னன் கூறியது என்ன?
6. கண்ணுக்கினியாளை வீரமங்கை என்றது எவ்வாறு?

## 3. பிரமசாரியும் பொரிமாத்தோண்டியும்

### பிரமசாரி பொரிமாத்தோண்டி பெறல்

உரைத்தவக் கதையே தென்ன,
ஓதுமோர் நகரந் தன்னில்
தரித்திரப் பிரம சாரி
சார்ந்தொரு சிராத்தத் துண்டான் ;
அரைத்திடும் பொரிமாத் தோண்டி
அவற்கொரு மறையோ னிந்தான் ;
திருத்தியிற் பருப்புஞ் சோறும்
தின்றதோர் மயக்கத் தாலே, 1

### பிரமசாரியின் எண்ணம்

மற்றொரு நகர்க்குச் செல்லும்
வழியிலோர் மணற்ற டத்தில்
சற்றொரு கணப்போ தங்கே
தரித்தவன் இருந்து நெஞ்சில்
உற்றகா ரியங்கள் கோடி
உன்னினன் இந்த மாவை
விற்றுநாம் ஆடு வாங்கி
மேய்க்கிலோர் இரண்டு குட்டி 2

### ஆடுகள் பெருகும்

போடுமவ் விரண்டில் ஒன்றும்
பொருகடாத் தன்னை விற்று
நாடுபெண் ஆடி ரண்டு
நயவிலை யாகக் கொள்வோம் ;
ஆடொரு நாலாம் அந்த
ஆடுகள் இரண்டு இரண்டாப்
போடுமக் குட்டி யோடே,
பொருந்திய பனிரண் டாமே ; 3

### மாடுகள் பெருகும்

பன்னிரண் டாடும் விற்றுப்
பசுக்களோர் இரண்டு கொள்வோம்;
தன்னிலே பட்டி மேய்ந்து
தருக்கிய இரண்டு ஈனும்;
மன்னுபால் நெய்யும் விற்று
மற்றிரு பசுவுங் கொள்வோம்;
அன்னவப் பசுக்கள் ஆறும்
ஆறுசேங் கன்று நல்கும். 4

### மனக்கோட்டை

மூவணை யேருங் கூட்டி
முன்னுள நிலங்கள் எல்லாம்
ஓவற வளங்க ளாக
உழுதுநாம் பயிர்கள் இட்டே
மேவுதா னியங்கள் எல்லாம்
விலைகளைக் குறைய விற்றுக்
காவலன் அறிக்கை யாலே
கனக்கவோர் வீடுங் கட்டி 5

### செல்வமும் வாழ்வும்

இருந்து நாம் பணமுங் காசும்
ஏரொடு பொருளுந் தேடிப்
பொருந்திய பிராம ணர்க்குப்
போசனம் இடுவோம்; இட்டால்
வருந்தியே நமக்குப் பெண்ணும்
வலியவே தருவார்; அந்தத்
திருந்திழை யாள்வ யிற்றில்
சனிப்பனோர் சிறந்த மைந்தன் 6

### பொரிமாத் தோண்டியை உடைத்தல்

அப்படி யிருக்கும் நாளில்,
அந்தியிற் பசுக்கள் கட்டக்
கொப்படர் கண்ணாள் செல்லக்
குழந்தையும் அழும் நாம்ஓடி

இப்படி யடிப்போ மங்கே
   என்றொரு தடியெடுத்துச்
செப்பிய பொரிமாத் தோண்டி
   சிதறிட வடித்திட் டானே.

### பிரமசாரியின் கலக்கம்

கலங்கினன் பிரம சாரி
   காரகஸ் தங்க ளெல்லாம்
துலங்கிய பொரிமா வைத்த
   தோண்டியோ டழிந்த தன்றே
மலங்குகண் ணீர்கள் சோர
   வயிற்றினில் அடித்துக் கொண்டே
நிலத்தினிற் புரண்டு வீழ்ந்து
   நெடுந்துயர் அடைந்தான் அன்றே. 8

—வீரமார்த்தாண்ட தேவர்

## குறிப்புரை

இக்கதைப் பகுதி '**பஞ்சதந்திரம்**' என்னும் நூலில் உள்ளதாகும்.

**கதைத் தொடர்ச்சி**:—கௌட தேசத்தில் தேவசன்மா என்ற ஓர் அந்தணன் இருந்தான். அவன் மனைவி யாகசேனை என்பவள் கர்ப்பமாயிருந்தாள். அதையறிந்த தேவசன்மா மகிழ்ச்சியடைந்து தன் மனைவி மகிழும்படி 'உன் வயிற்றில் மகன் பிறந்து சிறப்புற்று வாழ்வான்' என்று அவளிடம் சொன்னான். அதைக்கேட்ட யாகசேனை இக்கதையைக் கூறினாள்.

1. ஓதும்—சொல்வான்
   பிரமசாரி—மணம் ஆகாதவன்
   சிராத்தம்—இறந்தவர்களுக்குச் செய்யும் கடன்
2. தடத்தில்—இடத்தில்
3. பொரு—சண்டையிடும்
4. ஈனும்—ஈன்றுபோடும்
5. ஓவற—ஒழிதல் இல்லாமல்
   காவலன்—அரசன்
6. திருக்கிளை—சிறந்த கிளை
   சனிப்பன்—பிறப்பான்
7. கொப்பு—காது அணி
8. காரகஸ்தம்—மனக்கோட்டை
   மலங்கு—கலங்கிய

## கேள்விகள்

1. பிரமசாரிக்குப் பொரிமாத் தோண்டி கிடைத்தது எவ்வாறு?
2. பிரமசாரி எண்ணிய மனக்கோட்டை யாது?
3. பிரமசாரியின் மனக்கோட்டை எவ்வாறு வீணாயது?
4. இக்கதையால் அறியும் நீதி என்ன?

# IV. இயற்கையழகு

## உதயம்

குளிரும் தென்றல் அசைந்தசைந்து
குலவி மகிழ்ந்து தவழ்ந்திடவே
மிளிரும் உதயச் செவ்வண்ணம்
விரைந்து கிழக்கில் பெருகிடவே
ஒளிரும் சிறைமென் புள்ளினங்கள்
ஒன்றாய் இசைகள் பாடிடவே
தளிரும் இலையும் வளர் காவில்
தண்ணார் மலர்கள் கண்விழிக்கும்

—சூடாமணி

## செந்தாமரை

கண்ணாடித் தரையின் மீது
கண்கவர் பச்சைத் தட்டில்
எண்ணாத ஒளிமுத் துக்கள்
இறைந்தது போல்கு ளத்துத்
தண்ணீரி லேபட ர்ந்த
தாமரை இலையும், மேலே
தெண்ணீரின் துளியும் கண்டேன்
உவப்பொடு வீடு சேர்ந்தேன்.

—பாரதிதாசன்

## அந்திப் பொழுது

தென்னை மரக்கிளை மீதில்—அங்கோர்
செல்வப் பசுங்கிளி கீச்சிட்டுப் பாயும் ;
சின்னஞ் சிறிய குருவி—அது
'ஜிவ்' வென்று விண்ணிடை யூசலிட் டேகும் ;
மன்னப் பருந்தோர் இரண்டு—மெல்ல
வட்டமிட் டுப்பின் நெடுந்தொலை போகும் ;
பின்னர்த் தெருவிலோர் சேவல்— அதன்
பேச்சினி லே'சக்தி வேலெ'ன்று கூவும்.

—பாரதியார்

## பொதிய மலை

சிங்கமும்வெங் களிறுமுடன் விளையாடும் ஒருபால்
சினப்புலியும் மடப்பிணையும் திளைத்திடுமங் கொருபால்
வெங்கரடி மரையினொடும் விளையாடும் ஒருபால்
விடஅரவும் மடமயிலும் விருந்தயரும் ஒருபால்
அங்கணமர் நிலங்கவிக்கும் வெண்கவிகை நிழற்கீழ்
அம்பொன்முடி சூடுமெங்கள் அபிடேக வல்லி
செங்கமலப் பதம்பரவும் கும்பமுனி பயிலும்
தென்பொதிய மலைகாண்மற் றெங்கள்மலை யம்மே.

—குமரகுருபரர்

## குறிப்புரை

1. தென்றல்—தெற்கிலிருந்துவரும் காற்று
மிளிரும்—விளங்குகிற
செவ்வண்ணம்—செந்நிறம்
சிறை—சிறகு
புள் இனம்—பறவைக் கூட்டம்
கா—சோலை
தண் ஆர்—குளிர்ச்சிபொருந்திய
கண் விழிக்கும்—மலரும்
2. கண்ணாடித்தரை—கண்ணாடி போன்ற தரை
கண்கவர்—கண்களைக் கவரும் படியான
எண்ணாத—எண்ணமுடியாத
தெண்ணீர்—தெளிந்த நீர்
உவப்பொடு—மகிழ்ச்சியோடு
3. பசங்கிளி—பச்சைக்கிளி
மன்ன—அரசநிலையில் உள்ள
நெடுந்தொலை—நீண்ட தூரம்
4. களிறு—ஆண்யானை
மடப்பிணை—இளமையான மான்
மரை—ஒருவகை மான்
விருந்து அயரும்—விருந்து உண்ணும்
கவிகை—குடை
கமலம்—தாமரை
கும்பமுனி—அகத்தியர்
பயிலும்—வாழும்

## கேள்விகள்

1. உதயத்தில் ஏற்படும் இயற்கை நிகழ்ச்சிகள் யாவை?
2. குளம், தாமரை இலை, நீர்த்துளி—இவைகள் எவ்வாறு காட்சியளிக்கின்றன?
3. அந்திப்பொழுதில் கிளி, குருவி, பருந்து, சேவல் இவைகள் என்ன செய்கின்றன?
4. பொதியமலையின் அற்புதக் காட்சிகள் யாவை?

# V. தனிப் பாடல்கள்

## சொல் நயம்

சங்கரற்கு மாறுதலை ; சண்முகற்கு மாறுதலை ;
ஐங்கரற்கு மாறுதலை யானதே ;—சங்கைப்
பிடித்தோர்க்கு மாறுதலை ; பித்தா ! நின்பாதம்
படித்தோர்க்கு மாறுதலை பார். 1

—காளமேகப் புலவர்

## திருக்குறளின் சிறப்பு

தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்—மனையளவு
வள்ளைக் குறங்கும் வளநாட ! வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி. 2

—கபிலர்

## வறுமைக்கு உரைத்தது

நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழல்போலே
நாளைக் கிருப்பாயோ நல்குரவே ?—காளத்தி
நின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே நானெங்கே
இன்றைக்கே சற்றே இரு. 3

—மதுரகவிராயர்

## அம்மானை

ஈசன் பசுவாகி ஏமனொரு கன்றாகி
வீசுபுகழ் ஆரூரில் வீதிவந்தார் அம்மானை ;
வீசுபுகழ் ஆரூரில் வீதிவந்தார் ஆமாயின்
காசளவு பாலும் கறவாதோ அம்மானை ?
கன்றை யுதைகாலி கறக்குமோ அம்மானை ? 4

—இரட்டைப் புலவர்

## யானைப் பரிசு

இம்பர்வான் எல்லை இராமனையே பாடி
என்கொணர்ந்தாய், பாணா ! நீ' என்றாள்பாணி ;
வம்பதாம் களபம்' என்றேன் ; 'பூசும்' என்றாள் ;
'மாதங்கம்' என்றேன் ; 'யாம் வாழ்ந்தோம்' என்றாள் ;

'பம்புசீர் வேழம்' என்றேன்; 'தின்னும்' என்றாள்;
'பகடு' என்றேன்; 'உழும்' என்றாள்; பழனந்தன்னைக்
'கம்பமா' என்றேன்; 'நற் களியாம்' என்றாள்;
'கைம்மா' என்றேன்; சும்மா கலங்கினாளே.

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்

## குறிப்புரை

1. ஆறுதலை—தலையில் கங்கையாறு
ஐங்கரன்—விநாயகர்
மாறுதலை—தேவ முகத்திற்கு மாறாக யானைத்தலை அமைந்தது
சங்கைப் பிடித்தோன்—திருமால்
ஆறு—திருப்பாற்கடல்
தலை—இடம்
ஆறுதலை—மன ஆறுதலை
2. மனையளகு—வீட்டில் வளர்க்கப் படுகிற பெண் பறவைகள்
வள்ளை—உலக்கைப்பாட்டு
புல் நீர்—புல்லின் நுனியிலுள்ள பனிநீர்
படித்து—தன்மையுடையது
3. நல்குரவே—வறுமையே
கானத்தி—ஓர் வள்ளல்
நின்றை—திருநின்ற ஊர்
4. எமன்—எமன்
காசு அளவு—சிறிதளவு
காலி—பசு எனவும், காலை உடையவர் எனவும் பொருள் படும்
கன்றையுதைகாலி—மார்க்கண் டேயருக்காக இயமனைக் காலால் உதைத்த சிவ பெருமான்
5. இம்பர்—இவ்வுலகில்
பாணன்—பாடுபவன்
வம்பு—புதுமை
களபம்—யானை, சந்தனம்
மாதங்கம்—யானை, சிறந்தபொன்
பம்பு—வலிமை
வேழம்—யானை, கரும்பு
பகடு—யானை, காளை
கம்பமா—யானை, கம்புமாவு
கைம்மா—யானை

## கேள்விகள்

1. ஆறுதலை என்பது எவ்வெவ்வாறு பொருள்படுகிறது? அதிலுள்ள நயத்தைக் கூறுக.
2. திருக்குறளின் பெருமையைக் கபிலர் எவ்வாறு தெளிவுறக் காட்டுகிறார்?
3. மதுரகவிராயர் வறுமையை விளித்துக் கூறுவதென்ன? அவர் அங்ஙனம் கூறியது ஏன்?
4. 'கன்றையுதைகாலி கறக்குமோ'—இதில் அமைந்துள்ள வரலாறு யாது? அம்மானை என்பது என்ன?
5. யானையைக் குறிக்கும் சொற்களும் அவற்றின் வேறு பொருள்களும் யாவை? இச்செய்யுளின் செய்தியை உரையாடலாக வரைக.

# VI. நாட்டுப் பாடல்கள்

## இயேசுநாதர் குஷ்டரோகியைக் குணமாக்கியது

பருவதத்தில் கர்த்தர் பண்ணின பிரசங்கம்
நிறைவாய் முடிந்தபின்பு நேர்மையுடன் இப்போது
கும்புகள் அவரோடு கூடியே வந்தார்கள்
எம்பரன் வருகையிலே இருந்தகுஷ்ட ரோகியவன்
கண்டோடி வந்து கருத்தாய் அவன்பணிந்து
விண்டிடச் சொல்வான் மிகவுமவன் அந்நேரம்
ஆண்டவரே யுமக்கு ஆனமன துண்டானால்
நீண்டஎன் ரோகமதை நீக்கஉம்மால் ஆகுமென்றான்
அப்போது ஏசு அவனைத்தொட்டு ஏதுசொல்வார்
இப்போது மனதுண்டு இதமாய்ச்சுத்த மாகென்றார்
உடனே யவன்ரோகம் ஒருநொடியில் நீங்கினதே. 1

—கிறிஸ்தரசன் கதை

## ஊமத்துரை சபதம்

விணைமு கத்துக்கு அஞ்சாத ஊமையன்
சினந்து வேகங்கொண் டேதுசொல்வான்
பனைம ரத்திலே யேறலாமா ஏறிப்
பானை தொடாம லிறங்கலாமா.
சங்குசுட் டால்வெண்மை போய்விடுமோ பசுந்
தங்கம் கெட்டால்நிறந் தான்குன்றுமோ
சிங்கத்தின் முன்னே நரியெதிரோ துரைச்
சிங்கம் நரிக்குப் பயப்படுமோ
பாஞ்சைப் பதிக்கொரு வேங்கைப் புலிநானும்
பாளையங் கோட்டை மதப்புலிநான்
காஞ்சபால் ரொம்பக் கசக்குதென்றான் ரத்தம்
கண்டால் மனத்திட மாகுமென்றான்
மானா பிமான பரனான துரை
மன்னன் கட்டபொம்மு தம்பியல்லோ
ஆனாலு மாகுது போனாலும் போகுது
•அடிக்கிறேன் பாரொரு தம்மாசு. 2

—கட்டபொம்மு கும்மி

## உணவு வகை

அடிசில் சமைக்க ஆரணங்கு தானினைந்து
பாண்டத்தைக் கழுவி பனிநீர் உலைவார்த்து
சின்னசம்பா தன்னரிசி தீட்டி உலையிலிட்டாள்
முத்துப்போல் சாதம் வடித்தாள் இளங்கொடியாள்
நந்தியெனும் பூசணிக்காய் நாலுவிதங் கறிசமைத்தாள்
வாழைக்காய் பொரியலிட்டாள் வழுதுணங்காய்க் குழம்பு
கொத்தவரைக் காய்கள் குலையோடே பொரியலிட்டாள்
பாகற்காய்ப் பச்சடியும் பயிற்றங்காய் தான்பொரியல்
அத்தி விறகொடித்துத் தித்திக்கப் பால்காய்ச்சி
புத்துருக்கு நல்லநெய்யாம் பொன்போல் பருப்புக்களும்
அதிரசமுந் தேன்குழலும் ஆறுசுவைக் கறிவகையும்
கடுக சமையலிட்டாள் கன்னி இளமயிலும். 3

—பவளக்கொடி மாலை

## குறிப்புரை

1. பருவதம்—மலை
   கர்த்தர்—இயேசுநாதர்
   கும்பு—கும்பல்
   பரன்—தலைவன்
   விண்டிட—வெளிப்பட
2. விளைமுகம்—போர்க்களம்
   குன்றுமோ—குறையுமோ
   பாஞ்சை—பாஞ்சாலங்குறிச்சி
   திடம்—உறுதி
   தம்மாசு—தமாஷ்
3. அடிசில்—உணவு
   அணங்கு—பவளக்கொடியாகிய பெண்
   வழுதுணங்காய்—கத்திரிக்காய்
   புத்துருக்கு—புதிய தாய் உருக்கிய
   கடுக—விரைவாக
   கன்னி—மணம் ஆகாத பெண்

## கேள்விகள்

1. இயேசுநாதர் செய்த அற்புதச் செயல் யாது ?
2. வாலைமத்துரை கூறிய சபதமொழிகள் யாவை ?
3. பவளக்கொடி சமைத்த உணவுவகைகள் எவை ?

# VII. பலவகைப் பாடல்கள்

## நீர்வளம்

விழுந்த அம்சிறை வண்டினம் மிதிப்பமேல் அரும்பு
கிழிந்து வார்தரு தேறலும் இளர்சினைப் பலவின்
பழங்க ளிரிந்துவீழ் தேறலும் பழனங்கள் தோறும்
வழிந்து பாய்தலின் வானுற வளர்வன செந்நெல். 1

—நைடதம்

## நெற்கதிர்த் தோற்றம்

சொல்லரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே. 2

—சீவகசிந்தாமணி

## போர்க் காட்சி

எறிகட லொடுகடல் கிடைத்தபோல்
இருபடை களுமெதிர் கிடைக்கவே
மறிதிரை யொடுதிரை மலைத்தபோல்
வருபரி யொடுபரி மலைக்கவே. 3

பொருபுலி புலியொடு சிலைத்தபோல்
பொருபட ரொடுபடர் சிலைக்கவே
அரியினொ டரியினம் அடர்ப்பபோல்
அரசரும் அரசரும் அடர்க்கவே. 4

—கலிங்கத்துப் பரணி

## குறத்தி சாதிவளம் கூறுதல்

செந்திருமா லென்றனக்கு மைத்துனன்கா ணம்மே
திங்களணி சிவனெனக்குத் தமையன்முறை யம்மே
அந்தமிகுங் கந்தனெங்கள் மருமகன்கா ணம்மே
அன்னநடை வள்ளியெங்கள் கன்னிகைகா ணம்மே 5

—சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்

## கொடியின் குறிக்கோள்

கொடி வணக்கமது செய்வோம்—நாட்டின்
குறைகள் நீங்கியினி உய்வோம்.
முடி வணங்கியதைப் போற்றி—அதன்
மூன்று நிறக்குறி சாற்றி. 6

பச்சையான ஒரு தோற்றம்—நமக்குப்
பக்தி வேண்டுமெனச் சாற்றும்
இச்சையான பொருள்கூடப்—பக்தி
இருக்க வேணுமதை நாட. 7

தூய வெள்ளைநிறக் காட்சி—உண்மை
துலங்கு மென்பதற்குச் சாட்சி
மையமாக நிற்கும் மர்மம்—சத்தியம்
மதங்கள் யாவினுக்குந் தர்மம் 8

துறவின் வர்ணமந்தக் காவி—உலகின்
துக்கப் பூட்டினுக்குச் சாவி
சிறையும் வீடுமதற் கொன்றே—என்னுஞ்
சேதி ஓதுவதற் கென்றே. 9

—நாமக்கல் கவிஞர்

## நாம் செய்வோம்

சிங்களத் தீவினுக்கோர் பால மமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்
வங்கத்தி லோடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர் செய்குவோம். 10

வெட்டுக் கனிகள்செய்து தங்க முதலாம்
வேறு பலபொருளுங் குடைந் தெடுப்போம்
எட்டுத் திசைகளிலுஞ் சென்றிவை விற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டு வருவோம். 11

—பாரதியார்

## வாழ்வு

மூதறி வுள்ளது வாழ்வு—நறும்
முத்தமிழ் கற்பது வாழ்வு
காதினில் கேட்டதைக் கண்ணில்—முன்
கண்டதை ஓவியம் ஆக்கும்
பாதித் தொழில்செய லின்றி—உளம்
பாய்ச்சும் கருத்திலும் செய்கை
யாதிலும் தன்னை விளக்கும்—கலை
இன்பத்தில் வாய்ப்பது வாழ்வு ! 12

—பாரதிதாசன்

## நாட்டு வாழ்த்து

ஓங்குநல் அறிவுச் செல்வம்,
உறுதிசெய் வீரச் செல்வம்,
தீங்கறு தொண்டுச் செல்வம்
செய்திருத் தொழிலின் செல்வம்,
தூங்கறு முயற்சிச் செல்வம்
துகளறு புகழின் செல்வம்,
பாங்குற நிலவி இந்தப்
பாரத தேசம் வாழ்க ! 13

—கவியோகி சுத்தானந்த பாரதியார்

## குறிப்புரை

1. சிறை—சிறகு
வார்தரு—வடிகின்ற
தேறல்—தேன்
சினை—கிளை
பழனம்—வயல்
வான்உற—ஆகாயமளாவ
நிறுவி—நிமிர்ந்து
இறைஞ்சி—வணங்கி

2. சோல்—நெற்கதிர்
சூல்—கர்ப்பம்

3. எறி—அலைவீசுகிற
மறிதிரை—சுருண்டுவருகிற அலை
மலைந்த—போர்செய்த
பரி—குதிரை

4. பொருபுலி—போர்செய்கிற புலி
மலைந்த—போர்செய்த
படர்—படைவீரர்
அரி—சிங்கம்

5. இராமன் குகனைத் தன் உடன்பிறந்தானாக ஏற்றுக் கொண்டதால் 'மைத்துனன்' என்றும், சிவபெருமான் வேடவடிவங் கொண்டுள்ளதால் 'தமையன் முறை' என்றும் முருகன் வள்ளியை மணந்ததால் 'மருமகன்' என்றும் குறத்தி கூறினள்.
திங்கள்—சந்திரன்
அந்தம்—அழகு

6. உய்வோம்—வாழ்வோம்
முடி—தலை

7. சாற்றும்—சொல்லும்
இச்சை—விருப்பம்

8. துலங்கும்—விளங்கும்
மர்மம்—இரகசியம்

9. காவி—காவிநிறம்

10. சேது—இராமேசுவரம்
வங்கம்—வங்காளம்
மிகையால்—மிகுதியால்

11. கனிகள்—சுரங்கங்கள்
எண்ணுக்கும்—மதிக்கும்

12. மூதறிவு—முதிர்ந்த அறிவு
முத்தமிழ்—இயல், இசை, நாடகம்
ஓவியம்—சித்திரம்

13. தீங்கு அறு—தீமை நீங்கிய
தூங்கு அறு—சோம்பல் நீங்கிய
துகள்—குற்றம்
பாங்கு—அழகு

## கேள்விகள்

1. அதிவீரராமபாண்டியர் வயல்களின் வளப்பத்தை எங்ஙனம் தெரிவிக்கிறார்?
2. திருத்தக்க தேவர் நெற்பயிரை எவ்வாறு வருணிக்கிறார்?
3. சயங்கொண்டார் குதிரை, படைவீரர், அரசர் போர் செய்தலை எங்ஙனம் தெரிவிக்கிறார்?
4. குறத்தி திருமால், சிவன், முருகன் ஆகியோரை முறைகொண்டாடிக் கூறியதென்ன? அது எவ்வாறு பொருந்தும்?
5. நம் நாட்டுக்கொடியின் மூன்று நிறங்கள் யாவை? அவற்றின் குறிக்கோள்கள் என்ன?
6. பாரதியார் தெரிவிக்கும் ஆக்கவேலைகள் யாவை?
7. வாழ்வு எவ்வாறு இருக்கவேண்டும் என்று பாரதிதாசனார் தெரிவிக்கிறார்?
8. சுத்தானந்த பாரதியார் இந்திய நாட்டை எங்ஙனம் வாழ்த்துகிறார்?

# கம்பர் தமிழ் வாசகம்

## மூன்றாம் புத்தகம்

மூன்றாம் படிவம்

வித்துவான் தி. சி. குழந்தைவேல் முதலியார்
அர்ச். சூசையப்பர் கல்லூரி உயர்நிலைப்பள்ளி
திருச்சிராப்பள்ளி

முருகன் பதிப்பகம்

குளித்தலை P.O. திருச்சிராப்பள்ளி

முதற் பதிப்பு: அக்டோபர், 1953

பதிப்புரிமை

விலை ரூபாய் ஒன்று

PRINTED AT
ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL PRESS, TRICHINOPOLY—1I.O.

# முன்னுரை

சென்னை அரசியலார் தமிழ்மொழியை முதன் மொழியாக்கியதிலிருந்து கல்வி பயிலும் மாணவரிடையே ஆர்வம் பெருகி, அவர்கள் தமிழ் மொழியைக் கற்பதில் உள்ளக் கிளர்ச்சி பெற்று வருகின்றனரெனலாம். இந்நிலையில் தமிழ் மொழியைச் சிறப்பாகப் பயிலும் மாணவர் நலங்கருதி, 1951-ல் **பொதுப் படிப்பு, சிறப்புப் படிப்பு** என இரு பிரிவுகளாகத் தமிழ்ப் பாடத்திட்டங்களை வகுத்து புதிய பாடத்திட்டத்தை வெளியிட்டனர். இப்பாடத்திட்டத்திற் கிணங்கவே, 'கம்பர் தமிழ் வாசகம்' என்னும் இப்பாட நூல் அமைக்கப்பெற்றுள்ளது. இது, மூன்றாம் படிவம் பொதுப் படிப்புக்குரியதாகும்.

இப்பாட நூலில், தேசியம், இலக்கியம், வரலாறு, கைத்தொழில், பயிர்த்தொழில், விஞ்ஞானம், கற்பனைக் கதை, நகைச்சுவை நிகழ்ச்சி, புதுமை காணல் முதலிய பல்வகைப் பொருள்களில் ஏற்றவை வகுப்பின் அளவறிந்து கொடுக்கப் பட்டுள்ளன. இவை கட்டுரை, உரையாடல், கடிதம், சொற் பொழிவு, நாடகம், சுயசரிதம், கேளிக்கைப் பயணம் முதலிய வகைகளில் விளக்கப்பட்டுள்ளன

செய்யுட் பகுதியில், பழமையும் புதுமையும் தழுவிய பலவகைப் பாக்கள் அமைந்துள்ளன. அவை கடவுள் நெறி, அறநெறி, கதை, இயற்கை, நாட்டுப் பாடல், பலவகைச் சுவை முதலிய பலதிறம் பற்றியவையாகும். புதுமைப் பாக்களின் ஆசிரியர்களுக்கு எனது நன்றி உரியதாகும்.

நன்முறையில் அமைக்கப்பட்டுள்ள இப்பாடநூலைக் கல்வியதிகாரிகளும், கல்விநிலையத் தலைவர்களும், தமிழாசிரியர்களும் ஆதரித்து மாணவர்களுக்குப் பயன்படச்செய்யுமாறு வேண்டுகிறேன்

**தி. சி. கு.**

# பொருளடக்கம்

## உரைநடைப் பகுதி


| பொருள் | | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | குகனும் பரதனும் | 1 |
| 2. | பள்ளிப் பாராளு மன்றம் | 8 |
| 3. | கவிஞர் பாரதிதாசனார் | 11 |
| 4. | கொட்டு முரசே! | 17 |
| 5. | நான் கண்ட நல்லிடங்கள் | 18 |
| 6. | வீரத்தாய் | 24 |
| 7. | பேசும் படக்கலை | 31 |
| 8. | முயலுக மேன்மேல்! | 38 |
| 9. | படக்காட்சி நன்று, தீதா? | 39 |
| 10. | உண்மைக்கு உயிரளித்தவர் | 49 |
| 11. | பட்டுத்தொழில் | 57 |
| 12. | புதுமை கண்டவர் | 64 |
| 13. | தொழில் செய்வோம் | 72 |
| 14. | சோளத்தின் வரலாறு | 73 |
| 15. | நூல் நிலையம் | 78 |
| 16. | மோட்டார்த் தொழிற்சாலை | 86 |
| 17. | செஞ்சிக்கோட்டை | 91 |
| 18. | கம்பளம் | 97 |


## செய்யுட்பகுதி


I. கடவுள் வணக்கம் . . . . . . . . 1

II. அறவுரை

1. திருக்குறள் . . . . . . . . 4
2. நீதி நெறி விளக்கம் . . . . . . . 13
3. பழமொழி . . . . . . . . 15

III. கதை

1. வீர சிவாஜி . . . . . . . . 17
2. கீரியும் அந்தணனும் . . . . . . 21
3. நளவெண்பா . . . . . . . . 25

IV. இயற்கையழகு . . . . . . . . 29

V. கலிப் பாடல்கள் . . . . . . . . 31

VI. நாட்டுப் பாடல்கள் . . . . . . . 33

VII. பல்வகைப் பாடல்கள் . . . . . . . 35


CONNEMARA PUBLIC LIBRARY
6 - MAR 1956

6 - MAR 1956

# கம்பர் தமிழ் வாசகம்

## மூன்றாம் புத்தகம்—பொது

### 1. குகனும் பரதனும்

கோசல நாட்டை அரசாண்டுவந்த தசரதன் என்ற மன்னனுக்கு இராமன், பரதன், இலக்குமணன், சத்துருக்கனன் என்ற மக்கள் நால்வர் இருந்தனர். இராமன் கோசலையின் மைந்தன்; பரதன் கைகேயியின் மகன்; ஏனையோர் சுமித்திரையின் புதல்வர்கள். இவர்களில் இராமன் மூத்தவனாகையால், தசரதன் இவனுக்கு முடிசூட்டிவிட்டு ஆட்சியலுவல்களிலிருந்து ஓய்வு பெற்றுக் கானகம் செல்லக் கருதினான். ஆனால், கைகேயி தன் மகன் பரதனே அரியணையேறி அரசாளவேண்டுமென்றும், இராமன் மரவுரி பூண்டு சடைமுடி தரித்துக் காடேக வேண்டுமென்றும் வற்புறுத்தி வரம் பெற்றாள். ஆகையால், இராமன் தன் மனைவி சீதையுடனும், தம்பி இலக்குமணனுடனும் புறப்பட்டுக் கானகமடையக் கருதிக் கங்கையைச் சார்ந்தான்.

கங்கைக் கரையில் சிருங்கிபேரபுரம் என்ற சிற்றூரில் குகன் என்னும் வேடர் தலைவன் வாழ்ந்து வந்தான். இவன் இராமனுடைய நற்குணங்களைப்பற்றி நன்கறிந்து காண வேண்டுமென்னும் அவாவுடனிருந்தான். இப்பொழுது இராமன் கானகஞ் செல்ல வந்துள்ளான் என்பதையறிந்ததும், குகன் தன் பரிவாரமாகிய வேடர்கள் புடைசூழப் புறப்பட்டுவந்து, இராமன் தங்கியிருந்த முனிவர்களின் இலைக் குடிசையையடைந்தான்.

இராமன் அன்புடன் முகமலர்ந்து குகனை வரவேற்றான். சக்கரவர்த்தியின் மைந்தனாகிய இராமனைக்

கண்டதால் களிப்படைந்த குகன், அன்புடன் தான் கையுறையாகக் கொண்டுவந்திருந்த தேனையும் மீனையும் இராமன் முன்னிலையில் வைத்துப் பணிவுடன் நின்றான். இராமன் புன்முறுவல்கொண்டு அவற்றை ஏற்றுக் கொண்டதாகக் கூறவே, குகன் மகிழ்வடைந்தான்.

பின்னர், குகன் அன்றிரவு முழுவதும் குடிசையின் வெளியிலிருந்து தன் பரிவாரத்துடன் காவல் காத்திருந் தான். மறுநாள் இராமனது விருப்பப்படி சிறந்ததொரு ஓடங்கொணர்ந்து, அதில் இராமன், சீதை, இலக்கு மணன் ஆகியோர் ஏறிக்கொள்ளத் தானே ஓடத்தைச் செலுத்தினான். ஓடம் கங்கையாற்றைக் கடந்து தென் கரையையடைந்ததும், இராமன் முதலியோர் கரைசேர்ந் தனர். இராமன் குகனைத் தன் இருப்பிடம் சேரும்படி தெரிவித்தான். ஆனால், குகன் இராமனுடன் வருவ தாகத் தெரிவிக்கவே, இராமன் குகனுடைய களங்கமற்ற அன்பைக்கண்டு மகிழ்ந்து தன் சகோதரனாக உரிமை பாராட்டி அன்புரை கூறி விடைகொடுத்தனுப்பினான். குகன் இராமனைப் பிரிந்துசெல்ல விருப்பமின்றித் திரும்பிச் சென்றான். இராமன் முதலியோர் அங்கிருந்து புறப்பட்டுச் சித்திரக்கூடம் என்னும் அழகிய இடத்தைச் சேர்ந்தனர். நிற்க.

கேகய நாட்டிற்குச் சென்றிருந்த பரதன் அயோத்தி நகரத்திற்கு வந்ததும், தன் அன்புக்குரிய அண்ணன் காடடைந்த செய்தியையறிந்து கடுந்துயர் கொண்டான்; இராமன் பிரிவால் தந்தையாகிய தசரதன் உயிர் துறந் தான் என்ற செய்தி கேட்டுத் துயரக் கடலில் மூழ்கினான். இத் துயரத்திற்கெல்லாம் காரணம் தன் தாயாகிய கைகேயியின் செயலே என்பதையறிந்து அவளைத் தாயென மதியாது சீறிப்பேசி வெறுத்தான். பின்னர், காட்டையடைந்து அண்ணனைக் கண்டு அழைத்து வர வேண்டுமென்று முடிவுசெய்து, முதலமைச்சராகிய சுமந்திரர் முதலியோருடன், யானை, குதிரை முதலிய

பரிவாரங்கள் சூழப் புறப்பட்டுக் கங்கையின் வட கரையைக் குறுகினான்.

தென்கரையிலிருந்த குகன், திரளான பரிவாரத்துடன் வருகிற பரதனைக் கண்டு கடுஞ் சீற்றமடைந்தான். இராமனுடன் போர் செய்யவே பரதன் படைதிரட்டிக் கொண்டு வருகிறானென்று குகன் மாறாகக் கருதியதால் இங்ஙனம் கடுஞ்சினமுற்று, கண்களில் தீப்பொறி பறக்க விழித்துப் பார்த்தான்; திரண்ட கூட்டத்தைக் கண்டு உதடுகளைக் கடித்தான். பிறகு 'இப்பரதனுடைய படைகளெல்லாம் எலிகள்! நான், எலிகள் அஞ்சும்படியான பாம்பு!' என்று இகழ்ச்சியுடன் எண்ணி அமர் கிட்டிய தென்ற அகமகிழ்வுடன் தன்னிடமிருந்த கொம்பையெடுத்து ஊதிச் சிங்கநாதம் செய்தான்; துடியை முழக்கினான்; எயினர்களை வருமாறு கூவினான். இம் முழக்கத்தைக் கேட்ட வேட்டுவ வீரர்கள், போர் கிடைத்து விட்டதென்று பூரித்த தோள்களில் வில்லைத் தாங்கி, அம்பறாத்தூணியை முதுகிற்கொண்டு, வேல், சூலம் முதலிய படைக்கலங்களுடன் விரைந்து வந்து திரண்டார்கள்.

குகன், வீரர்கள் திரளுடன் கங்கையின் தென் கரையை நெருங்கி வந்து நின்று வட கரையை நோக்கும்படி கைநீட்டிக் காட்டி, "வீரர்களே! என் உயிர்த் துணைவனாகிய இராமபிரானை அரசாளவிடாமல் காட்டுக்கு ஓட்டிய பரதன், இதோ படையெடுத்து வந்துள்ளான் பாருங்கள்! நான் இங்கிருப்பதை இவன் அறியவில்லைபோலும்! நெருப்பைக் கக்குகிற அம்புகளால் இவர்களை அழிப்போம். வேடர்கள் விடும் அம்பு மன்னர்கள் நெஞ்சில் தைக்காதோ? இப்பரதனைத் தடுக்காவிட்டால், உலகோர் நம்மை இகழ்வார்கள். நமது துணையின்றி இவன் எவ்வாறு கங்கையைக் கடந்து செல்ல முடியும்? இவனது யானைப்படையைக் கண்டு நான் அஞ்சி விடுவேனோ? இராமபிரான் என்னிடம் 'நீ என் உயிர் நண்பன்' என்று கூறிய அன்பு மொழியை

மறவாது என் உயிருள்ளளவும் அவரைக் காப்பேன் இப்பரதன் தன் அண்ணனை மதிக்கவில்லை; வீரம் மிகுந்த இலக்குமணனையும் மதிக்கவில்லை. ஆயினும் நான் இராமனுக்குத் துணையாய் இருக்கிறேன் என்பதையும் மதிக்கவில்லையே! பகைவர், நண்பர், பழி, பாவம் என்பவற்றை அரசர்கள் எண்ணமாட்டார்களோ? அதனால்தான் இவன் தன் அண்ணனுக்கே தீங்கு செய்ய வந்திருக்கிறான். இவன் தன் படைகளையும் உயிரையும் கொண்டு கங்கையைத் தாண்டிச் சென்றபிறகன்றோ இராமனுடன் போர் செய்யமுடியும்? நாடாளும் உரிமையைத் தந்த இராமனுக்கு, நாம் வாழும் காடாளவும் உரிமை தர விரும்பாமல் இவன் படையெடுத்து வந்துள்ள கொடுமையைப் பார்த்தீர்களா? இவன் படையை முறியடித்து 'இராமனது நாட்டை வேடர்கள் மீட்டுத் தந்தனர்' என்ற புகழை அடையுங்கள்!" என வீரமொழிகளைப் பொழிந்தான்.

வடகரையிலிருந்த சுமந்திரர், பரதனுக்குக் குகனைப் பற்றி அறிவிக்க எண்ணித் தென் கரையிலிருக்கும் குகனைச் சுட்டிக்காட்டி, "அதோ, அக்கரையில் நின்று கொண்டிருப்பவன் குகன் என்னும் பெயரையுடையவன். அவன் கங்கையின் இருகரைகளையும் தனக்கு உரிமையாக உடையவன்; கணக்கற்ற நாவாய்களைக்கொண்டவன்; ஆண் யானை போன்ற வலிமையும் பருத்த தோள்களுமுள்ளவன்; கடல் போன்ற மிகுதியான வில் வீரர்களை உடையவன்; இராமனுக்கு உயிர் நண்பன். நின்னைக் காணவேண்டுமென்னும் விருப்பத்தால் வழியெதிரில் வந்துநிற்கிறான்" என்று தெரிவித்தார்.

இதைக்கேட்ட பரதன், "அண்ணன் விரும்பி நட்புரிமைகொண்ட இனிய நண்பனாயின், அவன் வந்து என்னைக் காண்பதற்குமுன், நானே போய் அவனைக் காண்பேன். அதுதான் முறையாகும்" என்று கூறி, குகனைக் காணவேண்டுமென்று கிளர்ந்து பெருகிய அன்

யுடன் தன் தம்பியான சத்துருக்கனன் தொடர்ந்துவரக் கங்கையின் கரையை நெருங்கிவந்து நின்றான்.

பரதன் இராமனைப்போலவே மரவுரி தரித்து மாச டைந்த மெய்யுடன் வந்துநின்றதும் குகன் நன்றாய் உற்று நோக்கித் திடுக்கிட்டான். பரதனுடைய தோற்றத்தி லிருந்து தான் நினைத்ததுபோல் பரதன் இராமனுடன் போர்செய்ய வரவில்லையென்பது குகனுக்குத் தெளிவாய்த் தெரிந்தது. அதனால் பரதனைப்பற்றித் தான் தவறாகக் கருதியது குறித்து மனம் வருந்தினான். அவனையுமறி யாமலே இடக் கையிலிருந்த வில் கீழே விழுந்துவிட்டது. உடனே தன் வீரர்களைக் கரையில் நிற்கும்படி தெரி வித்துவிட்டுத் தான் மட்டும் ஓர் ஓடத்திலேறி விரைவாய்ச் செலுத்தி வடகரையை யடைந்தான்.

கரையில் ஏறி நின்றதும், இராமன் சென்றுள்ள திசை நோக்கிக் கைகூப்பித் தொழுதுநிற்கும் பரதனைப் பார்த்து வணங்கினான். பரதனும் குகனை வணங்கினான். பின்னர், இருவரும் உடல் சேரத் தழுவிக்கொண்டனர். குகன் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. குகன் பரதனைப் பார்த்து, " ஐயனே! தாங்கள் பரிவாரத்துடன் புறப்பட்டுவரக் காரணமென்ன? " என்று கேட்டான்.

பரதன் அன்புடன் குகனை நோக்கி, " அன்பரே! தசரதச் சக்கரவர்த்தி, மூத்தவர்க்கே அரசு உரியது என் னும் முன்னோர்கள் கொண்டுள்ள முறையிலிருந்து வழுவி விட்டார். ஆகையால், அவ் வழு நீங்க அண்ணனை அழைத்தேக வந்துள்ளேன் " என்று தெரிவித்தான். இம்மொழிகளைக் கேட்ட குகன் கரைகடந்த மகிழ்ச்சி யுடையவனாய் மீண்டும் பரதனை வணங்கினான்.

பரதனுடைய பெருங்குணத்தையெண்ணி வியந்த குகன், " புகழ்ச் செல்வரே! உங்கள் தாயாகிய கைகேயி அம்மையின் மொழிப்படி தசரதச் சக்கரவர்த்தியளித்த அரசாட்சியைச் சிறிதும் விரும்பாமல் கைவிட்டு, அண் ணன் காடடைந்ததைக் குறித்துக் கவலைகொண்டு இங்கு

வந்துள்ள தங்கள் பெருமையை அறிவில்லாத வேட னாகிய நான் எங்ஙனம் வியந்து கூறுவேன்! பெருமை மிகுந்த இராமர் ஆயிரம் பேர் இருந்தாலும் உங்களுக்கு ஒப்பாவார்களோ? உங்கள் குலமுன்னோர்களின் புக ழெல்லாம் உங்கள் புகழுக்குள் அடங்குமாறு செய்து விட்டீர்கள்!" என்று பலவாறு பாராட்டிப் பேசினான்.

பின்னர், குகன் பரதனது விருப்பப்படி இராமன் இருக்குமிடத்திற்கு அவனை அழைத்துச் சென்றான்.

## குறிப்பு

இது இலக்கியம் பற்றிய பாடமாகும். இதில், குகன் இராமனிடம் கொண்டுள்ள பேரன்பும், பரதனது பெருங்குணமும் விளங்கும் முறையில் கம்பராமாயணச் செய்யுட்களின் போக்கில் விளக்கப்பட்டுள்ளன.

## கேள்விகள்

1. இராமன் கானகம் அடைந்தது என்?
2. குகன் என்பவன் யார்? அவன் இராமனிடம் அன்புகொண்ட தன்மையைத் தெரிவிக்க.
3. பரதன் பரிவாரத்துடன் வரக் காரணமென்ன? அதைக்கண்ட குகன் என்ன நினைத்தான்?
4. குகன் வேடர்களிடம் கூறிய வீரமொழிகள் யாவை?
5. சுமந்திரன் குகனைப்பற்றிப் பரதனிடம் தெரிவித்தது என்ன?
6. குகன் ஓடமேறி வடகரை யடைந்தது என்?
7. குகபரதரின் சந்திப்பைத் தெரிவிக்க.
8. குகன் பரதனிடம் வினவியது என்ன? அதற்குப் பரதனளித்த விடை யாது?
9. குகன் பரதனை எங்ஙனம் போற்றினான்?
10. குகன், பரதன்—இவர்களின் பண்புகளைத் தெரிவிக்க.

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—வினையோர், முடி, அவா, பரிவாரம், கையுறை, அமைச்சர், குறுகினான், அமர், துடி, எயினர், மாசு, வழுவி. (மாதிரி:—வினையோர்—மற்றவர்.)

2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—அரியணை, புன்முறுவல், இலைக்குடிசை, கடுஞ்சினம், கிட்டியது, அம்பறாத்தூணி, உரிமை, கிளர்ந்து. (மாதிரி:—இராமன் அரியணையில் வீற்றிருந்தான்.)

## II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—மரவுரி, கடுந்துயர், துயரக் கடல், இடக்கை. (மாதிரி:—மரம் + உரி = மரவுரி)
2. பரதன் கங்கையை அடைந்தான்—இவ்வாக்கியத்தில் 'பரதன்' என்பது எழுவாய். இது, முதல் வேற்றுமை எனப்படும்; எழுவாய் வேற்றுமை என்றும் சொல்லப்படும். 'கங்கையை' என்பது, இரண்டாம் வேற்றுமை எனப்படும். இதன் உருபு 'ஐ' என்பதாகும். ஆல், கு, இன், அது, கண் என்பவை முறையே மூன்றும், நான்காம், ஐந்தாம், ஆறும், ஏழாம் வேற்றுமைகளின் உருபுகளாகும். குகன் என்ற சொல்லை எழு வேற்றுமைகளில் எழுதுக.

## III. வாக்கியப் பயிற்சி

1. பரதன் இராமனை அழைத்துச் செல்வான்—இது, உடன்பாட்டு வாக்கியம். இதனை, 'பரதன் இராமனை அழைத்துச் செல்லான்' என்று மாற்றி எழுதினால், எதிர்மறை வாக்கியம் ஆகும்.
2. பின்வரும் உடன்பாட்டு வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றி எழுதுக:—

    (1) நாங்கள் நாள்தோறும் பாடம் படிப்போம்.
    (2) கண்ணன் வந்தால் நானும் வருவேன்.
    (3) மழை பெய்தால் நெல் விளையும்.
    (4) நன்றாய்ப் படித்தவன் பரீட்சையில் தேறுவான்.
    (5) முயற்சியுடையார் புகழ்ச்சியடைவார்.

## IV. கட்டுரைப் பயிற்சி

1. 'குகனும் பரதனும்' என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.
2. குகனது குணச் சிறப்பை விவரித்து எழுதுக.

# 2. பள்ளிப் பாராளு மன்றம்

எங்கள் உயர்நிலைப் பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்களைக்கொண்டு பாராளுமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் உயர்வகுப்பு மாணவர்கள் பலர் பங்கெடுத்துக்கொண்டு பணியாற்றிவருகின்றனர். இம் மன்றம் அமைப்பதற்குமுன் இதன்பொருட்டு மாணவர்களின் கூட்டமொன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் தலைமையாசிரியர் மன்றம் அமைக்கவேண்டிய இன்றியமையாமையை எங்களுக்கு எடுத்துரைத்தார். அவர் கூறியதாவது ;

'அன்புள்ள மாணவர்களே ! நாம் இப்பொழுது நமது பள்ளிக்கூடப் பாராளுமன்றம் அமைப்பதற்காக இங்குக் கூடியிருக்கிறோம். பாராளுமன்றம் என்பதற்கு, 'உலகையாளும் மக்கட்பிரதிநிதிகள் கூடியுள்ள அவை' என்று பொருள் சொல்லலாம். இங்கிலாந்தில் இத்தகைய பாராளுமன்றம் இருக்கிறது. அப்பாராளுமன்ற உறுப்பினர்களின் முடிவுப்படியே இங்கிலாந்தில் ஆட்சி நடைபெறுகிறது. 1950-ஆம் ஆண்டு ஜனவரி, 26-ஆம் நாள்முதல் இந்தியா குடியரசு நாடாக விளங்குகிறது. 1951-ஆம் ஆண்டில் தேர்தல் நடைபெற்று மக்கட்பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். அவர்களை உறுப்பினர்களாகக்கொண்ட பாராளுமன்றம் டில்லியில் அமைந்திருக்கிறது. அப்பாராளுமன்றத்தாரின் முடிவுப்படியே இந்திய ஆட்சி நடைபெற்று வருகிறது. இவற்றால் பாராளுமன்றத்தின் உயர்வு உங்களுக்குத் தெரியுமென்று நம்புகிறேன்.

மாணவர்களாகிய நீங்கள், பள்ளியில் கல்விப்பயிற்சி பெறுவதோடு உடற்பயிற்சி, ஒழுக்கப்பயிற்சி முதலிய பலவகைப் பயிற்சியும் பெற்றுவருகிறீர்கள். இவற்றோடு ஆட்சியிலும் பயிற்சி பெறவேண்டுமென்று கல்வித் திட்டத்தில் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

அத்திட்டப்படி மாணவர்கள் வெளியுலக ஆட்சிமுறைப் படி பள்ளியில் ஆட்சிமுறைகளைக் கையாண்டு பயிற்சி பெறவேண்டும். இதன்பொருட்டே பள்ளிப் பாராளு மன்றம் ஒவ்வொரு பள்ளியிலும் அமைக்கப்படுகிறது.

இந்தியக் குடியரசின் எதிர்கால ஆட்சியாளர்கள் நீங்கள்தாம் என்பதை நன்ருய் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். அதற்கு இப்பொழுதிருந்தே நீங் கள் பயிற்சி பெறவேண்டியது இன்றியமையாத தல்லவா? இப்பயிற்சி பெறுவதற்கு இப்பள்ளிப் பாராளுமன்றம் மிகுந்த பயனளிக்கும்.

ஒருவன் எதிர்காலத்தில் சிறந்த குடிமகனுக விளங்க வேண்டுமாளுல் அவனுடைய வாழ்க்கையானது ஒழுங்கு, அறம், திறமை முதலியவற்றின் அடிப்படையில் பயிற்சி பெறவேண்டும். பள்ளியில் படிக்கும் மாணவர்கள் இத் தகைய நலங்களைப் பள்ளிப் பாராளுமன்றத்தின் வாயி லாகச் சிறந்தமுறையில் பெறலாம். இன்று பள்ளியில் பயிலும் மாணவரே நாளை வெளி உலகத்தில் விளங்கும் பாராளுமன்றத்தின் உறுப்பினராகி ஆட்சியிலும் அமர லாம். ஆகையால், ஒவ்வொரு மாணவரும் ஒழுங்கு, பணிவு முதலிய பண்புகளை அடைந்து ஆட்சிசெய்யும் திறமையைப் பெறவேண்டும்

பள்ளிப் பாராளுமன்றமாவது ஒவ்வொருவரையும் சிறந்த பேச்சாளராகவும், பொறுப்புணர்ச்சி உடையவ ராகவும் ஆக்குகிறது. சமத்துவம், சகோதரத்துவம் முதலிய பண்புகளை வளர்த்து ஒற்றுமையுணர்ச்சியை ஊட்டுகிறது. இப்பயிற்சிபெற்ற மாணவர்கள் யாவ ரிடத்திலும் அன்புகொண்டு இன்மொழிபேசி பணிவு காட்டி நன்கு பழகும் பண்பைப் பெறுகிருர்கள். அதனுல் யாவர் மனத்தையும் கவர்ந்து உயர்ந்தநிலை யடையும் தகுதியைப் பெறுகிருர்கள். 'கீழ்ப்படிந்து நடக்கக் கற்றுக்கொள். பிறகு, அது உன்னை யாவருக் கும் தலைவனுக்கும்' என்று கூறிய விவேகானந்தரின் மொழி உண்மையானதன்ருே?

பிற்கால இந்தியாவின் முன்னேற்றம் இக்கால இளை ஞர்களின் அறிவு, திறமை முதலியவைகளைப் பொறுத்தே இருக்கிறது. ஆகையால் திறமைமிகுந்த ஆட்சியாளர் களை உண்டாக்குவதும் இம்மன்றமேயாகும். நாட்டை எவ்வாறு ஆட்சிபுரிவது என்பதைச் செயல்முறையின் வாயிலாகப் பள்ளிப் பாராளுமன்றம் பயிற்சியளிக்கிறது. அதனால் மாணவர்கள் நேர்முகமாய் ஆட்சியில் ஈடுபட்டுத் தத்தம் திறமையைப் பெருக்கிக்கொள்ளவும், தவறு நேர்ந்தபொழுது திருந்தி முன்னேறவும் வாய்ப்பளிக் கிறது. ஆகையால் எதிர்கால இந்தியாவின் மன்னர் களாகிய நீங்கள் பாராளுமன்றத்தின் விதிமுறைப்படி மன்றத்தையமைத்து அவ்விதிப்படி செயல்முறைகளில் ஈடுபட்டு ஆட்சியில் பயிற்சிபெற்று முன்னேறுவீர் களாக!' என்று கூறி முடித்தார்.

தலைமையாசிரியர் அறிவுரைப்படியே எங்கள் பள்ளியில் பாராளுமன்றம் அமைக்கப்பெற்று நடை பெறுகிறது. இதனால் மாணவரிடையே ஒற்றுமையும், ஒழுங்கும், ஆட்சித்திறமையும் வளர்ந்துவருகின்றன.

## குறிப்பு

இது, மாணவர் ஆட்சிபற்றிய பாடமாகும். இதில், பாராளு மன்றத்தின் பயன் விளக்கப்பட்டுள்ளது.

## கேள்விகள்

1. பாராளுமன்றம் என்பது யாது? அதன் செயல் என்ன?
2. பள்ளிப் பாராளுமன்றம் என்பது ஏன் ஏற்படுத்தப்படுகிறது?
3. பாராளு மன்றத்தால் மாணவர்கள் அடையும் பயன்கள் யாவை?
4. பாராளுமன்றத்தில் மாணவர்கள் பயிற்சி பெறவேண்டியதன் இன்றியமையாமை என்ன?
5. தலைமையாசிரியர் மாணவர்களுக்கு இறுதியாகக் கூறிய அறி வுரை யாது?

# 3. கவிஞர் பாரதிதாசனார்

இக்காலத்தில் கவிஞர்கள் சிலர் சிறந்து விளங்குகிறார்கள். அவர்களில் ஒருவர் கவிஞர் பாரதிதாசனார் அவர்கள். இவர் கவி இயற்றும் திறமை மிகுந்தவர்; அரிய கருத்துக்களைப் புதுமை மெருகுடன் பாடும் ஆற்றல் நிறைந்தவர். ஆகையால், இவர் தமிழ்மக்களால் மிகவும் பாராட்டப்படுகிறார்.

'பாரதிதாசன்' என்பது இவரது புனைபெயராகும். இவரது இயற்பெயர் சுப்புரத்தினம் என்பதாகும். இவர் பாரதியாரிடம் பேரன்பு உடையவராய் அவரை நன்கு மதித்து ஒழுகி வந்தமையால் 'பாரதிதாசன்' என்ற புனை பெயருடன் பாடல்கள் இயற்றி வெளியிட்டு வந்தார். தமிழ் மக்கள் இப்புனை பெயராலேயே இவரையறிந்து போற்றியதால், இதுவே இவரது நிலைத்த புகழ்ப் பெயராய் நிலவுகிறது.



பாரதிதாசனார்

புரட்சிக் கவிஞரின் பிறப்பிடம் புதுச்சேரி. இது பிரெஞ்சுக்காரரின் ஆட்சிக்குட்பட்டிருக்கும் அழகிய ஊர். இவ்வூரில் கனகசபை முதலியார் என்ற ஒருவர் சிறந்த மளிகை வியாபாரியாய் விளங்கினார். இவர், ஊக்கமும், உறுதியும் நிறைந்தவர். சைவப்பற்றும் சீரிய ஒழுக்கமும் உடையவர். இவரே புரட்சிக் கவிஞரின் தந்தையாவார். கவிஞர் 1891-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், 17-ஆம் நாள் பிறந்தார்.

கனக. சுப்புரத்தினம் உரிய பருவத்தில் பிரஞ்சு மொழிப் பள்ளிக்குச்சென்று கல்வி பயின்றுவந்தார். அங்குப் பிரஞ்சுமொழியுடன் தமிழும் கற்பிக்கப்பட்டது. இளமையிலேயே இவருக்குத் தமிழ்மொழியில் பற்றும் ஆர்வமும் மிகுதியாய் இருந்தமையால், இவர் பிரஞ்சு மொழியைவிடத் தமிழையே விருப்புடன் கற்றார்.

இவருக்குத் தமிழாசிரியராய் வாய்த்த பங்காரு பத்தர், பெரியசாமிப் புலவர் என்பவர்கள் சுப்புரத்தினத்தின் தமிழார்வத்தைக்கண்டு மகிழ்ந்து ஆதரவு காட்டினர். ஆகையால், சுப்புரத்தினம் ஓய்வுநேரங்களில் புலவர்களிடம் நெருங்கிப் பழகி அவர்களிடம் தமிழ்நூல்களைப் பயின்று வரலானார்.

சுப்புரத்தினம், விடுமுறை நாட்களில் பள்ளிக்கூடப் பாட நூல்களையன்றி வேறு தமிழ்நூல்களையும் படித்து அறிவுவளர்ச்சி பெறுவதில் ஆர்வமும், ஊக்கமும் உடையவராய் இருந்தார். இசைபாடுவதில் இவருக்கு விருப்பம் மிகுதியாயிருந்தது. தமிழுணர்ச்சியும், இசையுணர்ச்சியுமுள்ளவர்கள் பெரும்பாலும் கவிதையுணர்ச்சியுடையவர்களாய்க் கவிபுனையும் திறனமைந்து காண்கிறார்கள். இவ்வியல்புக்கிணங்க சுப்புரத்தினம் பள்ளி வாழ்க்கையிலேயே சிறுசிறு பாடல்கள் இயற்றித் தமது தோழர்களிடம் படித்துக்காட்டி இன்புறுவாராம்.

இன்னும், சுப்புரத்தினத்திற்கு நாடகத்தில் நடிக்கவும் நல்ல திறமையிருந்தது. இதையறிந்த பள்ளிக்கூட ஆசிரியர்களும், பொறுப்பாளர்களும் பள்ளிக்கூட நாடகங்களில் இவரைப் பங்கெடுத்துக்கொள்ளும்படி செய்தார்கள். ஆண்டுதோறும் நடைபெறும் நாடகங்களில் இவரே முதன்மையான நடிகராய்த் திகழ்ந்தார். இங்ஙனம் இயல், இசை, நாடகம் என்ற மூன்று துறைகளிலும் இவர் வல்லவராயுள்ளமையால், இவரை முத்தமிழ்ப் புலவரென்று மொழியலாம்.

மாணவர் சுப்புரத்தினம் தமிழ் கற்பதில் பேரார்வமுள்ளவராய் இருந்தார். ஆகையால், தமிழ்நூல்களைப் பயில்வதிலேயே கருத்தைச் செலுத்தி இடையறாது பயின்றுவந்தார். இப்பயிற்சிக்கு இவரது தமிழாசிரியர் உறுதுணையாய் இருந்தார். ஆகையால், இவர் தமிழ்ப் புலவராக விரும்பிப் புதுவையில் உள்ள கல்வே கல்லூரியில் சேர்ந்து புலவர் தேர்வுக்குப் பயிலலானார். முன்னரே தமிழார்வமும், பயிற்சியும் உள்ளவராயிருந்தமையால் இரண்டே ஆண்டுகளில், தமது பதினெட்டாம் வயதில் தமிழ்ப்புலவர் தேர்வில் முதன்மையாய்த் தேர்ச்சி பெற்றார்.

1909-ஆம் ஆண்டில் புலவர்பட்டம் பெற்ற இவர், பதினெட்டாம் வயதிலேயே பிரஞ்சு அரசாட்சியினரின் பள்ளியொன்றில் தமிழாசிரியரானார். இவர், ஆசிரியர் அலுவல் ஏற்று முதன்முதல் பள்ளிக்கு வந்தபொழுது, மாணவர்கள் அனைவரும் இவரைப் புதிதாகப் பள்ளியிற் சேர்ந்த ஒரு மாணவரென்றே கருதியிருந்தனராம். பின்னர், தலைமையாசிரியர் இவரை வகுப்புக்கு அழைத்துவந்து 'இவரே உங்கள் புதிய தமிழாசிரியர்' என்று மாணவர்களுக்கு அறிமுகம் செய்துவைத்த பொழுது அவர்களெல்லோரும் வியப்படைந்தனர் என்பதை விளம்பவும் வேண்டுமோ?

புலவர் சுப்புரத்தினம் தமிழாசிரியர் பணியைத் திறமையுடன் ஆற்றிவரலானார். இவர், தம் தாய்மொழியினிடத்துக் கொண்டிருந்த பேரார்வத்தினால், இப்பணியைக் கடமையாகவன்றி உணர்ச்சி கிளர்ந்தெழும் உள்ளன்புடன் ஆற்றிவந்ததால் மாணவர்கள் உள்ளத்தில் தமிழ்ப்பற்று தழைத்தோங்கச் செய்து வந்தார். இடையிடையே இனிய பாடல்களை இயற்றி வரலானார்.

இக்காலத்தில் பாரதியார் புதுவையில் குடியேறி வாழ்ந்திருந்தார். புலவர் சுப்புரத்தினத்திற்குப் பாரதி

யாரைத் தெரியாது. ஆனால் பாரதியாரால் இயற்றப் பட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்த பாடல்களை இவர் மிக விருப்பத்துடன் படித்து இன்புற்று வந்ததால், பாரதியார் பாடல்கள் பலவற்றை நன்கறிந்திருந்தார்; இதனால் பாரதியாரிடம் நன்மதிப்பும் கொண்டிருந்தார். இந் நிலையில் புதுவையில் நிகழ்ந்த ஓரன்பர் வீட்டுத் திரு மணத்திற்குச் சென்றிருந்தபொழுது, அங்கு வந்திருந்த பாரதியாரைக்கண்டு அகமகிழ்ந்து அன்றுமுதல் பாரதி அன்பரானார். இளைஞர் சுப்புரத்தினத்தின் தமிழார் வத்தையும் கவிபுனையும் திறனையும் கண்ட பாரதியாரும் இவரிடம் பேரன்பு கொண்டவரானார்.

இவர் தொடக்க நிலையில் சைவப்பற்றுடன் பழைமை முறையிலேயே பாக்கள் இயற்றி வந்தார். 'சுப்பிரமணியர் துதியமுது' முதலிய சில நூல்கள் அப்பொழுது இயற்றப்பட்டனவாகும். பாரதியாரின் தொடர்பு ஏற்பட்ட பின்னர், இவரது கவித்திறமை புதுமை வழியில் திரும்பி ஒளி பெறலாயிற்று. பிற் காலத்தில் அரசியலிலும், மக்கள் வாழ்விலும் கண்ட கருத்துக்களைக் கவிதைப் பொருளாகக்கொண்டு, இவர் உணர்ச்சிப்பெருக்குடன் பாடல்களைப் புனையத் தொடங் கினார். அப்பாடல்களைக் கண்ட தமிழ் மக்கள் வியந்து வரவேற்று, இவரைப் புரட்சிக் கவிஞர் என்று போற்ற லாயினர்.

புலவர் சுப்புரத்தினம் நீண்டகாலம் தமிழாசிரியர் அலுவலில் இருந்துகொண்டே புதுமைக் கவிகள் புனையும் தொண்டினை இடையிடையே செய்து வந்தார். பின்னர், தமது ஐம்பத்தைந்தாம் வயதில் ஆசிரியர் அலுவலிலிருந்து ஓய்வு பெற்று, கவிதைத் தொண்டி லேயே தமது முழு நேரத்தையும் செலவிட்டு வரலானார்.

இவரது எழுச்சி மிகுந்த பாக்களில் மனங்கவரப் பெற்ற தமிழ் மக்கள் மகிழ்ந்து இவரைப்போற்றிக் கொண்டாடலாயினர். அதனால் இவருக்குத் தமது அன்பையும் நன்றியையும் தக்க முறையில் புலப்படுத்தக்

கருதிய அன்பர்கள் பலர், சில ஆண்டுகளுக்குமுன் சென்னையில் பெருந்திரளாக மக்கள் கூடிய பேரவையில் புரட்சிக் கவிஞரின் அருந்திறனையும், தொண்டினையும் பாராட்டிப்பேசி, பொன்னுடை போர்த்துப் பொற்கிழி யளித்துச் சிறப்புச் செய்தனர். அதன்பின், திருச்சிராப் பள்ளியில் கவிஞரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாக் கொண்டாடி, தமது அன்புகலந்த நன்றியைக் காட்டி, நிதியளித்துக் கவிஞருக்கு ஊக்கமூட்டினர். இவற்றால் பெருமகிழ்வுற்ற கவிஞர், எழில்மிகு கவிகள் இயற்றும் எண்ணத்தில் சிறந்து தமிழகம் போற்றும் தலைசிறந்த கவிஞராய் விளங்குகிறார்.

பாரதிதாசனார் இயற்கையில் கவித்திறன் அமைந்த எழிற்கவிஞர். இவர் இளம்பருவத்திலேயே இனிய தமிழ் நூல்களைப்பயின்று பெரும் புலமை பெற்றதனால் இவரது கவித்திறன் என்னும் ஒளி மணி, மெருகு பெற்றுத் திகழ்கிறது எனலாம். இவர் இயற்றியுள்ள நூல்கள், பாரதிதாசன் கவிதை, அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, போர்மறவன் முதலி யனவாம்.

பாரதிதாசனார் இப்பொழுது புதுச்சேரியிலேயே வாழ்ந்து வருகிறார். இவர், என்றும் வாடா மலர் மாலையாகப் பாமாலைகள் தொடுத்துத் தமிழன்னைக்குச் சூட்டி மகிழும் கவிதைத் தொண்டு புரிவார் என்று தமிழ்மக்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்திருக்கின்றனர். ஆகையால், 'கவிஞர் பாரதி தாசனார் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழ் நாட்டுக்குத் தொண்டு செய்து வருவாராக!' என்று கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் பாராட்டியுள்ளது, தமிழ்மக்களின் இதய வாழ்த்தென்று இயம்பலாம்.

## குறிப்பு

*இது, வாழ்க்கை வரலாறு பற்றிய பாடமாகும். இதில், பாரதிதாசனாரின் வரலாறு, கவித்திறமை, இயற்றியுள்ள நூல்கள் முதலியவை தெரிவிக்கப்பட்டுள்ளன.*

## கேள்விகள்

1. பாரதிதாசனரின் வரலாறு யாது?
2. இவர் இளம்பருவத்தில் எங்ஙனம் கல்வி கற்ருர்?
3. இவரது தமிழ்ப்பற்று எதனல் விளங்குகிறது?
4. இவரை 'முத்தமிழ்ப்புலவர்' என்று குறிப்பிடுவது என்?
5. இவருக்குப் பாரதியாரின் தொடர்பு எவ்வாறு ஏற்பட்டது?
6. இவர் 'புரட்சிக்கவிஞர்' என்று அழைக்கப்பெறுவது என்?
7. இவரைத் தமிழ்மக்கள் எங்ஙனம் போற்றிப்பாராட்டினர்?
8. இவரது கவித்திறமையைத் தெரிவிக்க.
9. இவர் இயற்றியுள்ள நூல்கள் யாவை?
10. இவரைக் கவிமணி எங்ஙனம் வாழ்த்துகிருர்?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—புனையும், பொறுப்பாளர், திகழ்ந்தார், தேர்வு, அலுவல், பணி, ஆர்வம்.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—புனைபெயர், இயற்பெயர், இசை, பயில்வதில், உறுதுணை, எழுச்சி, தமிழன்னை.

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—பேரார்வம் உள்ளன்பு, சைவப்பற்று, பல்லாண்டு, இதயவாழ்த்து.
2. திறன்—இது, 'திறம்' என்பதன் இறுதிப்போலியாகும். இவ்வாறே அகம், மனம், கலம் என்பவற்றைப் போலியாக எழுதுக.

### III. கட்டுரைப் பயிற்சி

1. 'புரட்சிக் கவிஞரின் வரலாறு' என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.
2. பாரதிதாசனர் பாரதியாருடன் நட்புக்கொண்ட நிகழ்ச்சியை விவரித்து எழுதுக.

# 4. கொட்டு முரசே!

எல்லார்க்கும் நல்லின்பம்
எல்லார்க்கும் செல்வங்கள்
எட்டும் விளைந்ததென்று
கொட்டுமுரசே!—வாழ்வில்
கட்டுத் தொலைந்ததென்று
கொட்டுமுரசே! 1

இல்லாமை என்னும்பிணி
இல்லாமல் கல்விநலம்
எல்லார்க்கும் என்றுசொல்லிக்
கொட்டுமுரசே!—வாழ்வில்
பொல்லாங்கு தீர்ந்ததென்று
கொட்டுமுரசே! 2

சான்றாண்மை இவ்வுலகில்
தோன்றத் துளிர்த்ததமிழ்
மூன்றும் செழித்ததென்று
கொட்டுமுரசே!—வாழ்வில்
ஊன்றிய புகழ்சொல்லிக்
கொட்டுமுரசே! 3

ஈன்று புறந்தருதல்
தாயின்கடன்; உழைத்தல்
எல்லார்க்கும் கடனென்று
கொட்டுமுரசே!—வாழ்வில்
தேன்மழை பெய்ததென்று
கொட்டுமுரசே! 4

—பாரதிதாசனார்

# 5. நான் கண்ட நல்லிடங்கள்

என் பெயர் புட்பவதி. நான் திருநெல்வேலியில் உள்ள பள்ளியில் கல்வி பயில்கிறேன். நீண்ட நாட்களாக மலைவளம் காணவேண்டுமென்று விரும்பினேன். ஆகையால் நானும் எனது தோழியர் சிலரும், எங்களுக்குக் கிடைத்த ஒரு சிறு விடுமுறையை நல்வழியில் பயன்படுத்தப் புறப்பட்டோம். நாங்கள் தென்றல் வந்துலவும் திருநெல்வேலியிலிருந்து புறப்பட்டுப் புகை வண்டியில் ஏறி மேற்றிசை நோக்கிச் சென்றோம். நாங்கள் செல்லும் பாதையின் இருமருங்கிலும் வயல்களில் நெற் பயிர்கள் பச்சைப்பசேலென்று வளர்ந்திருந்து எங்கள் கண்களுக்கு ஓர் நல்விருந்தளித்தன. ஒன்றாய் இரண்டாய் பதினாறு தங்குமிடங்களும் கழிந்தன. நாங்களும் தென்காசியை யடைந்தோம். தென்காசியில் இறங்கி, 'வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர்வேங்கைக், கொம்பார் சோலைக் கோல வண்டியாழ் செய் குற்றாலம்' காணவேண்டுமென்று அவாவுண்டு. ஆனால் இக் குற்றாலம், இக் குறுகிய காலத்தில் கண்டு ஆனந்திக்கத் தக்கதன்று என்று கருதி, அதைக் கடந்து தென்மலை நோக்கிச் சென்றோம். செங்கோட்டைக்கும் ஆரியன் காவிற்கும் இடையே, மலையைக் குடைந்து புகைவண்டி செல்வது கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. இவ்விடத்தில் எல்லாம் வல்ல இறைவனது பெருமையும், அவனது அருள்நலம் கனிந்து விளங்கும் மனிதனது அறிவின் ஆற்றலும், ஒருங்கே கண்டு ஆராவுவகை எய்தினோம்.

இவைகளைக் கடந்து, தென்மலையென்னும் தங்குமிடத்தில் இறங்கி, கொஞ்சதூரம் நடந்துபோய் எங்களுக்காக ஒழுங்கு செய்திருந்த ஒரு மாளிகையில் தங்கினோம். அன்றிரவு அவ்விடத்தில் தங்கியபொழுது, வருடத்தில் ஒன்பது மாதங்களுக்கு மேலாகவே பகலவனது கிரணத்தால் வாடிய நாங்கள், அம்மலைப்பிரதேசத்தின் குளிரால் வாடினோம். மறுநாட் காலையில் அங்கேயுள்ள புதுமை

களைக் காணப் புறப்பட்டோம். ‘புதியன கண்டபோது விடுவரோ புதுமை பார்ப்பார்’ என்று கம்பர் கூறிய உண்மை எங்கட்கு அப்பொழுதுதான் புலப்பட்டது. பொழுது புலர்ந்தவுடன் மேகக்கூட்டங்கள் மலையில் தங்கியிருந்ததும், பின்னர், கதிரவன் தன் கதிர்களை விரித்து மேலே கிளம்பும்போது அம் மேகக் கூட்டங்கள் புகைபோல ஆவியாக மாறி மேல்நோக்கிச் சென்றதும் ஓர் அழகிய காட்சியேயாகும். மலைச் சரிவுகளில் தேயிலைச் செடிகளையும், ரப்பர் மரங்களையும் பயிராக்குகிறார்கள். அவைகளைக் கடந்து மலையின்மேல் ஏறிச் சென்றபோது, நாங்கள் அடைந்த இன்பம் அளவிடற்கரியதாயிருந்தது. நாம் அங்குப் போனால், அங்குப் பார்க்கவேண்டிய பாகம் அம் மலைப்பாகம் ஒன்றேயாகும். மேடுகளும், பள்ளங்களும், பள்ளத்தாக்குகளும், குன்றுகளும், எங்கே பார்த்தாலும் மரங்களும், செடிகொடிகளும், புற்களும் நிறைந்திருந்தது, பார்ப்பவர் மனத்திற்கு இன்பம் விளைவிக்கின்றது. எல்லாம்வல்ல இறைவனது அளவிலா ஆற்றலை விளக்கும் இயற்கையழகையும், மலைகளின் வளத்தையும் அறிய விரும்புவோர் அங்கேயன்றி வேறெங்கேயும் அறிந்துகொள்ள முடியாது என்று துணிந்து கூறலாம்.

இதுகாறும், இயற்கையின் நலத்தில் ஈடுபட்டிருந்த நாங்கள், இனி, மனிதனது அறிவின் ஆற்றலால் இயற்றியுள்ள செயற்கை வளங்களைக் காண அவாவுற்றோம். தென்மலையின் சார்பாக, எங்கள் கவனத்தைக் கவர்ந்த இடங்கள் மூன்றேயாகும். மேனாட்டார்க்குக் காலைப் பானத்திற்கு முக்கியமான தேயிலைப் பக்குவம் பண்ணும் தொழிற்சாலையும், உலகிற்குப் பெருத்த நன்மை புரியும் இந்திய ரப்பர்ச் சாலையும், எக்காலத்தும் எவர்க்கும் இன்றியமையாத நெருப்புக்குச்சி செய்யும் தொழிற்சாலையும் எங்கள் கவனத்தைக் கவர்ந்தன. மலையின்மீது ஏறித் தேயிலைப் பக்குவம் பண்ணுமிடத்தைக் காணச் சென்றோம். அத் தொழிற்சாலை ஒரு பெரிய கட்டிடம். அதிலுள்ள இயந்திர அமைப்புக்

களோ அளவிறந்தன. அங்குள்ள கூலியாட்கள் மேடையின் மேல் தளங்களில் தேயிலைக் கொழுந்தை உலர வைப்பதும், பின்னர் மேல்தளத்திலிருந்து கீழ்த்தளத்திற்குக் குழாய் வழியாய் அக் காய்ந்த தேயிலைகள் வருவதும், அத் தேயிலைகளை இயந்திரங்கள் அரைப்பதும், அவ்விதம் அரைத்த பொடிகளை, பன்னுடையினுல் சலித்து உலரவைத்து, அதனதன் நிறத்திற்கேற்றபடி பிரித்துப் பெட்டிகளில் அடைத்துவைப்பதும் பார்ப்பவர் மனத்தைக் கொள்ளைகொள்ளுகின்றன. அநேகமாக ஒவ்வொரு செயலும் இயந்திரங்களாலேயே நடைபெறுகின்றது. இயந்திர உலகத்தின் பெருமை எங்கட்கு அப்பொழுதுதான் தெரிந்தது.

இதைக் கடந்து நாங்கள் ரப்பர்த் தொழிற்சாலைக்குச் சென்றோம். நாங்கள் பள்ளியில் ஓரணுவிற்கு வாங்குகின்ற ஒரு சிறு ரப்பர் துண்டுபோலப் பல துண்டுகள் செய்வதற்கு அமைந்திருக்கும் இயந்திரங்களைப் பார்த்து மிகவும் ஆச்சரியமுற்றோம். நாங்கள் சென்ற இடத்தில் ரப்பர் மரங்கள் அதிகம். அம் மரங்களைச் சுற்றிலும் வெட்டி அதினின்று வடியும் பாலைப் பாத்திரங்களில் சேர்த்து, அப் பாலைத் தொழிற்சாலைகளுக்குக் கூலியாட்கள் கொண்டு செல்கிறார்கள். அங்கே அதிலுள்ள மாசுமறுக்களை வடிகட்டிப் பின்னர் அப் பாலையும், ஓர் வகைத் திராவகத்தையும் கலந்து தண்ணீரில்லாத ஒரு பெரிய தொட்டியில் ஊற்றுகிறார்கள். இப்போது வெண்மையான ரப்பர் வேண்டுமானுல் சோடா உப்பையும் கலந்துகொள்கிறார்கள். சோடா உப்பு கலக்காத ரப்பர் மஞ்சள் நிறமுடையதாயும் சோடா உப்புக் கலந்த ரப்பர் வெண்மை நிறமுடையதாயும் மாறுகின்றன. இது தொட்டிகளில் உறைந்தபின், இதனையெடுத்து இயந்திரங்களில் கொடுத்து தகடுபோலாக்கிப் பின்னர் இதற்கெனக் கட்டியுள்ள மேடைகளில் சுமார் இரண்டு வாரம் உலர வைத்துவிடுகிறார்கள். மஞ்சள் ரப்பரையும், கழிவு ரப்பர்ப் பாலையும் இதேவிதமாகத் தீயின் வெப்பத்

னால் காய்ச்சியெடுக்கிருர்கள். இவையெல்லாம் முடிந்ததும் வேண்டிய அளவுடைய துண்டுகளாக வெட்டி அனுப்பவேண்டிய இடங்களுக்கு அனுப்புகிருர்கள்.

மறுநாள் மாலே நெருப்புப்பெட்டி செய்யுமிடம் காணச்சென்ருேம். சாதாரணமாக உலக வழக்கில், "உன்ருல், ஒரு தீக்குச்சி செய்யமுடியுமா?" என்று கூறி, தீக்குச்சியை அதன் உருவத்தைக் கருதி ஏளனமாகக் கூறுவது வழக்கம். ஆனல் தென்மலேயில் இந்தத் தீக்குச்சிகளேச் செய்யுமிடம் போய்ப் பார்த்தபின்னரே தீக்குச்சி செய்வது நாம் கருதுகிற அளவில் அவ்வளவு எளிதானதொரு செயலன்று என்று கண்டோம். நாங்கள் செல்லும் வழியில் பரப்பாறு என்னும் நதி ஒன்று ஓடுகிறது. பாறைகளுக்கு ஊடே அந்நதி தவழ்ந்தும், இரைந்தும் வருவது, தனது உத்திரவில்லாமல் அவ்விடம் வந்த அந்நியர்களாகிய எங்கள் மேல் சீறி வருவதுபோல் காணப்பட்டது.

இத்துடன் நாங்கள் செல்லும் வழியிலுள்ள நீரோடைகளில் களிறுகள் தங்கள் பிடிகளுடன் புனல் வாரியிரைத்து விளேயாடிக் கொண்டிருந்தன. பரப்பாற்றின் அக்கரையில் யானேகள் அதிகம் என்று கேள்வியுற்ருேம். அக்கரையில் வெட்டிப்போட்டிருக்கும் மரங்களேயெல்லாம் யானேகளே மரம் அறுக்கும் இயந்திரசாலேயில் சேர்க்கின்றன. அம்மரங்களேச் சிறிய சிறிய துண்டுகளாக வெட்டுவதும் அந்தத் துண்டுகளில் இருக்கும் பட்டைகளேச் சீவுவதும் இயந்திர உதவியினுலேயே நடைபெறுகின்றன. இந்த மரப்பட்டைகளே, இயந்திரத்தின் மற்ருெரு பகுதியில் கொடுத்தபொழுது, இவை நெருப்புப் பெட்டிகளுக்கு மடிக்கவேண்டிய மாதிரி கோடுபோட்டு வருகின்றன. இப்பெட்டிகளுக்கு வர்ணம் கொடுப்பதும், மேலே தாள் ஒட்டுவதும், பெட்டிக்குள் தீக்குச்சியை அடுக்குவதும் இன்னும் இவைபோல்வன பிறவும் இயந்திரங்களின் உதவியினுலேயே நடைபெறுகின்றன. இது இத்தொழிற்சாலேயின் ஒரு பாகம்.

மற்ெறாரு பாகத்தில் தீக்குச்சிகள் செய்வதற்கு இயந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தீக்குச்சிகளைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி, சலித்து, துவாரமுள்ள தட்டுக்களடங்கிய ஒரு இயந்திரத்தில், ஒரு இயந்திரம் போடுகிறது. இந்த இயந்திரம், இக்குச்சிகளைத் தட்டுகளில் உள்ள துவாரங்களில் குத்துவதும், பின்னர் ஒருவகைத் திராவகம் குச்சியின் முனையை நனைப்பதும், பின்னும் ஒருவகை மருந்து இக்குச்சிகளின் முனையில் பூசப்படுவதும் பார்ப்பதற்கு விநோதமாயிருந்தது. இவ்விதம் செய்யப்பட்ட குச்சிகள் பின்னர் ஒழுங்காய்ப் பெட்டியில் அடுக்கப்படுகின்றன. இத்தொழிற்சாலையில் மரம் அறுப்பதிலிருந்து, தீப்பெட்டிகள், கட்டுக்கட்டுகளாக வெளியே போகும்வரை இயந்திரங்களே எல்லா வேலையும் செய்கின்றன. இதுதான் மனிதனுடைய அறிவின் ஆற்றலையும், இயந்திர அமைப்பின் திறமையையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குகின்றது. இந்த மூன்று தொழிற்சாலைகளையும் பார்த்து முடிந்ததும் சென்ற வழியே திரும்பி நலமே எங்கள் பள்ளியையடைந்தோம்.

## குறிப்பு

இது கேளிக்கைப்பயணம்பற்றிய பாடமாகும். இதில் மலைவளக் காட்சியும் மூன்று தொழிற்சாலைகளின் விவரமும் விளக்கப்பட்டுள்ளன.

## கேள்விகள்

1. மலைப்பக்கங்களில் காணும் இயற்கை இன்பக் காட்சியைத் தெரிவிக்க.
2. தேயிலைத் தொழிற்சாலையில் நடைபெறும் செயல்கள் யாவை?
3. ரப்பர்த் தொழிற்சாலையில் ரப்பர் தயாரிப்பு வேலை எவ்வாறு நடைபெறுகிறது?
4. நெருப்புக்குச்சித் தொழிற்சாலையில் எவ்வாறு நெருப்புக்குச்சிகள் தயாரிக்கின்றனர்?
5. நெருப்புப் பெட்டிகள் எங்ஙனம் செய்யப்படுகின்றன?

# பயிற்சி

## I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—தென்றல், பகலவன், கதிரவன், ஏனம், களிறு, பிடி, புனல்.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—இருமருங்கு, அவா, எய்தினோம், குன்று, வெப்பம், அந்நியர், ஆற்றல்.

## II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—மேற்றிசை, நெற்பயிர், கூலியாட்கள், தொழிற்சாலை.
2. செல்க—இது வியங்கோள் வினைமுற்று; உடன்பாட்டில் வந்துள்ளது. இதை, 'செல்லற்க' என்று மாற்றினால் எதிர்மறையாகும். இவ்வாறே செய்க, எழுதுக, பாடுக, வீழ்க என்பவற்றை எதிர்மறையாக மாற்றுக.

## III. வாக்கியப் பயிற்சி

1. நீ படிக்காவிட்டால் தேர்வில் தேறமாட்டாய்.—இது எதிர்மறை வாக்கியம். இதை, 'நீ படித்தால் தேர்வில் தேறுவாய்' என்று உடன்பாட்டு வாக்கியமாய் மாற்றலாம். தொழில் நிகழாமையை உணர்த்தும் சொற்களைத் தொழில் நிகழ்ச்சியை யுணர்த்தும் சொற்களாக மாற்றினால், எதிர்மறை வாக்கியம் உடன்பாட்டு வாக்கியமாக மாறும்.
2. பின்வரும் எதிர்மறை வாக்கியங்களை உடன்பாட்டு வாக்கியங்களாக மாற்றுக:—

    (1) உண்மை பேசாதவன் உலகோரால் மதிக்கப்படான்.
    (2) சத்துள்ள உணவின்றி உடல் வளம் பெறாது.
    (3) வீண்காலம் போக்குபவன் முன்னேறமாட்டான்.
    (4) உழைத்துப் பாடுபடாமல் உயர்வடைய முடியாது.
    (5) ஒழுக்கமில்லா கல்வியால் உபயோகமில்லை.

## IV. கட்டுரைப் பயிற்சி

1. நீங்கள் பார்த்து வந்த ஒரு ஊரின் இயற்கையழகைப்பற்றி விவரித்து எழுதுக.
2. நேரில் பார்த்தறிந்த ஒரு தொழிற்சாலையின் செயல்களை விவரித்து எழுதுக.



# 6. வீரத்தாய்

'பாஞ்சாலங் குறிச்சி' என்பது, வீரத்தின் விளைநிலமாய் விளங்கிய ஊர். இது நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் திருநெல்வேலி மாவட்டத்தில் சிறப்புற்றிருந்தது. இவ்வூரிலிருந்து ஆட்சிசெய்த சிற்றரசர் வீரபாண்டியக் கட்டபொம்மன் என்பவர். இவர், ஆங்கிலேயருக்குக் கப்பம் செலுத்த மறுத்து அவர்களை எதிர்த்துநின்ற சுதந்தரவீரர்; சிறுமையுடன் வாழ்வதை விட, பெருமையுடன் வீழ்வதே மேலென்று தூக்கில் மாண்ட தீரர்.

கட்டபொம்மனின் தம்பி ஊமைத்துரை என்பவர். இவர், தன் அண்ணன் இறந்த சிறிது காலத்திற்குப் பின்னர், பாஞ்சாலங்குறிச்சியில் முடிசூட்டிக்கொண்டு அரசரானார். ஆங்கிலேயரால் தகர்க்கப்பட்டிருந்த கோட்டையை, இவர் ஒருவார காலத்திற்குள் கட்டி முடித்து வீரர்களையும் திரளாகச் சேர்த்திருந்தார். அண்ணனைக் கொன்ற ஆங்கிலேயர்களைப் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்பது இவரது எண்ணம்.

வீழ்ச்சியடைந்திருந்த பாஞ்சாலங்குறிச்சி எழுச்சி பெற்றிருப்பதைக் கண்ட ஆங்கிலேயர்கள், படைகளைத் திரட்டிக்கொண்டு போர் செய்ய வந்தனர். இருதிறத் தாருக்கும் கடும் போர் நடந்தது. பாஞ்சை வீரர்கள் கோட்டைக்குள்ளிருந்து வீரத்துடன் போர் புரிந்தனர். ஆங்கிலேயர்கள் வெளியிலிருந்து கோட்டையைத் தகர்க்க முயன்றனர். பீரங்கி இடைவிடாது முழங்கியது. அதனால் கோட்டையின் ஒருபுறச் சுவர் இடிந்து விழுந்து வழியேற்பட்டது.

கோட்டைக்குள் நுழைய வழியேற்படவே, ஆங்கில வீரர்கள் துப்பாக்கிகளுடன் மிகவிரைந்து உள்ளே ஓடினர். ஆனால், உள்ளே சென்ற ஒவ்வொருவரும் மறு நொடியில் மண்ணில் வீழ்ந்து மடிந்தனர். பாஞ்சை வீரர்கள் தரையில் நிலவறைகள் ஏற்படுத்திக்கொண்டு அவற்றில் பதுங்கியிருந்து உள்ளே நுழைந்தவர்களைத் தம் வாளால் வெட்டிச் சாய்த்துக்கொண்டிருந்தனர். இதைக்கண்ட ஆங்கிலப் படைத்தலைவன் தன் வீரர்களை உள்ளே செல்ல வேண்டாமென்று கட்டளையிட்டான்.

பாஞ்சை வீரர்களைப் போர்செய்து வெல்ல முடியாதென்று கண்ட ஆங்கிலப் படைத் தலைவன், தந்திரத்தால் வெல்லக் கருதினான். உடனே, ஆங்கில வீரர்கள் கிச்சுக் குடுக்கையில் நச்சுப்புகையை நிரப்பிக் கோட்டைக்குள் வீசியெறிந்தனர். நச்சுப்புகை கோட்டையினுள் நாற்புறத்திலும் பரவியது. அதனால் பாஞ்சை வீரர்கள் பலர் மூச்சுத் திணறி மயங்கி வீழ்ந்து மடிந்தனர். இனி, போர்செய்ய முடியாது என்றறிந்த எஞ்சிய வீரர்கள் வெளியேறித் தப்பியோடத் தலைப்பட்டனர். ஊமைத்துரையும் வெளியேறலானார்.

இதைக் கண்ட ஆங்கில வீரர்கள், பாஞ்சை வீரர் கூட்டத்தைத் தொடர்ந்தோடி துப்பாக்கியால் சுட்டனர். பல நூற்றுக்கணக்கான பாஞ்சை வீரர்கள் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகித் தரையில் உருண்டு மாண்டனர். அப்பொழுது மாலை கழிந்து இரவாய்விட்டதால்

ஆங்கில வீரர்கள் வெற்றிக் களிப்புடன் திரும்பிச் சென்றுவிட்டனர்.

போர்முடிந்து ஆங்கிலேயர் போனதும், அருகிலிருந்த சிற்றூரிலுள்ள சில பெண்கள், பரபரப்பாகப் போர்க்களத்திற்கு ஓடிவந்தனர். இவர்கள் வந்ததும் தங்கள் கணவன், அண்ணன், மகன் முதலியோர் தரையில் வீழ்ந்துகிடக்கின்றனரோ என்று ஆவலுடன் தேடலாயினர். தமக்கு உரியவர் எவரேனும் காயம்பட்டு உயிருடனிருந்தால் அவர்களைத் தூக்கிச்சென்று காப்பாற்றலாமென்பது இப் பெண்களின் ஆசை.

இவ்வாறு தேடிய பெண்களில் முத்தம்மாள் என்பவள் ஒருத்தி. இவள் தன் மகன் சிவசங்கு என்பவனை ஆவலுடன் தேடிக்கொண்டிருந்தாள். வீரர்கள் பலரின் உடம்புகளைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துக்கொண்டு வந்த இவள், முடிவில் தன் மகனைக் கண்டுபிடித்தாள். சிவசங்கு தன் உடம்பில் பட்ட காயங்களுடன் உயிர் போகும் நிலையிலிருந்தான். மகனின் நிலையைக் கண்ட முத்தம்மாள் மனம் பதைபதைத்து, 'ஐயோ மகனே!' என்று கண்ணீர்விட்டுக் கதறியழுதாள்.

அன்னையின் அழுகுரலைக்கேட்டுச் சிறிது கண்விழித்த சிவசங்கு, அவளை அன்புடன் நோக்கி, "அம்மா! வருந்தாதே! நாட்டைக் காக்கப் போர்செய்தேன். ஆங்கிலேயர்கள் அநியாயம் செய்துவிட்டார்கள். இனி நான் பிழைக்கமாட்டேன். என்னைப்பற்றிக் கவலை வேண்டாம். அதோ காயங்களோடு கிடக்கும் 'சாமி' யைக் காப்பாற்று!" என்று நலிந்த குரலில் கூறிக் கொண்டே உயிர்நீத்தான். தாய் அடைந்த துயரை விவரிக்க முடியாது.

தன் மகன் இறக்கும் தறுவாயில் கூறிய சொற்கள் நினைவுக்குவரவே, முத்தம்மாள் துயரம் தணிந்து அவ்விடத்தை நோக்கினாள். அங்கு ஊமைத்துரை குருதி

யொழுகும் காயங்களுடன் வீழ்ந்துகிடப்பதைக்கண்டு, 'ஐயோ, சாமீ! உங்களுக்கும் இந்நிலை ஏற்பட்டதே!' என்று மனமுருகியழுது பரபரப்புடன் அருகிற்சென்று, பிணங்களைப் புரட்டி ஊமைத்துரையின் உடம்பைத் தொட்டுப்பார்த்தாள். உயிர் இருக்கும் அறிகுறி தோன்றவே, அவள் மகனிறந்த வருத்தத்தை மறந்தாள்; அவனுடலைத் தூக்கிச்செல்ல வேண்டுமென்பதையும் நினைக்கவில்லை. சில பெண்களைக் கூவியழைத்து அவர்களின் துணையோடு ஊமைத்துரையின் உடம்பைத் தூக்கிக் கொண்டு ஊரைநோக்கி விரைந்துசென்றாள்.

கக்கராம்பட்டி என்னும் ஊரிலுள்ள தனது இல்லத்தையடைந்ததும், முத்தம்மாள் ஊமைத்துரையை ஒரு கயிற்றுக் கட்டிலில் கிடத்தினாள். பின்னர், அவள் காயங்களுக்கு மருந்திட்டுக்கட்டி, ஊமைத்துரை இறந்து போகாமல் பிழைக்கவேண்டுமென்ற ஆவலுடன் வேண்டிய பணிவிடைகளைச் செய்தாள்; இச்செய்தி வெளியே பரவாமலிருக்கவேண்டுமென்று தன்னுடன் வந்த பெண்களுக்குச் சொல்லித் திட்டம் செய்தாள்.

ஆங்கிலப் படைத்தலைவன், வெற்றியேற்பட்டதைக் குறித்து மகிழ்ச்சியடைந்தான். ஆயினும், 'ஊமைத்துரை இறந்துவிட்டானா?' என்று ஆவலுடன் வினவினான். ஊமைத்துரை உயிரோடு இருக்கும்வரையில் போர் முடிவுறாது என்பது அவன் எண்ணம். வீரர்கள் அவன் வினாவுக்கு விடையளிக்கமுடியாமல் தயங்கினர். ஆகவே, உடனே படுகளத்தைப் பார்த்து உண்மையறிந்துவந்து தெரிவிக்கும்படி கடுங்கோபத்துடன் கட்டளையிட்டான். வீரர்கள் விரைந்து சென்றனர்.

பாஞ்சாலங்குறிச்சிக்கு வடகிழக்கே மூன்றுமைல் தொலைவிலுள்ள படுகளத்தையடைந்த ஆங்கில வீரர்கள், இரவில் விளக்கொளியுடன் பிணங்களைத் தேடினர்; நெடுநேரந் தேடியும் ஊமைத்துரையின் உடலைக் காணாது கவலையும் ஏமாற்றமுமடைந்து திரும்பிப்

போய்ச் செய்தியைத் தெரிவித்தனர். தலைவன் சீற்றத்துடன், 'இன்றிரவுக்குள் ஊமைத்துரையைப்பற்றிய செய்தி தெரிந்தாகவேண்டும்' என்று இரைந்தான். வீரர்கள், பக்கத்து ஊரிலுள்ள வீடுகளில் தேடுவதெனக் குதிரைகளின்மீதேறிப் புறப்பட்டுக் கக்கரம்பட்டிக்குப் போய் ஒவ்வொரு வீடாய்ப் புகுந்து ஆராயத் தொடங்கினர்.

இச்செய்தியையறிந்த முத்தம்மாள், அஞ்சி மனங் குலைந்தாள். ஆயினும், எவ்வாறேனும் ஊமைத்துரையைக் காப்பாற்றவேண்டுமென்று உறுதிகொண்டு, ஒரு ஏற்பாட்டை மிக விரைந்து செய்யலானாள். அவள், ஒரு மஞ்சள் துணியை யெடுத்துக் கட்டிலிலிருந்த ஊமைத்துரையின் உடம்பின்மீது போர்த்தினாள்; வேப்பிலைக்கொத்தை ஒடித்துக்கொண்டுவந்து வீட்டு வாயிலின்முன் சொருகிவைத்தாள். பிறகு, அவள் முன்னர் உதவிபுரிந்த பெண்களை அழைத்துவந்து தன் ஏற்பாட்டை இரகசியமாய்த் தெரிவித்தாள்; எதிர் வீட்டுக்காரர் ஒருவரைத் தன் வீட்டுத் திண்ணையில் இருக்கச்செய்து, அவர் நடந்துகொள்ளவேண்டிய முறையையும் விளக்கிச் சொன்னாள். உடனே பெண்களெல்லாம் ஊமைத்துரையிருந்த கட்டிலின் அருகில் தலைவிரி கோலமாய் அமர்ந்து ஒப்பாரி சொல்லி ஓலமிட்டு அழத் தொடங்கினர். முத்தம்மாள் தன் மகனையெண்ணி உண்மையாகவே கண்ணீர்விட்டுக் கதறினாள்.

ஊமைத்துரையைத் தேடிவந்த வீரர்கள், முத்தம்மாள் வீட்டில் நுழைந்து ஆராய வந்தனர். அவ்வீட்டில் பெருங்குரலுடன் பெண்கள் அழுதுகொண்டிருப்பதைக் கண்டதும், அவர்கள் தயங்கிநின்று, திண்ணையருகில் நின்றுகொண்டிருந்தவரை நோக்கி, 'இவர்கள் ஏன் அழுகிறார்கள்?' என்று கேட்டனர். அவர், 'இந்த வீட்டு அம்மாளுக்கு ஒரே மகன் இருந்தான். அவன் அம்மை வார்த்து இறந்துவிட்டான். அதனால் அழுகிறார்கள்' என்று உண்மைபோல உருக்கமாய்த் தெரிவித்தார்.

'அம்மை' என்றதும், ஆங்கில வீரர்கள் திடுக்கிட்டுக் குதிரைகளில் தாவியேறினர்; குதிரைகளை விரைவாகச் செலுத்திக்கொண்டு திரும்பிப் பார்க்காமல் ஓடினர்! அம்மை என்ற தொத்துநோய்க்கு ஆங்கிலேயர் மிகவும் அஞ்சுவார்கள் என்பதை முத்தம்மாள் எவ்வாறோ அறிந்திருந்தாள். ஆகையால், இந்தத் தந்திரமான ஏற்பாட்டைச் செய்து வெற்றிபெற்றாள். ஆங்கில வீரர்கள் தலைவனின் சினத்திற்கு ஆளாயினர்.

ஊமைத்துரை, முத்தம்மாளின் அன்பான பணிவிடைகளால் சில நாட்களில் காயங்களெல்லாம் ஆறி உடல்நலம் பெற்றார். எழுந்து நடக்கும் தெம்பு ஏற்பட்டதும், ஊமைத்துரை முத்தம்மாளை 'வீரத்தாய்' என்று போற்றி நன்றியுடன் வணங்கி விடைபெற்றுக்கொண்டு எவருமறியாமல் வெளியேறினார்.

இச்செய்திகளை, ஜெனரல் வெல்ஸ் என்னும் ஆங்கிலப் படைத்தலைவர், பிற்காலத்தில் எழுதி வெளியிட்டுள்ள தமது 'இராணுவ நினைவுகள்' என்னும் நூலில் தெளிவாய்க் குறிப்பிட்டுள்ளார்.

## குறிப்பு

இது, வரலாற்று நிகழ்ச்சி பற்றிய பாடமாகும். இதில், பாஞ்சாலங்குறிச்சி வரலாற்றிற் காணும் சில நிகழ்ச்சிகள் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

## கேள்விகள்

1. ஊமைத்துரை என்பவர் யார்? இவர் என்ன எண்ணியிருந்தார்?
2. ஆங்கிலேயர்கள், பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை எவ்வாறு தகர்த்தனர்? உள்ளே சென்ற வீரர்களின் நிலை யாது?
3. பாஞ்சை வீரர்களை வெல்ல ஆங்கிலப் படைத்தலைவன் செய்த தந்திரம் யாது?
4. பாஞ்சையின் பக்கத்து ஊர்ப் பெண்கள் படைகளத்திற்கு வந்தது ஏன்?
5. முத்தம்மாள் என்பவள் யார்? இவளது இரக்கசிந்தை எதனால் தெரிகிறது?

6. சிவசங்கு என்பவன் யார்? இவனது அருங்குணம் எதனால் தெரிகிறது?
7. முத்தம்மாள் ஊமைத்துரையைக் காக்க என்ன தந்திரம் செய்தாள்?
8. 'வீரத்தாய்' என்பது முத்தம்மாளுக்கு எவ்வாறு பொருந்தும்?
9. முத்தம்மாள், சிவசங்கு—இவர்களின் செய்திகளை வெளியிட்டவர் யார்?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக :— கப்பம், சிறுமை, நஞ்சு, மடிந்தனர், துயர், குருதி, படுகளம், சீற்றம்.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக :—கட்டளை, தந்திரம், பரபரப்பு, நலிந்த, அறிகுறி, ஏற்பாடு, சொருகி, திடுக்கிட்டு, பணிவிடை.

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக :—நிலவறை, தொடர்ந்தோடி, சிற்றூர், கயிற்றுக் கட்டில்.
2. பாஞ்சை—இது, 'பாஞ்சாலங்குறிச்சி' என்பது சுருங்கிவந்த பெயர். இவ்வாறு வருவது மரூஉ எனப்படும். தஞ்சாவூர், கோயம்புத்தூர், கும்பகோணம், புதுச்சேரி—இவற்றை மரூஉப் பெயர்களாக எழுது.

### III. வாக்கியப் பயிற்சி

1. சூழ்ச்சியுள்ள ஆங்கிலப் படைத்தலைவன் ஆண்மையுள்ள பாஞ்சை வீரர்களைத் தந்திரத்தால் வென்றான்.—இவ்வாக்கியத்திலுள்ள அடைமொழிகளை நீக்கிவிட்டு, 'ஆங்கிலப் படைத் தலைவன் பாஞ்சை வீரர்களை வென்றான்' என்று சுருக்கி எழுதலாம்.
2. பின்வரும் வாக்கியங்களிலுள்ள அடைமொழிகளை நீக்கி எழுதுக :—
   (1) அறிவுள்ள மாணவன் பயனுள்ள நூல்களை நன்றாய்ப் படிப்பான்.
   (2) கொடுமையுள்ள புலி மரங்கள் அடர்ந்த காட்டில் விரைவாய் ஓடிவந்தது.
   (3) உயர்ந்த மலையிலிருந்து அழகான அருவிநீர் பேரிரைச்சலுடன் தரையில் விழுகிறது.

# 7. பேசும் படக்கலை

இக்காலத்தில் பேசும்படங்கள் பெருகிவருகின்றன ; காட்சிச்சாலைகளும் ஆங்காங்குப் புதிது புதிதாக ஏற்பட்டு வருகின்றன ; படக்காட்சி பார்ப்போர் தொகையும் நாளுக்கு நாள் வளர்ந்துவருகிறது. இவற்றால், பேசும் படக்கலை வளர்ச்சிபெற்று வருகிற தெனலாம். விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாக ஏற்பட்டுள்ள இப்படக் கலையால் மக்கள் வாழ்வு மலர்ச்சிபெற்று வருகிறது என்பது மிகையாகாது.

ஒரு காலத்தில், 'வெறும் படங்கள் உண்மை மனிதரைப்போல் அசைந்தாடி நடந்து பேசிவருவது எவ்வாறு நடைபெறுகிறது!' என்று வியப்பில் மூழ்கி வினவியவர் பலருண்டு. படங்கள் பெருகியுள்ள இக் காலத்தில் இத்தகையோரின் எண்ணிக்கை குறைவென்றே கூறவேண்டும். ஆயினும், படக்கலையின் நுட்பங்கள் பலவற்றை அறியாதவர் பலரிருக்கலாம்.

படச்சுருளிலுள்ள பல்லாயிரக்கணக்கான படங்கள் விரைந்து ஓடுவதால், அப்படங்களிலுள்ள உருவங்கள் உண்மைபோல் அசைந்தாடி நடக்கின்றன. இங்ஙனம் உண்மைபோல் தோன்றுவதற்குக் காரணம், படங்கள் இடையறாமல் அடுத்தடுத்து வருவதால், அதன் தொடர்ச்சியறாமல் நமது கண்களில் நிலைத்து நிற்பதேயாகும். இக் கண்மயக்கமே பேசும் படக்கலை வெற்றி பெற்றதற்குப் பெருந்துணையாயிற்றெனலாம்.

புகைப் படக்கலை நெடுங்காலமாய் இருந்து வருகிறது. இது தனித்தனிப் படங்கள் எடுப்பதற்கு மட்டுமே உதவும் ; வரிசையாகப் பல படங்கள் எடுப்பதற்கு உதவாது. ஆகையால், வரிசையாகப் பல படங்கள் பிடிப்பதற்குரிய முறையை ஈஸ்ட்மன் கோடக் என்பவர் மிகமுயன்று கண்டறிந்தார். அது தான் சுருள்

பிலிம் வாயிலாகப் படம் பிடிப்பதாகும். இதனால், மிக விரைவாய்ப் பல படங்களை வரிசையாகப் பிடிக்கலாம். இச்சுருள் பிலிம் மிக நீளமாயிருக்கும்.

சுருள் பிலிமில் பல படங்கள் இருப்பதைப் பார்க்கலாம். இவை ஒவ்வொன்றும் முக்கால் அங்குல உயரமுள்ளதாய் அடியொன்றுக்குப் பதினாறு இருக்கும். இச் சுருள் பிலிமைப் படம் பிடிக்கும் 'காமிரா' வில் போட்டு இயந்திரத்தின் உதவியால் விசையுடன் ஓட்டிப் படம் பிடிக்கிறார்கள். அப்பொழுது பிலிம்சுருள் விரைவாகத் தள்ளப்படுவதால், நொடிப்பொழுதில் இருபத்துநான்கு படங்கள் எடுக்கப்படுகின்றன. ஆகவே, நிமிடமொன்றுக்குத் தொண்ணூறு அடி நீளம் படம் பிடிக்கப்படுகிறது. அதே விரைவில் காட்சிச்சாலைகளில் பிலிம் சுருளை ஓட்டிப் படம் காட்டப்படுவதால் அப் படங்கள் தொடர்ச்சியாக வந்து ஒரே படமாக நின்று உண்மை போல் அசைந்து காண்கின்றன.

காட்சிச் சாலைகளில் படம் காண்பிப்பதற்கெனப் 'புரொஜக்டர்' (Projector) என்ற ஓர் இயந்திரம் இருக்கிறது. இதில் மிகுந்த ஒளியுள்ள மின்விளக்கு இருக்கிறது. அதனொளியை, வடிவத்தைப் பெருக்கிக்காட்டும் கண்ணாடியின்வழியாகச் செலுத்துகிறார்கள். அவ்வொளி எதிரிலிருக்கும் வெண்மையான திரையில் குறித்த இடத்தில் விழுகிறது. இந்த ஒளிக்கும், கண்ணாடிக்கும் இடையில் பிலிம் சுருள் ஓட்டப்படுவதால், பிலிமிலுள்ள சிறிய படம் திரையில் பெரியதாய்த் தெரிகிறது. இப்பிலிமின் ஓரத்தில் நடிகரின் குரல் ஒலிப் பதிவுசெய்து இணைக்கப்பட்டிருப்பதால், படம் நடைபெறும்பொழுதே பேசுதல், பாடுதல் முதலியவை தொடர்ந்து நடைபெறுகின்றன.

படம் எவ்வாறு பிடிக்கிறார்கள் என்று பார்ப்போம். படம் பிடிக்கும் இடத்திற்கு 'ஸ்டுடியோ' (Studio) என்று பெயர். இதனுள் படம் பிடிப்பதற்கு வேண்டிய எல்லாச் சாதனங்களும் அமைந்திருக்கின்றன: மலைகள்,

காடுகள், சோலைகள், சாலைகள், மாளிகைகள், குடிசைகள், குளங்கள், பாலங்கள் முதலிய எவற்றை வேண்டுமானாலும் இதனுள் அமைத்துவிடலாம். நடிகர்கள்



புரொஜக்டர்

வேடம் பூணும் இடம், ஒலிப்பதிவு செய்யும் இடம், இரசாயன அறை முதலிய பல்வேறு பிரிவுகள் இதனுள் இருக்கும். இன்னும், ஸ்டுடியோவின் அலுவலகமும் இதனுள் இருக்கும்.



ஜெமினி ஸ்டுடியோவில் ஔவையார் படம் பிடிக்கும் காட்சி

படம் பிடிப்பதற்குமுன் அந்தந்த நிகழ்ச்சிகளுக்குரிய இடக்காட்சிகளை ஓவிய வல்லுநர் இயற்கையாய்த் தோன்றும்படி அமைப்பார். மலை, சோலை, மாளிகை முதலியவற்றை யெல்லாம் பல நாட்களுக்கு முன்னரே திட்டமிட்டு ஏற்றவாறு அழகுற விளங்கச் செய்வார். படம் பிடிக்கும் நாளில் நடிகர், படம் பிடிப்போர் முதலிய எல்லோரும் கூடுவர். படம் பிடிப்பதற்கு வேண்டிய அளவுள்ள பெரிய மின் விளக்குகளைத் தேவையானபடி பயன் படுத்துவர்; நடிகர்கள் வேட

மணிந்து வந்து நடிப்பார்கள்; ஆட்கள் பலர் நாற்புறத்திலுமிருந்து படம் பிடிப்பதற்கு வேண்டிய செயல்களைச் செய்வர்; இவையெல்லாம் 'டயரெக்டர்' (Director) என்ற இயக்குவோரின் கட்டளைப்படி நடைபெறும். காட்சியமைப்பு, ஒளியமைப்பு, நடிகரின் நடிப்பு முதலிய யாவும் சரியாயிருந்தால், இயக்குவோரின் கட்டளைப்படி படம் பிடிப்பார்கள். அப்பொழுது சுற்றி நிற்போர் அமைதியாய் இருப்பார்கள்.

ஜெமினி ஸ்டுடியோவில் ஒளவையார் படம்பிடிக்கும் மற்றொரு காட்சி



ஒலிப்பதிவு செய்வதற்குத் தனியான இடமுண்டு. பெரும்பாலும் பாடல்களை இங்கேதான் ஒலிப்பதிவு செய்வார்கள். பிறகு படம் பிடிக்கும்பொழுது அவ்வொலிப் பதிவை இயந்திரத்தின் துணையால் ஒலிக்கச் செய்வார்கள். நடிகர்கள் நடிக்கும்பொழுது இயந்திரத்தினின்று எழும் ஒலிகளுக்கேற்ப உதடசைத்துப் பாடி நடிப்பதால், அவர்கள் அப்பொழுது பாடுவதுபோலவே தோன்றுகிறது. இந்த முறையாலேயே ஒருவரின் பாட்டு, பேச்சு ஆகியவற்றை மற்றவருடையவைபோல் காட்ட முடிகிறது.

படங்களில் பலவகைகள் உண்டு. அவை கதைப் படங்கள், செய்திப்படங்கள், கல்விப்படங்கள், கலைப் படங்கள் முதலியனவாம். இக்காலத்தில் பெரும்பாலும் கதைப்படங்களே வெளிவருகின்றன. செய்திப்படங்களும் அவ்வப்பொழுது வெளிவருகின்றன. காட்சிச் சாலைகளில் செய்திப்படங்கள் காட்டவேண்டுமென்ற அரசியலாரின் திட்டப்படி இவை முதலில் காட்டப் படுகின்றன. இவற்றால் பொதுமக்களின் அறிவு, வளர்ச்சி பெற்று வருகிறதெனலாம். கல்விப்படங்கள் பள்ளிகளில் காட்டப்படுவதால் மாணவர் கல்விப் பயிற்சியில் பெரும்பயன் பெற்று வருகின்றனர்.

விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனால், இன்று கோடிக் கணக்கான மக்கள் இன்பப் பொழுது போக்கிக் களிப் படைந்தும், உலகியல் போக்கையும் வேறு செய்திகளையும் நன்கறிந்தும் நலம் பெறுகின்றனர். இப்படக்கலை இன்றுள்ள நிலையில் வெற்றிபெறச் செய்தவர் அமெரிக்க விஞ்ஞானியாகிய தாமஸ் ஆல்வா எடிசன் என்பவராவார். இவர் படக்காட்சியின் வாயிலாக உலகெங்கும் புகழ்பெற்று விளங்குகிறார்.

## குறிப்பு

இது, விஞ்ஞானம் பற்றிய பாடமாகும். இதில், பேசும் படக்கலையின் சில நுட்பங்கள், ஸ்டுடியோ விவரம், ஒலிப்பதிவு, படம் பிடித்தல் முதலிய செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

## கேள்விகள்

1. படக்காட்சியில் படங்கள் உண்மைபோல் தோன்றுவது ஏன்?
2. பிலிம் சுருளில் படம் பிடிப்பதைப்பற்றி அறிவன யாவை?
3. ஸ்டுடியோவைப்பற்றிய விவரங்கள் யாவை?
4. பேசும்படத்தில் ஒலியுண்டாவது எவ்வாறு?
5. ஒலிப்பதிவு எவ்வாறு செய்கிறார்கள்?
6. படப்பிடிப்பு எவ்வாறு நடைபெறுகிறது?
7. படத்தின் வகைகளும் பயன்களும் யாவை?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—விசை, நொடிப்பொழுது, மின்விளக்கு, சாதனம், வல்லுநர்.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—வியப்பு, உருவம், இயற்கை, ஓவியம், ஒலிப்பதிவு, செய்திப் படம், கல்விப் படம், விஞ்ஞான ஆராய்ச்சி, படக்கலை.

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—அசைந்தாடி, நெடுங்காலம், வேடமணிந்து, நாற்புறம், தொடர்ச்சியறாமல், படக்கலை.
2. தொடர்ச்சி—இது தொழிற்பெயர் ஆகும். இதில், தொடர்—பகுதி; சி—தொழிற் பெயர் விகுதி ஆகும். தொழிற் பெயர் விகுதிகள் தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, து, மை முதலியனவாம். இவற்றை வைத்து ஒவ்வொரு தொழிற் பெயர் எழுதுக.

### III. கட்டுரைப் பயிற்சி

1. பேசும்படம் பிடிப்பதைப்பற்றி விவரித்து எழுதுக.
2. படக்காட்சி எவ்வாறு உண்மைபோல் நடக்கிறதென்பதை விவரித்து எழுதுக.

# 8. முயலுக மேன்மேல்

முயலுக மேன்மேல், முயலுக மேன்மேல்
முயலுக முயலுக மேன்மேல் முயலுக ;
முதலிற் கருமம் முடியா தொழியினும்
முயலுக மேன்மேல் முயலுக மேன்மேல்
தொடுத்தநல் லூக்கம் சோர்வுறா வண்ணம்
அடுத்து முயன்றால் ஆகா வுளவோ ?
அஞ்சேல் ! வெற்றி அடைவது திண்ணம் ;
நெஞ்சே ! கருமம் நேருந் தனையும்
முயலுக மேன்மேல், முயலுக மேன்மேல்.
எடுத்தநற் கருமம் இரண்டொரு காலில்
அடுத்தடுத் தழியினும் அஞ்சேல் ! அஞ்சேல் !!
முயன்றவக் கருமம் முடியுங் காறும்
முயலுக மேன்மேல் முயலுக மேன்மேல்.
நாடிக் கொண்டவந் நற்கரு மங்கள்
கூடா தொழியினும் குறைநமக் கில்லையால் ;
எடுத்த கருமம் இடர்ப்படு மாயினும்
விடுத்ததை நெஞ்சே ! விசன முறாது
முயலுக மேன்மேல், முயலுக மேன்மேல்.
பின்னுநீ கொண்டது பெருங்கா ரியமெனின்
முன்னி முயலுக ; முயலுக மேன்மேல்.
காலமே கருமம் முடிக்குங் கருவியாம்
ஏல அதனை எய்துங் காறும்
முயலுக மேன்மேல், முயலுக மேன்மேல்.
அரிய கருமமும் பெரிய கருமமும்
உரிமையின் முடித்த உத்தமப் பெரியோர்
முறையாற் பொறுமையால் முடிந்தன ஈதனுல்
முயலுக மேன்மேல், முயலுக மேன்மேல்.

—கா. நா. நமச்சிவாய முதலியார்.

# 9. படக்காட்சி நன்று, தீதா?

குளித்தலை, கழக உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் 'இலக்கிய, சொற்போர்க் கழகம்' ஒருநாள் மாலை ஐந்து மணியளவில் மன்றத்தில் கூடியது. அக்கூட்டம் நடை பெற்ற விவரம் பின்வருமாறு:

### செயலாளர் செல்லப்பன்

அன்புள்ள நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் எனது வணக்கம். நமது கழகத்தின் இரண்டாவது கூட்டம் இன்று நடைபெறவிருக்கிறது. இக்கூட்டம் செவ்வனே நடைபெறுவதற்குரிய அறிவுரைகளைக் கூறி ஆவனபுரிந்துவரும் ஆசிரியப் பெரியோர்கள் இங்கு எழுந் தருளியுள்ளார்கள். அவர்களுக்கு வணக்கம் செலுத்தி மகிழ்வுடன் வரவேற்கிறேன். இக்கூட்டத்தில் நமது தோழர்களில் இருவர் அறிவுத் திறமையுடன் சொற் போர் நிகழ்த்தப்போகிறார்கள். அவர்கள் கூறும் மொழி களைக்கேட்கும் ஆவலுடன் இங்குக் குழுமியிருக்கிறோம். நண்பர் தாயப்பன் அவர்களைத் தலைமை தாங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (மாணவர்கள் கைதட்டல்)

### தலைவர் தாயப்பன்

அறிவுசான்ற ஆசிரியப் பெரியோர்களே! அன்பு நிறைந்த நண்பர்களே! யாவர்க்கும் எனது பணிவார்ந்த வணக்கம். இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் பெருமையை யளித்தமைக்கு எனது நன்றி. கல்வியறி வும் பேசுந் திறமையுமுள்ள பெரியோர்களே தலைமை தாங்கும் தகுதியுடையோராவர். அத்தகுதியிற் குறை வுள்ள நான் உங்கள் அன்பின் ஆதரவுகொண்டு இயன்ற வரையில் என் கடமையையாற்ற முயல்கிறேன்.

அன்பர்களே ! இப்பொழுது நமது நாட்டில் பேசும் படங்கள் பெருகிவருகின்றன. இவற்றைக் காண்பதில் மக்கள் பெருவிருப்பங்கொண்டு திரள்திரளாகச் செல்கிறார்கள். இன்பப் பொழுதுபோக்காகக் களிப்படையக் கருதுவதே படக்காட்சி பார்க்கும் பலருடைய நோக்கம். அதனாலேயே, செல்வர்களேயன்றிப் பற்பல அலுவல்கள், தொழில்கள் செய்யும் பல நிலைகளில் உள்ளோரும் படக்காட்சியைப் பார்க்க அவாக் கொள்கின்றனர். இங்ஙனம் பொதுமக்களின் உள்ளத்தைக் கவர்ந்து செல்வாக்குப் பெற்றுள்ள படக்காட்சியின் நன்மை தீமைகளை ஆராய்ந்தறிவது மிக இன்றியமையாததன்றோ? ஆகையால், 'படக்காட்சி பார்ப்பது நன்றா, தீதா?' என்பதுபற்றி, இப்பொழுது நமது நண்பர்கள் இருவர் சொற்போர் புரிவதன் வாயிலாக விளக்கித் தெரிவிக்கப் போகிறார்கள். உங்களைப்போலவே நானும், அவர்கள் கூறும் அரிய கருத்துக்களைக் கேட்கும் ஆவலுடன் இருப்பதால், நான் தெரிவிக்க விரும்புவதை முடிவுரையில் கூறுகிறேன். முதலில் 'தீது' என்று தில்லைவாணன் அவர்களும், பின்னர் 'நன்று' என்று நாகப்பன் அவர்களும் முறையே பேசுவார்கள்.

### தீது : தில்லைவாணன்

அறிவிற்சிறந்த ஆசிரியப் பெரியோர்களே ! அவைத் தலைவர் அவர்களே ! அன்பிற்சிறந்த நண்பர்களே ! பணிவார்ந்த வணக்கம். தலைவர் குறிப்பிட்டதுபோல் இக்காலத்தில் பேசும்படங்கள் பெருகிவருகின்றன என்பது உண்மையே. ஆனால், அவற்றால் நன்மை பெருகவில்லை ; தீமைகளே பெருகி வளர்கின்றன என்பதே எனது தாழ்மையான கருத்து. இத்தீமைகளை வரிசையாக எடுத்துரைக்கிறேன் :

1. படக்காட்சி சோம்பலுக்கு இருப்பிடம். எங்ஙனமெனில், மக்கள் ஒருநாளில் பலமணிநேரம் படக்காட்சி நடைபெறுமிடங்களில் உடல் உறுப்புக்களுக்கு

வேலை தராமல் அசைவின்றி உட்கார்ந்திருக்கிருர்கள். இவ்வாறு காலத்தை வீணே கழிப்பதுமன்றி, சுறுசுறுப் பற்று அமர்ந்திருப்பதால், அவர்கள் உடம்பில் சோம்பல் ஏற்படுகிறது.

2. படக்காட்சி பார்ப்பதால் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்களின் செல்வமெல்லாம் ஒரு சிலராகிய பட முதலாளிகளிடம் போய்க் குவிகிறது. இதனுல், செல்வர்கள் மேலும் பெருஞ்செல்வராகிருர்கள்; ஏழை களோ இன்னும் ஏழைகளாகிருர்கள்.

3. படக்காட்சி, மாணவர்கள் மனத்தைக் கவர்ந்து அவர்களின் காலத்தைக் கொள்ளை கொண்டு கல்விப் பயிற்சிக்கு இடையூறு விளைவிக்கிறது. இதனுல், எத்தனையோ மாணவர்கள் கல்விப்பயிற்சியில் கருத்தைச் செலுத்தாமலிருந்து, தேர்வில் தேர்ச்சிபெருமல் வருந்து கிருர்கள்.

4. இக்காலப் படக்காட்சிகளில் தீயவர்கள், திருடர் கள் முதலியோரின் வீரதீரச் செயல்கள் (!) மிகுதியாய்க் காணப்படுகின்றன. அச்செயல்கள் படம் பார்ப்போரின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிவதால், அவர்களின் நற்குணம் மாறி நாட்டில் தீயவர்களும் திருடர்களும் மலிகிருர்கள்.

5. படக் காட்சியில், குடித்தல், புகைபிடித்தல் முதலிய செயல்புரிவோர் பலர் தோன்றுவதை நாமனை வரும் நன்கறிவோம். இவர்களைப் பார்க்கும் இளைஞர் கள், அவர்களைப்போலவே தாமும் செய்ய விரும்பித் தீய பழக்கங்களைக் கைக்கொண்டு தீயவர்களாகிருர்கள்.

6. படத்திற் காணும் ஆண் பெண் உறவுக்காட்சி கள், உடம்பை நன்கு மறைக்காத உடைக்காட்சிகள், கீழ்த்தரமான உரையாடல்கள் முதலியனவெல்லாம் மக்கள் மனத்தைக் கெடுத்துத் தீயவொழுக்கத்தில் செல்லத் திருப்பிவிடுகின்றன. சிறப்பாக இளைஞர்கள் உள்ளம் இவற்ருல் மிகவும் கெட்டு ஒழுக்கக்கேடு உண்டாகிறது.

நண்பர்களே! இன்னும் எத்தனையோ காரணங்களை எடுத்துரைக்கலாம். ஆயினும், நான் கூறிய இக் காரணங்களே படக்காட்சியின் தீமையை விளக்கப் போதுமென்று நினைக்கிறேன். படக்காட்சி பார்ப்பதால் நமது அரிய காலமும், உரிய பொருளும் வீணாகின்றன; தீய எண்ணமும் தீய ஒழுக்கமும் மக்களிடம் குடிகொள்கின்றன. இங்ஙனம் தீமைகளுக்கே இருப்பிடமான படக்காட்சியைப் பார்ப்பது தீது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். (கை தட்டல்)

## நன்று: நாகப்பன்

அறிவு சான்ற ஆசிரியப் பெரியோர்களே! அவைத் தலைவர் அவர்களே! அன்பு நிறைந்த நண்பர்களே! பணிவார்ந்த வணக்கம். நமது நண்பர், படக்காட்சி பார்ப்பது தீது என்பதற்குரிய காரணங்களை மிகத்திறமையுடன் எடுத்துக்காட்டிப் பேசியதைக் கேட்டீர்கள். அவர் கூறியதைக் கேட்டபொழுது படக்காட்சியில் தீமைகள்தாம் மலிந்துள்ளனவோ என்று நானும் சிறிது மயங்கினேன். இங்ஙனம் எனது நண்பர் தீமையைப் பெருக்கிக்காட்டிப் பேசிய திறமையைப் பாராட்டுகிறேன். ஆனால், நண்பர் கூறிய காரணங்கள் ஒன்றும் ஒப்புக்கொள்ளக் கூடியனவாயில்லை. அவற்றை முறையே விளக்கிக்காட்டி இறுதியில் நன்மைகளைத் தெரிவிக்கிறேன்.

1. படக்காட்சியைப் பார்ப்போரில் பலர் தொழிலாளர்கள். அவர்கள் பகற்பொழுது முழுவதும் பாடுபட்டுக் களைத்துச் சோர்ந்துவிடுகின்றனர். இந்நிலையில் சிறிது நேரம் படக்காட்சி பார்ப்பதால் உள்ளக்களிப்படைந்து உடற் களைப்பு நீங்கி ஊக்கம் பெறுகின்றனர். இங்ஙனம் நன்மைதரும் இன்பப் பொழுதுபோக்கு சோம்பலை வளர்க்கிறது என்று நண்பர் கூறினார். இதை நாம் ஏற்றுக்கொள்ள முடியுமோ?

2. படக்காட்சி பார்ப்பதால் ஏழைகளின் செல்வமெல்லாம் பட முதலாளிகளிடம் போய்க் குவிகிறதென்றார், நமது நண்பர். இது ஓரளவு உண்மையாயினும் முழுவதும் சரியன்று. எவ்வாறெனில், படம் பிடிக்கும் தொழிலில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களும், நடிகர், கதையாசிரியர், இசையறிஞர், ஆடலாசிரியர், பாடல் இயற்றுவோர், காட்சியமைப்பாளர் முதலிய பலரும் பங்கெடுத்துக்கொண்டு வேலைசெய்து வாழ்கின்றனர். படம் காட்டும் இடங்களிலும் பலர் தொழில் செய்து வாழ்கின்றனர். இங்ஙனம் படக்காட்சியால் சேரும் செல்வம் பலருக்கும் பங்கிடப்படுகிறதேயன்றி ஒரு சிலரிடமே குவிகிறதென்பது ஒப்பக்கூடியதன்று.

3. படக்காட்சி பள்ளி மாணவர்களின் மனத்தைக் கவர்கிறதென்றார். இது சரியே. அதனாலேயே படக்காட்சியின் வாயிலாகக் கல்வியறிவை வளர்க்கலாமென்று அறிஞர்கள் கருதுகின்றனர். இக்கருத்தினால் கல்விப் படங்கள் மாணவர்களுக்குக் காட்டப்பட்டு வருவது நீங்களெல்லாம் அறிந்ததே. இங்ஙனம் கல்விப் பயிற்சிக்குத் துணைசெய்யும் படக்காட்சி, அதற்கு இடையூறு விளைக்கிறதென்ற நண்பர் கூற்றை ஏற்றுக்கொள்வது எப்படி? அளவுடன் படக்காட்சி பார்த்துவரும் மாணவர் அறிவிற் சிறந்து தேர்வில் சிறப்பாகத் தேர்ச்சிபெறுவாரேயன்றித் தோல்வியடையாரென்று துணிவாய்க் கூறலாம்.

4. படக்காட்சியில் தீயவர்களும் நல்லவர்களும் கலந்து காணப்படுவது இயல்பேயாகும். மக்கள் சமூகத்தில் இங்ஙனம் தீயவர்கள் சிலர் இருப்பதே இதற்குக் காரணம். படக்காட்சியில், இத் தீயவர்கள் தம் தீச்செயல்களால் தொடக்கத்தில் நன்மைபெற்று இன்புறுவதைப்போல் காணப்பட்டாலும் முடிவில் பல இன்னல்களையடைந்து கெட்டொழிகின்றனர் என்ற உண்மை தெளிவுறக் காட்டப்படுகிறது. இந்நிகழ்ச்சியைக் காண்போர் தம்மிடமுள்ள தீக்குணங்களைக் கைவிட்டுத்

திருந்துவதுதான் அறிவுடைமையாகும். தீச் செயல்களால் அழிவடைவது திண்ணமென்று தெரிந்தபிறகும் திருந்தாமல் பெருந் தீயவர்களாய் மாறினல், அது அவர்களின் மனக் குற்றமேயன்றிப் படத்தின் குற்றமாகுமோ? அன்னப்பறவை தாமரை மலரை விரும்புகிறது! காக்கை பிணத்தை விருப்புகிறது! அதற்கு என்ன செய்வது? நன்மை, தீமைகளையறிந்து நல்லவற்றைக் கைக்கொண்டு திருந்தி முன்னேறுவதே நல்லோரின் இயல்பாகும். படக்காட்சி பார்ப்பதால், தீக்குணமுடையோரும் தீச் செயலால் விளையும் துன்பங்களைக்கண்டு அஞ்சி நல்லவர்களாய் மாறலாம். அதனல், நாட்டில் தீயவர்கள் குறைவார்களேயன்றிப் பெருகுவது எங்ஙனம்?

5. குடித்தல், புகைபிடித்தல் முதலிய பழக்கங்களை நண்பர் குறிப்பிட்டார். இது மக்கள் சமூகத்திலுள்ள குறைகள் என்பதில் தடையில்லை. இதுவே படக்காட்சியிலும் தீயவர்களின் பழக்கங்களாகக் காட்டப்படுகின்றன. படக்காட்சி பார்ப்பதால் இப் பழக்கங்களைக் கைக்கொண்டு இளைஞர்கள் கெடுவார்களென்றல், பெரியோர்கள் அன்றடம் செய்வதை நேரில் பார்த்துக் கெடமாட்டார்களா என்று கேட்கிறேன். படக்காட்சியில் தீயவர்களின் பழக்கங்களாக இவை காட்டப்படுவதை நாம் நன்குணரவேண்டும். இவற்றைத் தடுக்க அரசியலார் முயன்றல் நல்லதே. இப்பொழுது மதுவிலக்கு ஏற்பட்டுள்ளதால் குடிப்பழக்கம் மக்கள் சமூகத்திலிருந்து பெரும்பாலும் நீங்கிவிட்டதென்றே சொல்லலாம். புகைபிடித்தல் நாகரிகப் பழக்கமாக மிகுந்து வருகிறது. இதற்குப் படக்காட்சியின்மீது குற்றம் சுமத்துவதில் பயனில்லை.

6. சில படக்காட்சியில் இளைஞர்கள், ஏன், பெரியோர்களும் காணத்தகாத இழிவான நிகழ்ச்சிகளும் உரையாடல்களும் இருப்பது உண்மையே. இது படமுதலாளிகள் தன்னலத்தையே குறிக்கோளாகக்கொண்டு

பெரும் பொருள் குவிக்கச்செய்யும் குறுகிய நோக்கத்தால் ஏற்படுவது. இத்தகைய படங்களைப் பொது மக்கள் வெறுத்தொதுக்கி, இவை எங்கும் நடைபெறுத வாறு தடைசெய்யவேண்டும். இவற்றால் எல்லாப் படங்களிலும் தீமைகள் உள்ளனவென்று கூறுவது பொருந்துமோ? 'ஔவையார்' போன்ற நல்ல படங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றைப் பார்ப்பதால் நல்லொழுக்கம் வளருமேயன்றி ஒழுக்கக்கேடு உண்டாகுமோ?

நண்பர்களே! இதுகாறும் நான் நண்பர் கூறியவற்றிற்கு மறுமொழி கூறினேன். இனி, படக்காட்சியால் விளையும் நன்மைகள் சிலவற்றை எடுத்துரைக்கிறேன்:

1. படக்காட்சி பார்ப்பதால், நாம் கண்டறியக் கூடாத நாடுகள், காடுகள், வரலாற்றுப் பெருமையுள்ள இடங்கள், சின்னங்கள், முதலியவற்றை இருந்தவிடத்திலிருந்தே கண்டு களிக்கிறோம்.

2. பழைய வரலாற்றைப் புனைந்துகாட்டும் படங்களைப் பார்ப்பதால், பழங்கால மக்களின் வாழ்க்கை முறைகள், பழக்க வழக்கங்கள், போர் முறைகள், அரசாட்சி முறைகள் முதலியவற்றை அறிந்து இன்புறுகிறோம். இவற்றால் நாம் படித்துவரும் சமூகப்பாட அறிவு தெளிவுபெறும்.

3. படக்காட்சியோடு செய்திப்படங்கள் காட்டப் படுவதால், தொழிற்சாலைகள், விவசாயப் பண்ணைகள், சிற்பம் ஓவியம் முதலிய கலைத்தொழில்கள், வானவூர்தி, கப்பல் முதலியன செய்யுமிடங்கள் முதலியவற்றையெல்லாம் கண்டு அவற்றின் தொழில் நிகழ்ச்சிகளையறிந்து அறிவு வளர்ச்சி பெறுகிறோம்.

4. நாட்டு முன்னேற்றத்திற்காக நமது அரும்பெருந் தலைவர்கள் கூடிப்பேசும் கூட்டங்கள், ஜவஹர்லால் நேரு போன்ற தலைவர்கள் பெருந்திரளான கூட்டத்

தில் பேசும் அரிய காட்சிகள், நாம் காணமுடியாத இடங்களில் நடைபெறும் குடியரசு விழா போன்ற கொண்டாட்டங்கள், பந்தய விளையாட்டுக்கள் முதலியவற்றையெல்லாம் பார்த்துக் களிப்படைகிறோம்.

5. இன்னும், விஞ்ஞான முன்னேற்றத்தால் விளைந்துள்ள 'டெலிவிஷன்' போன்ற புதுமைகள், இயந்திரங்களின் நுட்பங்கள், புதுமையான கருவிகள், முதலியவற்றையெல்லாம் நேரில் பார்ப்பதுபோல் அறிந்து வியப்படைகிறோம். இன்னும் எத்தனையோ நன்மைகள் உண்டு. ஆகையால், படக்காட்சி பார்ப்பது நன்று என்பது என் கருத்து. எல்லோரும் இதை ஏற்றுக்கொள்வீர்களென்று நம்புகிறேன். (நீண்ட கைதட்டல் ஒலி)

## தலைவர் முடிவுரை

அன்பர்களே! நமது நண்பர்கள் இருவரும் படக்காட்சியின் செய்திகளை நுணுகி ஆராய்ந்து, மிகுந்த திறமையுடன் பேசியதைக் கேட்டோம். இருவரும் மாறுபட்ட கருத்துடையவர்களாய்த் தத்தம் கருத்தை உறுதிப்படுத்தும் முறையில் சிறந்த காரணங்களை எடுத்துக்காட்டி விவாதித்தார்கள். இவ்விருவர் கருத்துக்களில் ஏற்றுக்கொள்ளத் தகுந்தது எதுவென்று கூறும் பொறுப்புடன் நான் உங்கள் முன்னிலையில் நிற்கிறேன்.

நண்பர்களே! இருவர் கூற்றிலும் ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மைகள் பல இருக்கின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆயினும் தீமையே கலவாத நன்மை உலகில் இல்லையாதலால், பெரும்பான்மையாக உள்ளது எதுவென்று ஆராய்ந்தறிந்து அதைக்கொண்டே நன்மையானது அல்லது தீமையானது என்று முடிவு செய்யவேண்டும். 'குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்' என்ற வள்ளுவர் வாய்மொழி இதனை உறுதிசெய்யும். அம்முறையில் பார்த்தால், படக்காட்சியில் சில தீமைகள்

உள்ளனவேனும் பெரும்பான்மையும் மக்கள் வாழ்க்கைக்கும் முன்னேற்றத்திற்கும் அறிவு வளர்ச்சிக் பயன்படும் நன்மைகள் பல நிறைந்திருக்கின்றன எனலாம். படக்காட்சியிலுள்ள சிற்சில தீமைகளும் படம் பிடிப்போரின் குறைகளென்றே கூறவேண்டும். இதனைப் படத்தின் குற்றமாகக்கொண்டு படக்காட்சி தீதென்று சொல்வது பொருந்தாது. நெருப்பைக் கொண்டு உணவு சமைத்து உண்டு பசியாறி இன்புறலாம்; நமது ஆடையைக் கொளுத்திக்கொண்டு துன்பமும் அடையலாம். இந்த இன்ப துன்பங்களுக்குக் காரணம் நெருப்பைக் கையாண்டவரேயன்றி நெருப்பாகுமோ? அவ்வாறே படத்திலுள்ள தீமைகளுக்குக் காரணம் படம் பிடிப்போரின் குறைகளேயன்றிப் படம் காரணமாகாது. நண்பர் நாகப்பன் தெரிவித்ததுபோல், படத்திலுள்ள தீய நிகழ்ச்சிகளை மனத்திற்கொண்டு தீயவராவது பார்ப்பவரின் மனக் குற்றமேயன்றிப் படத்தின் குற்றமாகாது. ஆயினும் இந்நிகழ்ச்சிகள் பெருகிவராமலிருக்க முயல்வது சமூக நலத்தைக் கருதும் பட முதலாளிகளின் கடமையாகும். ஆகவே, 'படக்காட்சி பார்ப்பது நன்று' எனத் தீர்ப்பளிக்கிறேன். யாவரும் இதை ஏற்றுக்கொள்வீர்களென்று நம்புகிறேன். வணக்கம்.

(நீண்ட கைதட்டல் ஒலி)

## செயலாளர் நன்றியுரை

நண்பர்களே! சொற்போர்க் கூட்டம் இனிது நிறைவேறியதைக் குறித்து பெருமகிழ்ச்சியடைகிறேன். இக்கூட்டம் நன்கு நடைபெறப் பலவகையில் அறிவுரை கூறி வழிப்படுத்திய ஆசிரியர்களுக்கும், தலைமை தாங்கியும், சொற்போரில் பங்கெடுத்தும் திறம்படப் பேசிய நண்பர்களுக்கும், அமைதியுடனிருந்து கூட்டத்தைச் சிறப்பித்த உங்களுக்கும் கழகத்தின் சார்பில் நன்றி கூறுகிறேன். யாவருக்கும் வணக்கம். (நீண்ட கைதட்டலுடன் கூட்டம் கலைகிறது.)

## குறிப்பு

இது, படக்காட்சியின் நன்மை தீமைகளை விளக்கும் பாடமாகும். இதில், நன்மை தீமைகள் விவாத முறையில் விளக்கப் பட்டுள்ளன.

## கேள்விகள்

1. படக்காட்சியின் நன்மை தீமைகளை ஆராயவேண்டியதன் அவசியமென்ன ?
2. தீமை என்று தில்லைவாணன் தெரிவித்தவை யாவை ?
3. தில்லைவாணன் தெரிவித்தவைகளை நாகப்பன் எங்ஙனம் மறுத்துக் கூறினான் ?
4. நன்மை என்று நாகப்பன் கூறிய செய்திகள் யாவை ?
5. தலைவரின் தீர்ப்பு யாது ?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக :—அலுவல், அவை, சோம்பல், உறுப்பு, நடிகர், அரிய, மலிந்து, துணிவு
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக :—சுறுசுறுப்பு, இடையூறு, தேர்வு, இறுதி, நாகரிகம், தீர்ப்பு.

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக :—சொற்போர், அசைவின்றி, பல்லாயிரம், தன்னலம், வெறுத்தொதுக்கி.
2. படம் பார்த்தான்—இது 'படத்தைப் பார்த்தான்' என்று வரும். இதில் ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்திருப்பதால், வேற்றுமைத்தொகை ஆகும். இவ்வாறே, ஆல், கு, இன், அது, உடைய என்ற மற்ற வேற்றுமை உருபுகளும் மறைந்துவரும். இவ்வேற்றுமை உருபுகள் வெளிப் பட்டால் வேற்றுமை விரி ஆகும்.
3. பின்வருவனவற்றிலுள்ள தொகைகளை விரியாக்குக :—

| | |
|---|---|
| (1) மரம் வெட்டினான் | (4) மலைவீழ் அருவி |
| (2) தலை வணங்கினான் | (5) கண்ணன் கை |
| (3) கூலிவேலை | (6) மலை ஏறினேன் |

# 10. உண்மைக்கு உயிரளித்தவர்

உலகிற் பிறந்த ஒவ்வொருவரும் பிறர் நலம் பேணும் பெற்றியராய்த் திகழவேண்டும். தன்னலமே கொண்டு திரிவது விலங்கின் செயல். பிறர் நலம் எண்ணும் பெரியோர், அதனால் எத்துணை இன்னல்கள் எய்திடினும் இதயஞ் சோரார்; உயிரையே இழக்க நேரிடினும் உறுதியில் தளரார். இங்ஙனம், நிலையில்லாத உலகத்தில் தம் புகழை நிலைபெறச் செய்து மாய்ந்து மறைந்தோர் மண்ணுலகில் பலர். இத்தகையோர் இக்காலத்தில் இல்லையாயினும் எக்காலத்திலும் உள்ளவர்களாய் அழியாப் பெரும் புகழோடு அவனியில் இன்றும் நின்று இலங்குகிறார்கள். இங்ஙனம் உயிர்கொடுத்துப் புகழோங்கிய உத்தமப் பெரியோர்களில் சாக்கிரட்டீஸ் என்பவரும் ஒருவர்.

சாக்கிரட்டீஸ் பிறர் நலம் பேணி யுழைத்த பெரியார்; நிறைந்த அறிவும் தெளிந்த மனமும் உடையவர்; பெருமையைக் கருதாத பெற்றியாளர்; அறநெறி கடவாதவர்; உறுதி மனத்தினர்; விவாத நிபுணர்; தத்துவ ஞானி; உண்மையைத் துருவி நாடுவதில் ஊக்கம் மிகுதியுமுடையவர்; தொன்று தொட்டு இன்றுவரை பல நாட்டுப் பெரியோராலும் போற்றப் படுபவர்; உலகமுள்ளவரையில் எல்லோராலும் ஏத்திக் கொண்டாடும் தகுதி வாய்ந்தவர்.

சாக்கிரட்டீஸ் கிரீஸ் நாட்டில் ஆதன்ஸ் என்னும் நகரில் கி. மு. 469-இல் பிறந்தார். இவர் தந்தையின் பெயர் ஸோப்ரானிஸ்கஸ் என்பது; தாயின் பெயர் பானரீட் என்பது; மனைவியின் பெயர் ஸாந்திப்பே என்பது.

ஸாந்திப்பே மிகவும் பொல்லாதவள்; கணவனுக் கடங்காத காதகி. இவள் ஒரு நாள் சாக்கிரட்டீஸை வேண்டியமட்டும் திட்டினாள். ஈட்டிபோல் நெஞ்சைத்

தைக்கும் வசைச்சொற்களைக் கேட்கப் பொருத சாக்கிரட்டீஸ் வீட்டிற்குள் இருக்க விருப்பமில்லாமல் வெளித் திண்ணையில் வந்தமர்ந்தார். அதையறிந்த அப்பொல்லாத அரக்கி ஒரு குடம் கழுநீரை எடுத்துக் கொண்டு மாடிமீதேறிப் போய், சாக்கிரட்டீஸின் தலையில் மடமடவென்று ஊற்றினாள், அதைக் கண்ட சாக்கிரட்டீஸ் நகைத்துக்கொண்டே, 'முன்னே இடியிடித்தது ; இப்பொழுது மழை பெய்கிறது !' என்று கூறினார். என்னே இவரது பொறுமை !

சாக்கிரட்டீஸ் ஏழைக்குடியிற் பிறந்தவராயினும் தம்மட்டில் பெருமையாகவே வாழ்ந்தார் ; நேரிய வழியில் பொருளீட்டிக் காலங்கழித்தார் ; இடையிடையே பல இன்னல்களை எய்தினாராயினும் எதிலும் மனந் தளர்ந்தாரில்லை. மனஞ்சலியா மாண்பினர் என்று இவரைக் கூறுதல்வேண்டும். இவர் நல்ல உடல் வலிமை படைத்தவர் ; எத்தகைய வேலையையும் எளிதில் இயற்ற வல்லவர் ; களைப்பென்பதைக் கனவிலும் காணாதவர். ஆனால் இவர் உடலழகு வாய்க்கப்பெற்றாரில்லை. பருத்த தலை ; சப்பை மூக்கு ; தடித்த உதடு ; வெருண்ட கண். இவையே இவருடைய முகத் தோற்றம். அழகுக்கும் அருங்குணங்கட்கும் அத்துணைத் தொடர்பில்லையன்றோ ? குணவொழுக்கங்களையே மக்கள் கண்டு மதிப்பர்.

சாக்கிரட்டீஸ் விவாதம் செய்வதில் நிபுணரென்றோமல்லவா ? அதனைச் சிறிது காண்போம். எவரேனும் தாங்கள் அதிகங் கற்றறிந்த அறிஞரென்று செருக்குக் கொண்டிருந்தால், அவர்களிடம் ஒன்றுந் தெரியாதவர்போல் உரையாடி, அவர்கள் வாயை யடக்கிச் செருக்கைக் குலைத்துவிடுவதில் இவர் மிக வல்லுநர். ஆதன்ஸ் நகரவாசியாகிய யூதிடீமஸ் என்பானொருவன், தான் அரசியல் விவகாரங்களையும், நியாய அநியாயங்களையும் சிக்கற உணரவல்லவனென்று சாக்கிரட்டீஸிடம் விருது கூறினான். அதை விளக்க,

பொய்த்தல், வஞ்சித்தல், களவாடல், பிறர்க்கின்னு செய்தல், பிறரைச் சிறைசெய்தல் முதலியவையெல்லாம் அநியாயமானவை' என்றான். இதைக்கேட்ட சாக்கிரட்டீஸ், 'அவ்வாறாயின் நமது எதிரிகளை வஞ்சிப்பதும் சிறைப்படுத்துவதும், அவர்க்கின்னு செய்வதும் அநியாயமாகுமோ?' என்று அமைதியாய்க் கேட்டார். இக்கேள்வி, யூதிடீமஸைத் திடுக்கிடச் செய்துவிட்டது. ஆயினும் அவன் சமாளித்துக்கொண்டு, 'நண்பர்களிடம் அவ்விதம் செய்வதே அநியாயமாகும், பகைவர்களிடம் செய்யின் அது நியாயமானதே' என்று தான் முன்னால் கூறியதைத் திருத்திச் சொன்னான்.

சாக்கிரட்டீஸ் அத்துடன் விடவில்லை. 'பொய் கூறித் தன் படைவீரர்களுக்கு ஊக்கமூட்டும் படைத்தலைவனும், பொய்கூறித் தன் மக்களுக்கு மருந்தூட்டும் தாய் தந்தையரும், தற்கொலை புரிந்துகொள்ள எண்ணும் தன் நண்பனிடமுள்ள கத்தியை வஞ்சித்து வெளவும் உயிர்த்தோழனும் அநியாயம் செய்தவர்கள் ஆவார்களோ? யூதிடீமஸ்! சிந்தித்து எனக்கு விளங்கும்படி விடை சொல்லுவீர்!' என்று பணிவோடு கேட்டார். யூதிடீமஸ் இதைக் கேட்டதும் உண்மையில் திகைத்துவிட்டான். அவனுக்கு என்ன மறுமொழி கூறுவதென்று தோன்றவில்லை. முடிவில் அவன், 'சாக்கிரட்டீஸ்! உண்மையாகவே உமது வினாக்களுக்கு என்னால் விடையளிக்க இயலவில்லை என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். நீர் கேட்கும் வினாக்கள் என்னை நிலைகலங்கச் செய்கின்றன' எனப் புகன்றுவிட்டுச் செருக்கொழிந்து சென்றான்.

சாக்கிரட்டீஸ் சிறுவயதிலிருந்தே தனக்குத் தோன்றிய புதிய கருத்துக்களைப் பன்முறை சிந்தித்து, அவற்றைத் தன் தோழர்களிடம் தெரிவித்து, அவ்வழி நின்று ஒழுகுவதில் மிக்க ஊக்கங் காட்டிவந்தார். அறிவைப் பெருக்கிக்கொண்டு அவ்வழியில் நடக்க

வேண்டுமென்பது அவரது சிறந்த கொள்கை. இக் கொள்கையை ஆதன்ஸ் நகரத்து இளைஞர்கள் நெஞ்சில் விதைத்து, அவர்களைத் தம் வழியில் திருப்ப எண்ணினர். பழங்காலத்தில் புதிய கொள்கைகளை மக்கள் மனத்தில் படியச்செய்ய அறிஞர்கள் பலர் மிகவும் துன்பப்பட்டிருக்கிறார்கள்; சிலர் உயிரையும் விட்டிருக்கிறார்கள். இயேசுநாதர் முதலியோர் உண்மைக் கொள்கையை உலகத்தில் நிலை நிறுத்த உயிரையும் கொடுத்த உத்தமப் பெரியோர்கள் அன்றோ?

ஆதன்ஸ் நகரில் அனேடஸ் என்னும் பெயரையுடைய தோல் வியாபாரியொருவன் இருந்தான். அவன் மகன், தன் குடும்பத் தொழிலாகிய தோல் வியாபாரத்தில் தலையிடாது சாக்கிரட்டீஸின் மொழிகளில் ஈடுபட்டு அவரைப் போற்றிப் பணிந்து வந்தான். தந்தை என்ன கூறியும் அவன் அவர் மொழிகளைச் செவியேற்காது சாக்கிரட்டீஸின் வழியிலேயே நின்றான். இதனால் சாக்கிரட்டீஸின்மீது அனேடஸ் என்பானுக்குச் சினம் பிறந்தது. இதற்கிடையில் மெலீடஸ் என்ற கவிவாணரும் லைகான் என்ற பிரசங்க போதகரும் அனேடஸ் என்பானுக்குத் துணையாய்ச் சேர்ந்தனர். இவர்கள் இருவரும் ஏற்கெனவே சாக்கிரட்டீஸால் விவாதத்தில் தோல்வியடைந்து அவமானப்பட்டவர்கள். இவர்களுக்குச் சாக்கிரட்டீஸின்மீது வஞ்சந்தீர்த்துக்கொள்ள வேண்டுமென்னும் சினமிருக்குமன்றோ?

செல்வம் நிறைந்த அனேடஸும், சூழ்ச்சியில் வல்ல மெலீடஸ், லைகான் என்பவர்களும் ஒன்றுகூடி ஒருவருக்குத் தீமை செய்ய எண்ணினால், அது முடியாத செயலாகுமா? காற்றும் நெருப்பும் கூடினால் கொழுந்துவிட்டெரியுமன்றோ? சுயநலமிகளாகிய இம் மூவரும் ஒன்று சேர்ந்து கி. மு. 399-இல் சாக்கிரட்டீஸின் மீது மூன்று குற்றங்களைக் கற்பித்து அவற்றை எல்லோருமறியச் செய்தனர். அக்குற்றங்களாவன:

1. சாக்கிரட்டீஸ் தமது முன்னோர் தொழுத தெய்வங்களைப் போற்றவில்லை; 2. அவர் வேறு புதிய தெய்வங்களைக் கற்பிக்கிறார்; 3. அவர் ஆதன்ஸ் நகரத்து இளைஞர்களைத் தீய வழியில் புகுத்திக் கெடுத்துவிடுகிறார்—என்பனவாம். இக்குற்றங்கள் மெய்ப்பிக்கப் படுமானால், அக்கால விதிப்படி மரண தண்டனை விதிக்கப்படும்.

சாக்கிரட்டீஸின் குற்ற விசாரணை மிக்க பிரபலத்துடன் நீதிமன்றத்தில் நடந்தது. சாக்கிரட்டீஸ் தம் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் ஒவ்வொன்றையும் கண்டோர் வியக்கும்படி கண்டித்துரைத்தார். ஆயினுமென்ன? முடிவில் மரணதண்டனை யடைந்தார்! மரணதண்டனை விதித்த பிறகாவது அவர் தாழ்ந்து கேட்டுக்கொள்வார் என்று சிலர் நினைத்தார்கள். அங்ஙனம் கேட்டுக்கொள்ளுவாரானால் தண்டனை குறைக்கப்படும் என்பது அவர்கள் எண்ணம். ஆனால் சாக்கிரட்டீஸ் அங்ஙனம் செய்யவில்லை; செய்ய நினைக்கவுமில்லை. உயிரைக் காட்டிலும் கொள்கை அல்லவா அவருக்குச் சிறந்தது!

சாக்கிரட்டீஸ் தண்டனை அடைந்த சமயம் ஆதன்ஸ் நகரில் ஆண்டுதோறும் நடைபெறும் ஒரு திருவிழா குறுக்கிட்டது. இத்திருவிழாவுக்கு முன் தண்டிக்கப்படும் குற்றவாளிகளுக்கெல்லாம், திருவிழா முடிந்த பிறகுதான் தண்டனையை நிறைவேற்றுவது அந்நகர வழக்கம். ஆதலால் சாக்கிரட்டீஸைக் காலிலும் கையிலும் விலங்கு பூட்டிச் சிறையில் வைத்தார்கள். சாக்கிரட்டீஸ் இரங்கத்தக்க இந்நிலையில் ஒரு மாதம் வரையில் இருக்க வேண்டியவரானார்.

கிரைட்டோ என்பவர் சாக்கிரட்டீஸின் உயிர்த் தோழர்.* இவர் சாக்கிரட்டீஸின் நிலைமைக்கு மிகவும் இரங்கி வருந்தினார். சாக்கிரட்டீஸை எவ்வாறேனும் சிறையிலிருந்து ஒருவருக்குந் தெரியாமல் வெளிப்

படுத்திப் பிற நாட்டுக்கு அழைத்துக்கொண்டு போய் விடவேண்டுமென்று கிரைட்டோ மிகவும் முயன்றார். அதற்காகச் சிறைக் காவலனைத் தன் வசப்படுத்தினார். ஆனால் ஒழுக்கத்தையே உயர்வாக மதித்துவந்த சாக்கிரட்டீஸ் சிறையிலிருந்து தப்பிச்செல்லும் ஒழுங்கினச் செயலுக்கு உடன்படவில்லை. கிரைட்டோ கேட்காமல் பின்னும் பலமுறை முயன்று இறுதியாகத் தன்னுடன் வந்துவிடும்படி சாக்கிரட்டீஸை இறைஞ்சிக் கேட்டார். அப்பொழுது சாக்கிரட்டீஸ் கிரைட்டோவுக்குப் பலவகையான மொழிகளைக் கூறித் தன்னைக் கூப்பிடாதபடி செய்தார். இதனால் கிரைட்டோ தன் முயற்சியில் தளர்வடைந்தார்.

சாக்கிரட்டீஸ் தமக்கு நேரும் மரணத்தை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல், அந்தச் சிறைச்சாலையிலும் தமது உள்ளத்தைச் சீரிய வழியிலேயே செலுத்தி வந்தார்; கிரைட்டோவும் ஒப்பும்படி தம் மனக் கருத்தைத் தெளியக் காட்டினார். அவருடைய உள்ள வலிமையையும், ஒழுக்கத் தூய்மையையும் என்னென்று எடுத்தியம்புவது?

மரணதண்டனையை நிறைவேற்றும் நாள் வந்தது. குற்றவாளிக்கு நஞ்சைக் கொடுத்துக் கொல்வது அக்கால வழக்கம். அவ்வாறே சாக்கிரட்டீஸுக்கும் நஞ்சைக் கொடுத்துக் குடிக்கச் சொன்னார்கள். சாக்கிரட்டீஸ் மலர்ந்த முகத்துடன் நஞ்சைக் கையில் வாங்கிப் பாலைக் குடிப்பதுபோலப் பருகினார். பக்கத்தில் கிரைட்டோ இருந்தார். அவர் கண்களில் கண்ணீர் வடிந்தது. சாக்கிரட்டீஸ் மரணப்படுக்கையில் இருந்துகொண்டு கிரைட்டோவை அருகிலழைத்தார். அவர் வந்ததும், 'கிரைட்டோ! எஸ்குலேபியஸுக்கு நாம் ஒரு சேவல் கடன் கொடுக்கவேண்டுமல்லவா? அந்தக் கடனைத் தீர்த்துவிடு' என்று சொன்னார். இதுதான் சாக்கிரட்டீஸின் கடைசி மொழி. மறு விநாடி உயிர் துறந்தார்.

சாக்கிரட்டீஸ் தான் கொண்ட கொள்கையை நிலைநாட்டுவதற்கே உயிரைக் கொடுத்தார். அக்காலத்தில் அவர் நஞ்சாய் கொல்லப்படுவதற்குக் காரணமாயிருந்த அவரது கொள்கைகள், இக்காலத்தில் மிகச் சிறந்தனவாகப் பாராட்டப்படுகின்றன. அதனால் எல்லா நாட்டறிஞரும் சாக்கிரட்டீஸைப் போற்றிப் புகழ்கின்றனர். இங்ஙனம் அறிஞர்கள் உள்ளத்தில் அழியாது வாழும் சாக்கிரட்டீஸ் இறந்தவராவாரோ?

## குறிப்பு

இது, வாழ்க்கை வரலாறு பற்றிய பாடமாகும். இதில், கிரேக்க நாட்டுப் பேரறிஞராகிய சாக்கிரட்டீஸ் என்பவரின் வரலாறும், அவருடைய உயர் பண்புகளும் விளக்கப்பட்டுள்ளன.

## கேள்விகள்

1. பிறர்நலம் பேணும் பெரியோரின் இயல்புகள் யாவை?
2. சாக்கிரட்டீஸின் வரலாறு யாது?
3. சாக்கிரட்டீஸின் பொறுமையை விளக்கும் நிகழ்ச்சி யாது?
4. சாக்கிரட்டீஸ் தோற்றத்தில் எவ்வாறு இருந்தார்?
5. விவாதம் செய்வதில் சாக்கிரட்டீஸ் திறமையுள்ளவர் என்பது எதனால் தெரிகிறது?
6. சாக்கிரட்டீஸின் சிறந்த கொள்கை யாது? அதனால் என்ன எண்ணினார்?
7. அனிடஸ், லைகான் என்போர் சாக்கிரட்டீஸின்மீது சினங்கொண்டது ஏன்? அதனால் அவர்கள் என்ன செய்தனர்?
8. சாக்கிரட்டீஸுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது ஏன்?
9. கிரைட்டோ என்பவர் யார்? அவர் சாக்கிரட்டீஸை விடுவிக்க என்ன செய்தார்?
10. சாக்கிரட்டீஸின் உயர் பண்புகளைத் தெரிவிக்க.

## பயிற்சி

I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—பேணும், பெற்றியர், சோரார், அவனி, கடவாத, வசை, நேரிய, செருக்கு, வல்லுநர், வெளவும், இறைஞ்சி, நஞ்சு, பருகினார்.

2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக :—எத்துணை, இன்னல், இலங்குகிறார்கள், வஞ்சிப்பது, நிலை கலங்க, பன்முறை, கவிவாணர், மெய்ப்பிக்க, இரங்கத் தக்க.

II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக :— மண்ணுலகு, அறநெறி, சிக்கற, மருந்தூட்டும், நாட்டறிஞர்.

2. சோரார் — இது, எதிர்மறை வினைமுற்று. இதனை, 'சோர்வார்' என்று மாற்றினால், உடன்பாட்டு வினைமுற்றாகும். இவ்வாறே, காணார், விரும்பாள், எழுதான், போகார், படியான் என்னும் எதிர்மறை வினைமுற்றுக்களை உடன்பாட்டு வினைமுற்றுக்களாக மாற்றி எழுதுக.

III. வாக்கியப் பயிற்சி

1. சாக்கிரட்டீஸ் கிரைட்டோவிடம் தன்னைக் கூப்பிட வேண்டாமென்று தெரிவித்தார். — இது அயல் கூற்று வாக்கியமாகும். இதை, சாக்கிரட்டீஸ் கிரைட்டோவிடம், "என்னைக் கூப்பிடவேண்டாம்" என்று தெரிவித்தார் — என மாற்றினால், நேர்க் கூற்று வாக்கியமாகும். அயற்கூற்றில் படர்க்கையாய் இருக்கும் சொல், நேர்க் கூற்றில் தன்மை அல்லது முன்னிலையாய் வரும்.

2. அயற் கூற்றை நேர்க் கூற்றாக மாற்றுக :—
   (1) கிரைட்டோ தன்னுடன் வந்து விடும்படி சாக்கிரட்டீஸிடம் வேண்டினார்.
   (2) கண்ணன் தான் நன்றாய்ப் படித்ததாகத் தெரிவித்தான்.

IV. கட்டுரைப் பயிற்சி

1. 'சாக்கிரட்டீஸின் பெருமை' என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.

2. சாக்கிரட்டீஸ் வரலாற்றை அவரே கூறுவதுபோல் எழுதுக.



# 11. பட்டுத்தொழில்

உலகில் வாழும் மக்கள் பருத்தியாடை, பட்டாடை, கம்பளியாடை முதலிய ஆடைகளை அணிகிறார்கள். இவர்களிற் பலர் பெரும்பான்மையாகப் பருத்தியாடையையே அணிகின்றனராயினும், பெருமைகருதிச் செல்வரும் பிறரும் பட்டாடையையும் சிறப்புக்காலங்களில் விரும்பி அணிகின்றனர். ஆகையால், இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் பட்டுத் தொழில் பல்கி வளர்ந்துள்ளது. இத்தொழிலைச் சார்ந்து வாழும் மக்களும் எண்ணிறந்தவர்களாயுள்ளனர்.

பட்டுத் தொழிலுக்கு அடிப்படையாக இருப்பது பட்டுப்புழு உற்பத்தியாகும். இப்புழுவினிடமிருந்து தான் நமக்குப் பட்டுநூல் கிடைக்கிறது. இப் புழுக்கள் தமக்கு உறைவிடமாக அமைக்கும் கூடுதான் பட்டுநூலாகும். ஆகையால், இப்புழுக்களை வளர்த்துப் பெருக்கினால்தான் பட்டுநூல் மிகுதியாகக் கிடைக்கும். பட்டுப்புழுக்கள் முசுக்கட்டை என்னும் ஒரு வகைச் செடியில் தங்கியிருந்து, அதன் இலைகளை

உண்டு வாழ்கின்றனவாதலால், பட்டு உற்பத்திக்கு இச்செடிகள் இன்றியமையாதனவாய் உள்ளன.

பட்டுத்தொழில் செழிக்கவேண்டுமானால் முசுக்கட்டைச் செடிகளை மிகுதியாகப் பயிரிடவேண்டும். சென்னை இராச்சியத்தில் மழைநீரால் வளர்ந்த முசுக்கட்டைச் செடிகளில் கிடைக்கும் இலைகளின் வாயிலாக ஆறு முறைகள் புழுக்கூடுகள் உற்பத்தியாகின்றன. ஒரு ஏக்கர் நிலத்தில் இச்செடிகளைப் பயிரிட ஏறக்குறைய இருநூறு ரூபாய் செலவாகிறது. இவற்றைப் பாதுகாக்க ஆண்டுதோறும் நூற்றைம்பது ரூபாய் செலவாகிறது. இவற்றால் ஆண்டொன்றுக்கு 3,750 பவுண்டு இலைகள் உற்பத்தியாகின்றன. முசுக்கட்டைச்செடித் தோட்டங்களுக்கு நீர்ப்பாசன வசதியளித்து விஞ்ஞான முறையில் பயிர்செய்தால், இலைகள் இருமடங்குக்குமேல் பெருகும்

பட்டு நெசவுத் தொழிலுக்கு இன்றியமையாததாய் உள்ளது, புழுக் கூடுகளின் உற்பத்தியாகும். இப்



புழுக்கூடுகளைத் தரம் பிரித்தல்



கூட்டிலிருந்து நூலிழை சுற்றுதல்

புழுக் கூடுகளின் உற்பத்தி நோயற்ற முட்டைகளைப் பொறுத்திருக்கிறது. இம்முட்டைகளினின்று தோன்றி வளரும் புழுக்களின் பெருக்கத்திற்கேற்ப, கூடுகளும் பெருகிப் பட்டு நூல் கிடைக்கும். பட்டுப் புழுக்கள் தாம் வாழ்வதற்காகத் தம் உடம்பினின்று வெளிப்படும் மெல்லிய நூலிழைகளால் சுற்றிச் சுற்றி நெருக்கமாகப் பொருந்தும்படி கூடுகள் அமைக்கின்றன. பின்னர், இப்புழுக்கள் வெளியேறாத நிலையில் கூடுகளினுள்ளேயே இருக்கும். சிறிது காலத்தில் புழுக்கள், சிறகு முளைத்துக் கூட்டைத் தொளைத்துக்கொண்டு வெளியேறிப் பட்டுப் பூச்சிகளாய்ப் பறந்து செல்லும். இங்ஙனம் புழுக்கள் வளர்ந்து வெளியேறுவதன் முன் கூடுகளைச் சேகரித்துப் புழுக்களைக் கொன்று கூடுகளிலிருந்து பட்டு நூலைச் சேர்க்கிறார்கள். புழுக்கள் வெளியேறிய கூடுகள் பட்டு நூல் சேர்க்கப் பயன்படமாட்டா.

பட்டு நூல் சேகரிக்கும் தொழில், அத்தொழிலின் நுணுக்கம் தெரிந்தவர்களால் மிகுந்த கருத்துடன்

செய்யப்படுகிறது. கூடுகளைச் சேகரித்துத் தூய்மை செய்து பிரித்தல், பெட்டிகளில் சேர்த்துப் பாதுகாத்தல், நூல் இழைத்தல், திரித்தல், சிட்டமாக்குதல் முதலிய பலவகைத் தொழில்கள் நிறைவேறிய பின்னர், பட்டு நூல் விற்பனைக்குத் தயாராகிறது. இத்தொழில்கள் நடைபெறும் விவரங்களை இப்பாடத்தினுள்ள படங்களால் அறியலாம்.

பட்டு நூலை இழைத்த பிறகு திரிக்க வேண்டியது இன்றியமையாதது. திரிக்கப்பட்ட நூல் வலிமையுள்ளதாய்த் துவண்டு விளங்கும். பட்டுநூல் திரிக்கும் ஆலைகள் சென்னை இராச்சியத்தில் சில இருக்கின்றன. இவை போதுமானவையல்லவென்று பொருளாதார வல்லுநர்கள் அறிவிக்கின்றனர். இந்நூலைக் கொண்டே பட்டு நெசவுத் தொழில் நடைபெறுகிறது. பருத்தியாடை நெய்வதுபோல் பட்டாடைகளை எளிதில் நெய்ய முடியாது. பட்டு நெசவுத் தொழில், கைத்திறம் மிகுந்தவர்களால் மிக நுட்பமாகக் கையாளப்படுகிறது.



பட்டுநூலைச் சிட்டமாகத் தயாரித்தல்



பட்டு நெசவுத் தொழிற்சாலை

பட்டு நெசவுத் தொழில், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த கொள்ளேகாலம், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஹோசூர், கோபிசெட்டிப்பாளையம், பெங்களூர், காஞ்சிபுரம், கும்பகோணம், மாயவரம், குன்னூர் முதலிய பலவிடங்களில் குடிசைத் தொழிலாக நடைபெறுகிறது. கொள்ளேகாலம், காஞ்சிபுரம் முதலிய இடங்களில் பட்டுநெசவுத் தொழிற்சாலைகளும் நூல் திரிக்கும் தொழிற்சாலைகளும் நிறுவி இத்தொழிலைப் பெருக்கவேண்டுமென்று இத்தொழிலின் இன்றியமையாமையை நன்குணர்ந்த பொருளாதார வல்லுநர்கள் கருதுகின்றனர்.

நம்நாட்டில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பட்டாடையை மிகவிரும்பி வாங்குவதால், பட்டாடை விற்பனை மிகுதியாக நடைபெறுகிறது. பெங்களூர், கொள்ளேகாலம் ஆகிய இவ்விரு இடங்களும் பட்டாடை விற்பனையில் புகழ்பெற்றவையாகும். மற்றும், காஞ்சிபுரம், கும்பகோணம், சேலம் முதலிய இடங்களும் பட்டாடை விற்பனையில் சிறந்தவையே.

பட்டுநூல் தொழிலாளரின் நலனைக்கருதி இப்பொழுது கூட்டுறவு முறையில் பட்டுநூல் விற்பனை முதலியவை செய்ய முயன்று வருகின்றனர்.

பட்டுத் தொழிலுக்கு இந்நாட்டில் மிகுந்த வாய்ப்புண்டு. இத்தொழிலால் எளிய மக்கள் பலர் பெரிதும் பயனடைகிறார்கள். இத்தகைய பட்டுத் தொழிலைக் கண்காணித்து வளர்க்கும்பொருட்டு இந்திய ஆட்சியினர் 'மத்திய பட்டுக் குழு' ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர். இக்குழுவினர் எல்லாத் துறைகளிலும் பட்டுத் தொழில் வளர்ச்சி பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

சிற்றூர் மக்கள் தனியாகவோ, கூட்டாகவோ இப்பட்டுத் தொழிலில் ஈடுபடவேண்டும். குடிசைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள பிற நாடுகளின் படிப்பினைகளை நன்கறிந்து அவற்றைப் பின்பற்றி நடக்கவேண்டும்; இயந்திர வகைகளையும் அவற்றிற்குரிய பொருள்களையும் பெருக்கவேண்டும்; தொழில் வளர்ச்சிக்குரிய முறைகளை ஆர்வமுடன் கையாளவேண்டும். இவற்றால் இந்திய நாட்டில் பட்டுத் தொழில் பெருகி வளர்ந்து, பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடையும்.

## குறிப்பு

இது, கைத்தொழில் பற்றிய பாடமாகும். இதில் பட்டுத் தொழில் பற்றிய செய்திகள், சென்னை ஆட்சியினர் வெளியிட்டுள்ள விவரங்களைக் கொண்டு பொருளாதார அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன. இப்பாடத்தில் உள்ள புகைப்படங்கள் கொள்ளேகாலத்தில் பட்டுத்தொழில் நடைபெறுவதைக் காட்டுவனவாகும். இப்படங்கள் சென்னை ஆட்சியினரின் அன்பார்ந்த இசைவுடன் இங்குச் சேர்க்கப்பட்டுள்ளன.

## கேள்விகள்

1. பட்டுத்தொழில் பெருகி வளர்ந்திருப்பது ஏன்?
2. பட்டுநூல் எவ்வாறு கிடைக்கிறது?

3. பட்டு உற்பத்திக்கு இன்றியமையாததாய் உள்ள செடி எது? அதன் விவரத்தைத் தெரிவிக்க.

4. பட்டுப்புழுக் கூடுகளை எங்ஙனம் சேகரிக்கிறார்கள்? பட்டு நூல் சேர்க்கும் முறை யாது?

5. பட்டு நெசவுத்தொழில் எங்கெங்கே நடைபெறுகின்றன?

6. பட்டாடை விற்பனையில் சிறந்துள்ள இடங்கள் யாவை?

7. பட்டுத் தொழிலின் வளர்ச்சியில் ஆட்சியினர் செய்துள்ள ஏற்பாடு யாது?

8. பட்டுத்தொழிலை வளர்க்க நாம் என்ன செய்யவேண்டும்?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:— பல்கி, வல்லுநர்கள், நுணுக்கம், மாவட்டம், வாய்ப்பு, குழு, துறை, கண்காணித்து.

2. ஒவ்வொரு வாக்கியங்களில் அமைத்து எழுதுக:—பட்டுப்புழு, முசுக்கட்டை, நீர்ப்பாசனம், நூல் இழைத்தல், சிட்டம், கைத்திறம், ஈடுபட்டு.

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—பட்டாடை, தொழிற்சாலை, சிற்றூர், நன்கறிந்து.

2. நலன் — இது, 'நலம்' என்ற சொல்லின் கடைப்போலி யாகும். இதிலுள்ள 'ம்' என்ற எழுத்து, 'ன்' என்ற எழுத்தாக மாறினும் பொருள் வேறுபடவில்லை யாகையால், இது போலி எனப்படும். இவ்வாறே அகம், கலம், மலம் என்பவற்றைப் போலி எழுத்து வரும்படி எழுதுக.

### III. கட்டுரைப் பயிற்சி

1. பட்டுநூல் சேகரிக்கும் முறையை விவரித்து எழுதுக.

2. நேரில் பார்த்துள்ள பட்டு நெசவுத்தொழிலைப் பற்றி எழுதுக.

# 12. புதுமை கண்டவர்

உலகிற் பிறந்து வாழும் கோடிக்கணக்கான மக்களில் ஒரு சிலரே நிலைத்த புகழுடன் நிலவுகின்றனர்; ஏனையோர் மாய்ந்தொழிந்து மறைகின்றனர். புகழுடம்பில் விளங்குவோர் செயற்கரிய செயல் புரிந்த சீரியோராவர். இத்தகைய சீரியோரில் கொலம்பஸ் என்பவர் ஒருவர். இவர், இப்பொழுது பெருஞ் சிறப்புடன் ஒளிரும் அமெரிக்காவைமுதன் முதல் கண்டுபிடித்த பெருமைக் குரியவராவார். அதனால் இவர், பெரும்புகழ் பெற்று விளங்குகிறார்.



கொலம்பஸ் ஜினோவா என்னும் நகரத்தில் எளிய குடும்பத்தில் தோன்றினார். இவரது தந்தை ஏழையாயிருந்தும் தன் மகன் கல்விகற்றுச் சிறக்கவேண்டுமென்று விரும்பிக் கல்விபயிலச்செய்தார். சிறுவராகிய கொலம்பஸ் கல்வியில் ஆர்வங்கொண்டு மிக விரைவில் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டு கணிதத்திலும் ஓவியத்திலும் பயிற்சி பெற்றார்; இலத்தீன் மொழியையும் பயின்றறிந்தார்.

கொலம்பசுக்கு விரிந்த கடலின்மீது செல்வதில் மிகுந்த விருப்பம். தன் நாட்டவரிற் பலர் கப்பற் பயணம் செய்வதில் தேர்ச்சி மிகுந்தவர்களாயிருப்பதையும், புதிய தீவுகளைக் கண்டுபிடிப்பதில் முயற்சியும்

துணிவும்கொண்டு கப்பலேறிப் பலவிடங்களுக்குப் போய் வருவதையும் கண்ட கொலம்பஸ், தாமும் அவ்வாறு செல்லவேண்டுமென்று விரும்பினர். அதனுல், தமது பதினுன்காம் வயதிலேயே கப்பலோட்டும் தொழிலைச் செய்யத் தொடங்கினர்.

அக்காலத்தில் கப்பலோட்டும் தொழிலில் மக்கள் மிகுந்த தேர்ச்சி பெற்றிருக்கவில்லை. கப்பற்பயணம் செய்வதென்ருல், ஒரு துறைமுகத்திலிருந்து புறப்பட்டு நீரெலிகளைப்போல் எப்பொழுதும் கடலின் மீதே வாழ்ந்துகொண்டு கப்பல் திருடர்களின் அச்சத்தோடு வேறு துறைமுகங்களுக்குக் கரையோரமாகச் செல்வதேயாம். இவ்வாறு கொலம்பஸ் தம் சிறு பருவத்தில் பலமுறை பயணம் செய்து கப்பல் திருடர்களிடத்தில் அகப்பட்டு இன்னல் பல எய்தினர். ஆயினும் மனந்தளரவில்லை.

இவர் தாம் கற்ற கல்வி மிகச் சிறியதாயிருந்தும் அதைச் சிறந்த முறையில் பயன்படுத்தி மேன்மேலும் வளர்த்துவந்தார்; தாம் வறுமை நிலையிலிருந்தும் புதுமை காணவேண்டுமென்னும் தமது குறிக்கோளில் உறுதியாயிருந்தார். தம்மைச் சூழ்ந்துள்ளவர்கள் அரிய செயல்களைப்பற்றி எண்ணும் பெரிய நோக்கு இல்லாதவர்களாயிருந்தும் இவர்மட்டும் சிறந்த கருத்துக்களைப்பற்றிச் சிந்திக்கும் சிறப்புடையவராயிருந்தார்.

அக்காலத்தில் போர்த்துகல் நாட்டு அரசன் செய்யும் சிறந்த செயல்களைக் குறித்தும் விந்தையான பல செய்திகள் கண்டுபிடிக்கப்படுவதையும் பலர் வியந்து பேசிக்கொள்வது வழக்கமாயிருந்தது. சில நாடுகளில் சிவக்கக் காய்ந்திருக்கும் பாறைகளும், கொதிக்கும் கடலும் உண்டென்று சிலர் கூறினர்; மற்றும் சிலர், சில நாடுகளின் மக்கள், தங்கள் தலைகளைக் கைகளுக்குள் வளைத்து வைத்துக்கொண்டு நடக்கிருர்கள் என்று கூறினர்; இன்னுஞ்சிலர், சில

நாடுகளின் நகரங்களிலுள்ள வீதிகள், தங்கத் தகடுகளாலும் இரத்தினங்களாலும் தளவரிசை போடப்பட்டிருக்கின்றன என்று பேசிக்கொண்டனர். கொலம்பஸ் இவற்றையெல்லாம் கேட்டு வியப்படைந்து, 'இவை உண்மையாயிருக்கக்கூடுமோ!' என்று எண்ணலானார். அதனால் கடலுக்கப்பால் இன்னும் கண்டுபிடிக்கப்படாத நிலப்பகுதிகள் இருக்கக் கூடுமோ என்று நினைத்தார். இதைக்குறித்து ஆராய்ந்ததில் நிலப்பகுதிகள் இருக்கவேண்டுமென்னும் எண்ணம் இவர் மனத்தில் உறுதிப்பட்டது. மேலும் அக்கால மக்கள் நம்பியிருந்தபடி பூமி தட்டையாய் இருக்குமா என்பதில் இவருக்கு ஐயமேற்பட்டது. இவ்வெண்ணங்களெல்லாம் உறக்கத்திலும் இவர் மனத்தில் இருந்துவந்தன.

கொலம்பஸ், புதுமையாகக் கண்டுபிடிக்கப்பட்ட செய்திகளைப்பற்றித் தெரிந்துகொள்ளும் ஆவலுடன் அடிக்கடி நகரத்தினுள் சென்றுவரலானார். அங்ஙனம் செல்லத்தொடங்கிய சில நாட்களில், அங்குள்ள வீரரான கப்பற்காரர் ஒருவருடைய மகளிடம் பழக்கமேற்பட்டு அவளைத் திருமணம் செய்துகொண்டார். இத்திருமணத்தால் இவரது குறிக்கோள் நிறைவேறுவதற்குரிய உதவி செய்யும் தகுதியுள்ள சிலரது நட்பு இவருக்குக் கிடைத்தது.

நாட்கள் செல்லச்செல்லப் பூமியானது தட்டையாய் இராமல் உருண்டை வடிவமாய் இருக்கவேண்டுமென்று உறுதியாய் நினைக்கலானார். அதனால் மேற்குப் பெருங்கடலுக்கு அப்பால் இதுவரையும் காணப்படாத நாடு இருக்கவேண்டுமென்றும் இந்திய நாட்டிற்குப் போக மேற்காக ஒரு வழி இருக்கவேண்டுமென்றும் உறுதியாய் நம்பினார். அன்றியும்' அந்நாட்டைத் தானே கண்டுபிடிக்கவேண்டுமென்பது கடவுள் கட்டளை என்றும் நினைத்தார். ஆகையால் இச்செய

விலேயே தன் வாழ்நாள் முழுவதையும் செலவழிக்கத் துணிவுகொண்டார்.

இக்காலத்தில் கொலம்பசுக்குச் சில துன்பங்கள் நேர்ந்தன. இவரது மனைவி இறந்துபோனாள். நாட்டில் போர் ஏற்பட்டு மக்களை அலைக்கழித்து வந்ததால் இவர் தன் செல்வங்களையெல்லாம் இழந்து, தன் சிறு மகன் ஒருவனைத்தவிர வேறு ஆதரவின்றி வீட்டைத் துறந்து வெளியேற நேரிட்டது. இந்நிலையில் தன் மகனைக் காப்பாற்றும் பொருட்டு இவர் பிறரிடம் சென்று இரந்துவாழ நேரிட்டது. இத்தகைய எளிய நிலையிலும் புதிய நாடு கண்டுபிடிக்க வேண்டும் என்னும் அவா இவர் மனத்தைவிட்டு அகலவில்லை.

மேற்குத் திசையில் ஒரு புதிய கண்டமோ, அல்லது அவ்வழியாக இந்தியாவுக்குப் போக ஒரு குறுகிய வழியோ இருக்கவேண்டும் என்ற தன் உறுதியைச் சோதித்து அறியும் பொருட்டு, இவர் போர்த்துகல் நாட்டு அரசனிடம் ஓர் உபாயத்தைத் தெரிவித்தார். அவ்வரசன் இவர் மொழிகளைப் பொருட்படுத்தாமல் மறுத்துவிட்டான். ஆகையால், இவர் ஸ்பெயின் நாட்டு அரசியிடம் சென்று தன் கருத்தை நிறைவேற்ற விழைந்து அங்குப்போய்ச் சேர்ந்தார். அந்நாட்டில் பல ஆண்டுகள் துன்பங்களுடன் வாழ்ந்திருந்து வாய்ப்பு நேரிட்ட பொழுதெல்லாம் தன் கருத்தை அரசியாருக்கு அறிவித்துக்கொண்டு வந்தார்.

இசபெல்லா என்னும் அவ்வரசியார் கொலம்பசின் மொழிகளை அன்புடன் கேட்டும் அவர் இவருக்குத் துணைபுரிய முடியாமலிருந்தது. இதனால் கொலம்பஸ் மனந்தளர்ந்து வெறுப்படையும்படி நேரிட்டும், இவர் ஊக்கம் தளராமல் விடாது முயன்றுவந்தார். இதனால் இசபெல்லா அரசியார் மனமிளகித் தம் சொந்த ஆபரணங்களைக் கொண்டு பொருளுதவி செய்து கொலம்பசைக் கடற் பயணம் செய்து வைக்க இசைந்தார்.

அதன்படி 1492-ஆம் ஆண்டு ஏப்ரல்மாதம் 17-ஆம் நாள் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அவ்வுடன் படிக்கையில், ஸ்பெயின் நாட்டு அரசியாருக்கு ஓர் உண்மைத் தொண்டராய் நடந்து கொள்வதாகக் கொலம்பஸ் ஒப்புக்கொண்டார். அவ்வாண்டிலேயே ஆகஸ்ட்டு மாதம் 3-ஆம் நாள் மூன்று சிறிய கப்பல்க ளோடு கொலம்பஸ் புறப்பட்டார். இவருக்குத் துணை யாகப்பலர் அக்கப்பல்களில் வந்தனர். பல நாட்கள் வரையில் தரையின் அறிகுறியைச் சிறிதும் அறியாம லேயே பயணம் செய்தனர். இப்பயணத்தில் பலவகைத் துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது. கொலம்பசுடன் வந்த கப்பற்காரர்கள் தங்கள் நாட்டையும் மனைவி மக் களையும்விட்டு நெடுந்தொலை வந்ததைக்குறித்து வருந்தி னார்கள். 'இவன் பேச்சை நம்பி வந்தோமே' என்று துயரமடைந்து கொலம்பசை வெளிப்படையாக இழித்துரைக்கவும் தலைப்பட்டார்கள். ஒருகால் கொலம்பசைத் தூக்கிக் கடலில் எறிந்துவிட்டுக் கப்பல் களைத் திருப்பிக்கொண்டு தம் நாட்டிற்குத் திரும்பிப் போகலாம் என்றும் அவர்கள் முடிவு செய்தனர். ஆயினும் இதற்குச் சிலர் உடன்படாமையால், 'இன் னும் மூன்று நாட்களுக்குள் தரையைக் காணுவிடில் கப்பல்களைத் திருப்பிக்கொண்டு உங்களை ஸ்பெயின் நாட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறேன்' என்று கொலம்பசை முழங்காலிட்டுச் சொல்லும்படி வற்புறுத்தி உறுதிமொழி பெற்றனர்.

கொலம்பஸ் அவர்களின் மனப் போக்கையறிந்து வருந்தினாராயினும் உள்ளம் தளராமல் தமக்கு வெற்றி கிட்டுமாறு கடவுளை வேண்டி, தரையின் அறிகுறி தோன்றுதா என்னும் ஆவலுடன் கண்ணுறங்காது இரவிலும் நோக்கிவந்தார். ஒரு நாள் இரவு இரண்டு மணியளவில் நெடுந் தொலைவில் கரையிலுள்ள ஒரு விளக்கு மினுக்கு மினுக்கென்று தோன்றியது. இதைக் கண்ட கொலம்பஸ் துள்ளிக் குதித்துக்

களிப்படைந்தார். அப்பொழுது இவரடைந்த மகிழ்ச்சியின் பெருக்கை எவ்வாறு எடுத்துரைப்பது! கப்பலிலிருந்த மற்றவர்களும் மகிழ்ச்சியடைந்தனர். தரையைக் கண்டதிற் கடையாளமாக ஒரு பீரங்கி வெடி தீர்த்துக் கொண்டாடினர்.

உடனே கப்பல்களிலுள்ள பாய்களை இறக்கிக் கரையருகில் நிறுத்தினர். அன்றிரவு முழுவதும் யாவரும் கண்ணுறங்காமல் கதிரவன் தோற்றத்தை எதிர்பார்த்து ஆவலோடு இருந்தனர். பொழுது புலர்ந்ததும் தங்களுக்கு முன்பாக ஒரு தீவும், அதில் மக்களும், மரங்களும் இருப்பதைப் பார்த்து எல்லோரும் 'தரை! தரை!!' என்று மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்தனர். பிறகு கொலம்பசும், மற்றவர்களும் ஸ்பெயின் நாட்டுக் கொடியைப் பிடித்துக்கொண்டு அத்தீவில் இறங்கினர். கப்பற்காரர்கள் யாவரும் கொலம்பசை 'அட்மிரல்' என்னும் பெருமையுடன் வாழ்த்தி, இவருக்குக் கீழ்ப் படிந்து நடப்பதாக வாக்குறுதி செய்தனர். கொலம்பசும் மற்றவர்களும், தாங்கள் இறங்கிய இடம் இந்தியாவின் கீழ்க்கரை என்றே நம்பினர். ஆகையால் அதனையும், அதன் பின்னர் கண்டறிந்த தீவுகளையும் இந்தியத் தீவுகளென்றும், அங்குள்ள மக்களைச் செவ்விந்தியரென்றும் அழைத்தனர். அத் தீவுகளை இப்பொழுது 'மேற்கு இந்தியத் தீவுகள்' என்று வழங்கப்படுகின்றன.

கொலம்பஸ் சான்சால்வேடர், கியூபா, செயின்ட் டாமிங்கோ முதலிய தீவுகளைக் கண்டுபிடித்த பிறகு 1493-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் ஸ்பெயினுக்குத் திரும்பினர். அப்பொழுது ஐரோப்பியர் பார்த்திராத சில பறவைகள், விலங்குகள் முதலியவற்றுடன் செவ்விந்தியரில் இருவரையும் அழைத்துக்கொண்டு வந்தார். ஸ்பெயின் நாட்டரசரும் அரசியாரும் மகிழ்ந்து, மரியாதையுடன் வரவேற்றனர்.

கொலம்பஸ் மீண்டும் கடற் பயணம் செய்து வேறு தீவுகளைக் கண்டறிந்தார். இங்ஙனம் இவர் நான்கு முறை பயணம் செய்தார். இம் முயற்சியில் இவர், அமெரிக்கா என்று இப்பொழுது விளங்கும் புதிய கண்டத்தையும் கண்டுபிடித்தார். ஆயினும் அதனை இந்தியாவின் ஒரு பகுதி என்றே கருதினார். இவர் நெடுங்காலமாக எண்ணிவந்த குறிக்கோள் நிறைவேறி விட்டதால் பெரு மகிழ்ச்சி கொண்டார். ஸ்பெயின் நாட்டு அரசர் பேர்டினண்டு என்பவரும், இசபெல்லா என்ற அரசியாரும் இவரது விடா முயற்சியைப் பாராட்டி, விருந்து நடத்திப் பெருமை செய்தனர்; ஸ்பெயின் நாட்டு மக்களும் இவரை ஆங்காங்கு அழைத்துச் சென்று விருந்துகள் நடத்திப் போற்றிக் கொண்டாடினர். இவ்வாறு பெரும் புகழ் பெற்ற கொலம்பஸ் 1506-ஆம் ஆண்டில் காலமானார். இவர் கண்டுபிடித்த தீவுகள் பதினாறும் நூற்றாண்டின் இடையில்தான் புதிய கண்டமெனத் தெரிய வந்தது. பிளாரன்சிலுள்ள அமெரிக்கோ வெஸ் புஸி என்ற ஒரு வர்த்தகர் முதன் முதல் அமெரிக்காவை யடைந்து அதற்குரிய பயண வரலாற்றை எழுதினார். அதனால் அக்கண்டம் அவர் பெயரால் 'அமெரிக்கா' என அழைக்கப்படுகிறது. ஆயினும் கொலம்பஸ் புதிய கண்டத்தைக் கண்டுபிடித்தார் என்பதற்கறிகுறியாக இவர் பெயரால் 'கொலம்பியா' என்னும் நகரம் அமெரிக்காவில் திகழ்ந்து இவர் புகழை விளக்கி வருகிறது.

### குறிப்பு

இது, புதுமை காணல் என்னும் பொருள் பற்றிய பாடமாகும். இதில் கொம்பஸ் வரலாறும், அவர் கண்டறிந்த புதிய இடங்களும் குறிக்கப்பெற்றுள்ளன.

### கேள்விகள்

1. கொலம்பஸ் வரலாற்றைத் தெரிவிக்க.
2. கொலம்பஸ் இளம்பருவத்தில் எண்ணிவந்த குறிக்கோள் யாது? அது எவ்வாறு நிறைவேறியது?

3. கொலம்பஸ் புதுமைகாண வேண்டுமென்று விரும்பியது ஏன்? அதனால் அவர் உள்ளத்தில் தோன்றியது என்ன?
4. கொலம்பஸ் புதுமைகாண வேண்டுமென்று செய்த முயற்சிகள் யாவை?
5. கொலம்பஸ் விடாமுயற்சி யுடையவர் என்பது எவற்றால் விளங்குகிறது?
6. கொலம்பசுக்கு உதவி செய்த அரசியார் யார்? எவ்வாறு உதவி செய்தார்?
7. கப்பற் பயணத்தில் கொலம்பசுக்கு ஏற்பட்ட துன்பம் யாது?
8. கொலம்பஸ் கண்டறிந்த தீவுகள் யாவை? அவை எவ்வாறு வழங்குகின்றன? ஏன்?
9. கொலம்பஸ் கண்டுபிடித்த புதிய கண்டம் அமெரிக்கா என்று வழங்கப்படுவது ஏன்?
10. கொலம்பசின் பண்புகளைத் தொகுத்து வரைக.

### பயிற்சி

I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—சீரியோர், குறிக்கோள், நோக்கு, அவா, விரைந்து, வாய்ப்பு, இழித்துரைக்க.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—நிலவுகின்றனர், கணிதம், ஓவியம், துணிவு, அலைக்கழித்து, உடன்படிக்கை, கிட்டுமாறு.

II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக:—செயற்கரிய, கடலுக் கப்பால், நிலப்பகுதி, மனந்தளர்ந்து, வாக்குறுதி, செவ்விந்தியர்.
2. ஊர் பெரிது-இதில் 'ஊர்' என்பது இடத்தைக் குறிப்பதால், இடப் பெயர் ஆகும். ஊர் மகிழ்ந்தது - இதில் 'ஊர்' என்பது இடத்திலுள்ள மக்களைக் குறிப்பதால், இடவாகு பெயர் ஆகும். ஆகு பெயர் என்பது, ஒன்றன் பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொன்றுக்கு ஆகி வருவதாகும்.
3. ஆகு பெயர் உள்ள சொற்களைத் தெரிவிக்க:—

(1) காளை வந்தான் (3) சுண்டல் தின்றான்
(2) வெற்றிலை நட்டான் (4) சேவல் வாங்கினான்.

# 13. தொழில் செய்வோம்

சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதிசமைப்போம்
வங்கத்தி லோடிவரும் நீரின்மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர்செய்குவோம். 1

வெட்டுக் கனிகள்செய்து தங்கமுதலாம்
வேறுபல பொருளுங் குடைந்தெடுப்போம்
எட்டுத் திசைகளிலுஞ் சென்றிவைவிற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டுவருவோம். 2

பட்டினி லாடையும் பஞ்சிலுடையும்
பண்ணி மலைகளென வீதிகுவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டுவருவார்
காசினி வணிகருக் கவைகொடுப்போம். 3

ஆயுதம்செய் வோம்நல்ல காகிதம்செய்வோம்
ஆலைகள்வைப் போம்கல்விச் சாலைகள்வைப்போம்
ஓயுதல்செய் யோம்தலை சாயுதல்செய்யோம்
உண்மைகள்சொல் வோம்பல
வண்மைகள்செய்வோம். 4

குடைகள்செய் வோம்உழு படைகள்செய்வோம்
கோணிகள்செய் வோம்இரும் பாணிகள்செய்வோம்
நடையும் பறப்புமுணர் வண்டிகள்செய்வோம்
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள்செய்வோம். 5

—பாரதியார்.



# 14. சோளத்தின் வரலாறு

மக்கள் உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாதன வாய் உள்ள உணவுப்பொருள்களில் நெல், கோதுமை, கேழ்வரகு, கம்பு, சோளம் முதலிய தானியங்கள் முக்கியமானவையாகும். தென்னாட்டில் வாழ்வோர் நெல்லையும், வடநாட்டில் வாழ்வோர் கோதுமையையும் பெரும்பாலும் பயன்படுத்துகிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள சிற்றூர்களில் வாழும் மக்கள் கம்பு, கேழ்வரவு, சோளம் முதலிய தானியங்களையே பெரும்பாலும் உணவுக்குப் பயன்படுத்திவருகிறார்கள். இவற்றுள் சோளம் என்பது நமது நாட்டுத் தானியமன்று; சில நூற்றாண்டுகளுக்குமுன் இங்குவந்து பெருகியதேயாகும்.

கொலம்பஸ் புதிய இடங்களைக் காண முயன்றபொழுது, கியூபா என்ற தீவையடைந்தார். அங்கே, கி. பி. 1492-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 5-ஆம் நாள் ஸ்பெயின் நாட்டவர் இருவரைத் தீவினுள் சென்று நாட்டின் நிலைமையை நன்கறிந்துவருமாறு கொலம்பஸ் ஏவினார். அவர்கள் தீவினுள் சென்று திரும்பிவந்து, " உள்நாட்டில் மக்கள் பலர் வாழ்கிறார்கள். அவர்கள்

சோளம் எனப்படும் ஒருவகைத் தானியத்தை மிகுதியாகப் பயிர்செய்கிறார்கள். அத்தானியத்தை வறுத்தும், காயவைத்து மாவாக்கியும், சுட்டும், வேகவைத்தும், மாவை ரொட்டிசெய்தும் உண்கிறார்கள். அத்தானியத்தில் செய்யும் தின்பண்டங்கள் மிகவும் சுவையாயிருக்கின்றன" என்று தெரிவித்தார்கள்.

இதையறிந்த கொலம்பஸ், சோளம் என்கிற தானியத்தை ஐரோப்பாவுக்குத் திரும்பிப் போகும் பொழுது கொண்டுபோனார். இதற்குமுன் சோளம் ஐரோப்பாவில் இருந்ததாகத் தெரியவில்லை. கொலம்பஸ் பயணத்திற்குப்பின்னர், சோளம் ஐரோப்பா முழுவதும் சிறிது சிறிதாகப் பரவலாயிற்று. அதன் பிறகு, ஆசியா, இரஷியா வாயிலாகச் சீனநாட்டிற்கும் பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பரவியதென்று தெரிகிறது. சீன நாட்டிற்கு வந்தபின்னரே இந்தியா பர்மா முதலிய நாடுகளிலும் பரவியது.

சோளம், கடல் மட்டத்தின் அளவுள்ள நிலத்திலும், பன்னீராயிரம் அடிகளுக்குமேல் உயரமுள்ள மலைப்பக்கங்களிலும் விளையக்கூடியதாகும். வயல்களில் விளையும் தானியங்களில் இது ஒன்றே இத்தகைய நலமுள்ளதென்று பயிர் வல்லுநர்கள் கண்டறிந்து கூறுகின்றனர். ஆகவே, சோளம் உயரமான மேடு, தாழ்வான பள்ளம் ஆகிய எவ்வகை நிலத்திலும் எளிதில் பயிர் செய்யக்கூடியதென்பதை அறியலாம். இதில் செஞ்சோளம் என்றும், மக்காச்சோளம் என்றும் இருவகையுண்டு. இவற்றுள் மக்காச் சோளமே நம் நாட்டுக்குப் புதியதாகும். நம் நாட்டில் செஞ்சோளம் மிகுதியாய்ப் பயிராகிறது. மக்காச் சோளம் அமெரிக்கா போன்ற வெளிநாடுகளிலேயே மிகுதியாய் விளைகிறது. இக்காலத்தில் புதிய விவசாய முறையில் பலவகைக் கலப்புச் சோளத்தை உற்பத்தி செய்து விளைவித்து வருகிறார்கள்.

சோளம் இயற்கையில் காட்டுச் செடிபோல் பயிராவதில்லை; பயிரிட்டு வளர்த்தால்தான் செழித்து வளர்ந்து பயன் தரக்கூடியதாயிருக்கிறது. ஏறக் குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே இப்பயிர், இப்பொழுது நாம் காணும் நிலையில் பிறநாடுகளில் விளைந்து வந்துள்ளதென்று தெரிகிறது. ஆகையால், மக்கள் இப்பயிரைப் பேணி வளர்த்து வந்துள்ளனரென்பதை அறியலாம்.

சோளம், புல் இனத்தைச் சேர்ந்தது. ஏனைய புல்லினத்தைப் போலன்றி, சோளப்புல்லின் மலர்க்கதிர்களில் ஆண்,.பெண் அமைப்புக்கள் தனித்தனியே உள்ளன. சோளப் புல் உயர்ந்து வளர்ந்து நுனியில் மலர்ந்த பின்னர், கதிர் விடுகிறது. இக்கதிர்களில் சோள மணிகள் நிறைந்திருக்கும். மக்காச்சோளக்கதிர் நீண்டு மேலுறை உடையதாயிருக்கும். கருவுற்று மூன்று வாரத்திலேயே சோளக் கொண்டையின் பால்முத்துக்கள் உண்ணுவதற்குதவும். இம்முத்துக்களை மட்டுமின்றி, இக்கொண்டையின் மகரந்தப்பொடியைக் கொண்டு அமெரிக்க இந்தியர் சுவையானதொரு ஆணச் சாற்றை (Soup) செய்து குடிப்பது பழக்கமாம். இன்னும் சோளக் கொண்டையின் மேல் நுனியில் தொங்கும் குஞ்சம் போன்ற மெல்லிய இழைகளைப் பாகம் செய்து உண்கிறார்களாம். முற்றிப் பக்குவமான வித்துக்கள் வெண்மஞ்சள் நிறமாய் இருக்கும்.

வட அமெரிக்கா, தென்னமெரிக்கா, அருகிலுள்ள தீவுகள் ஆகிய இடங்களில் சோளம் மிகுதியாய்ப் பயிராகிறது. இவ்விடங்களில் வாழ்ந்திருந்த பழங்குடி மக்கள் நிலத்தை உழுது பயிரிடுவதற்குக் கால்நடைகளைப் பயன்படுத்தாமலே தங்கள் உடல் முயற்சியால் பயிரிட்டுவந்தனர். ஆனால், இவ்விடங்களில் ஐரோப்பியர்கள் குடியேறிப் பெருகியதும் சோளப்பயிர் ஏராளமாகப் பயிர்செய்யப்படுகிறது. இப்பொழுது

அமெரிக்க நாடு, விவசாயத்தில் கையாண்டுவரும் முன்னேற்றமான புதிய முறைகளினால் இப்பயிரை மிகுதியாகச் செழிக்கச்செய்துள்ளது.

நம் நாட்டில் செஞ்சோளத்தை அரிசிபோலவே உணவாக்கி உண்கிறார்கள், இதை மாவாக அரைத்துப் பலவகைத் தின்பண்டங்கள் செய்வதுமுண்டு. முற்றிய மக்காச்சோளத்தை வேகவைத்தும், பாற் கொண்டையை நெருப்பில் வாட்டியும் அவற்றின் முத்துக்களை உதிர்த்துப் பலர் உண்கிறார்கள். ஆயினும், இம்மக்காச்சோளத்தை முக்கிய உணவுத் தானியமாகக் கொள்வோர் மிகச் சிலரே.

சில ஆண்டுகளுக்குமுன் முடிவடைந்த இரண்டாம் உலகப் பெரும்போர் நடைபெற்ற காலத்தில், நம்நாட்டில் உணவுப் பொருள் பற்றுக்குறை ஏற்பட்டது; உணவுப் பங்கீட்டு முறையும் ஏற்பட்டது. அதனால் பிறநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை எதிர்பார்க்கவேண்டிய நிலை உண்டாயிற்று. அப்பொழுது பிறநாடுகளிலிருந்து வந்த உணவுத் தானியங்களில் சோளமும் ஒன்றாகும். இது, மிகுதியாய் அமெரிக்காவிலிருந்தே நம் நாட்டிற்கு வந்து இறக்குமதியாயிற்று. இந்நிலையில் எளியவர்களேயன்றிச் செல்வர்களும் சோளத்தைப் பயன்படுத்தலானார்கள். இப்பொழுது சோளம் நம்நாட்டில் பலவகைச் சிற்றுண்டிகள் செய்வதற்கு மிகுதியும் பயன்பட்டு வருகிறது.

## குறிப்பு

இது, வரலாறு பற்றிய பாடமாகும். இதில், சோளத்தின் வரலாறு, அது ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் பரவிய செய்தி முதலியவை விளக்கப்பட்டுள்ளன.

## கேள்விகள்

1. சோளம் ஐரோப்பாவில் எவ்வாறு பரவியது? இந்தியாவிற்கு எவ்வாறு வந்தது?

2. சோளம் எவ்வகை நிலத்தில் பயிராகிறது? இதற்குள்ள தனிச் சிறப்பு யாது? இதன் வகைகள் யாவை?
3. மக்காச் சோளம் எந்நாடுகளில் மிகுதியாய்ப் பயிராகிறது?
4. சோளத்தை மக்கள் பேணி வளர்த்துள்ளனர் என்பது எதனால் தெரிகிறது? இது எவ்வினத்தைச் சேர்ந்தது?
5. சோளத்தை அமெரிக்கர் எவ்வெவ்வாறு பயன் படுத்துகின்றனர்? நம் நாட்டினர் எவ்வாறு பயன் படுத்துகின்றனர்?
6. நம் நாட்டினர் மக்காச் சோளத்தை மிகுதியாய்ப் பயன் படுத்தத் தொடங்கியது எப்பொழுது?

பயிற்சி

I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக :—தீவு, ஏவினர், பேணி, இனம், வித்து, போர், பற்றாக்குறை.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:-தானியம், சுவை, கால்நடை, பங்கிடு, இறக்குமதி, செஞ்சோளம், மக்காச் சோளம்.

II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக :—தென்னாடு, சிற்றூர், நூற்றாண்டு, பழங்குடி, சிற்றுண்டி, சோளமணி, மகரந்தப் பொடி.
2. தின்பண்டம் – இதில், 'தின்' என்பது, தின்ற, தின்கிற, தின்னும் என்று மூன்று காலங்களையும் காட்டும் பெயரெச்சமாக உள்ளது. ஆதலால், இது காலம் மறைந்த பெயரெச்ச மாகும். இவ்வாறு வருவது வினைத் தொகை ஆகும். தேய்பிறை, விளை வயல், சுடுமணல், வளர் மரம்—இவை எவ்வாறு வினைத்தொகையாகுமென்று விளக்குக.

III. கட்டுரைப் பயிற்சி

1. மக்காச் சோளம் இந்தியாவிற்கு வந்த வரலாற்றை விவரிக்க.
2. சோளம் தன் வரலாற்றைக் கூறுவதுபோல் எழுதுக.

# 15. நூல் நிலையம்

இன்பத்தை யாக்கவும் துன்பத்தைப் போக்கவும் விரும்புவது மக்களுக்கு இயற்கையாகும். அறிவு இன்பத்தையும், அறியாமை துன்பத்தையும் தர வல்லன. அறிவுடையோர் அவ்வறிவினால் மிக மேம்பாடடைந்து இன்பமுடன் வாழ்வதையும் உலகத்தில் கண்கூடாகக் காண்கின்றோமல்லவா? ஆகையால் இன்பத்தையடைய விரும்புவோர், அறிவை அவாவிப் பெற்றாலன்றி எண்ணியதை எண்ணியாங்கு எய்த மாட்டாரென்பது எளிதில் விளங்கும்.

மக்கள் யாவருக்கும் இயற்கையறிவு உண்டு; அவ்வியற்கையறிவைச் செயற்கையாகிய கல்வியறிவால் வளர்க்காவிடில், அது அத்துணையாக ஒளிர்வதில்லை. மிக விலையேறப்பட்ட முழு மாணிக்கமாயினும் சாணையில் தேய்த்துப் பட்டை போட்டு மெருகு கீட்டாவிடின், அஃது எங்ஙனம் பிரகாசிக்கும்? 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்னும் மூதாட்டியார் மொழியில் கல்வி கண் போன்றது என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதாவது கல்வியில்லாத மக்கள் கண்ணில்லாத மக்கள் போலாவார் என்பது இதன் கருத்தாகும். எனவே, மக்களின் இன்ப வாழ்விற்குக் கல்வியே முதற்காரணமாகும். இதுபற்றியே, 'கேடில் விழுச் செல்வம் கல்வி' என்று திருவள்ளுவரும் செப்பியுள்ளார். இதனை நன்குணர்ந்த மேனாட்டார் தத்தம் நாடுகளிலுள்ள மக்கள் யாவரும் கல்வியுடையோரா யிருக்கவேண்டுமென முயன்று வெற்றி பெற்று வருகின்றார்கள்.

ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான், இரஷியா முதலிய நாடுகளில் ஏறக்குறைய எழுதப்படிக்கத் தெரியாதவர்களே இல்லையென அறிஞர்கள் அறிவிக்கின்றனர். பிரான்ஸில் நூற்றுக்கு நான்கு பேரே எழுத்தறிவு இல்லாதவர்களாம். ஆனால், நமது நாட்டில்

எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் நூற்றுக்கு எண்பத்தெட்டு பேர்கள் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது. மீதிப் பன்னிரண்டு பேரே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். உலகில் நம் நாடே கல்வியில் மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கிறது. இதற்கென்ன காரணம்? வறுமையாளர் தொகை மிகுதியாய் இருப்பதேயாகும். இன்னோர் வயிற்றுப் பிழைப்பின்பொருட்டுக் கல்வி முகத்தைக் காணவும் இயலாமல் இன்னற்படுகுழியில் துன்புற்று வாழ்கிறார்கள். பெருந்தொகையினராகிய இவர்கள் கல்வியறிவு பெற்று முன்னேறுவதன்றோ நம் நாடு முன்னேறுவதாகும்?

ஆரம்பக்கல்வி பயின்று அத்துடன் நிறுத்திவிட்ட பல்வேறு வகைப்பட்ட தொழிலாளர்கள் பகலெல்லாம் உழைத்துவந்த களைப்பினால் ஊக்கமின்றித் தளர்ச்சியுறுவது இயல்பேயாகும். அன்னோர் உள்ளத் தளர்ச்சியுடன் தாமே பயின்று அறிவு பெறும்படி அவரவர்களுக்குத் தகுந்த நூல்களை அளித்து உதவுவது மக்களிடையே கல்வியைப் பரப்புவதற்கு ஒரு சிறந்த வழியாகும். இதற்குப் பல்வேறு துறைகளைக் கொண்டனவும், பல்வேறு அறிஞர்கள் வரைந்தனவும், பல்வேறு நிலையிலுள்ள மக்களுக்குப் பயன்படுவனவுமான பல்லாயிரக் கணக்கான நூல்களைத் தொகுக்கவேண்டும். இவ்வாறு நூல்களைத் தொகுத்து வைத்துள்ள இடமே நூல் நிலையம் ஆகும்.

முற்காலத்தில் கல்வி கேள்வி வழியாகவே வளர்ந்துவந்தது. ஏனெனில் மக்கள் பேசப்பழகிய நெடுங்காலத்திற்குப் பின்னரே எழுத்து ஏற்பட்டது. எழுத்து ஏற்பட்டபின்னரே எழுதிப் படிக்கும் பழக்கம் தொடங்கியது. அக்காலத்தில் பனையோலையில் எழுதும் பழக்கம் ஏற்பட்டதும் பல அறிஞர்கள் தத்தம் கருத்துக்களைப் பனையேடுகளில் எழுதிச் சேர்த்தனர். இங்ஙனம் எழுதிச் சேர்த்தவற்றை மாணவர்களுக்குக் கற்பிப்பார்கள். நூல் கற்பிக்கும் ஆசிரியர்கள்

'கணக்காயர்' என்று அழைக்கப்பட்டனர். கல்விநிலையங்கள் ஆங்காங்கே நிறுவப்பெற்றன. பின்னர் நிலைத்து நிற்கும்படியாகக் கல்விநிலையங்கள் திருக்கோயில்களில் நிறுவப்பெற்றன. அக்கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் பெரும்பாலும் சமயச் சார்பான நூல்களையே படித்தறிந்து வந்தனர். 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசாண்ட முதல் இராசேந்திர சோழன் வெட்டுவித்த சாசனமொன்றில், தென்னாற்காடு ஜில்லாவில் எண்ணாயிரம் என்ற ஊரின் கோயில் மண்டபத்தில் 340 மாணவர்கள் வேதம் முதலியவற்றை ஓதியுணரும்படியான ஒரு வைதீகக் கல்வி நிலையம் ஏற்பட்டிருந்ததாக எழுதப்பட்டிருக்கிறது. இங்ஙனம் ஏற்பட்ட கல்வி நிலையங்களில் நூல்கள் சேர்த்து வைத்திருப்பது இயல்பேயாகும்.

ஆதியில் பனையோலையிலேயே எழுதிப் படிக்க வேண்டியிருந்ததால், நூல்கள் எளிதில் கிடைக்க மாட்டா. ஒவ்வொருவரும் தாம் கற்கும் நூலைக் கைப் பிரதி செய்தே படிப்பார்கள். ஆதலால், அக்காலத்தில் ஒரு நூல் கிடைப்பதென்றால் மிக அருமையாயிருந்தது. சில துறவிகள் தங்கள் மடங்களில் ஏட்டுச் சுவடிகளைத் தொகுத்து வைத்திருந்தார்கள்; பழைய ஏடுகளில் அழிந்துபோகும் நிலையிலிருக்கும் நூல்களையெல்லாம் அவ்வப்போது கைப்பிரதி செய்து காப்பாற்றி வந்தார்கள். இங்ஙனம் திருக்கோயில், மடம் முதலிய விடங்களில் அக்காலத்தில் நூல்களைச்சேர்த்து வைத்திருந்தார்களென்பது தெரிகிறது. இதற்குத் தஞ்சையரண்மனையில் இப்பொழுதுள்ள சரசுவதி மகால் என்னும் நூல் நிலையமே போதிய சான்றாகும். இஃது ஆயிரக்கணக்கான ஏட்டுச் சுவடிகள் முதலியவற்றைத் தன்னகத்தே கொண்டு அறிஞர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறது.

காகிதமும் கண்டுபிடிக்கப்பட்டு அச்சுத் தொழிலும் ஏற்பட்ட காலத்திலிருந்து நூல்கள் பல்லாயிரக்

கணக்காகப் பரவலாயின. பழங்காலக் கல்வி முறை மாறி ஆங்கிலேயர் அரசாட்சியில் நவீன முறையில் கல்வி கற்பிக்கத் தொடங்கப்பட்டது. ஆதலால் இந்தியாவில் ஆங்காங்குப் பள்ளிக்கூடங்கள் பல நிறுவப்பட்டன; பெரிய நகரங்களிலெல்லாம் உயர்தரக் கல்வி போதிக்கும் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டன. இக்கல்லூரிகளுக்கெல்லாம் தலைமையிடமாகத் தலை நகரங்களில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன. இங்ஙனம் ஏற்பட்ட பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் நூல்களைத் தொகுத்து வைக்கும் நூல் நிலையங்கள் இருக்க வேண்டியது இன்றியமையாததாயிற்று. இன்னும் சில இராச்சியங்களிலும், அருங்கலை அறிஞர் இல்லங்களிலும் நூல் நிலையங்கள் சிறந்தெழுந்தன.

நூல் நிலையங்களை மூன்றுவகையாகப் பிரிக்கலாம். அவை, 1. பண்டைக்கால நூல்கள் இறந்து விடாமல் காத்தற்பொருட்டு அவைகளைத் தேடிக்கொணர்ந்து சேர்த்து வைத்துப் பாதுகாக்கும் நிலையம், 2. அறிஞர்களும் மாணவர்களும் ஆராய்ச்சி செய்வதற்கென்று அமைக்கப்படும் நூல் நிலையம், 3. பலருக்கும் பயன்படும்படி எல்லா அறிவு நூல்களையும் கொண்டு பொதுவாய் நிறுவப்படும் நூல் நிலையம்— என்பனவாம். இவையேயன்றி இன்னொரு வகை நூல் நிலையமும் உண்டு. அஃதாவது வண்டிகளில் நூல்களை நிரப்பிக் கொண்டு ஊர் ஊராய்ச் சென்று ஆங்காங்கு வாழும் ஏழை மக்களுக்கு இலவசமாக நூல்களைக் கொடுத்து உதவுவதாகும். இஃது அசையும் நூல்நிலையம் என்று சொல்லப்படும்.

முற்கால நூல் நிலையங்களுக்கும் தற்கால நூல் நிலையங்களுக்கும் வேறுபாடுண்டு. முற்கால நூல் நிலையங்கள் பண்டைய நன்னூல்களைப் பாதுகாத்தற் பொருட்டு எழுந்தனவேயாகும். ஏனெனில், ஏட்டுச் சுவடி நூல்கள் கிடைப்பது அருமையாயிருந்தபடியால்

அவற்றைப் போற்றிக் காக்கவேண்டியது இன்றியமை யாததாயிற்று. ஒரு நூலைப் பிறருக்குக் கொடுப்ப தென்றால் பல நிபந்தனைகளின் பேரிலேயே கொடுப்பார் கள். தற்கால நூல் நிலையங்கள் பலருக்கும் பயன்படும் முறையில் உள்ளன. அதற்குக் காரணம் ஒரே நூலில் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் அச்சிடும் நலம் ஏற் பட்டுள்ளமையேயாம். அவைகளில் ஒரு நூல் காணு மற் போனாலோ அல்லது சிதைந்து கெட்டுப் போனாலோ அதுபற்றி மிகுதியாய்க் கவலைப்படுவோர் இல்லை. ஏனென்றால் அந்நூலைப் போல வேறு நூல் கள் எத்தனையோ உள்ளனவல்லவா?

இத்தகைய நூல் நிலையங்கள் மக்கள் அறிவு வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிகின்றன. மக்கள் அறிவிற் சிறந்து நாகரிகத்தில் உயர்ந்து பொருளிற் பொலிந்து இன்பவாழ்க்கையில் இனிது வாழ்வதையே அறிஞர்கள் முன்னேற்றமென்று மொழிவார்களாத லால், மக்கள் முன்னேற்றத்திற்கு முதற்படியா யிலங் கும் அறிவை வளர்ப்பதற்கு அருந்துணைபுரியும் நூல் நிலையத்தின் பயனை எடுத்துக் கூறவும் வேண்டுமோ?

உலகறிவெல்லாம் ஊட்டும் நூல்களைக் கொண் டுள்ள நூல் நிலையங்கள் நம் நாட்டில் நன்கு பரவுதல் வேண்டும், சிற்றூர்களிலெல்லாம் இல்லாவிட்டாலும் முக்கியமான பேரூர்களிலெல்லாம் நூல் நிலையங்கள் நின்று மக்களறிவை வளர்க்கவேண்டும். அவைகள், நடுத்தரக் கல்வி பயின்றவர்களெல்லாம் தங்கள் வேலை யொழிந்த நேரங்களில் வந்து உட்கார்ந்து படிக்கவோ, நூல்களை எடுத்துச் சென்று படிக்கவோ இயலும்படி இலவச நூல் நிலையங்களாய் இயங்குதல் வேண்டும். இவ்வகையில் அமெரிக்காவில் பல்லாயிரம் நூல் நிலை யங்கள் இருக்கின்றன. இவற்றால் அவ்வந்நாட்டு மக்கள் அளவிறந்த பயனடைந்து வருகிறார்கள்.

மக்களிடையே கல்வியைப் பரவச் செய்வதற்கு 'நூல் நிலைய இயக்கம்' என்னும் பெயரால் ஒரு முறையை மேனாட்டார் கையாண்டு வருகிறார்கள். அதுவே மேற்கூறப்பட்ட அசையும் நூல் நிலையமாகும். இம்முறையை நம் நாட்டாரும் சிற்சில இடங்களில் கைக்கொண்டு வருகின்றனர்.

இந் நூல் நிலையங்கள் குழந்தை முதல் கிழவர் வரையில் எல்லோரும் படித்தறிவதற்கேற்ற வகையில் பல வகையான நூல்களைக் கொண்டிருத்தல்வேண்டும். நூல்கள், மக்கள் மனத்தைக் கவரும் வகையில் அழகிய தாள்களில் அச்சிடப்படவேண்டும். நூல்களிலுள்ள பொருள்கள் இன்னின்னவை யென்று எளிதில் விளங்கும்படி வரைந்து, விளம்பரத்தாள்களை அச்சிட்டுப் பரப்பவேண்டும். உழவுத் தொழில், கைத்தொழில், வாணிகத் தொழில், சுகாதாரம், மருத்துவம் முதலியவைகளில் ஒவ்வொன்றையும் பற்றி நம் நாட்டாரும் பிறநாட்டாரும் அறிந்துள்ளவைகளை யெல்லாம் சிறு சிறு நூல்களாக மக்கள் தரத்திற்கேற்ப இயற்றுதல் வேண்டும். இன்னும் வரலாற்று நூல், பிராணி நூல், உடல் நூல், உள்ள நூல், அறிவு நூல், அரசியல் நூல் முதலியன வெல்லாம் படங்களுடன் பல வரிசையில் வெளிவர வேண்டும். இத்தகைய நூல்களை வண்டிகளிற் கொண்டு சென்று பல சிற்றூர்களில் வதியும் எழுத்தறிந்த ஏழை மக்களுக்கு உதவினால், அவர்கள் அறிவு பெற்றுப் பல துறைகளிலும் முன்னேறி நாடு முன்னேறுவதற்கு நலஞ்செய்வார்கள்.

இந்திய மாணவர்கள் தமது பாடங்களை மட்டும் படித்துவிட்டால் போதுமென்று எண்ணாமல், நூல் நிலையங்களின் அருமையையுணர்ந்து, தத்தம் கல்விக் கழகங்களிலுள்ள நூல் நிலையங்களிலிருந்து தமது அறிவுநிலைக் கேற்ற நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படித்துவரும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுவார்களானால் பிற்காலத்தில் அரியனவும் பெரியனவுமான

நூல்களைக் கற்று வல்லவர்களாகிப் பெரும் புகழும் பெற்று நாட்டுக்கு நலம் விளைப்போராய்த் திகழ்வர் என்பது திண்ணம்.

## குறிப்பு

இது, நூல் நிலையம் பற்றிய பாடமாகும். இதில், கல்வியின் சிறப்பு, பழங்கால நூல் நிலையங்களின் விவரம், முற்காலத்தில் நூல்கள் எழுதிய முறை, பிற்கால நூல் நிலையங்கள், பயன் முதலியவை விளக்கப்பட்டுள்ளன.

## கேள்விகள்

1. அறிவின் சிறப்பு யாது? அது எவ்வாறு மேன்மையடையும்?
2. உலக நாடுகளில் கல்வியின் நிலை எவ்வாறு உள்ளது? நம் நாட்டில் கல்வியின் நிலை எவ்வாறு உள்ளது?
3. நூல் நிலையம் என்பது யாது? அது எவ்வாறு இருக்க வேண்டும்?
4. முற்காலத்தில் எவ்வாறு கல்வி கற்று வந்தனர்? அதற்கு ஆதாரமான செய்தி யாது?
5. பழங்காலத்தில் நூல்கள் கிடைப்பது ஏன் அருமையாகும்?
6. சரசுவதி மகால் எங்கேயுள்ளது? அதைப்பற்றிய செய்தி யாது?
7. நூல் நிலையங்கள் எவ்வாறு பெருகின? அவற்றின் வகைகள் யாவை?
8. முற்கால நூல் நிலையங்களுக்கும் தற்கால நூல் நிலையங்களுக்குமுள்ள வேறுபாடு என்ன?
9. நூல் நிலையங்களின் பயன் யாது? அவற்றை நன்கு பயன்படுத்த என்ன செய்ய வேண்டும்?

## பயிற்சி

I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக :—மேம்பாடு, அவாவி, எண்ணியாங்கு, ஏடு, கணக்காயர், நிறுவப் பெற்றன, சாசனம், தொகுத்து, சிதைந்து, மருத்துவம், வதியும்.

2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக :—கண்கூடாக, கைப்பிரதி, ஏட்டுச் சுவடி, பல்கலைக் கழகம், கல்லூரி, நூல் நிலைய இயக்கம்.

II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக :— இயற்கையறிவு, ஒளிர்வதில்லை, பனையோலை, தன்னகத்து, நன்னூல், அருந்துணை, உலகறிவு.

2. கற்பார் - இது, தன் வினை எனப்படும். இதை, 'கற்பிப்பார்' என்று மாற்றினால் பிற வினை யாகும். தன் வினைச் சொல்லோடு பி, வி என்பவற்றுள் ஒன்றைச் சேர்த்தால் அது பிறவினையாகும். இவ்வாறே செய்தார், உண்கிறார், படிப்பான், எழுதினான் என்னும் தன் வினைச் சொற்களைப் பிறவினைச் சொற்களாக மாற்றுக.

III. வாக்கியப் பயிற்சி

1. நம் நாட்டில் நூல் நிலையங்கள் பரவுதல் வேண்டும்— இதை, 'நம் நாட்டில் நூல் நிலையங்களைப் பரப்புதல் வேண்டும்' என்று மாற்றி எழுதலாம்.

2. பின்வரும் வாக்கியங்களை மாற்றி எழுதுக :-

(1) பிள்ளைகள் நன்முறையில் வளர்தல் வேண்டும்.

(2) நல்வழியில் செல்வம் சேரவேண்டும்.

(3) நாட்டில் நெற்பயிர் செழித்து விளையவேண்டும்.

IV. கட்டுரைப் பயிற்சி

1. 'நூல் நிலையத்தின் பயன்' என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுது.

2. ஒரு புத்தகம் தன் வரலாற்றைக் கூறுவதுபோல் எழுதுக.



# 16. மோட்டார்த் தொழிற்சாலை

இக்காலத்தில் மக்கள் உலகமுழுவதும் சுற்றுப் பயணம் செய்வதற்குரிய சாதனங்களைப் பெற்றுள்ளனர். வான்வழியே செல்லும் வானவூர்திகளும், கடல்வழியே செல்லும் கப்பல்களும், தரைவழியே செல்லும் இரயில், மோட்டார் வண்டிகளும் பெருகி வளர்ந்து காலத்தையும் தூரத்தையும் சிறியனவாய் மதிக்கச் செய்துவிட்டன. தரையில் விருப்பம்போல் விரைந்து பயணம் செய்வதற்கு மோட்டார் வண்டி இன்றியமையாததாய் உலகில் இடம்பெற்று விளங்குகிறது. இது உலக நாடுகள் ஒவ்வொன்றிலும் தெருக்கள்தோறும் ஊர்ந்து உலாவி வருகிறதெனலாம். வானவூர்தி, கப்பல், இரயில் முதலிய ஏனைய சாதனங்களைவிட, மோட்டார் வண்டியே எண்ணிக்கையில் எத்தனையோ மடங்கு பெருகியுள்ளனவென்பதே, இதன் சிறப்புக்குப் போதிய சான்றாகும்.

மோட்டார் வண்டிகளை உற்பத்தி செய்வதிலும், அவற்றை மிகுதியாகப் பயன்படுத்துவதிலும் அமெ

ரிக்க ஐக்கிய நாடுகளே தலைசிறந்து விளங்குகின்றன. மோட்டார் உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகள் அமெரிக்காவில் பலவுள்ளன. அந்நாட்டின் பொருளாதாரம் பெருகி வளர்ந்தோங்குவதற்கு இத்தொழிற் சாலைகளும் ஒரு காரணமாயிருந்து துணைசெய்கின்றன. சிலர் இத்தொழிலால் மிக முன்னேற்றம் பெற்றுக் கோடீசுவரர்களாய் விளங்கியிருக்கிறார்கள். இத்தகைய சிறப்புள்ளவர்களில் ஹென்றி போர்டு என்பவர் முதன்மையானவராவார்,

ஹென்றி போர்டு எளிய குடும்பத்திற் பிறந்தவராயினும் தமது ஊக்கத்தாலும் விடாமுயற்சியாலும் இயந்திரத் தொழிலில் கருத்தூன்றி முன்னேற்றம் பெற்றவராவார். இளம்பருவத்திலேயே இயந்திரம் செய்யவேண்டுமென்று பேரவாக்கொண்டு, பலவாண்டுகள் முயன்று இறுதியில் தாம் எண்ணியவாறே வெற்றிபெற்று யாவராலும் போற்றப்படும் உயர் நிலையை எய்தினர். இவர் அமெரிக்காவில் நிறுவியுள்ள மோட்டார்த் தொழிற்சாலை இன்றளவும் நடைபெற்று வருகிறது.

ஹென்றி போர்டு நிறுவியுள்ள தொழிற்சாலை மிகப் பெரியது. இதில் நடைபெறும் தொழில்முறை சிறந்த அமைப்புடையதாகும். திங்கட்கிழமையன்று சுரங்கங்களிலிருந்து தோண்டியெடுக்கப்படும் இரும்பு, தொழிற்சாலைக்குக் கொண்டுபோகப்பட்டு, வியாழக்கிழமை காலையில் மோட்டாராக விற்பனைக்கு வெளி வருகிறதென்றால், அத் தொழிற்சாலையின் மேன்மையை எங்ஙனம் விவரித்துரைப்பது!

போர்டின் மோட்டார்த் தொழிற்சாலை அறுபது ஏக்கர் நிலப்பரப்பில் 1909-ஆம் ஆண்டு நிறுவப்பெற்றது. இதில் அலுவல் பார்க்கும் தொழிலாளர்கள், வண்டியின் பல உறுப்புக்களைத் தனித்தனியே செய்கின்றனர்; பலர் அவ்வுறுப்புக்களைக் கோக்கும்

முறைப்படி ஒன்றன்பின் ஒன்ருய் வைத்துக்கொண்டு வண்டியைப் பூட்டிவிடுகிருர்கள். தொழிலாளர்கள் தத்தம் இடங்களிலிருந்தே இவ்வேலைகளைச் செய்கிருர்கள்; இடம்விட்டுப் பெயர்வதில்லை. அவரவர்கள் இருக்குமிடத்திற்குப் பொருள்கள் மின்சார இயக்கத்தால் தாமாகவே வந்து சேருகின்றன, தொழிலாளர்கள் அவற்றை ஒழுங்காகச் செய்து பூட்டக்கூடிய இடத்திற்கு அனுப்பிவிடுகின்றனர். இங்ஙனம் ஒரு வண்டியைச் செய்துமுடிக்கப் பல பிரிவுகள் இருக்கின்றன. ஆகையால், மிகவும் குறைந்த காலவளவில் வேலைகள் விரைவில் நடைபெறுகின்றன. இத்தொழிற் சாலையில் தனித்தனியாகச் செய்யும் ஐந்நூறு தொழிற் பிரிவுகள் இருக்கின்றன. இவை யாவும் மோட்டார் உறுப்புக்களைச் செய்வனவும் பூட்டுவனவுமேயாகும். இத்தொழிற்சாலை முன்னேற்றமடையவே, வண்டிக்குரிய எல்லா உறுப்புக்களும் இயந்திரங்களைக் கொண்டே செய்யப்படுகின்றன; தொழிலாளர்கள் கண்காணித்துவருகின்றனர்.

இத்தொழிற் சாலையிலிருந்து ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான மோட்டார் வண்டிகள் வெளியேறி உலகமெங்கும் பரவி வருகின்றன. இன்று போர்டு மோட்டார் இல்லாத நகரமே உலகிலில்லையென்று சொல்லும்படி பெருகி நிறைந்துள்ளன. தொழிற்சாலை தொடங்கிய ஆண்டிலேயே 18,644 மோட்டார் வண்டிகள் செய்யப்பட்டனவென்ருல், முன்னேற்றம் பெற்றுள்ள இந்நாளில் எவ்வளவு வண்டிகள் செய்யப்படும் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

போர்டு மோட்டார்த் தொழிற்சாலையைப் போலவே அமெரிக்காவில் இன்னும் பல மோட்டார்த் தொழிற்சாலைகள் பெரிய அளவில் நிறுவப்பட்டு நடைபெறுகின்றன. இவற்ருல் மோட்டார் வண்டிகள் பெருகி உலக நாடுகளுக்கெல்லாம் மிகுதியாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆகையால் அமெரிக்கா

வுக்கு இத்தொழிலால் ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய்கள் கிடைக்கின்றன. இங்ஙனம் தொழில் வளத்திற் சிறந்த அமெரிக்கா, குபேர நாடெனக்கூறப் படுவதில் வியப்பில்லையன்றோ?

இந்தியாவில் இத்தகைய தொழிற்சாலைகள் இல்லையென்றே கூறலாம். ஒன்றிரண்டு இருப்பனவும் சிறிய அளவினவேயாகும். திரு. ஜி. டி. பிர்லா என்பவரால் ஏற்படுத்தப்பட்டுள்ள 'இந்துஸ்தான் மோட்டார்த் தொழிற்சாலை' என்பது, குறிப்பிடத் தகுந்த முறையில் சிறப்பாக நடைபெறுகிறதெனலாம். இந்தியாவில் மோட்டார்த் தொழிற் சாலை வளர்ச்சி பெற்று நம் தேவைக்குரிய மோட்டார் வண்டிகளை நாமே தயாரித்துக் கொள்ளும் நிலை ஏற்பட்டால், இந்தியாவும் செல்வத்திற் சிறந்த நாடாய்த் திகழும் என்பதில் தடையில்லை.

### குறிப்பு

இது, தொழிற்சாலை பற்றிய பாடமாகும். இதில், அமெரிக்காவிலுள்ள ஹென்றி போர்டு என்பவரின் மோட்டார்த் தொழிற்சாலையில் நடைபெறும் தொழில் முறையும், இந்தியத் தொழிற்சாலையின் செய்தியும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

### கேள்விகள்

1. சுற்றுப்பயணத்திற்குரிய சாதனங்கள் யாவை? அவற்றுள் மிகுதியாய்ப் பரவியுள்ளது எது?
2. மோட்டார்த் தொழிற்சாலை எந்நாட்டில் மிகுதியாய் உள்ளன? அவற்றுள் முதன்மையான தொழிற்சாலையை நிறுவியவர் யார்?
3. ஹென்றி போர்டு தொழிற்சாலையின் சிறப்பு என்ன? அத் தொழிற்சாலையில் எவ்வாறு செயல்கள் நடைபெறுகின்றன?
4. ஹென்றி போர்டின் மோட்டார் வண்டிகள் எவ்வாறு பெருகியுள்ளன? அதனால் அமெரிக்கா அடையும் நன்மை யாது?
5. இந்தியாவிலுள்ள மோட்டார்த் தொழிற்சாலை யாது?

# 17. செஞ்சிக் கோட்டை

தமிழ் நாட்டில் வரலாற்றுச் சின்னங்களாக வேலூர்க் கோட்டை, தர்மபுரிக் கோட்டை திண்டுக் கல் கோட்டை முதலியனவாய்ப் பல கோட்டைகள் உள்ளன. அவற்றுள், செஞ்சிக் கோட்டை என்பதும் ஒன்றாகும். இது. தென்னாற்காடு மாவட்டத்தில் செஞ்சியாறு என வழங்கும் வராக நதியின் மேற்குக் கரையில் இரண்டு மைல் தொலைவில் அமைந்துள்ளது. இதன்கண் வீற்றிருந்து ஆட்சி செய்த மன்னன், தேசிங்கு என்று தமிழகமெங்கும் புகழ்பெற்றுள்ள வீர இளைஞனவான்.

இந்து முஸ்லிம் ஒற்றுமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கிய தேசிங்கு மன்னனும், இவன் நண் பன் முகமதுகான் என்னும் படைத் தலைவனும் வீரப் போர் விளைத்த இடமே செஞ்சிக் கோட்டையாகும். ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்குமுன் குடிபடை கள் நிரம்பித் திகழ்ந்திருந்த இக்கோட்டை, இன்று பொலிவற்றுக் காணப்படுகிறது. ஆயினும், அக்காலத் தில் சிறப்புற்றிருந்ததன் சின்னங்கள் இன்றும் காண்போரை வியப்பூட்டி வருகின்றன.

செஞ்சிக் கோட்டை, முக்கோணமாக அமைந் துள்ள மூன்று குன்றுகளை உறுதியான கருங்கற் சுவர் களால் இணைத்துக் கட்டப்பட்டுள்ளது. இச்சுவர்கள் ஏறக்குறைய இருபது அடி உயரமுள்ளவை. இச்சுவர் களின் புறத்தில் எண்பதடி அகலமுள்ள அகழி யிருக் கிறது. இது கீழ்க் கோட்டை எனப்படும். இது ஏறக் குறைய மூன்று மைல் சுற்றுவுள்ளது. இதன் வடக் கில் ஆற்காட்டு வாயில் என்றும், கிழக்கில் புதுச்சேரி வாயில் என்றும் இரண்டு வாயில்கள் உள்ளன.

இக் கோட்டையிலுள்ள மூன்று குன்றுகளில் வடக்கேயுள்ளது கிருஷ்ணகிரி என்றும், தெற்கேயுள்ளது



செஞ்சிக் கோட்டை

MADRAS

சந்திரராயன் துர்க்கம் என்றும், மேற்கேயுள்ளது இராசகிரி என்றும் பெயர் பெற்று விளங்குகின்றன. கிருஷ்ண கிரியின் உச்சியை அடையப் படிகள் அமைக்கப்பெற்றுள்ளன. மூன்றிலும் இராசகிரியே மிகப் பெரியதாகும். இது, எண்ணூறு அடிகளுக்குமேல் உயரமானது.

இக்கோட்டையினுள்ளே, மற்றொரு கோட்டை இருக்கிறது. அது, இராசகிரியின் அடித்தளத்தில் அரைவட்ட வடிவமாய் உள்ளது. அதன் சுற்றளவு முக்கால் மைலாகும். அக்கோட்டையும் உறுதியான கருங்கற் சுவர்களால் அமைக்கப்பெற்றுள்ளது; ஆழமான அகழியால் அரண் செய்யப்பெற்றுள்ளது. அது உட்கோட்டை என வழங்கப்பெறுகிறது. உட்கோட்டையின் வாயிலாகவே இராசகிரிக் கோட்டையின் வாயிலை அடைய வேண்டும்.

இராசகிரிக் கோட்டை சிறந்த அமைப்புடையது. இதன் வாயிலிலிருந்து மேலே செல்வதற்குப் படிகள் உள்ளன. இப்படிகளின் வழியாக நானூறு அடி உயரம் சென்றால், தென் பகுதியிலுள்ள சமதளத்தையடையலாம். இங்கிருந்து மேலே ஏறுவது எளிதன்று. ஏனெனில் குன்று செங்குத்தாயிருப்பதேயாகும். ஆகையால், தென் மேற்குப் பகுதியிலுள்ள குறுகிய சரிவின் வழியாக மேலே ஏறவேண்டும். அங்கு மலைப்பிளவு இருக்கிறது. இதைக்கடக்க மரப்பாலம் இருப்பதால், அதன் வழியாகச் சென்று உச்சியிலுள்ள கோட்டையின் வாயிலை அடையலாம். இவ்வாயிலைக் கடந்தால் சமதளமாகவுள்ள இராசகிரியின் சிகரத்தைக் காணலாம்.

கிருஷ்ணகிரி கோட்டையில் தானியக்களஞ்சியங்கள், மண்டபம், அரங்கநாதர் கோயில், கொலுமண்டபம் ஆகியவை உள்ளன. கோயிலில் இப்பொழுது உருவச்சிலையில்லை. இவையெல்லாம் சிதைந்த நிலை

யில் உள்ளனவாயினும், கொலுமண்டபம் பார்த்து இன்புறத் தக்கதாய் உள்ளது. இது செங்கற்களால் கட்டப்பட்டுள்ளதாகும். சந்திரராயன் துர்க்கத்தில் மண்டபம் ஒன்றேயுள்ளது.

செஞ்சிக் கோட்டையினுள்ளே கமலக்கண்ணி கோயில், சிலம்ப மண்டபம், கலியாண மகால், குளம் முதலியவையெல்லாம் இருக்கின்றன. இவற்றை நேரிற் சென்று பார்ப்போர், நம் நாட்டின் பழஞ் சிறப்பை நன்குணர்ந்து பெருமிதங் கொள்வர் என்பதில் தடையில்லை.

'தேசிங்கு ராசன்' என்று இக்காலத்தில் தமிழகத்தார் பெருமையாகக் குறிப்பிடும் தேஜ் சிங் என்பவர், இளம்பருவத்திலேயே செஞ்சி மன்னராய் ஆட்சி செய்துவந்தார். அக்காலத்தில் ஆற்காட்டு நவாபான சாதுல்லாகான் என்பவர், தமக்குக் கப்பம் கட்டுமாறு தேஜ் சிங்கை வற்புறுத்தினர். தேஜ் சிங் கப்பம் கட்ட மறுத்ததால் போர்மூண்டது. அப்போரில் தேஜ் சிங் யாவரும் போற்றும்படியாக வீரப்போர் செய்தாராயினும், முடிவில் உயிர் துறக்க நேரிட்டது. இப்போர் வரலாறே 'தேசிங்குராசன் கதை' என்னும் நாட்டுப்பாடலாக வழங்குகிறது.

தேஜ் சிங்கினிடமிருந்து கைப்பற்றிய செஞ்சிக் கோட்டையை முஸ்லிம்கள் சிறிதுகாலம் தங்களுக்குரியதாய் வைத்திருந்தனர். பின்னர், பிரெஞ்சுக்காரர்கள் கி. பி. 1750-ல் முஸ்லிம்களிடமிருந்து கைப்பற்றினர். அதன்பிறகு இக்கோட்டை ஆங்கிலேயர் கைக்குவந்தது. அவர்களிடமிருந்து மைசூர் அரசராய் விளங்கிய ஹைதர் அலி என்பவர் இக்கோட்டையைக் கைப்பற்றினராயினும் மீண்டும் இது ஆங்கிலேயர்களுக்கே உரியதாகி நீண்டகாலம் அவர்களின் உடைமையாயிருந்தது. இப்பொழுது இந்தியப் பழஞ்சின்

னப் பாதுகாப்புப் பிரிவினரின் கண்காணிப்பில் இருந்து வருகிறது.

செஞ்சிக்கோட்டை, நம் நாட்டின் ஆட்சிப்பெருமையையும் மக்கள் நாகரிகத்தையும் உணர்த்தும் சிறந்த அறிகுறியாய் விளங்குவதால், இதனை நேரிற் கண்டு இதன் எல்லாச் சிறப்புக்களையும் பார்த்தறிய வேண்டியது இளைஞர்களின் கடமையாகும்.

### குறிப்பு

இது, செஞ்சிக் கோட்டையின் சிறப்பைத் தெரிவிக்கும் பாடமாகும். இதில், கோட்டையின் அமைப்பு விவரமும், வரலாறும் சுருக்கமாய்க் குறிப்பிடப் பட்டுள்ளன.

### கேள்விகள்

1. தமிழ் நாட்டில் வரலாற்றுச் சின்னங்களாகவுள்ள கோட்டைகள் யாவை?
2. செஞ்சிக் கோட்டை எங்கேயுள்ளது? அதில் ஆட்சி செய்த மன்னன் யார்?
3. செஞ்சிக் கோட்டை எவ்வாறு அமைந்துள்ளது?
4. செஞ்சிக் கோட்டையிலுள்ள மூன்று குன்றுகள் யாவை? அவற்றுள் மிக வுயரமானது எது?
5. இராசகிரிக் கோட்டையின் சிறந்த அமைப்பைத் தெரிவிக்க.
6. கிருஷ்ணகிரிக் கோட்டையில் உள்ளவை யாவை? அவற்றுள் சிறப்பானது எது?
7. செஞ்சிக் கோட்டையினுள்ளே காணப்படுவன யாவை?
8. தேசிங்கு ராசனின் அழிவுக்குக் காரணமென்ன? இவனது பெருமை எவ்வாறு தெரிகிறது?
9. செஞ்சிக் கோட்டை யார் யாருக்கு உரிமையாயிருந்தது? இப்பொழுது யார் பாதுகாப்பில் இருக்கிறது?
10. செஞ்சிக் கோட்டையை நாம் ஏன் காணவேண்டும்?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக :—சின்னம், பொலிவு, குன்று, அகழி, வாயில், அரண், சரிவு, சிகரம், கப்பம், உடைமை.

2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:-தேசிங்கு, கடந்தால், சிலம்பம், களஞ்சியம், சிதைந்த, அறிகுறி, கைப்பற்றினர்.

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக :—வீரப்போர், முக்கோணம், உட்கோட்டை, நானூறு, பழஞ்சிறப்பு.

2. கல்+சுவர் = கற்சுவர் : கல் என்பது முதலில் நிற்பதால் நிலைமொழி எனப்படும். சுவர் என்பது அதையடுத்து வருவதால் வருமொழி எனப்படும். நிலைமொழியீற்றில் 'ல்' இருக்கிறது. வருமொழி முதலில் 'சு' என்னும் வல்லெழுத்து வந்துள்ளதால், ல், ற்-ஆக மாறி, கற்சுவர் என்றாயிற்று.

3. பின் வருவனவற்றைச் சேர்த்து, காரணம் கூறுக :—

| | |
|---|---|
| பல்+பொடி | வேல்+படை |
| பால்+குடம் | மேல்+புறம் |
| கால்+படி | வால்+கோதுமை |

### III. கட்டுரைப் பயிற்சி

1. 'இராச கிரியின் சிறப்பு' என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.

2. நீங்கள் பார்த்தறிந்த பழமையான ஒரு கட்டிடத்தைப் பற்றி விவரித்தெழுதுக.



# 18. கம்பளம்

நமது நாடு வெப்பமுள்ளதாயிருப்பதால், உடலின் வெப்பத்தைக் காக்கும் உடைகளின் இன்றியமையாமையை நாம் நன்கு உணருவதில்லை. இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய குளிர் நாடுகளில் வாழ்கிறவர்களுக்கோ, உடலின் வெப்பத்தைக்காக்கும் உடைகளே உணவுக்கு அடுத்தபடி இன்றியமையாதனவாயுள்ளன. குளிர் நாடுகளிலே உள்ளவர்களெல்லாம் பருத்தி முதலியவற்றாலாகிய உடைகளால் தமது உடலைப் போற்றி வாழும் நிலையிலுள்ளனர். இங்கிலாந்தைவிட மிகுந்த குளிர் நாடான ஸ்காத்லந்தில் உள்ளவர்களோ, கம்பளியின்றி ஒரு நாளும் வாழ முடியாதவர்களாய் இருக்கிறார்கள்.

நமது நாட்டில் உள்ளவர்களுக்குக் கம்பளியுடை அத்துணை இன்றியமையாததாய் இருக்கவில்லையெனினும் குளிர் மிகுதியாயுள்ள இடங்களில் வாழ்பவர்

களும், குளிர் காலத்தில் குளிரைத் தாங்கிக்கொள்ள முடியாதவர்களும் கம்பளியுடையை நாடுகின்றனர். ஆகையால், நம் நாட்டில் கம்பளிப் போர்வைகளும் ஆடைகளும் தேவைப்படுகின்றன.

கம்பளம் செய்வதற்கு ஆட்டு மயிர் மிக இன்றியமையாததாகும். கம்பளி செய்யும் ஆலைகளுக்குப் போதுமான வேலை இருக்கவேண்டுமானால், இலட்சக் கணக்கான ஆடுகளின் உடலிலிருந்து மயிர் சேகரிக்க வேண்டும். தமக்கு வேண்டிய அளவுக்கு ஆட்டு மந்தைகளை வளர்க்கச் சில நாடுகளில் போதுமான இடமில்லையாகையால், ஆட்டு மயிர் மிகத் தொலைவிலுள்ள நாடுகளிலிருந்து கப்பல்களிலும், இரயில் வண்டிகளிலும் கொண்டு வரப்படுகிறது.

ஆட்டு மயிர் அந்தந்த நாடுகளின் வெப்பதட்ப நிலைக்கும் மண்ணின் வளத்துக்கும் ஏற்றவாறு தன்மையில் வேறுபடும். எடுத்துக்காட்டாக; ஆஸ்திரேலியா நாட்டில் கம்பளத்துக்காக வளர்க்கப்படும் ஆடுகள் மிக நேர்த்தியான மயிரைக் கொடுக்கின்றன. ஆனால், இங்கிலாந்தில் வளர்க்கப்படும் அதேவகை ஆடுகளின் மயிர் அத்துணை நேர்த்தியானதன்று. சாக்செனி, சிலீஷியா என்னும் இடங்களில் காணப்படும் ஆடுகளின் மயிர், இவ்வுலகில் மற்றெல்லா இடங்களிலிருந்து கிடைக்கும் மயிரைவிட மிகுந்த நீளமும் மென்மையும் உடையது. அடுத்ததாக ஆஸ்திரேலியா நாட்டு ஆடுகளின் மயிரும், பின்னர், தென்னாப்பிரிக்காவிலுள்ள நன்னம்பிக்கைமுனை நாட்டு ஆடுகளின் மயிரும் சிறந்தவைகளாகும்.

ஆட்டினது உடலின் எல்லாப் பகுதியிலும் வளர்கிற மயிர்கள் யாவும் சிறந்தவெனச் சொல்ல முடி

யாது. உடம்பின் பக்கங்களிலும் தோள் பகுதிகளிலும் வளர்கிற மயிரே சிறந்ததாகும். வயிற்றுப்பகுதியில் வளரும் மயிர்கள் பெரும்பாலும் பயன்படுவதில்லையென்றே சொல்லலாம்.

கம்பளி மயிருக்காக ஆடுகளை வளர்ப்பவர்கள், குளிர்காலத்தில் அவற்றின் மயிரைக் கத்தரிக்க மாட்டார்கள். அங்ஙனம் செய்தால் ஆடுகள் குளிர் தாங்காமல் இறந்துபோகும். ஆகையால், கோடைக் காலத்திலேயே கத்தரிப்பார்கள். அப்பொழுது தங்கள் மந்தைகளை நீரோடைகளுக்காவது குளங்களுக்காவது ஓட்டிச் சென்று அவற்றைத் தேய்த்துக் குளிப்பாட்டுவார்கள். இரண்டொரு நாட்களுக்குப் பிறகு அவைகளை மயிர் கத்தரிப்பதற்கென்றுள்ள ஓரிடத்திற்கு ஓட்டிச் சென்று மயிரைக் கத்தரித்துக் கொள்வார்கள். இவ்வாறு கத்தரிப்பது ஒரு அருங்கலையெனலாம். ஆட்டின் உடம்பிலுள்ள மயிரைத் துண்டு துண்டாக விழாமல் ஒரு போர்வைபோல் வெட்டியெடுப்பது விந்தையாயிருக்கும். மயிர் வெட்டுபவர்கள் இதற்கென மின்சாரத்தால் இயங்கும் கருவியை உபயோகிக்கிறார்கள். ஒருவர் ஒருநாளில் நூற்றைம்பது ஆடுகளுக்குமேல் வெட்டுவார். இங்ஙனம் வெட்டியெடுத்த ஆட்டின் மயிர், ஏறக்குறைய ஒன்பது பவுண்டு நிறையுள்ளதாயிருக்குமென்று தெரிவிக்கின்றனர். வெட்டிய மயிரை அதனதன் நிறம், முதலிய தன்மைகளுக்கேற்பத் தரம் பிரிப்பார்கள், அப்பொழுது அதிலுள்ள மாசுகளைப் போக்கித் தூய்மை செய்வார்கள்.

பின்னர், இம்மயிரைச் சலவைசெய்யவேண்டும். இல்லையெனில், அதிலுள்ள மாசுகள் முழுவதும் நீங்க

மாட்டா. சிலவகை உப்புக்கள் கரைத்த நீரில் அலைத்து இரசாயன முறையில் சலவை செய்கின்றனர். மாசு மிகுதியும் பொருந்தியிருக்குமானல் பெரிய பாத்திரங்களில் கொட்டி வேகவைத்தபிறகுதான் அதைச் சலவைத் தொட்டியிலிட்டுத் தூய்மை செய்ய வியலும். சலவைத் தொட்டியிலிருந்து வெளிப்படும் கம்பளி மயிர் வெப்பக்காற்று நிறைந்த அறைகளினூடே செலுத்தப்படும். அப்பொழுது அதன் ஈரம் நீங்கிவிடும்.

ஆட்டினின்று கிடைக்கும் கம்பளிமயிர் இயற்கையில் பழுப்பு நிறமாகவோ, சாம்பல் நிறமாகவோ, தவிட்டு நிறமாகவோ இருக்கும். ஆனல், விருப்பமான சாயத்தை ஏற்றவேண்டுமானல், அது தூய வெண்ணிறமாய் இருத்தல்வேண்டும். ஆகவே, மிக வெண்மையாய் இருக்குமாறு நன்ருய் வெளுப்பார்கள். இவ்வேலைகளெல்லாம் இயந்திரங்களாலேயே நடைபெறுகின்றன.

சாயமேற்றப்பட்ட கம்பளி மயிரை இயந்திரம் இழைகளாக நூற்கிறது. அவ்விழைகளைக் கோத்து இயந்திரத் தறிகளில் விதவிதமாக ஆடை நெய்யப்படுகிறது. பின்னர், அதனை வேறு இயந்திரங்கள் ஒழுங்காக அழுத்தி மடித்து மூட்டைகளாகக் கட்டுகின்றன. இவ்வாறு, ஆட்டின் உடலில் அழுக்குப்படிந்து காணப்பட்ட மயிர் பலவகை இயந்திரங்களிற் புகுந்து நேர்த்தியான ஆடைகளாக வெளிவந்து நமது கண்களையும், மனத்தையும் கவர்வதுடன் உடலையும் குளிரினின்று பாதுகாக்கிறது.

கம்பளித் தொழிலில் முதலிடம் பெற்று விளங்கும் நாடு ஆஸ்திரேலியாவாகும். உலகில் ஓராண்டில்

உற்பத்தியாகும் கம்பளியாடை 230 கோடி பவுண்டு என்று கணக்கிட்டுள்ளனர். இதில் ஆஸ்திரேலியா வில் மட்டும் 100 கோடி பவுண்டு உற்பத்தியாகிறது. இதனால் ஆஸ்திரேலியா ஆண்டு தோறும் 73 கோடி ரூபாய் வருமானம் அடைகிறது. இப்பெருக்கத்திற்குக் காரணம், ஆஸ்திரேலியாவில் ஆடு வளர்ப்புக் கேற்ற இயற்கை வசதி இருப்பதேயாகும். அந்நாட்டில் நியூ சவுத் வேல்ஸ், விக்டோரியா, குவீன்ஸ்லாந்து முதலிய மாகாணங்கள் ஆட்டு வளர்ப்புக்குப் புகழ் பெற்றவையாகும். மற்றும், அர்ஜெண்டிஞ, இரஷியா, தென்னுப்பிரிக்கா முதலிய நாடுகளில் கம்பளி உற்பத்தியாகிறது. நம் நாட்டில் உற்பத்தியாகும் காஷ்மீர் கம்பளம் புகழ் பெற்றது.

### குறிப்பு

இது, தொழில் பற்றிய பாடமாகும். இதில், கம்பளி யாடைக்கு வேண்டிய ஆடுகளின் உடலிலிருந்து மயிர் சேகரித்தல், தூய்மை செய்தல், நூலாக்கி ஆடை நெய்தல், ஆடை தயாரிக்கும் நாடுகள் முதலியவை விளக்கப்பட்டுள்ளன.

### கேள்விகள்

1. இந்திய மக்கள் கம்பளியை ஏன் அதிகம் விரும்புவதில்லை? அதிகம் விரும்புவோர் யார்?
2. கம்பளிக்கு மூலப் பொருள் யாது? அது எவ்வாறு சேகரிக்கப் படுகிறது?
3. ஆட்டு மயிரின் தன்மை வேறுபடுவது ஏன்? எந்நாட்டு ஆடுகளின் மயிர் சிறந்தது?
4. ஆட்டின் மயிரை எக்காலத்தில் கத்தரிக்கிருர்கள்? ஏன்? கத்தரிப்பதற்கு முன் என்ன செய்கிருர்கள்?
5. ஆட்டு மயிரை எவ்வாறு கத்தரிக்கிருர்கள்? அதைச் சலவை செய்வது ஏன்?

6. கம்பளி எவ்வாறு செய்யப் படுகிறது?
7. கம்பளத் தொழிலில் சிறந்த நாடுகள் எவை? இத் தொழிலால் ஓராண்டில் உற்பத்தியாகும் ஆடை எவ்வளவு?
8. கம்பளி உற்பத்தியில் தலை சிறந்த நாடு எது? இந்தியாவில் சிறந்த கம்பளம் எங்குத் தயாரிக்கப் படுகிறது?
9. ஆட்டு வளர்ப்புக்குப் புகழ்பெற்ற நாடுகள் எவை?

## பயிற்சி

### I. மொழிப் பயிற்சி

1. பொருள் கூறுக:—வெப்பம், தட்பம், தூய்மை, தொலைவில், மென்மை, இளவேனில், விந்தை, இயங்கும், மாசு, ஊடே, இழை, தறி.
2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—ஆலை, நேர்த்தியான, தேய்த்து, கத்தரிப்பது, கலை, வெளுத்தல், மாகாணம், மந்தை.

### II. இலக்கணப் பயிற்சி

1. சொற்களைப் பிரித்து எழுதுக: — தென்னாப்பிரிக்கா, வெண்ணிறம், ஆட்டுமயிர், அதனதன்.
2. அருங்கலை - இது, அருமை+கலை எனப் பிரிக்கப்படும். இது, 'அருமையாகிய கலை' என விரியும். 'ஆகிய' என்னும் பண்பைக் காட்டும் உருபு மறைந்து வந்துள்ளதால், இது பண்புத்தொகை யாகும். பசும்புல், பைந்தமிழ், செங்கதிர், கருங்குதிரை, வெண்டாமரை-இவை எவ்வாறு பண்புத் தொகையாகுமென்று விளக்குக.

### III. கட்டுரைப் பயிற்சி

1. 'கம்பளம் தயாரித்தல்' என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.
2. ஒரு கம்பளியாடை தன் வரலாற்றைக் கூறுவதுபோல் எழுதுக.

# I. கடவுள் வணக்கம்

## பரம்பொருள்

இயற்கையின் உயிராய் எங்கும்
எழுந்தருள் இறையே! போற்றி
செயற்கையின் சிந்தைக் கெட்டாச்
செல்வமே! போற்றி போற்றி
முயற்சியின் விளைவாய் ஓங்கும்
முதன்மையே! போற்றி போற்றி
பயிற்சியில் நிற்போர்க்கு என்றும்
பண்புசெய் பரனே! போற்றி. 1

—திரு. வி. கலியாணசுந்தரனார்

## சிவபெருமான்

மாற்றறி யாத செழும்பசும் பொன்னே!
மாணிக்க மேசுடர் வண்ணக்கொ ழுந்தே!
கூற்றறி யாத பெருந்தவ ருள்ளக்
கோயி லிருந்த குணப்பெருங் குன்றே!
வேற்றறி யாதசிற் றம்பலக் கனியே!
விச்சையில் வல்லவர் மெச்சும்வி ருந்தே!
சாற்றறி யாதவென் சாற்றுங் களித்தாய்
தனிநட ராசவென் சற்குரு மணியே. 2

—இராமலிங்க அடிகள்

## திருமால்

குலந்தரும் செல்வந் தந்திடும்; அடியார்
படுதுயர் ஆயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும்; நீள்விசும் பருளும்;
அருளொடு பெருநிலம் அளிக்கும்;
வலந்தரும் மற்றுந் தந்திடும்; பெற்ற
தாயினும் ஆயின செய்யும்;
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். 3

—திருமங்கை ஆழ்வார்

## இயேசுநாதர்

அருள்பழுத்த திருமுகமண் டலத்தி னானை
அளிநிறைந்த கமலலோ சனத்தெம் மானைத்
தெருள்பழுத்த சிவமொழிக் கனிவா யானைச்
சென்மவிடாய் தணித்தருள்சீர் பாதத் தானை
மருள்பழுத்த மனத்தேனைத் தெருட்டி னானை
வான்கதிக்கு வழிதிறந்த வலத்தி னானை
இருள்பழுத்த நரகடைத்த எம்பி ரானை
என்றுகொலோ கண்குளிரக் காணும் நாளே. 4

—H. A. கிருட்டினப் பிள்ளை

## கலைமகள்

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும்
பயனும் என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண்நல் காய்உளம்
கொண்டுதொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதந்
தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே! சகல
கலாவல்லியே! 5

—குமரகுருபரர்

## தமிழ்த்தாய்

தமிழினைப் போற்றுதும், தாய்த்தமிழ் போற்றுதும்
தாயைச் சேய்பேணல் தலையறம், நம்மெல்லவர்க்கும்
தாய்தமிழே யாமாத லால்;

தென்மொழி போற்றுதும், தீந்தமிழ் போற்றுதும்
தாயிற் சிறந்தம்மம் தானும்வாழ் நாளெல்லாம்
ஆய்சுவை யோடளித்த லால்;

தொன்மொழி போற்றுதும், சொற்றமிழ் போற்றுதும்
போனகமாய்த் தாரகமாய்ப் போக்கியமாய் நாமார
வானமுதின் மேலினித்த லால். 6

—நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்

## குறிப்புரை

1. பரம்பொருள்—மேலான பொருள்; கடவுள்
சிந்தைக்கு—மனத்திற்கு
முதன்மையே—முதற் பொருளே
பண்புசெய்—நன்மைகளைச் செய்கிற
2. மாற்று—பொன்னின் தரம்
வண்ணம்—நிறம், அழகு
கூற்று—இயமன்
தவர்—தவத்தை உடையவர்
வேறு அறியாத—ஒப்பில்லாத
சிற்றம்பலம்—சிதம்பரம்
விச்சை—வித்தை
விருந்து—புதுமை
சாற்று—துதி
3. படுதுயர்—உண்டாகிய துயரங்கள்
விசும்பு—முத்தி உலகம்
4. அளி—கருணை
கமலம்—தாமரை
லோசனம்—கண்
தெருள்—அறிவு
மருள்—அறியாமை
வான்கதி—தேவர் உலகம்
வலம்—பலம்
இருள் பழுத்த—துன்பம் நிறைந்த
5. கடைக்கண் நல்காய்—அருள் செய்வாய்
தீட்டும்—எழுதும்
ஓதிமம் தேடு—பெண் அன்னம்
கலாவல்லி—கலைமகள்
6. போற்றுதும்—போற்றுவோம்
சேய்—குழந்தை
பேணல்—காப்பாற்றுதல்
தலை—முதன்மையான
அம்மம்—தாய்ப்பால்
ஆய்சுவை—சிறந்த சுவை
தொன்மொழி—பழமையான மொழி
சொல்தமிழ்—புகழ்மிக்க தமிழ்
போனகம்—உணவு
தாரகம்—உயிருக்கு ஆதாரம்
போக்கியம்—அனுபவிக்கும் பொருள்

## கேள்விகள்

1. பரம்பொருளின் தன்மைகள் யாவை? முயற்சி விளைவாய் ஒக்கும் முதன்மையே என்றது ஏன்?
2. இராமலிங்க அடிகள் நடராசப் பெருமானின் இயல்புகளை எங்ஙனம் போற்றுகிறார்?
3. திருமங்கையாழ்வார் 'நாராயணா' என்னும் நாமம் என்னென்ன நன்மைகளைத் தரும் என்கிறார்?

இயேசுநாதரின் சிறப்புக்கள் யாவை? அவரது கண், வாய், பாதம் ஆகியவற்றை ஆசிரியர் எவ்வாறு வருணிக்கிறார்?

5. குமரகுருபரர் கலைமகளிடம் வேண்டுவது என்ன?
6. 'தமிழைப் போற்றுவோம்' என்பதற்கு ஆசிரியர் தெரிவிக்கும் காரணங்கள் யாவை? தமிழின் சிறப்பைத் தெரிவிக்க.

# II. அறவுரை

## 1. திருக்குறள்

### கடவுள் வாழ்த்து

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். 1

கோளில் பொறியின் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. 2

### இல்வாழ்க்கை

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. 3

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். 4

### வாழ்க்கைத் துணை நலம்

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. 5

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். 6

### அன்புடைமை

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றா ரெய்துஞ் சிறப்பு. 7

அன்பின் வழிய துயிர்நிலை ; அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த வுடம்பு. 8

### இனியவை கூறல்

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி ; அல்ல மற்றுப் பிற. 9

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. 10

### செய்ந்நன்றியறிதல்

மறவற்க மாசற்றார் கேண்மை; துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு. 11

எழுமை யெழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. 12

### நடுவு நிலைமை

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. 13

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின். 14

### அடக்கமுடைமை

எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. 15

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. 16

### ஒழுக்கமுடைமை

ஒழுக்க முடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 17

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். 18

### புறங் கூறாமை

அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது. 19

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு. 20

### கல்வி

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்;
கடையரே கல்லா தவர். 21

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. 22

### கல்லாமை

உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர். 23

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று. 24

### அறிவுடைமை

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு. 25

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய். 26

### குற்றங் கடிதல்

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். 27

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை, எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். 28

### பெரியாரைத் துணைக்கோடல்

அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல். 29

முதலிலார்க்கு ஊதிய மில்லை : மதலையாம்
சார்பிலார்க்கு இல்லை நிலை. 30

### தெரிந்து செயல்வகை

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல். 31

செய்தக்க வல்ல செயக்கெடும் ; செய்தக்க
செய்யாமை யானுங் கெடும். 32

### வலியறிதல்

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின். 33

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். 34

### காலமறிதல்

ஞாலங் கருதினுங் கைகூடும், காலம்
கருதி யிடத்தாற் செயின். 35

ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து. 36

### தெரிந்து தெளிதல்

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். 37

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். 38

### ஊக்கமுடைமை

உடையர் எனப்படுவது ஊக்கம் ; அஃதில்லார்
உடையது உடையரோ மற்று. 39

உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னுஞ் செருக்கு. 40

### மடியின்மை

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். 41

மடியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது. 42

### ஆள்வினையுடைமை

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண். 43

ஊழையும் உப்பக்கங் காண்பர், உலைவின்றித்
தாழாது உஞற்று பவர். 44

## இடுக்கணழியாமை

இடுக்கண் வருங்கால் நகுக ; அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல். 45

மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து. 46

## சொல்வன்மை

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். 47

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர். 48

## வினைத்திட்பம்

சொல்லுதல் யார்க்கும் எளிய ; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். 49

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல். 50

## நாடு

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. 51

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. 52

## பொருட் சிறப்பு

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். 53

அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியா லுண்டு. 54

## நட்பு

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும். 55

முகநக நட்பது நட்பன்று ; நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு. 56

## பெருமை

பெருமை யுடையவர் ஆற்றுவார், ஆற்றின்
அருமை யுடைய செயல். 57

அற்றம் மறைக்கும் பெருமை ; சிறுமைதான்
குற்றமே கூறி விடும். 58

## சான்றாண்மை

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண். 59

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. 60

—திருவள்ளுவர்

## குறிப்புரை

**திருக்குறள்**—சிறந்த குறள் வெண்பாக்களால் ஆகிய நூல். இது யாவருக்கும் பொதுவான நீதியை அறிவிக்கும் உயர்ந்த நூல்; அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகளை உடையது ; 1330 குறள் வெண்பாக்களை உடையது.

1. வாலறிவன்—மெய்யறிவை உடைய இறைவனது
நல் தாள்—நல்ல பாதங்களை
கோள் இல்—புலன்களைக் கொள்ளுதல் இல்லாத
பொறியின்—மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளைப்போல
எண்குணத்தான்—இறைவனது
3. அது—அஃதுடைமையானது
4. வாழ்வாங்கு—வாழும் இயல்பின்படி
வான் உறையும்—விண்ணுலகத்தில் இருக்கிற
தெய்வத்துள்—தேவருள்
5. வளத்தக்காள்—வரவுக்குத் தக்க வாழ்க்கையை உடையவள்
6. தன் காத்து—கற்பு தவறாமல் தன்னைக் காத்து
சொல் காத்து—புகழைக்காத்து

7. அமர்ந்த—இன்முகத்தோடு பொருந்திய
8. உயிர்க்கு—உயிர் நின்ற உடம்பாகும்
9. பிற—மற்ற ஆபரணங்கள்
10. காணபான—அனுபவித்து அறிகிறவன்
எவன்—என்ன பயனைக்குறித்து
11. கேண்மை—நட்பாம் தன்மையை
துப்பாயார்—உதவியானவரது
12. விழுமம்—துன்பத்தை
எழுமை—எழு பிறப்பினையுடைய
உள்ளுவர்—நினைப்பார்
13. சமன் செய்து—சமமாக நின்று
கோடாமை—சாயாமை
14. பிறவும்—பிறர் பொருளையும்
தமபோல்—தம்முடைய பொருளைப்போல
15. செல்வம் தகைத்து—வேறொரு செல்வமாய்த் தோன்றும் சிறப்பினையுடையது
16. உள் ஆறும்—மனத்தில் ஆறிப் போகும்
17. இழுக்கம்—ஒழுக்கத்திலிருந்து தவறுதல்
18. வித்து ஆகும்—காரணமாகும்
இடும்பை—துன்பம்
19. அல்ல—பாவங்களை
20. ஏதிலார்—அயலாரது
குற்றம்போல்—குற்றத்தைக் காணுவதைப்போல
21. உடையார்முன்—செல்வர் முன்னே
ஏக்கற்றும்—ஆசையால் தாழ்ந்து நின்றும்
கற்றார்—கற்றவர் (உயர்ந்தவராவார்)
22. சாந்துணையும்—இறக்குமளவும்
23. மாத்திரையர்—அளவினர்
பயவாக் களர்—விளையாத களர்நிலம்
24. நுண்மாண—நுட்பமுடைய தாய் மாட்சிமைப்பட்டு
நுழைபுலம்—பல நூல்களிலும் சென்ற அறிவு
மண்—சுண்ணச் சாந்திலும்
25. எண்பொருள் ஆக—எளிய பொருள் உள்ளனவாய் ஆகும்படி
26. எதிரதா—முன்னே அறிந்து
அதிர—நடுங்கும்படி
27. தினைத்துணை ஆம்—தினையின் அளவான சிறிய
28. வைத்தூறு—வைக்கோலின் குவியல்
29. திறனறிந்து—சொல்லும் வகையையறிந்து
30. ஊதியம்—இலாபம்
மதலையாம்—தம்மைத் தாங்குவதாகிய
31. அரும்பொருள்—பெறுவதற்கு அருமையான பொருள்
32. செய்தக்க அல்ல—செய்யத் தகாத காரியங்களை
33. பீலிபெய்—மயிலிறகை ஏற்றிய
சாகாடும்—வண்டியும்
அச்சு இறும்—அச்சு முறியும்
34. தோன்றுக—தோன்றி
35. கருதினும்—தானே ஆள நினைத்தாலும்
36. பொருதகர்—போர்செய்கின்ற ஆட்டுக்கிடா
பேரும்—பின்னே கால் வாங்கும்
37. நாடி—ஆராய்ந்து
மிகை—மிகுந்தவற்றை
38. கட்டளைக்கல்—உரைகல்
39. உடையர்—செல்வமுடையவர்
40. உள்ளம் இல்லாதவர்—ஊக்கம் இல்லாதவர்

வள்ளியம்—ஈகைக் குணமுடையோம்
செருக்கு—மதிப்பை
41. நெடுநீர்—தாமதமாய்ச் செய்யும் தன்மை
மறவி—மறதி
மடி—சோம்பல்
காமக்கலன்—விரும்பி ஏறும் மரக்கலம்
42. படியுடையார்—நிலமுழுதும் ஆண்ட அரசரது
பற்று—செல்வம்
43. விழையான்—விரும்பாதவனாய்
கேளிர்—சுற்றத்தாராகிய பாரத்தினது
44. உப்பக்கம்—முதுகுப்பக்கம்
உலைவு இன்றி—தளர்ச்சியில்லாமல்
உஞற்றுபவர்—முயல்பவர்
45. அடுத்து—நெருங்கி
ஊர்வது—எதிர்க்கவல்லது
46. மடுத்தவாய் எல்லாம்—தடைப்பட்ட இடங்கள் எல்லாவற்றிலும்
பகடு—வண்டியை இழுத்துச் செல்லும் எருது
47. நிரந்து—வரிசையாக வைத்து
48. காமுறுவர்—விரும்புவார்
மன்ற—நிச்சயமாக
49. எளிய—எளியனவாம்
50. துளங்காது—சலிக்காமல்
தூக்கம் கடிந்து—தாமதித்து இருத்தலை ஒழித்து
51. தள்ளா வினையுளும்—குறையாத வினையைச் செய்வோரும்
52. ஏமம்—காவல்
53. பொருள் அல்லவரை — ஒரு பொருளாக மதிக்கப்படாதவரையும்
54. அன்பு ஈன்—அன்பினால் பெறப்பட்ட
55. உணர்ச்சிதான் — இருவர்க்கும் ஒத்த அறிவுதான்
கிழமை—உரிமையை
56. முகம் நக—முகமட்டும்மலரும் வகை
நெஞ்சத்து—அன்பால்
57. ஆற்றின் — விடாது செய்யும் வழியால்
58. அற்றம்—அவமானத்தை
பெருமை-பெருமையுடையவர்
59. சால்பு—சால்பு என்னும் பாரத்தை
ஊன்றிய—தாங்கிய
60. செய்யாக்கால்—செய்யாரானால்
பயத்தது—பயனையுடையது

## கேள்விகள்

1. கல்வியறிவிற்குப் பயன் என்ன? இறைவனை வணங்காத தலை எது போன்றது?
2. எவற்றால் இல்வாழ்க்கை பண்பும் பயனும் உடையதாகும்? உலகில் நன்கு வாழ்பவன் அடையும் நிலை யாது?
3. எத்தகையவன் வாழ்க்கைத் துணையாவான்? எத்தகைய பெண் சிறந்தவள்?
4. உலகில் இன்புற்றார் எய்தும் சிறப்பு யாது? அன்பின் அவசியத்தை வள்ளுவர் எங்ஙனம் தெரிவிக்கிறார்?
5. ஒருவனுக்கு எவை அணியாகும்? வன்சொல் வழங்கலாகாது என்பதை வள்ளுவர் எங்ஙனம் தெரிவிக்கிறார்?

6. 'மறவற்க', 'துறவற்க' என்றது எவற்றை? எவர் நட்பை எழு பிறப்பிலும் உள்ளுவர்?
7. சான்றோர்க்கு அணி எது? சிறந்த வாணிகம் யாது?
8. செல்வர்க்குச் செல்வமாவது எது? உள்ளத்தில் ஆறுவதும் ஆறாததும் எவை?
9. குடிச்சிறப்பு எதனால் ஏற்படும்? நன்றிக்கு வித்து எது?
10. ஒருவனுக்கு இனிது எது? புறங்கூறாமைக்கு வழி யாது?
11. உடையார் முன் இல்லார்போல்—இது எதற்கு உவமானம்? இறக்குமளவும் கற்கவேண்டும் என்றது ஏன்?
12. கல்லாதவர் எதற்கு ஒப்பாவர்? கல்லாதவன் அழகு எது போன்றது?
13. எத்தகையது சிறந்த அறிவு? நடுங்கவரும் துன்பம் யாருக்கு இல்லை?
14. பழிக்கு நாணுபவரின் இயல்பு என்ன? வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை என்னாகும்?
15. எவரது கேண்மையைக் கொள்ளவேண்டும்? முதலிலார்க்கு ஊதியமில்லை—இதனால் அறிவதென்ன?
16. அரிய பொருளையும் எளிதில் அடைபவர் யார்? கேட்டிற்கு உரிய செயல்கள் யாவை?
17. 'பீலிபெய் சாகாடும்......'—இக்குறளால் அறியும் நீதி யாது? அளவறிந்து வாழாதான் வாழ்க்கை என்ன ஆகும்?
18. ஞாலம் கருதினும் கைகூடும்—எவ்வாறு? ஊக்கமுடையானது ஒடுக்கம் எது போன்றது?
19. ஒருவரை எவ்வாறு மதிக்கவேண்டும்? பெருமை சிறுமைகளைக் காட்டுவது எது?
20. எவர் செல்வமுடையவர் ஆவார்? கொடையாளி என்ற மதிப்பை எவர் அடையார்?
21. அழியும் இயல்புடையார் விரும்புவன யாவை? பெருஞ் செல்வத்தாலும் பயனடையாதவர் யாவர்?
22. சுற்றத்தாரின் துன்பம் போக்கும் தூண் போன்றவர் யார்? ஊழையும் வெல்பவர் யாவர்?
23. துன்பத்தை வெல்ல வழி யாது? பகடன்னாரின் இயல்பு என்ன?
24. பேசும் திறமையால் ஏற்படும் பெருமை யாது? பல சொல்லக் காமுறுவோர் யாவர்?
25. எளிய, அரிய—எவை? உறுதியாகச் செய்யத்தக்க செயல் யாது?
26. எத்தகைய நாடு சிறந்தது? நாட்டிற்கு அணியான ஐந்து எவை?
27. பொருளின் சிறப்பு யாது? பொருளென்னும் செவிலியால் உண்டாவது என்ன?
28. மூவகை நட்பு யாது? சிறந்த நட்பு எது?
29. பெருமையுடையாரின் இயல்புகளைத் தெரிவிக்க.
30. சால்பு ஊன்றிய தூண்கள் யாவை? சால்புக்குப் பயன் யாது?

# 2. நீதிநெறி விளக்கம்

## கல்வியின் மேன்மை

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை. 1

## கல்வியின் பயன்

கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச்—சொல்வளம்
மல்லல் வெறுக்கையாம் மாணவை மண்ணுறுத்தும்
செல்வமு முண்டு சிலர்க்கு. 2

## புலவரின் சிறப்பு

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு. 3

## கற்றதைப் போற்றல் சிறந்தது

வருந்தித்தாம் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் தொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்கு
எய்த்துப் பொருள்செய் திடல். 4

## கல்விச் செருக்கு ஆகாது

முற்றும் உணர்ந்தவ ரில்லை முழுவதூஉம்
கற்றன வென்று களியற்க—சிற்றுளியாற்
கல்லும் தகரும்; தகரா கனங்குழாய்!
கொல்லுலைக் கூடத்தி னால். 5

## கல்வியும் செல்வமும்

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே இவர்க்குநா மென்று. 6

—குமரகுருபரர்

## குறிப்புரை

**நீதிநெறி விளக்கம்**—மக்களுக்கு நீதி வழிகளை விளக்கிக்கூறும் நூல். இந்நூலில் 100 பாட்டுக்கள் உள்ளன. இந்நூலை இயற்றிய குமரகுருபர அடிகள், திருநெல்வேலியை அடுத்துள்ள ஸ்ரீ வைகுண்டத்தில் பிறந்தவர். இவர் துறவியாகி, சகலகலா வல்லிமாலை முதலிய பல நூல்களை இயற்றினார். இவர் காலம் 18-ஆம் நூற்றாண்டு.

1. புறங்கடை—கடைப்புறம்; வாயிற் புறத்தில்
இசை—புகழ்
உற்றுழியும்—வந்த இடத்தும்
கல்வியின் ஊங்கு—கல்வியைக் காட்டிலும் சிறப்பாக

2. பெண்டிர்—மனைவி
ஈர்ங்கவி—இன்பமுள்ள கவி
மல்லல்—வளப்பம்
வெறுக்கை—செல்வம்
மாண் அவை—பெருமை மிகுந்த சபை
மண்ணுறுத்தும்—அழகுபெறச் செய்யும்
செல்வம்—பேசுந் திறமையாகிய செல்வம்

3. மலரவன்—பிரமன்
வண்டமிழோர்—தமிழ்ப் புலவர்
மாயா—அழியமாட்டா
உடம்பு—நூல்கள்

4. ஓம்பாது—பாதுகாக்காமல்
பரிந்து—வருந்தி
கற்பான்—கற்பதற்கு
கருந்தனம்—பெரும்பொருள்
எய்த்து—வருந்தி

5. களியற்க—செருக்கு அடைதலை ஒழிக
கூடத்தினால்—சம்மட்டியால்

6. மெலியாரை—செல்வத்தில் தாழ்ந்தவர்களை
கருத்து அழிக—உள்ளம் உடைக
எற்றே—எவ்வளவு தாழ்ந்தது

## கேள்விகள்

1. சிற்றுயிர்க்கு உற்ற துணை எது? அதனால் ஏற்படும் நன்மை என்ன?
2. ஒருவர்க்கு மனைவி, மகன், செல்வம்—எவையாகும்? மாணவை மண்ணுறுத்தும் செல்வம்—எது?
3. பிரமனைக்காட்டிலும் தமிழ்ப் புலவர் சிறந்தவர் என்றது எவ்வாறு?
4. கற்றவற்றைப் பாதுகாக்காமல் மேலும் கற்கத் தொடங்குதல் எது போலாகும்?
5. சிற்றுளியால் கல்லும் தகரும்; கூடத்தினால் தகரா—இதனால் அறியும் நீதி என்ன?
6. நாம் செல்வத்திலும் கல்வியிலும் எவ்வாறு இருத்தல்வேண்டும்?

# 3. பழமொழி

### குலவித்தை கல்லாமல் வருதல்

உரைமுடிவு காணுன் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறை செய்தான் சோழன் ; குலவிச்சை
கல்லாமற் பாகம் படும். 1

### மறைவிலும் தீவினை செய்யாமை

எனக்குத் தகவன்றல் என்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் தானுய்த் தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் தென்னவனும் காணுர்
எனச்செய்யார் மாணு வினை. 2

### செயல் செய்பவனே சிறந்தவன்

கற்றதொன் றின்றி விடினும் கருமத்தை
அற்ற முடிப்பான் அறிவுடையான்—உற்றியம்பும்
நீத்தநீர்ச் சேர்ப்ப ! இளையானே யாயினும்
மூத்தானே யாடு மகன். 3

### பலதுளி பெரு வெள்ளம்

வருவாய் சிறிதெனினும் வைகலும் ஈண்டின்
பெருவாய்த்தாய் நிற்கும் பெரிதும்—ஒருவாறு
ஒளியீண்டி நின்றல் உலகம் விளக்கும்
துளியீண்டில் வெள்ளந் தரும். 4

### பாரி மகளுடைய கொடை

மாரியொன் றின்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு—நீருலையுள்
பொன்றிறந்து கொண்டு புகர்வாக நல்கினுள்
ஒன்றுரு முன்றிலோ இல். 5

## அறிவுடையாரின் சிறப்பு

ஆயிரவ ரானும் அறிவிலார் தொக்கக்கால்
மாயிரு ஞாலத்து மாண்பொருவன் போல்கலார் ;
பாயிருள் நீக்கும் மதியம்போல் பன்மீனும்
காய்கலா வாகும் நிலா. 6

—முன்றுறையரையர்

## குறிப்புரை

**பழமொழி**—ஒவ்வொரு பழமொழியை இறுதியில் கொண்டு நீதியைக் கூறுகிற பாடல்களினால் ஆகிய நூல். இதில் 400 வெண்பாக்கள் உள்ளன. இது பதினெண்கீழ்க் கணக்கைச் சேர்ந்தது. இதனை இயற்றிய முன்றுறையரையர் பாண்டிய நாட்டினர்.

1. உரை—உரைத்துக்கொண்ட வழக்கினது
காணான்—கண்டறியமுடியாதவனான
விச்சை—வித்தை
2. தகவு—தகுதி
கரி—சாட்சி
தவற்றை—குற்றத்தை
தென்னவன்—பாண்டியன்
3. கருமம்—செயல்
அற்றம் முடிப்பான்—சோம்பலின்றி முயல்பவன்
நித்தம் நீர்—வெள்ளமாகிய நீர்
சேர்ப்ப—கடற்கரை நிலத் தலைவனே
ஆடுமகன்—செயல் செய்பவன்
4. வைகலும்—நாள்தோறும்
ஈண்டின்—கூடினால்
பெருவாய்த்தாய்—பெரிய அளவினை உடையதாய்
5. வறந்திருந்த—உலகம் வற்றியிருந்த
பாண்மகன்—இரந்துவந்த ஒரு பாணன்
புகர்வாக—சோறாகவே
நல்கினான்—கொடுத்தான்
முன்றில்—இல்முன்; வீடு
6. தொக்கக்கால்—திரண்டாராயினும்
மாண்பு—அறிவால் மாட்சிமைப்பட்ட
பாய் இருள்—பரந்த இருளை
பல்மீனும்—பல நட்சத்திரங்கள் திரண்டாலும்

## கேள்விகள்

1. நரை முதுமக்கள் மகிழ முறைசெய்த சோழன் யார்? எவ்வாறு முறைசெய்தான்? அதனால் அறியும் நீதி யாது?
2. கைகுறைத்த காவலன் யார்? அவன் தன் கையைக் குறைத்தது ஏன்? அதனால் அறியும் நீதி யாது?
3. கல்லாதவனாயினும் அறிவுடையானாவது எவ்வாறு?
4. பலதுளி பெருவெள்ளம—இப்பழமொழியால் அறியும் நீதி யாது?
5. பாரி மகளின் கொடைச் சிறப்பு யாது?
6. அறிவுடையாரின் சிறப்பை ஆசிரியர் எவ்வாறு தெரிவிக்கிறார்? உவமானம் யாது?

# III. கதை

## 1. வீர சிவாஜி

### சிவாஜி பாதுஷாவைக் காணல்

அஞ்சறு வீரன் கண்டான்
அரசனை ஆக்கி ராவில் ;
துஞ்சறு சமயப் பற்றுந்
துகளறும் எளிய வாழ்வும்,
மிஞ்சிய பாது ஷாவை
வியந்தனன் ; பாது ஷாவும்,
நெஞ்சுரங் கொண்டான் செய்கை
நேரிய தெனவு ணர்ந்தான். 1

### சிவாஜியைச் சிறையில் வைத்தல்

நிறையுடன் இரண்டு பேரும்
நேசமா யிருக்கும் நாளில்
இறைவனும் வஞ்சர் சொல்லை
யேற்றுநம் வீரர் ஏற்றைச்
சிறைசெய்தான் ; சிவாஜி வீட்டில்
'சிவசக்தி காக்க' வென்றே
முறையிட்டான் மோசஞ் செய்த
மோசரைத் தப்ப வேண்டி 2

### சிவாஜி தேவியை வேண்டுதல்

" தருமத்தை நிலைநி றுத்தத்
தாரக மாக முன்னோர்
நிருமித்த வழிந டந்தேன் ;
நிறைவுநா னின்னுங் காணேன்

கருமத்தை முடிக்க வேயிக்
கட்டினை யுதறிச் செல்லும்
மருமத்தை விளக்கிக் காவாய்,
மாசிவ சக்தி தாயே!" 3

### சிவாஜியின் சூழ்ச்சி

ஆயிர மின்னல் போலே
அன்னைவந் தபய மீந்தாள்!
போயது துயரம் சூழ்ச்சி
பொலிந்ததும், அறிந்த வீரன்
நோயெனப் படுக்க, நண்பர்
நூறுபேர் சிகிச்சை செய்தார்;
வாயிலுந் திறந்தார் தந்தை
மகனொடுந் தப்பு தற்கே. 4

### 'நண்பருக்கு விருந்து' எனல்

விட்டது நோயென் றூர்கள்.
வீரனைத் தில்லி மன்னன்
மட்டறு மகிழ்ச்சி காட்டிப்
பார்த்தனன்; மராட வீரன்,
"இட்டமித் திரருக் கெல்லாம்
விருந்துகள் இடுவேன்" என்றான்.
கட்டளை யேற்ற தோழர்
கனவிருந் தாக்கி னாரே. 5

### சிவாஜி வெளியேறுதல்

நேசர்க்குப் பண்ட மென்றே
நெடியபல் கூடை சென்ற!
ஆசையாய் நடனக் கூத்தில்
ஆழ்ந்தனர் காவ லாட்கள்

வாசலைக் கடந்து சென்ற
வலியதோர் கூடை யென்னே!
தோசையென் றிருந்தார் மற்றோர்;
சூர னும் விடுபட் டானே. 6

### சிவாஜியைப் பிடிக்க பாதுஷா முயற்சி

மூக்கினில் விரலை வைத்தான்
முகலவர் கோனும்; வாயில்
காக்குநர் தமைப்பொ றுத்தான்;
காற்றினும் வேக மாக
ஊக்கினன் ஒற்றர் தம்மை;
ஒருலட்சம் வராக னென்று
வாக்களித் தானவ் வீரன்
சிரத்துடன் வருவா ருக்கே. 7

### சிவாஜி காசியை யடைதல்

வாசியி லேறிய வன்றிறல் வீரன்,
ஓசனை நான்குற ஓர்வனம் புக்குப்
பாச மறுத்த பரங்களைக் கூடிக்
காசி யடைந்தனன் காவி யுடுத்தே 8

### சிவாஜி மாறுவேடத்துடன் திரிதல்

அறிந்தவர் போற்றி யறிந்தது சொல்லார்,
துறந்தவ னென்று பகைவர் துறப்பார்,
செறிந்து பிடிக்க வருஞ்சில தெவ்வர்
மறைந்தவன் போகிற மாய மறியார். 9

### சிவாஜி தன் மனைவியைக் காணல்

தான்வரத் தானம் வழங்கு மனைவி,
தான்வரக் கண்டு தழைத்தன ளின்பம்,
கோன்வரக் கண்டு குளிர்ந்தது நாடு,
பூநகர் மீண்டு புரந்தனன் வீரன். 10

—கவியோகி சுத்தானந்த பாரதியார்

## குறிப்புரை

இப்பகுதி 'பாரதசக்தி மகா காவியம்' என்னும் நூலில் உள்ளது. இந்நூல், இந்திய நாட்டின் பெருமையையும் வீரர்களின் வரலாற்றையும் விரிவாக எடுத்துரைக்கும் பெரிய நூலாகும். டில்லி பாதுஷா வீர சிவாஜியைத் தந்திரமாக வரவழைத்து ஆக்ரா நகரில் சிறை வைத்தான். சிவாஜி அச்சிறையிலிருந்து தப்பி வெளியேறிய நிகழ்ச்சியை இப்பகுதி விளக்குகிறது.

1. அஞ்ச அறு—பயமில்லாத
   துகள்—குற்றம்
   நேரியது—சரியானது
2. இறைவன்—பாதுஷா
   ஏற்றை—ஆண் சிங்கத்தை (சிவாஜியை)
3. தாரகம்—ஆதாரம்
   நிருமித்த—ஏற்படுத்திய
4. அன்னை—பராசக்தியாகிய பவானி
   பொலிந்ததும்—தோன்றியதும்
5. மட்டறு—அளவில்லாத
   மராடவீரன்—மராட்டிய வீரன்; சிவாஜி
   மித்திரர்—நண்பர்கள்
6. பண்டம்—உணவுப் பொருள்
   சூரன்—சிவாஜி
   சென்ற—போயின
   சிவாஜி உணவுக் கூடையில் ஒளிந்துகொண்டு தப்பிச் சென்றது, இப்பாடலில் தெரிவிக்கப்படுகிறது.
7. முகலவர் கோன்—முகலாய மன்னன்
   காக்குநர்—காவலர்
   சிரம்—தலை
8. வாசி—குதிரை
   ஒசனை—யோசனை என்னும் தூரத்தின் அளவு
   பாசம்—ஆசை
   பரம்—துறவி
9. செறிந்து—நெருங்கி
   தெவ்வர்—பகைவர்
10. தழைத்தனன்—மகிழ்ந்தான்
    கோன்—அரசனாகிய சிவாஜி
    புரந்தனன்—பாதுகாத்தான்

## கேள்விகள்

1. பாதுஷாவைக் கண்ட சிவாஜி எதனால் வியந்தான்?
2. பாதுஷா சிவாஜியைச் சிறையில் வைத்தது ஏன்?
3. சிவாஜி சிறையிலிருந்து தப்ப என்ன சூழ்ச்சி செய்தான்?
4. சிவாஜி சிறையிலிருந்து வெளியேறிய நிகழ்ச்சியைத் தெரிவிக்க.
5. சிறை நீங்கிய சிவாஜி எவ்வாறு மறைந்து இருந்தான்?
6. சிவாஜி தன் நகர் அடைந்ததைத் தெரிவிக்க.

## 2. கீரியும் அந்தணனும்

### கீரியை வளர்த்தல்

என்னஅக் கதையே தென்றூர்
எழில்பெறு கௌட தேச
மன்னவன் தனக்கு நித்தம்
வந்துபஞ் சாங்கம் சொல்வோன்
தன்னது தேவி கர்ப்பந்
தரித்திலள் ; அதனுற் பிள்ளை
என்னவோர் கீரி தன்னை
எடுத்தவன் வளர்த்தான் மன்னே. 1

### கீரியைப் போற்றுதல்

புத்திர வாஞ்சை யாலே
புல்குவன் ; மடிமேல் வைப்பன் ;
முத்தமும் இட்டுக் கொள்வன் ;
முந்தியே பாலும் சோறும்
துய்த்திட அளிப்பன் ; மார்பில்
தூங்கவும் படுத்திக் கொள்வன் ;
மெத்தவும் களித்து நெஞ்சில்
விருப்புடன் வளர்த்த பின்னர், 2

### தேவசன்மனின் அன்பு மொழி

மனையவள் யாக சேனி
வயிற்றினில் கருப்பம் கண்டே,
சுனைவளர் குவளை உண்கண்
தோகைநல் லாளே, நீயோர்
தனையனைப் பெறுவாய் ; அன்னுன்
சதுர்மறைத் தலைவன் ஆகி
நிலையும்நம் குலமும் காப்பான் ;
நிதியமும் படைத்து வாழ்வன் ; 3

### யாகசேனையின் மொழி

வயதொரு நூறி ருப்பன் ;
மன்னவன் சித்தம் மெச்ச
நம்புரோ கிதமும் சொல்லி
நலங்களும் பெறுவன் ' என்றே
தயவொடு தேவ சன்மா
சாற்றலும் தேவி யான
கயல்நெடுங் கண்ணாள், ' என்ன
காரியம் சொன்னாய் அன்றே ! 4

### மனக்கோட்டை கட்டிய பிரமசாரி

காணுமுன் கேட்கு முன்னே
காரியங் களைநி னைந்து
வீணிலே பூமி யின்மேல்
விழுந்துருண் டழுது நெஞ்சம்
நாணினன் பிரம சாரி ;
நாடிலங் கதுபோல் நீயும்
பூணணி மார்ப, வீணே
புகல வொண்ணாதெ ' ன்றாளே. 5

### யாகசேனை நீராடப்போதல்

ஆதலால் காணு முன்னே
அகத்தினுள் நினைக்கொணா தென்று
ஓதிய யாக சேனி
யுடனவன் இருக்கும் நாளில்
தீதிலா முகூர்த்தம் தன்னில்
செல்வனும் பிறந்தான் ; அந்தச்
சூதகம் கழிக்கும் நாளோர்
சுனையினில் முழுகப் போனாள். 6

### தேவசன்மா குழந்தையைக் காத்திருத்தல்

ஆயிழை போகை யாலே
ஆரணம் முழுதும் வல்லோன்
சேயினைக் காத்தி ருந்தான் ;
சிராத்தமென் றரசர் தூதர்

‘நீயவண் வருக’ என்றார் ;
நேரமும் சென்று போனால்
போயதை யெல்லாம் வேறு
புரோகிதர் கொண்டு போவார். 7

### தேவசன்மா அரண்மனை ஏகல்

என்றுதன் மனத்தில் எண்ணி
இன்பமாய் வளர்த்த கீரி
தன்றுணை யாக அந்தத்
தனையனை வைத்து நீங்கிச்
சென்றனன் ; அரசன் வீட்டிற்
சிராத்தமுன் முடித்துப் பெற்ற
பொன்துகில் அரிசி எல்லாம்
பொதிகளில் ஏற்றிக் கொண்டே. 8

### கீரி பாம்பைக் கொல்லல்

வருமுன்னே சேயைக் கிட்டி
வந்ததோர் நாகம் ; அந்தக்
கரியநா கத்தைக் கீரி
கடித்திரு துண்ட மாக்கிக்
குருதிவாய் எங்கும் ஆகக்
கொண்டுசந் தோடங் காட்ட
அருமறை யோன்முன் சென்றது,
‘ஆகெடுத் தாயே!’ என்றே, 9

### தேவசன்மா கீரியைக் கொன்று வருந்துதல்

தண்டினால் அடித்துக் கொன்றான் ;
தளர்வொடு வீட்டில் வந்தான் ;
கண்டனன் பிள்ளை முன்னே
கரியபாம் போர்இ ரண்டு
துண்டமாக் கடிக்கப் பட்டுத்
தூரவே கிடக்கக் கண்டான் ;
மண்டிய துயரம் ஆகி
வயிற்றினில் அடித்துக் கொண்டான் ; 10

## தேவசன்மா வருந்தி அழுதல்

வாயிலும் அடித்துக் கொண்டான் ;
மண்ணையும் போட்டுக் கொண்டான் ;
சேயிலும் அதிக மான
சேயைநான் கொன்றேன் ' என்றான் ;
' நீயெனக் கெதிரே வந்து
நின்றெனைக் கெடுத்தாய்,' என்று
போயதன் மேல் விழுந்து
புரண்டுருண் டரற்றி னானே. 11

—வீரமார்த்தாண்ட தேவர்

## குறிப்புரை

இக்கதைப் பகுதி, ' பஞ்ச தந்திரம் ' என்ற நூலில் உள்ளது. ஐந்து தந்திரங்களாவன : 1. நட்புப் பேறு 2. நட்புப் பிரித்தல் 3. அடுத்துக் கெடுத்தல் 4. பொருள் அழிவு 5. ஆராயாது செய்தல் என்பன.

1. சொல்வோன்—தேவசன்மா
 தேவி—மனைவி
 எழில்—அழகு
2. வாஞ்சை—அன்பு
 புல்குவன்—தழுவிக்கொள்வான்
 துய்த்திட—உண்ண
3. சுனைவளர்—சுனைநீரில் வளருகிற
 உண்கண்—மையுண்ட கண்
 தோகை—மயில்
 சதுர்மறை—நான்கு வேதம்
4. சித்தம்—மனம்
 கயல்—கயல்மீன்
5. பிரமசாரி—மணம் ஆகாதவன்
6. ஒன்றாது—தகாது
 முகூர்த்தம்—வேளை
 சூதகம்—தீண்டல்
7. ஆயிழை—யாகசேனை
 இழை—ஆபரணம்
 ஆரணம்—வேதம்
 சேய்—குழந்தை
8. துகில்—ஆடை
 பொதிகள்—மூட்டைகள்
9. குருதி—இரத்தம்
10. மண்டிய—நிறைந்த
11. சேயை—கீரிப்பிள்ளையை
 அரற்றினான்—புலம்பினான்

## கேள்விகள்

1. தேவசன்மா கீரியை வளர்த்தது ஏன் ?
2. தேவசன்மா கீரியை எங்ஙனம் போற்றி வளர்த்தான் ?
3. தேவசன்மா தன் மனைவி கர்ப்பமடைந்ததைக்கண்டு மகிழ்ந்து கூறியது என்ன ?
4. யாகசேனை தன் கணவனுக்குக் கூறிய செய்தி யாது ?
5. தேவசன்மா குழந்தைக்குக் காவலாய்க் கீரியை வைத்துவிட்டு வெளியே சென்றது ஏன் ?
6. தேவசன்மா கீரிப்பிள்ளையை ஏன் கொன்றான் ?
7. கீரியைக் கொன்றதால் தேவசன்மா வருந்தியது ஏன் ? எவ்வாறு வருந்தி அழுதான் ?

# 3. நள வெண்பா

## நளன் மடைப்பள்ளியில் புகுதல்

*ஆதி நெடுந்தேர்ப் பரிவிட் டவையாற்றிக்*
*கோதில் அடிசில் குறைமுடிப்பான்—மேதிக்*
*கடைவாயில் கார்நீலம் கண்விழிக்கும் நாடன்*
*மடை வாயிற் புக்கான் மதித்து.* 1

## தமயந்தி தன் மக்களைத் தாதியுடன் அனுப்புதல்

*கோதை நெடுவேற் குமரனையும் தங்கையையும்*
*ஆதி யரசன் அருகாகப்—போத*
*விளையாட விட்டவன் றன் மேற்செயல்நா டென்றாள்*
*வளையாடும் கையாள் மதித்து* 2

## நளன் தன் மக்களைக் காணல்

*மக்களைமுன் காணு மனம்நடுங்கா வெய்துயிராப்*
*புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காள்நீர்*
*என்மக்கள் போல்கின்றீர் யார்மக்கள் என்றுரைத்தான்*
*வன்மக் களியானை மன்* 3

## மக்களின் மறுமொழி

*மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்*
*அன்னை தனைக் கான்விட் டவனேக—இந்நகர்க்கே*
*வாழ்கின்றோம் எங்கள் வளநாடு மற்றொருவன்*
*ஆள்கின்றான் என்றார் அழுது.* 4

## நளன் வருந்துதல்

*ஆங்கவர் சொன்ன உரைகேட் டழிவெய்தி*
*நீங்கா வுயிரோடு நின்றிட்டான்— பூங்காவில்*
*வள்ளம்போற் கோங்கு மலரும் திருநாடன்*
*உள்ளம்போற் கண்ணீர் உகுத்து.* 5

### நளன் இந்திரசேனனை வினவுதல்

உங்கள் அரசொருவன் ஆளநீர் ஓடிப்போந்து
இங்கண் உறைதல் இழுக்கன்றோ—செங்கை
வளவரசே! என்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி எடுத்து. 6

### இந்திரசேனனின் விடை

நெஞ்சாலிம் மாற்றம் நினைந்துரைக்க நீயல்லாது
அஞ்சாரோ மன்னர் அடுமடையா!—எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலாய்! எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி. 7

### இந்திரசேனன் தந்தையின் பெருமை கூறல்

எந்தை கழலிணையில் எம்மருங்கும் காணலாம்
கந்து சுளியும் கடாக்களிற்றின்—வந்து
பணிமுடியில் பார்காக்கும் பார்வேந்தர் தங்கள்
மணிமுடியில் தேய்ந்த வடு 8

### நளன் ஆறுதல் கூறி வருந்துதல்

மன்னர் பெருமை மடையர் அறிவரோ
உன்னை யறியா துரைசெய்த—என்னை
முனிந்தருளல் என்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண். 9

### தமயந்தியின் வருத்தம்

கொற்றக் குமரனையும் கோதையையும் தான்கண்டு
மற்றவன்றான் ஆங்குரைத்த வாசகத்தை—முற்றும்
மொழிந்தாரம் மாற்றம் மொழியாத முன்னே
அழிந்தாள் விழுந்தாள் அழுது. 10

### தமயந்தி தன் தந்தையிடம் கூறல்

மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவற்குக்
கொற்றத் தனித்தேரும் கொண்டணைந்து—மற்றும்
மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன்காண் எங்கள்
கொடைத்தொழிலான் என்றாள் குறித்து. 11

### வீமராசன் நளனைக் காணல்

போதலரும் கண்ணியான் போர்வேந்தர் சூழப்போய்க்
காதலிதன் காதலனைக் கண்ணுற்றான்—ஓதம்
வரிவளைகொண் டேறும் வளநாடன் தன்னைத்
தெரிவரிதா நின்றான் திகைத்து. 12

### 'உன் உருவம் காட்டுக' எனல்

பைந்தலைய நாக பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை ஐயுற்று—மந்தி
தெளியா திருக்கும் திருநாடா! உன்னை
ஒளியாது காட்டுன் உரு. 13

### நளன் அரவரசனின் ஆடையை அணிதல்

அரவரசன் தான்கொடுத்த அம்பூந் துகிலின்
ஒருதுகிலை வாங்கி உடுத்தான்—ஒருதுகிலை
போர்த்தான் பொருகலியின் வஞ்சனையாற் பூண்
கோத்தாயம் முன்னிழந்த கோ. [டளிக்கும் 14

### நளன் பழைய வடிவம் பெறுதல்

மிக்கோன் உலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோர் அருவினைபோற் போயிற்றே—அக்காலம்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு. 15

—புகழேந்திப் புலவர்

### குறிப்புரை

**நளவெண்பா**—நளனுடைய வரலாற்றைக் கூறும் வெண்பாவால் ஆகிய நூல். நளன் + வெண்பா. இந்நூலின் ஆசிரியராகிய **புகழேந்திப் புலவர்**, பொன் விளைந்த களத்தூரில் பிறந்தவர். **சந்திரன் சுவர்க்கி** என்ற சிற்றரசனால் ஆதரிக்கப் பெற்றவர். இவர் காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு.

1. பரி—குதிரை
   அடிசில்—சோறு
   மேதி—எருமை
   கார்நீலம்—கருங்குவளை மலர்
   கண்விழிக்கும்—மலரும்
2. கோதை—மலர்மாலை
   போத—போக
   நாடு—ஆராய்க
3. காணா—கண்டு
   நடுங்கா—நடுங்கி
   வெய்துயிரா—பெருமூச்சுவிட்டு
   அணையா—அணைத்து

4. நகர்க்கே—நகரிலே
மற்றொருவன்—புட்கரன்
5. வன்னம்—வண்ணம்
உருத்து—வடிதது
6. உறைதல்—இருத்தல்
இழுக்கு—குற்றம்
7. மாற்றம்—வார்த்தை
எஞ்சாது—குறையாமல்
8. கந்து—கட்டுத்தறி
சுளியும்—கோபிக்கிற
பணி—ஆதிசேடன் என்ற பாம்பு
9. முனிந்தருளல்—கோபிக்க வேண்டாம்
முடி—தலை
10. கொற்றம்—வெற்றி
கோதை—இந்திரசேனை
அழிந்தான்—வருந்தினான்
11. மன்னவற்கு—இருதுபன்னனுக்கு
அணைந்து—வந்து
12. போது—மொட்டு
கண்ணியான்—மாலையணிந்த வீமராசன்
ஓதம்—கடல்
தெரிவு—அறிய
13. பைந்தலைய—பசுமையான தலையுள்ள (பசுமை + தலை)
பணம்—படம்
பூகம்—பாக்குமரம்
14. அரவு அரசன்—கார்க்கோடகன் என்னும் பாம்பு
வாங்கி—பிரித்து
கோத்தாயம்—அரசுரிமை
15. கரந்து—மறைந்து
மால் நகம் தேர்—பெரிய மலை போன்ற தேர்
மிக்கோன்—தேவருள் மேலான திருமால்

## கேள்விகள்

1. வாகுகன் இருதுபன்னனிடம் செய்துவந்த தொழில்கள் யாவை?
2. தமயந்தி நளனையறிவதற்கு என்ன தந்திரம் செய்தாள்?
3. தம் மக்களைக்கண்ட நளன் என்ன செய்தான்?
4. இந்திரசேனன் நளனுக்குத் தெரிவித்தது என்ன?
5. மகன் மொழிகேட்டு நளன் எவ்வாறு வருந்தினான்?
6. நளன் இந்திரசேனனிடம் என்ன கேட்டான்?
7. இந்திரசேனன் நளனிடம் தெரிவித்த வீர மறுமொழி யாது?
8. இந்திரசேனன் நளனின் பெருமையை எவ்வாறு தெரிவித்தான்?
9. 'மன்னர் பெருமை மடையர் அறிவரோ'—இது யார் கூறியது?
10. தமயந்தி தன் தந்தையிடம் சென்று தெரிவிததது என்ன?
11. வீமராசன் நளனிடம் வந்து என்ன கேட்டான்?
12. நளன் உண்மை வடிவம் கொள்ள என்ன செய்தான்?
13. நளனது தேர்ப்பாகன் வடிவம் எவ்வாறு நீங்கியது?
14. நிடத நாடு, விதர்ப்ப நாடு—இவற்றின் வளப்பம் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?
15. புகழேந்திப் புலவர் வைணவர் என்பது எதனால் விளங்குகிறது?

# IV. இயற்கை அழகு

## சோலை

வானவில் ஏந்தல் கண்டு
மாந்தளிர் மெய்சி லக்கத்
தேனுந்தும் மலர்க்கு லங்கள்
செம்மக ரந்தம் தூவ
ஆனந்தத் தென்றல் மெல்ல
ஆலவட் டம்பி டிக்க
வானவில் மறைய மாலை
மல்லிகை சிரிக்கும் சோலை. 1

—பாரதிதாசன்

## சிற்றோடை

இளைஞர் விடுத்த கப்பலுடன்
இளம்பெண் எறிந்த பழம்பூவும்
முளரி குவளை நாண்மலரும்
முதிர்ந்து விழுந்த காய்கனியும்
கிளையும் கொம்பும் இலையனைத்தும்
கிட்டும் பொருள்கள் பற்பலவும்
வளைய வாரி வர்த்தகர்போல்
பண்ட மாற்றி வருவேனே. 2

—சூடாமணி

## மருதநிலக் காட்சி

தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கும் மாதோ! 3

—கம்பர்

## சரத் காலம்

பொன்னொளியும் மரகதத்தின் பொலிவும் செந்நெற்
புலங்காட்ட, அதன்மீது நிழலை வீசும்
பன்னரிய சரற்கால மேகந் தன்னைப்
பரிதிவிரைந் தெழுந்தோடி வெருட்டிச் செல்லத்
தன்னைமறந் தொளிமயக்கில் மயங்கி வண்டு
சாருமலர்த் தேன்மறந்து சுழன்று பாட,
மன்னுகுளம் நதிக்கரையில் வாழுந் தாரா
மனங்களித்துக் குரலெழுப்பித் திரியும் மாதோ! 4

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

## குறிப்புரை

1. ஏந்தல்—சிறந்தவன்
ஆலவட்டம்—விசிறி
மா—மாமரம்
2. முளரி—தாமரை
கான் மலர்—அன்று அலர்ந்த பூ
வலைய—சுழல
3. தண்டலை—சோலைகளில்
கொண்டல்—மேகம்
முழவு—மத்தளம்
எங்க—ஒலிக்க
திரை—அலை
எழினி—திரைச்சீலை
யாழ்—வீணை
மருதம்—மருதநிலம்
4. சரத்காலம்—குளிர்காலம்
மரகதம்—பச்சைக்கல்
பொலிவு—அழகு
பன்னரிய—சொல்வதற்கு அருமையான
பரிதி—சூரியன்
சாரும்—சேர்ந்த
தாரா—ஒருவகை நாரை

## கேள்விகள்

1. மாலையைக்கண்டு மல்லிகை சிரித்தது ஏன்?
2. சோலைக்காட்சி எவ்வாறு அழகுபெற வருணிக்கப்பட்டுள்ளது?
3. ஓடையானது வணிகர்போல் உள்ளது எவ்வாறு?
4. மருத நிலத்தின் இயற்கைக் காட்சியைக் கம்பர் எவ்வாறு தெரிவிக்கிறார்?
5. நெல் வயல்கள் எவ்வாறு காட்சியளிக்கின்றன?
6. வண்டுகள் தேன் உண்ணுவதை மறந்து சுழன்று பாடுவது ஏன்?
7. கரைகளில் நாரைகள் என்ன செய்கின்றன?
8. குளிர்கால இயல்பை ஆசிரியர் எவ்வாறு தெரிவிக்கிறார்?

# V. தனிப்பாடல்கள்

## தமிழின் சிறப்பு

*ஓங்க லிடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி,*
*ஏங்கொலிநீர் ஞாலத்து இருள்கடியும்—ஆங்கவற்றுள்*
*மின்னேர் தனியாழி வெங்கதிர் ஒன்று ; ஏனையது*
*தன்னேர் இலாத தமிழ்.* 1

—தண்டியாசிரியர்

## சொல் அழகு

*முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்*
*அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி*
*இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி*
*ஒருமாவின் கீழரையின் றோது.* 2

## பொருள் அழகு

*பண்புளருக் கோர்பறவை ; பாவத்திற் கோர்இலக்கம்*
*நண்பிலரைக் கண்டக்கால் நாற்காலி—திண்புவியை*
*ஆள்வார் மதுரை யழகியசொக் கர்க்கரவம்*
*நீள்வா கனம்நல் நிலம்.* 3

—காளமேகப் புலவர்

## நாரைவிடு தூது

*நாராய் ! நாராய் ! செங்கால் நாராய்*
*பழம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன*
*பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்*
*நீயும்நின் மனைவியும் தென்றிசைக் குமரிஆடி*
*வடதிசைக்கு ஏகுவீர் ஆயின், எம்மூர்ச்*
*சத்தி முற்ற வாவியுள் தங்கி*
*நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி*
*பாடுபார்த் திருக்குமென் மனைவியைக் கண்டு*
*எங்கோன் மாறன் வழுதி கூடலில்*
*ஆடை யின்றி வாடையின் மெலிந்து*
*கையது கொண்டு மெய்யது பொத்திக்*
*காலது கொண்டு மேலது தழீஇப்*
*பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்*
*ஏழை யாளனைக் கண்டனம் ' எனுமே.* 4

—சத்திமுற்றப் புலவர்

## குறிப்புரை

1. ஒக்கல்—உதயமலை, பொதிய
மலை
எக்கு—இறைத்து
ஞாலத்து இருள் கடியும்—
உலகத்து இருளைப்போக்கும்;
மக்களிடத்திலுள்ள அறி
யாமையைத் தீர்க்கும்
ஏர்—அழகு
தனிஆழி—ஒற்றைச் சக்கரத்
தேர்
வெங்கதிர்—சூரியன்
நேர்—ஒப்பு

2. இச்செய்யுளில் முக்கால்முதல்
ஒரு மா வரையில் பின்ன
எண்களை வைத்துள்ள நயம்
அறியத்தக்கது.
அக்காலரை—அந்த எமதூதரை
கால்—உயிர்
மாகாணி—சுடுகாடு
கச்சி—காஞ்சிபுரம்
ஒருமா—ஒற்றை மாமரம்

3. ஓர் பறவை—ஈ : இது கொடுத்
தல் என்னும் பொருள்தரும்
ஓர் இலக்கம்—அஞ்சு : இது
பயப்படு என்னும் பொருள்
தரும்
நாற்காலி—விலங்கு : இது விலகு
என்னும் பொருள்தரும்
அரவம்—பணி
வாகனம்—விடை (காளை)
நிலம்—செய்
(இம்மூன்றும் 'பணிவிடை செய்'
என்று வருதல் காண்க.)

4. படு—உண்டாகிற
பாடு—பல்லியின் சொல்
மாறன்—பாண்டியன்
கூடல்—மதுரை
வாடை—வடக்கிலிருந்து வரும்
குளிர் காற்று
பேழை—பெட்டி

## கேள்விகள்

1. தமிழும் சூரியனும் ஒப்பாவது எவ்வாறு?
2. காளமேகப் புலவர் பின்ன எண்களைக்கொண்டு தெரிவிப்பது என்ன?
3. பண்புளர், பாவம், நண்பிலர்—இவர்களிடம் நாம் எவ்வாறு நடக்க வேண்டும்? அதிலுள்ள நயத்தைத் தெரிவிக்க. 'பணிவிடை செய்' என்பதைப் புலவர் எங்ஙனம் தெரிவிக்கிறார்?
4. சத்தி முற்றப் புலவர் யாரையிடம் தெரிவித்த செய்தி யாது?

# VI. நாட்டுப் பாடல்கள்

## தேசிங்கு மன்னன் குதிரையை யடக்குதல்

பாராசாரியைச் சலாம் வாங்கிப் பாய்ந்தேறினானும்
புலிக்குட்டிபோலே பாய்ந்தவனும் புரவி ஏறினானும்
ஏறினவுடனே பாராசாரி என்ன செய்யுதுபார்
தடதடவென்று தவிக்குதுபார் அந்தக் குதிரை தானும்
கிடகிடஎன்று கிளம்பிக் குதித்தது அந்தக் குதிரை தானும்
லகானையிழுத்துக் கையிலேபிடித்தான் ராஜா தேசிங்கு
ஆகாயமார்க்கம் வந்துபாயுது அந்த மேகக்குதிரை
சூரியன்போலே துலங்குதுபார் சொர்ண மேகக்குதிரை
மெள்ளச்சிமிட்டா கொடுத்துக்கொண்டு மெதுவாய் வாரானே
வருகிறபாலனைக் கண்ணாலேகண்டு மகிழ்ச்சி யடைந் தார்கள்
அந்தச் சமயத்தில் வந்துநிறுத்தினான் அந்தப்பாலகனும்
பாராசாரி கொண்டுநிறுத்தினான் பால சூரியன்போல 1

—தேசிங்குராசன் கதை

## பாதர்வெள்ளை சண்டை

மறவர் குலத்தில் பிறந்திடும் வெள்ளையன்
வயிரி போல்பறந் தடிக்கிறான்
பரப ரென்றுகை முறுக்கி றானவன்
பல்லைக் கடித்தல்லோ நெறிக்கிறான்

வானி லிடிபோலே முழக்கி றான்வ லு
மண்டை சிதறவே யடிக்கிறான்
பாணி யென்றுசொல்சர் விழுகவேகன
பட்டாளஞ் சேதமாய்ப் புரளவே

கொக்குத் திரளிலே ராசாளி பாய்ந்தாற்போல்
நெக்கு நெக்காக நெருக்கலுற்றான்
துரைப்பரியவே யிடியென் றான்தலை
நொறுங்கிச் சாயவே அடியென்றான்

புகைக்கா டாய்மண்டி யெழும்பவே யங்கே
    பொழுதஸ் தமன மாகவே
திசைதெரி யாமல் குண்டுகள் போட்டங்கே
    சென்றனே காலன் துரைதானும்

காலன் துரைவார வேகங்கண் டல்லோ
    காவல்கா ரன்மகன் வெள்ளையனும்
கட்ட மதிலை யணைவுவைத் தான்துரை
    காலனை யுங்குத்தி மலத்தினன்

சட்டமாய்க் காலன் துரையும்பட் டானென்று
    சாய்ந்து முறிந்துதே பட்டாளம்
நெட்டைவிட் டோடுதே பட்டாளஞ் சற்றே
    நில்லாம லோடுதே பட்டாளம் 2

—கட்டபொம்மு கும்மி

## குறிப்புரை

1. பாராசாரி—குதிரையின் பெயர்
   புரவி—குதிரை
   துலங்குது (துலங்குகிறது)—விளங்குகிறது
   சொர்ணம்—பொன்
2. மறவர்—வீரர்
   வயிரி—இராஜாளி
   வானில்—ஆகாயத்தில்
   பானி—தண்ணீர்
   சோல்சர்—ஆங்கில வீரர்கள் (Soldier)
   துரை—ஆங்கில அதிகாரி
   அஸ்தமனம்—மாலைப்பொழுது
   காலன்—காலன் துரை—Edward H. Collins
   மலத்தினன்—மல்லாந்து விழச் செய்தான்
   நெட்டைவிட்டு—பின்வாங்கி
   இப்பகுதியில் வெள்ளையத்தேவன் ஆங்கிலப்படைத் தலைவனாகிய காலின்ஸ் என்பவனைக் கொன்று வெற்றிபெற்ற செய்தி தெரிவிக்கப்படுகிறது.

## கேள்விகள்

1. தேசிங்குராசன் என்பவன் யார்? அவன் பாராசாரி என்னும் குதிரையை எவ்வாறு அடக்கினன்? அவன் அக்குதிரையை அடக்கத் துணிந்தது என்?
2. வெள்ளையத் தேவன் என்பவன் யார்? பாஞ்சாலங்குறிச்சி போரில் ஆங்கிலேயருடன் எவ்வாறு வீரங்காட்டிப் போர் செய்தான்? அவன் செய்த போரின் முடிவு என்ன?

# VII. பல்வகைப் பாடல்கள்

## பாண்டியநாட்டு வளப்பம்

கன்னல் முத்தம் கழனியிற் சிந்தும்
கமல முத்தம் கமலத்திற் சிந்தும்
செந்நெல் முத்தம் வயல்தொறுஞ் சிந்தும்
சிப்பி முத்தம் திரைதொறுஞ் சிந்தும்
வன்ன மேகமுத் தெங்கணுஞ் சிந்தும்
வால்வளைமுத்தம் வண்டலிற் சிந்தும்
அன்ன தாதாவெம் வஸ்திய ஞாயஞ்சொல்
ஆணை சேர்பாண்டி நாடெங்கள் நாடே. 1

—செண்பகராமன் பள்ளு

## தமிழ்த் தொண்டு

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும். 2

—பாரதியார்

## போர்க்களக் காட்சி

பொருதடக்கை வாளெங்கே? மணிமார் பெங்கே?
போர்முகத்தில் எவர்வரினும் புறங்கொ டாத
பருவயிரத் தோளெங்கே? எங்கே? என்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின்! காண்மின்! 3

—சயங்கொண்டார்

## உழவர் சிறப்பு

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாரும்
தொழுதுண்டு பின்செல்வா ரென்றேயித் தொல்லுலகில்
எழுதுண்ட மறையன்றோ இவருடனே இயலுமிது
பழுதுண்டோ கடல்சூழ்ந்த பாரிடத்தில்
பிறந்தோர்க்கே. 4

—கம்பர்

## உடல் நல வழி

தூய காற்றை நல்லுணவைச்
சுத்த நீரை யுட்கொளலும்
நேய முடனே வுடற்பயிற்சி
நித்தம் இயற்றிக் குளிப்பதுவும்
ஆய வுறக்கம் செய்வதுவும்
ஆடை வெளுத்துக் கட்டுவதும்
தீய பிணியை நீக்கியுரன்
செய்யும் இனிய நட்பாமே. 5

—கா. சி. சிவசங்கர முதலியார்

## குடியரசு வாழ்த்து

விஞ்சுபுகழ் வெற்றிதரு விரோதி யாண்டில்
விளங்கிடுதை பதின்மூன்றில் வியாழ நாளில்
நெஞ்சுவந்து பாரதத்தாய் பெற்ற மக்கள்
நிறுவியநல் குடியரசு நிலைத்து நித்தம்
எஞ்சலிலா தெவ்வளமும் பெருகி இந்நாடு
இமையவரின் திருநாடொத் திலங்கி வாழ
பஞ்சவர்க்குத் துணைபுரிந்த பரந்தாம! நின்
பாதமல ரிணைபோற்றிப் பணிகின் றோமே! (

—கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை

## குறிப்புரை

1. கன்னல்—கரும்பு
   திரை—அலை
   வளை—சங்கு
   தாதா—கொடையாளி
2. சாத்திரங்கள்—நூல்கள்
3. தடக்கை—பெரிய கை
4. மறை—திருக்குறள்
5. தூய—சுத்தமான
   இயற்றி—செய்து
   உரன்—வலிமை
6. விஞ்சு—மிகுந்த
   நிறுவிய—ஏற்படுத்திய
   எஞ்சல்—குறைதல்
   இமயவரின்—தேவர்களின்

## கேள்விகள்

1. பாண்டிய நாட்டின் வளப்பத்தை ஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார்?
2. பாரதியார் தெரிவிக்கும் தமிழ்த் தொண்டுகள் யாவை?
3. சயங்கொண்டார் போர்க்களக் காட்சியை எவ்வாறு தெரிவிக்கிறார்?
4. உழவரின் சிறப்பு யாது?
5. உடல் நலத்திற்குரிய வழிகள் யாவை?
6. கவிமணியவர்கள் இந்தியக் குடியரசை எங்ஙனம் வாழ்த்துகிறார்?